# நூன்முகம்

சிவக்ஷேத்திர விளக்கம் என்னும் நூலானது திருவண்ணாமலை அண்ணாமலைதேசிகரவர்களால் இயற்றப்பட்டு, ஸ்ரீமத் நடராஜபுரம் வீரப்பசெட்டியாரவர்கள் வேண்டுகோளின்படி யாழ்ப்பாணம் புலோலியம்பதி ஸ்ரீமத் ம. முத்துக்குமார ஸ்வாமி தேசிகரவர்களாலும், ஏழாலைச் சைவப்பிரகாச வித்தியாசாலை முதல் உபாத்தியாயர் சுன்னாகம் ஸ்ரீமத் அ. குமாரசாமிப் பிள்ளையவர்களாலும் பரிசோதிக்கப் பெற்றது. இந்நூல் ஸ்தலயாத்திரை செய்யும் சைவசமயிகட்கு இன்றியமையாததா யிருப்பதாலும், இக்காலத்து எங்ஙனும் கிடைப்பது அரிதா யிருத்தலாலும், இப்போது மீண்டும் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

சிவக்ஷேத்திராலய மகோத்ஸவ உண்மை விளக்கம் என்னும் நூலானது யாழ்ப்பாணம் மேலைப்புலோலி ஸ்ரீமத் நா. கதிரைவேற்பிள்ளை யவர்களால் இயற்றப்பட்டு, அநேக வருடங்களுக்குமுன் அச்சிடப்பட்டது. அப்பிரதிகள் செலவாய்விட்டமையால், பல சைவாபிமானிகளின் வேண்டுகோளின்படி இப்போது மீண்டும் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

சிவமயம்

# சிவக்ஷேத்திர விளக்கத்தின்

# விஷய அட்டவணை

| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| ௧. | சிவக்ஷேத்திர விளக்கத்தில் காட்டப்பட்டிருக்கும் ஸ்தலங்களின் அகராதி, நாடு, சமீப ரெயில் ஸ்டேஷனிலிருந்து திசையும், தூரமும், விசேஷக் குறிப்பும் ... ... ... | 2-55 |
| ௨. | ஒவ்வொரு நாட்டிலும் பாடல் பெற்ற ஸ்தலங்கள், பதிகங்கள் இவற்றின் மொத்தத் தொகையும், பொதுப் பதிகங்களின் தொகையும... ... | 56 |
| ௩. | முகவுரை ... ... ... ... | ௧-௪ |
| ௪. | சிறப்புப்பாயிரம் ... ... ... ... | ௫-௮ |
| ௫. | விநாயக வணக்கம் முதலியன ... ... | 1-3 |
| ௬. | அறுபத்துமூன்று நாயன்மார் திருவவதாரம், சமயாசாரியர்கள் நால்வர் முத்திபெற்ற நக்ஷத்திரம் ... | 4 |
| ௭. | நாயன்மார்களின் திருநாமம், மாதம், நக்ஷத்திரம், அவதார ஸ்தலம், முத்திபெற்ற மாதம், நக்ஷத்திரம் ... ... ... ... | 5-7 |
| ௮. | சோழநாடு: காவேரிக்கு வடகரையிலுள்ள 63 க்ஷேத்திரங்களினது திருநாமங்கள், அந்த க்ஷேத்திரங்கடோறு மெழுந்தருளி யிரா நின்ற சிவபெருமானது திருநாமம், அவரது பாகத்தமர்ந்த அருட்சத்தியாகிய தேவியினது திருநாமம், ஆங்காங்குள்ள தீர்த்தம் | |

விருக்ஷம், முக்கிய மான்மியங்கள், அங்ஙனம் பெற்றுள்ள நாயன்மாரது திருநாமங்கள், அங்ஙனமுள்ள தேவாரத் திருப்பதிகங்களின் தொகை, அங்ஙனநின்று மற்றொரு க்ஷேத்திரத்திற்கேகும் திக்கு, கடிகைதூர வழியளவு ... 9-38

௯. சோழநாடு: காவேரிக்குத் தென் கரையிலுள்ள க்ஷேத்திரங்கள் 127-ன் விவரம்

டி டி டி டி ... 38-80

௰. ஈழநாடு: க்ஷேத்திரம் 2: டி டி ... 80

௧௧. பாண்டிநாடு: க்ஷேத்திரம் 14: டி டி ... 81-86

௧௨. சேரநாடு அல்லது மலைநாடு:

க்ஷேத்திரம் 1: „ „ ... 87

௧௩. கொங்குநாடு: க்ஷேத்திரம் 7: „ „ ... 87-90

௧௪. நடுநாடு அல்லது மகத நாடு:

க்ஷேத்திரம் 22: „ „ ... 90-100

௧௫. தொண்டைநாடு: „ 32: „ „ ... 101-113

௧௬. துளுவநாடு: „ 1: „ „ ... 113

௧௭. வடநாடு: „ 5: „ „ ... 114-115

௧௮. அட்டவீரட்டம்: தலமும் விசேடமும் ... 116

௧௯. திருஞானசம்பந்த மூர்த்திகள் திருப்பாசுரம் ... 117

௨௰. சைவசமயம் ... ... ... ... 118-120

௨௧. சைவசமயி ... ... ... ... 121-122

௨௨. ஆசாரம் ... ... ... ... 123-125

௨௩. திருக்கோயிலிலும், திருவீதியிலும் செய்யத்தகாத குற்றங்கள் ... ... ... ... 126 128

# சிவக்ஷேத்திரவிளக்கம்.

சிவக்ஷேத்திர விளக்கத்தில் காட்டப்பட்டிருக்கும்

# ஸ்தலங்களின் அகராதி.

குறிப்பு — ஒவ்வொரு ஸ்தலத்திற்கு முன் 'திரு' என்பதைச் சேர்த்து வாசித்துக்கொள்ளவும்.

| தொடர் எண் | நூலின் பக்கம் | ஸ்தலத்தின் பெயர் | நாடு | சமீப ரெயில் ஸ்டேஷனிலிருந்து திசையும், தூரமும், விசேஷக் குறிப்பும் |
|---|---|---|---|---|
| 1 | 73 | அகத்தியான்பள்ளி | சோழநாடு தென்கரை | வேதாரணியத்திற்குத் தெற்கே 1 மைல். ஷெ வேதாரணியம்: நாகபட்டினத்திற்குத் தெற்கே 30 மைல் தூரத்திலுள்ளது. திருத்துறைப்பூண்டி ரெயில் ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்கே 22 மைல் |
| 2 | 112 | அச்சிறுபாக்கம் | தொண் | சென்னபட்டணத்திற்குத் தெற்கே 59 மைல். அச்சிறுபாக்கத்திற்குத் தென்மேற்கே ½ மைல் |
| 3 | 87 | அஞ்சைக்களம் | மலைநாடு | இருஞாலக்கடை ரெயில் ஸ்டேஷனிலிருந்து மேற்கே 4 மைல். சென்னையிலிருந்து தென்மேற்கே 360 மைல் தூரமுள்ள சோரனூர் ரெயில் ஸ்டேஷனில் இறங்கி, பிறகு தென்மேற்காக 35 மைல் தூரஞ்சென்றால் இருஞாலக்கடை யென்னும் ஸ்டேஷனை அடையலாம். |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | 100 | அண்ணாமலை | நடுநாடு | திருவண்ணாமலை ரெயில் ஸ்டேஷனுக்கு மேற்கே $\frac{1}{2}$ மைல். விழுப்புரம் ஜ-ஷ-க்கு மேற்கே 42 மைல். இது பஞ்சபூத ஸ்தலங்களில் தேயு ஸ்தலம். |
| 5 | 93 | அதிகை | ,, | பண்ணுருட்டி ரெயில் ஸ்டேஷனுக்குத் தென் கிழக்கே 1 மைல். இத்தலம் கெடில நதியின் வடகரையி லுள்ளது. இது அஷ்ட வீரட்டத்தினொன்று. திரிபுரதகனம் செய்த ஸ்தலம். |
| 6 | 56 | அம்பர்ப்பெருந் திருக்கோயில் | சோழநாடு தெ-கரை | பூந்தோட்டத்திற்குக் கிழக்கே 2 மைல். அம்பர் மாகாளத்திற்குக் கிழக்கே $\frac{1}{4}$ மைல். அம்பர் மாகாளத்திற்கு வழி ந. 7 பார்க்க. இத்தலத்தின் ஆலயத்திற்குப் 'பெருந்திருக் கோயில்' என்று பெயர். |
| 7 | ,, | அம்பர்மாகாளம் | ,, | பூந்தோட்டத்திற்குக் கிழக்கே $1\frac{1}{2}$ மைல். அம்பர் ஸ்தலத்திற்கு மேற்கே $\frac{3}{4}$ மைல். போளம் ரெயில் ஸ்டேஷனிலிருந்து தென் கிழக்கே $3\frac{3}{4}$ மைல். ஷை பேரளம் திருவாரூரிலிருந்து 14 மைல். இது 'கோயில் திருமாகாளம்' என்று வழங்கிவருகிறது. |
| 8 | 113 | அரசிலி | தொண் | இரும்பைமாகாளம் ஸ்தலத்திற்கு வடமேற்கே 2 மைல். புதுச்சேரி ரெயில் ஸ்டேஷனுக்கு வடகிழக்கே 5 மைல். இத்தலத்திற்கு 'ஒழுந்தியாப்பட்டு' என்னும் பேர் வழங்கப்படுகின்றது. |

சி[illegible] [illegible]த்தில் காட்டப்பட்டிருக்கும்

சிவ[illegible] [illegible]த்தில் காட்டப்பட்டிருக்கும் [illegible]சூத்திரங்களின் அகராதி

| | | | நூல் | சாம்பந்த [illegible] குறிப்பும் |
|---|---|---|---|---|
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| 10 | 60 | [illegible] | ,, | [illegible] |
| 11 | 71 | [illegible] | [illegible] | [illegible] |
| 1[illegible] | 87 | [illegible] | [illegible] | [illegible] |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | ரெயில் மார்க்கமாய் மேற்கே திருப்பூருக்கு 32 மைல். |
| 13 | 50 | அழுந்தூர் | சோழநாடு தென்கரை | குற்றாலம் ரெயில் ஸ்டேஷனுக்குத் தென் கிழக்கே 3 மைல். ஷெ குற்றாலம் மாயூரத் திற்குத் தென்மேற்கே 5½ மைல் தூரத்தில் உள்ளது. இத்தலம் 'தேரழுந்தூர்' என்று வழங்கப்படுகிறது. |
| 14 | 95 | அறையணிநல்லூர் | நடுநாடு | திருக்கோவலூர் ரெ-ஸ்டேஷனுக்குத் தென் கிழக்கே ½ மைல். ஷெ திருக்கோவலூர் விழுப்புரத்திலிருந்து திருவண்ணாமலைக்குச் செல்லும் ரெயில் மார்க்கத்தில் உள்ளது. இத்தலத்திற்கு 'அறைகண்டநல்லூர்' என்று இந்நூலில் காணப்படுகிறது. |
| 15 | 114 | அநேகதங்காபதம் | வடநாடு | இமயமலையின்மேல். இதற்குச் சரியானவழி தெரியவில்லை. |
| 16 | 35 | அன்பிலாலந்துறை | சோழநாடு வடகரை | [illegible] வடக்கே 7 மைல். திருச்சிராப்பள்ளியிலிருந்து 11 மைல் தூரமுள்ள பூதலூர் ரெயில் ஸ்டேஷனிற் [illegible] வடக்கே 5 மைல் தூரத்திலுள்ள திருக்காட்டுப் பள்ளியை யடைந்து, அங்கிருந்து மேற்கே காவிரிக்கு வடகரையில் 5 மைல் தூரஞ் சென்றால் கோவிலடியை யடையலாம். இத் தலத்திற்குத் 'திருமாலயந்துறை, அன்பில் (கீழன்பிலாலந்துறை)' என்னும் பேர்கள் இந்நூலில் காணப்படுகின்றன. |

சிவக்ஷேத்திர விளக்கத்தில காட்டப்பட்டிருக்கும்

## சிவக்ஷேத்திரவிளக்கத்தில் காட்டப்பட்டிருக்கும் ஸ்தலங்களின் அகராதி

| கோட்டு எண் | நூலின் பக்கம் | ஸ்தலத்தின் பெயர் | நாடு | சமீப ரெயில் ஸ்டேஷனிலிருந்து திசையும், தூரமும், விசேஷக் குறிப்பும் |
|---|---|---|---|---|
| 17 | 17 | அன்னியூர் | சோழநாடு | ஆநந்ததாண்டவபுரம் ரெயில் ஸ்டேஷனுக்குத் தென்மேற்கே 4 மைல். திருநீடூர் என்னும் ஸ்தலத்திற்கு மேற்கே 3 மைல்; ஷை திருநீடூர்: ஆநந்ததாண்டவபுரம் ரெயில் ஸ்டேஷனுக்குத் தென்மேற்கே 1 மைல் தூரத்தில் உள்ளது. இத்தலத்திற்குப் 'பொன்னூர்' என்றும் பேர் வழங்கப்படுகிறது. |
| 18 | 53 | ஆக்கூர் | சோழநாடு தெ-கரை | மாயூரத்திலிருந்து தரங்கம்பாடிக்குப் போகும் பாதையில் 10 மைல். இத்தலத்தின் ஆலயத்திற்குத் 'தான்தோன்றிமாடம்' என்று பெயர். * |
| 19 | 84 | ஆடானை | பாண்டி | அம்மயநாயக்கனூருக்குத் தென்கிழக்கே 75 மைல். பரமகுடி ரெயில் ஸ்டேஷனுக்குத் தென்கிழக்கே 32 மைல். இராமநாதபுரத்திலிருந்து 32 மைல். அறந்தாங்கியிலிருந்து 30 மைல். மானாமதுரை ரெயில் ஸ்டேஷனிலிருந்து சிவகங்கை, காளையார்கோயில் என்னும் ஊர்களின் வழியாய் 44 மைல். காளையார்கோயிலுக்குக் கிழக்கே 21 மைல்; இது நல்ல பாதை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 20 | 82 | ஆப்பனூர் | பாண்டி | மதுரை ஸ்ரீ மீனாக்ஷியம்மை கோயிலுக்கு வடக்கே 1 மைல். இத்தலம் 'திருவாப்புடையார் கோயில்' என்று வழங்கப்படுகிறது. |
| 21 | 22 | ஆப்பாடி | சோழநாடு வடகரை | ஆடுதுறைக்கு வடமேற்கே 7 மைல். திருப்பனந்தாளுக்குத் தென்மேற்கே 1 மைல்; கும்பகோணம் ஸ்டேஷனிலிருந்து வடகிழக்காக 10 மைல் தூரஞ் சென்றால் திருப்பனந்தாளை யடையலாம் |
| 22 | 99 | ஆமாத்தூர் | நடுநாடு | விழுப்புரம் ரெயில் ஸ்டேஷனுக்கு வடமேற்கே 4 மைல். இது பம்பை என்னும் சிற்றாற்றின் வடகரையி லுள்ளது. |
| 23 | 67 | ஆரூர் | சோழநாடு தெ-கரை | நாகபட்டினத்திற்கு மேற்கே 14 மைல். திருவாரூர்க்கு வடமேற்கே 1 மைல். இத்தலத்தின் ஆலயத்திற்குத் 'திருமூலட்டானம்' என்றும், 'பூங்கோயில்' என்றும் பெயர்கள் வழங்கப்படுகின்றன. |
| 24 | 67 | ஆரூர் அரநெறி | ,, | திருவாரூர் திருமூலட்டானம் பெரிய ஆலயத்தின் 2-ம் பிராகாரத்தில் மேற்குமுகமாயுள்ளது. திருவாரூர்க்கு வடமேற்கே 1 மைல். |
| 25 | 68 | ஆரூர்ப்பரவையுண் மண்டளி | ,, | திருவாரூர்ப் பெரிய கோயிலின் மஹாராஜகோபுரத்திற்கு தென்மேற்கே உள்ளது. திருவாரூர் கீழ் வீதியில் ¼ மைல். இது 'துவாநாயனார் (தூவாய்நாயனார்) கோயில்' என்று வழங்கப்படுகிறது. |

| சிவக்ஷேத்திரவிளக்கத்தில் காட்டப்பட்டிருக்கும் ஸ்தலங்களின் அகராதி | | | | |
|---|---|---|---|---|
| தொடர் எண் | நூலின் பக்கம் | ஸ்தலத்தின் பெயர் | நாடு | சமீப ரெயில் ஸ்டேஷனிலிருந்து திசையும், தூரமும், விசேஷக் குறிப்பும் |
| 26 | 107 | ஆலங்காடு | தொண் | திருஆலங்காடு ரெயில் ஸ்டேஷனுக்கு வடகிழக்கே 3 மைல்; சென்னைக்கு மேற்கே 27 மைல் தூரத்தில் திருவாலங்காடு ஸ்டேஷன் உள்ளது. மனவூர் ரெயில் ஸ்டேஷனுக்கு வடமேற்கே 3 மைல். இத்தலம் 'பழையனூர் - ஆலங்காடு' என்று வழங்கப்படுகிறது; ஷை பழையனூர்: திருவாலங்காட்டுக்குக் கிழக்கே 1 மைல் தூரத்திலுள்ளது. |
| 27 | 41 | ஆலம்பொழில் | சோழநாடு தெ-கரை | தஞ்சாவூர் ரெயில் ஸ்டேஷனுக்கு வடக்கே 9 மைல். தஞ்சையிலிருந்து வடக்கே திருவையாற்றுக்குப்போகும் பாதையில் 6 மைல் தூரஞ்சென்று, திருக்கண்டியூரை யடைந்து, அங்கிருந்து மேற்கே 2 மைல் தூரஞ்சென்று திருப்பூந்துருத்தியை யடைந்து பின்னும் 1 மைல் தூரஞ்சென்றால் இத்தலத்தை யடையலாம். |
| 28 | 81 | ஆலவாய் | பாண்டி | மதுரை ரெயில் ஸ்டேஷனுக்குக் கிழக்கே 1 மைல். இத்தலம் 'மதுரை' என்றும் வழங்கப்படுகிறது. இது பஞ்ச சபைகளில் ஒன்று |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | யுள்ள ராஜதசபையை (வெள்ளியம்பலத்தை) யடையது. |
| 29 | 49 | ஆவடுதுறை | சோழநாடு தெ-கரை | நரசிங்கன்பேட்டை ரெயில்வே ஸ்டேஷனுக்குக் கிழக்கே $1\frac{1}{2}$ மைல்; மாயூரத்திற்கு 10 மைல் தூரத்தில் நரசிங்கன்பேட்டை ரெயில்வே ஸ்டேஷனுள்ளது. திருமூலநாயனார் திருமந்திரம் என்னும் நூலை அருளிய ஸ்தலம். |
| 30 | 44 | ஆவூர் | ,, | பட்டீச்சுரத்திற்குத் தென்மேற்கே $4\frac{1}{2}$ மைல்; கும்பகோணத்திற்குத் தென்மேற்கே 4 மைல் தூரத்தில் பட்டீச்சுரம் உள்ளது. பாபநாசத்திற்குத் தென்கிழக்கே $6\frac{1}{2}$ மைல். இத்தல ஆலயத்திற்குப் 'பசுபதீச்சுரம்' என்று பெயர்; பசுக்கள் பூசித்த ஸ்தலம். |
| 31 | 36 | ஆனைக்கா | சோழநாடு வடகரை | திரிசிராப்பள்ளிக்கு வடக்கே $2\frac{1}{2}$ மைல். இத்தலம் 'ஜம்புகேச்சுரம்' என்று வழங்கப்படுகிறது. இது பஞ்சபூத ஸ்தலங்களுள் ஒன்றாகிய அப்புஸ்தலம். கோயிலின் மூலஸ்தானத்தில் ஜலம் என்றும் நிரம்பியிருக்கும். |
| 32 | 73 | இடும்பாவனம் | சோழநாடு தெ-கரை | திருத்துறைப்பூண்டி ரெயில் ஸ்டேஷனுக்குத் தென்மேற்கே 10 மைல். |
| 33 | 111 | இடைச்சுரம் | தொண் | செங்கற்பட்டிலிருந்து கிழக்கே திருப்போரூருக்குப் போகும் பாதையில் 5 மைல் தூரஞ் சென்றால் பாதைக்கு வடக்கே $\frac{1}{2}$ மைல். |

## சிவக்ஷேத்திரவிளக்கத்தில் காட்டப்பட்டிருக்கும் ஸ்தலங்களின் அகராதி

| தொடர் எண் | நூலின் பக்கம் | ஸ்தலத்தின் பெயர் | நாடு | சமீப ரெயில் ஸ்டேஷனிலிருந்து திசையும், தூரமும், விசேஷக் குறிப்பும் |
|---|---|---|---|---|
| 34 | 47 | இடைமருதூர் | சோழநாடு தெ-கரை | கும்பகோணத்துக்கு வடகிழக்கே 5 மைல். திருவிடைமருதூர் ரெயில் ஸ்டேஷனுக்கு வடக்கே ½ மைல். இத்தலம் 'மத்தியார்ஜுனம்' என்று ஸம்ஸ்கிருதத்தில் வழங்கப்படுகிறது. |
| 35 | 96 | இடையாறு | நடுநாடு | திருவெண்ணெய் நல்லூருக்கு மேற்கே 3 மைல். பண்ணுருட்டி ரெயில் ஸ்டேஷனிலிருந்து மேற்கே திருக்கோவலூருக்குப் போகும் பாதையில் 15 மைல் தூரத்திலும், விழுப்புரம் ரெயில் ஸ்டேஷனிலிருந்து 12 மைல் தூரத்திலும், திருக்கோவலூரிலிருந்து 14 மைல் தூரத்திலும் திருவெண்ணெய்நல்லூர் இருக்கிறது. மாம்பழப்பட்டுக்குத் தென்மேற்கே 9 மைல். |
| 36 | 114 | இந்திரநீல பருப்பதம் | வடநாடு | காட்மாண்டுக்கு வடமேற்கே 80 மைல். இது வடநாட்டுத் தலங்கள் ஐந்தனுள் ஒன்று. |
| 37 | 63 | இராமனதீச்சுரம் | சோழநாடு தெ-கரை | நன்னிலம் ரெயில் ஸ்டேஷனுக்குத் தென்கிழக்கே 5 மைல். நன்னிலம் ரெ-ஸ்டேஷனிலிறங்கி கிழக்கே 3¾ மைல் தூரஞ்சென்று |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | திருப்புகலூர் க்ஷேத்திரத்தை யடைந்து, அங்கிருந்து தெற்கே திரும்பி முடிகொண்டான் என்னும் ஆற்றைக் கடந்து 1 மைல் தூரஞ்சென்றால் இத்தலத்தையடையலாம். |
| 38 | 84 | இராமேசுரம் | பாண்டி | இராமேசுரத்திற்குக் கிழக்கே 1 மைல். இது ரெயில் ஸ்டேஷன் உள்ள ஸ்தலம். |
| 39 | 70 | இரும்பூளை | சோழநாடு தெ-கரை | நீடாமங்கலம் ரெ-ஸ்-க்கு வடக்கே 4 மைல். தஞ்சைக்குக் கிழக்கே 18½ மைல் தூரத்திலுள்ள நீடாமங்கலம் ரெ-ஸ்-இறங்கி, அங்கிருந்து வடமேற்கே கும்பகோணம் போகும் பாதையில் 4 மைல் தூரம் சென்றால் இத்தலத்தை யடையலாம். இத்தலம் 'ஆலங்குடி' என்று வழங்கப்படுகிறது. |
| 40 | 113 | இரும்பைமாகாளம் | தொண் | புதுச்சேரி ரெயில் ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே 5 மைல். |
| 41 | 105 | இலம்பையங்கோட்டூர் | ,, | மணவூர் ரெ-ஸ்-தென்மேற்கே 6 மைல். கூவத்துக்குத் தென்மேற்கே 1¼ மைல். |
| 42 | 24 | இன்னம்பர் | சோழநாடு வடகரை | கும்பகோணத்திற்கு வடமேற்கே 4 மைல். புளியங்குடி என்னும் ஊருக்கு வடக்கே 1 மைல்; கும்பகோணத்திற்கு மேற்கே 3 மைல் தூரத்தில் புளியங்குடி உள்ளது. |
| 43 | 37 | ஈங்கோய்மலை | ,, | குழித்தலை ரெயில் ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே 5 மைல். இத்தலம் 'திருவிங்கநாதமலை' என வழங்கப்படுகிறது. |

சிவக்ஷேத்திரவிளக்கத்தில் காட்டப்பட்டிருக்கும் ஸ்தலங்களின் அகராதி

| தொடர் எண் | நூலின் பக்கம் | ஸ்தலத்தின் பெயர் | நாடு | சமீப ரெயில் ஸ்டேஷனிலிருந்து திசையும், தூரமும், விசேஷக் குறிப்பும் |
|---|---|---|---|---|
| 44 | 73 | உசீர்த்தனம | சோழநாடு தெ-கரை | முத்துப்பேட்டை ரெயில் ஸ்டேஷனுக்கு வடக்கே 2 மைல். இத்தலம் 'திருக்கோயிலூர்' என்று வழங்கப்படுகிறது. |
| 45 | 105 | ஊறல் | தொண் | அரக்கோணம் ரெயில் ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்கே 7 மைல். பள்ளூரிலிருந்து வடகிழக்கே 6 மைல். நந்திதேவரது வாயிலிருந்து ஜலம் எப்போதும் விழுந்துகொண்டிருக்கும் ஸ்தலமகிமை யுள்ளதாதலால் இவ்வூருக்குத் 'திருவூறல்' என்னும் பெயர் வாய்க்கப்பெற்றது. இத்தலத்திற்குத் 'தக்கோலம்' என்னும் பெயர் வழங்கப்படுகிறது. |
| 46 | 17 | எதிர்கொள்பாடி | சோழநாடு வடகரை | திருவேள்விக்குடியிலிருந்து வடக்கே 1½ மைல்; குற்றாலம் ரெ-ஸ்-க்கு வடகிழக்கே 3 மைல் தூரத்தில் திருவேள்விக்குடி உள்ளது. இத்தலம் 'மேலைத்திருமணஞ்சேரி' என்று வழங்கப்படுகிறது. |
| 47 | 92 | எருக்கத்தம்புலியூர் | நடுநாடு | சிதம்பரத்திற்கு மேற்கே 24 மைல். விருத்தாசலத்திற்குத் தெற்கே 7 மைல். இத்தலம் 'இராஜேந்திர பட்டணம்' என்று வழங்கப்படுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 48 | 40 | எறும்பியூர் | சோழநாடு தெகரை | திரிசிரபுரத்துக்குக் கிழக்கே $6\frac{1}{4}$ மைல். திருவெறும்பியூர் ரெயில் ஸ்டேஷனுக்கு வடமேற்கே $\frac{1}{2}$ மைல். இத்தலத்திற்குத் 'திருவெறும்பூர்' என்னும் பெயர் வழங்கப்படுகிறது. |
| 49 | 83 | ஏடகம் | பாண்டி | மதுரைக்கு வடமேற்கே 8 மைல். சோழவந்தான் ரெயில் ஸ்டேஷனுக்குத் தென்மேற்கே 2 மைல். |
| 50 | 26 | ஐயாறு | சோழநாடு வடகரை | தஞ்சாவூருக்கு வடக்கே 7 மைல். இது, 'சப்தஸ்தானம்' என்று வழங்கும் 7 ஸ்தலங்களில் முதன்மையாயுள்ளது. |
| 51 | 109 | ஒற்றியூர் | தொண் | சென்னைக்கு வடக்கே 5 மைல். திருவொற்றியூர் ரெயில் ஸ்டேஷனுக்குக் கிழக்கே $\frac{1}{2}$ மைல். |
| 52 | 102 | ஓணகாந்தன் தளி | ,, | காஞ்சிபுரத்திற்கு மேற்கிலுள்ள சர்வதீர்த்தத்துக்கு வடக்கே $\frac{1}{2}$ மைல், காஞ்சிபுரம். |
| 53 | 103 | ஒத்தூர் | ,, | காஞ்சிபுரத்திற்குத் தென்மேற்கே 19 மைல். 3-வது மைலில் பாலாற்றைக் கடக்கவேண்டும். இஃது ஆண்பனை பெண்பனையான மகிமையுள்ள ஸ்தலம். |
| 54 | 19 | ஓமாம்புலியூர் | சோழநாடு வடகரை | மன்னார்குடிக்குத்தெற்கே 4 மைல். வைத்தீஸ்வரன் கோயிலுக்கு வடமேற்கே 7 மைல். |
| 55 | 102 | கச்சி அநேகதங்காபதம் | தொண் | காஞ்சிபுரத்திற்கு வடக்கே 1 மைல். இவ்வாலயம் காஞ்சிபுரத்திற்கு வடமேற்கிலுள்ள புத் |

சிவக்ஷேத்திரவிளக்கத்தில் காட்டப்பட்டிருக்கும் ஸ்தலங்களின் அகராதி

| தொடர் எண் | நூலின் பக்கம் | ஸ்தலத்தின் பெயர் | நாடு | சமீப ரெயில் ஸ்டேஷனிலிருந்து திசையும், தூரமும், விசேஷக் குறிப்பும் |
|---|---|---|---|---|
| | | | | தேறித் தெருவுக்கு மேற்கே கழனி வெளியின் மத்தியி லிருக்கிறது. |
| 56 | 101 | கச்சி ஏகம்பம் | ,, | காஞ்சீபுரத்திற்குமேற்கே 1 மைல். இது 'காஞ்சீபுரம்' என்றும் வழங்கப்படுகிறது. இது, பஞ்சபூத ஸ்தலங்களுள் பிருதிவி ஸ்தலம். மூத்திகரம் ஏழனுள் ஒன்றாயுள்ளது. |
| 57 | 102 | கச்சிநெறிக்காரைக் காடு | தொண் | காஞ்சீபுரத்திற்குத் தென்மேற்கே $\frac{1}{2}$ மைல். காஞ்சீபுரத்தில் ஹாட்ஸன் பேட்டையிலிருக்கும் தேரடிக்கு வடகிழக்கே $\frac{3}{4}$ மைல். இதுவும் 'காஞ்சீபுரம்'. இது, 'திருக்காலீசுரன் கோயில்' என்று வழங்கப்படுகிறது. |
| 58 | 101 | கச்சிமேற்றளி | ,, | இவ்வாலயம் காஞ்சீபுரத்திற்கு மேற்குப் பாகமாகிய பிள்ளைப்பாளையத்தி லிருக்கிறது. காஞ்சீபுரத்திற்குத்தென்மேற்கே $1\frac{1}{2}$ மைல். இது 'திருமேற்றளி' என்று வழங்கப்படுகிறது. |
| 59 | 111 | கச்சூர் | ,, | சிங்கப்பெருமாள் கோயில் ரெயில் ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே $1\frac{1}{2}$ மைல்; செங்கற்பட்டுக்கு வடக்கே 5 மைல் தூரத்தில் சிங் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | கப்பெருமாள்கோயில் உள்ளது. இது 'ஆலக்கோயில்' என வழங்கப்படுகிறது. |
| 60 | 21 | கஞ்சனூர் | சோழநாடு வடகரை | திருவிடைமருதூர் ரெயில் ஸ்டேஷனுக்கு வடகிழக்கே $5\frac{1}{2}$ மைல். நாரசிங்கம்பேட்டைக்கு வடக்கே 1 மைல். |
| 61 | 38 | கடம்பந்துறை | சோழநாடு தெ-கரை | குழித்தலை ரெ - ஸ்டேஷனுக்கு வடமேற்கே $1\frac{1}{2}$ மைல்; திரிசிராப்பள்ளிக்கு மேற்கே 20 மைல் தூரத்தில் குழித்தலை ரெயில் ஸ்டேஷன் உள்ளது. இது 'கடம்பர்கோயில்' என்று வழங்கப்படுகிறது. |
| 62 | 20 | கடம்பூர் | சோழநாடு வடகரை | ஓமாம்புலியூரிலிருந்து வடமேற்கே 4 மைல். ஓமாம்புலியூருக்கு வழி நெ. 54 பார்க்க. வைத்தீஸ்வரன் கோயிலுக்கு வடமேற்கே 11மைல். இவ்வாலயத்திற்குக் 'காக்கோயில்' என்று பெயர். |
| 63 | 53 | கடவூர் | சோழநாடு தெ-கரை | மாயூரத்திலிருந்து தென்கிழக்கே தரங்கம்பாடிக்குப் போகும் பாதையில் $12\frac{3}{4}$ மைல். சீகாழி ரெயில் ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்கே தரங்கம்பாடிக்குப் போகும் பாதையில் 14 மைல். |
| 64 | ,, | கடவூர்மயானம் | ,, | திருக்கடவூருக்குக் கிழக்கே 1 மைல். மாயூரத்திற்குத்தென்கிழக்கே 12 மைல். இது 'திருமெய்ஞ்ஞானம்' என வழங்கப்படுகிறது. |

## சிவக்ஷேத்திரவிளக்கத்தில் காட்டப்பட்டிருக்கும் ஸ்தலங்களின் அகராதி

| தொடர் எண் | நூலின் பக்கம் | ஸ்தலத்தின் பெயர் | நாடு | சமீப ரெயில் ஸ்டேஷனிலிருந்து திசையும், தூரமும், விசேஷக் குறிப்பும் |
|---|---|---|---|---|
| 65 | 73 | கடிக்குளம் | சோழநாடு | பாண்டிக்குத் தென்கிழக்கே 4 மைல். திருத்தருப்பூண்டி ரெயில் ஸ்டேஷனுக்குத் தென்கிழக்கே $10\frac{1}{2}$ மைல். இது 'கற்பகனார் கோயில்' என்றும் வழங்கப்படுகிறது. |
| 66 | 70 | கடுவாய்க்கரைப்புத்தூர் | ,, | நீடாமங்கலம் ரெ-ஸ்-லிருந்து தென்கிழக்காக வலங்கைமான் வழியாய் 11 மைல். திருக்குடவாசலிலிருந்து மேற்கே $3\frac{1}{2}$ மைல். திருக்குடவாசலுக்கு வழி செ. 98 பார்க்க. |
| 67 | 15 | கடைமுடி | ,, | மாயூரத்திற்குக் கிழக்கே 8 மைல். நனிபள்ளிக்கு வடமேற்கே 1 மைல்; நனிபள்ளிக்கு மார்க்கம் 162-ம் செ. பார்க்க. இது 'கீழையூர்-கீழூர்' எனவும் வழங்கப்படுகிறது. திருநின்றியூரிலிருந்து தென்கிழக்கே 4 மைல்; இதற்கு வழி 170-ம் செ. பார்க்க. |
| 68 | 42 | கண்டியூர் | ,, | தஞ்சாவூர் ரெயில் ஸ்டேஷனுக்கு வடக்கே 6 மைல். ஷை திருக்கண்டியூர் அஷ்டவீரட்டங்களில் ஒன்று; பிரமனது சிரசைக் கொய்த தலம். ஸப்த ஸ்தான க்ஷேத்திரங்களில் 5-வதாயுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 69 | 15 | கண்ணார்கோயில் | சோழநாடு வடகரை | ஆனந்ததாண்டவபுரத்திற்கு வடகிழக்கே 4 மைல். வைத்தீசுவரன்கோயிலுக்குத் தென்கிழக்கே $1\frac{1}{2}$ மைல்; செ. 207 பார்க்க. இது 'குறமாணக்குடி' என்று வழங்கப்படுகிறது. |
| 70 | 115 | கயிலாயம் | வடநாடு | இமயமலையின் பேரில். இது 'நொடித்தான் மலை' என்று வழங்கப்படுகிறது. |
| 71 | 69 | கரவீரம் | சோழநாடு தெ-கரை | திருவாரூருக்கு மேற்கே 7 மைல். குழிக்கரைக்கு வடமேற்கே $4\frac{1}{2}$ மைல். இது 'கரையபுரம்' என்று வழங்கப்படுகிறது. |
| 72 | 43 | கருகாவூர் | ,, | ஐயம்பேட்டை ரெயில் ஸ்டேஷனுக்குத் தென்கிழக்கே 4 மைல். பாவநாசம் ரெயில் ஸ்டேஷனுக்குத் தெற்கே 4 மைல். இது 'திருக்களாவூர்' என்று வழங்கப்படுகிறது. |
| 73 | 61 | கருக்குடி | ,, | கும்பகோணத்திற்குத் தெற்கே 3 மைல். கலையநல்லூருக்குத் தென்கிழக்கே $\frac{3}{4}$ மைல்; கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே $2\frac{3}{4}$ மைல் தூரத்தில் கலையநல்லூர் இருக்கிறது. இது 'மருதாந்தநல்லூர்' என்று வழங்கப்படுகிறது. |
| 74 | 18 | கருப்பறியலூர் | சோழநாடு வடகரை | திருப்பன்கூருக்கு 2 மைல் தூரம் மேற்கே சென்று மண்ணிப்பள்ளம் என்ற ஊரையடைந்து அங்கிருந்து வடக்கே 1 மைல்; வைத்தீசுவரன் கோயிலுக்கு மேற்கே 2 மைல் தூரஞ் சென்றால் திருப்புன்கூரையடையலாம்; செ. 211 பார்க்க. வைத்தீசு |

## சிவக்ஷேத்திரவிளக்கத்தில் காட்டப்பட்டிருக்கும் ஸ்தலங்களின் அகராதி

| தொடர் எண் | நூலின் பக்கம் | ஸ்தலத்தின் பெயர் | நாடு | சமீப ரெயில் ஸ்டேஷனிலிருந்து திசையும், தூரமும், விசேஷக் குறிப்பும் |
|---|---|---|---|---|
| | | | | வான் கோயிலுக்கு மேற்கே 4½ மைல். 'மேலைக்காழி' 'தலைஞாயிறு' எனவும் வழங்கப்படுகிறது. இத்தலத்தின் ஆலயத்திற்குக் 'கொகுடிக்கோயில்' என்று பெயர். |
| 75 | 59 | கருவிலி | சோழநாடு தெ-கரை | ஆடுதுறைக்குத் தென்கிழக்கே 8½ மைல். நாச்சியார்கோயிலுக்குக் கிழக்கே 6 மைல். கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே 5½ மைல் தூரஞ் சென்று நறையூர்ச்சித்திச்சரத்தைச் சார்ந்து, அங்கிருந்து ½ மைல் தூரஞ் சென்றால் நாச்சியார்கோயிலையடையலாம். நறையூர்ச்சித்திச்சரத்திற்கு மார்க்கம் செ. 161 பார்க்க. இத்தலத்தின் ஆலயத்திற்குக் 'கொட்டிட்டை' என்று பெயர். |
| 76 | 90 | கருவூர் | கொங்கு | திரிசிராப்பள்ளிக்கு மேற்கே 45 மைல். கரூருக்குத் தென்மேற்கே 1½ மைல். இத்தலம் 'கரூர்' எனவும் வழங்கப்படுகிறது. இத்தலத்தின் ஆலயத்திற்கு 'ஆநிலை' என்று பெயர். |
| 77 | 60 | கலயநல்லூர் | சோழநாடு தெ-கரை | கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே 2¼ மைல். இது 'சாக்கோட்டை' என்று வழங்கப்படுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 78 | 12 | கலிக்காமூர் | சோழநாடு வடகரை | மாயூரத்திற்கு வடகிழக்கே 15 மைல். தென் திருமுல்லைவாயிலுக்குத் தென்மேற்கே 3 மைல். ஷெ தென்முறைவாயிலுக்கு வழி செ. 240 பார்க்க. சாயாவனத்திற்கு (திருச் சாய்க்காடு) வடக்கே 4 மைல். ஷெ சாயா வனத்திற்கு வழி செ. 130 பார்க்க. இத் தலம் 'அன்னப்பன்பேட்டை' என வழங் கப்படுகிறது. |
| 79 | 11 | கழிப்பாலை | ,, | சிதம்பரத்திற்குத் தென்கிழக்கே 7 மைல். இத்தலத்தின் பெயர் 'காரைமேடு' என்று இந்நாளில் காணப்படுகிறது. |
| 80 | 112 | கழுக்குன்றம் | தொண் | செங்கற்பட்டு ரெயில் ஸ்டேஷனுக்குத் தென் கிழக்கே 9 மைல். |
| 81 | 72 | கரவீ | சோழநாடு தெ-கரை | திருக்கருப்பூண்டி ரெயில் ஸ்டேஷனிலிருந்து தென்மேற்கே 11 மைல். |
| 82 | 108 | கள்ளில் | தொண் | திரு எவ்வுளூர் ரெயில் ஸ்டேஷனுக்கு வட கிழக்கே 14 மைல். பொன்னேரிக்குத் தெ ன்மேற்கே 12 மைல். இத்தலம் 'திருக்கள் ளம்' என வழங்கப்படுகிறது |
| 83 | 39 | கற்குடி | சோழநாடு தெ-கரை | திரிசிரபுரத்திற்குத் தென்மேற்கே $2\frac{1}{2}$ மைல். திருச்சி ஜங்ஷனுக்கு வடகிழக்கே $1\frac{1}{2}$ மைல். இத்தலம் 'உய்யக்கொண்டான்' என்று வழ ங்கப்படுகிறது. |
| 84 | 77 | கன்றாப்பூர் | ,, | திருவாட்டியத்தான்குடி ரெயில் ஸ்டேஷனி லிருந்து கிழக்கே 5 மைல் தூரஞ்சென்ற, |

## சிவக்ஷேத்திரவிளக்கத்தில் காட்டப்பட்டிருக்கும் ஸ்தலங்களின் அகராதி

| தொடர் எண் | நூலின் பக்கம் | ஸ்தலத்தின் பெயர் | நாடு | சமீப ரெயில் ஸ்டேஷனிலிருந்து திசையும், தூரமும், விசேஷக் குறிப்பும் |
|---|---|---|---|---|
| | | | | பிறகு வடக்கே திரும்பி 1 மைல் போக வேண்டும். திருவாரூர் ரெயில் ஸ்டேஷனுக்குத் தெற்கே $5\frac{1}{2}$ மைல் தூரத்தில் திருநாட்டியத்தான்குடி யுள்ளது. |
| 85 | 13 | காட்டுப்பள்ளி (கீழை) | சோழநாடு வடகரை | திருவெண்காட்டிற்கு மேற்கே 1 மைல். சீகாழிக்குத் தென்கிழக்கில் காவிரிப்பூம் பட்டினத்திற்குப் போகும் மார்க்கத்தில் 7 மைல் தூரஞ்சென்றால் திருவெண்காட்டையடையலாம். மாயூரம் ரெயில் ஸ்டேஷனுக்குக் கிழக்கே 8 மைல். |
| 86 | 41 | காட்டுப்பள்ளி (மேலை) | சோழநாடு தெ-கரை | பூதலூர் ரெயில் ஸ்டேஷனுக்கு வடக்கே 5 மைல். ஷை பூதலூர் தஞ்சாவூருக்கு மேற்கே 11 மைல் தூரத்திலுள்ளது. திருப்பூந்துருத்தியிலிருந்து மேற்கே 7 மைல். (செ. 212 பார்க்க.) |
| 87 | 12 | காவிரிப்பூம்பட்டினம் | சோழநாடு வடகரை | சீகாழிக்குத் தென்கிழக்கே 10 மைல். மாயூரத்துக்குக் கிழக்கே 13 மைல். இத்தலம் 'பல்லவனீச்சுரம்' என வழங்கப்படுகிறது. |
| 88 | 14 | காழி | சோழநாடு வடகரை | சீகாழி ரெயில் ஸ்டேஷனுக்குத் தென்கிழக்கே $\frac{1}{2}$ மைல். சிதம்பரத்திற்குத் தெற்கே 11 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | மைல். 'இத்தலம்: ஸ்ரீகாழி, பிரமபுரம், தோணிபுரம், வேணுபுரம் சிரபுரம், புகலி, வெங்குரு, பூந்தராய், புறவம், சண்பை, கொச்சைவயம், கழுமலம் என்னும் 12 திருநாமங்களோடுங் கூடியது. |
| 89 | 108 | காளத்தி | தொண் | ஸ்ரீகாளஹத்திக்கு வடகிழக்கே 2 மைல். ரேணுகுண்டா ரெயில் ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே 15 மைல். இத்தலம் 'ஸ்ரீகாளஹஸ்தி' என்று வழங்கப்படுகிறது; ஸ்ரீ-சிலந்தி, காளம்-பாம்பு, ஹஸ்தி-யானை, இம்மூன்றும் பூசித்து முத்திபெற்ற ஸ்தலம். |
| 90 | 77 | காறுயில் | சோழநாடு தெ-கரை | திருவாரூருக்குத் தெற்கே $8\frac{1}{4}$ மைல். திருநாட்டியத்தான்குடி ரயில் ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்கே 3 மைல். இத்தலம் 'திருக்காறைவாசல்' என்று வழங்கப்படுகிறது; இது சப்தவிடங்க ஸ்தலங்களில் ஒன்று. |
| 91 | 85 | கானப்பேர் | பாண்டி | மதுரைக்குக் கிழக்கே சிவகங்கை என்னும் ஊர் வழியாய் 39 மைல். மதுரையிலிருந்து சிவகங்கை 28 மைல் தூரம். அம்மையநாயக்கனூருக்குத் தென்கிழக்கே 54 மைல். மானாமதுரை ரெயில் ஸ்டேஷனுக்கு வடக்கே 11 மைலில் சிவகங்கையுள்ளது. இத்தலம் 'காளையார்கோயில்' என வழங்கப்படுகிறது. |

## சிவக்ஷேத்திரவிளக்கத்தில் காட்டப்பட்டிருக்கும் ஸ்தலங்களின் அகராதி

| தொடர் எண் | நூலின் பக்கம் | ஸ்தலத்தின் பெயர் | நாடு | சமீப ரெயில் ஸ்டேஷனிலிருந்து திசையும், தூரமும், விசேஷக் குறிப்பும் |
|---|---|---|---|---|
| 92 | 19 | கடுவெட்டிமுன்றூர் | சோழநாடு வடகரை | வைத்தீசுவரன் கோயிலுக்கு வடமேற்கே 5 மைல். |
| 93 | 34 | கானூர் | ,, | பூதலூருக்கு வடக்கே 7 மைல். திருக்காட்டுப்பள்ளிக்கு வடக்கே 2 மைல்; பூதலூர் ரெயில் ஸ்டேஷனுக்கு வடக்கே 5 மைல் தூரத்தில் திருக்காட்டுப்பள்ளியுள்ளது. |
| 94 | 66 | கீழ்வேளூர் | சோழநாடு தெ-கரை | கீழ்வேளூர் ரெயில் ஸ்டேஷனுக்கு வடக்கே 1 மைல். திருவாரூருக்குக் கிழக்கே 7 மைல். |
| 95 | 47 | குடந்தைக்காரோணம் | ,, | மகாமக குளத்தின் வடகரையில். கும்பகோணத்திற்கு மேற்கே 1 மைல். (கும்பகோணத்திலுள்ள காசி விசுவநாதர் கோயில்) |
| 96 | 46 | குடந்தைக் கீழ்க்கோட்டம் | ,, | கும்பகோணத்திற்கு மேற்கே 1 மைல்; ஊர் மத்தியிலிருக்கிறது; இஃது கும்பகோணத்திலுள்ள நாகேசுர சுவாமி கோயில். |
| 97 | ,, | குடமூக்கு | ,, | ரெயில் ஸ்டேஷன். இத்தலம் 'கும்பகோணம்' என்று வழங்கப்படுகிறது. |
| 98 | 69 | குடவாயில் | ,, | கொரடாச்சேரி ரெயில் ஸ்டேஷனுக்கு வடக்கே 8 மைல்; இது தஞ்சைக்குக் கிழக்கே 24 மைல் தூரத்திலுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 99 | 18 | குரக்குக்கா | சோழநாடு வடகரை | வைத்தீஸ்வரன் கோயிலுக்கு வடமேற்கே 5 மைல். திருக்கருப்பறியலூருக்கு வடக்கே 1 மைல்; இதற்குவழி 74-ம் நெ. பார்க்க. |
| 100 | 103 | குரங்கணின் முட்டம் | தொண்டை | காஞ்சீபுரம் ஸ்ரீ ஏகாம்பரநாதர் ஆலயத்திற்குத் தெற்கே 6 மைல். குரங்கு, அணில், முட்டம் இவைகள் பூசித்த தலம். |
| 101 | 26 | குரங்காடுதுறை (வட) | சோழநாடு வடகரை | ஐயம்பேட்டைக்கு வடமேற்கே 3½ மைல்; இது கும்பகோணத்திற்குத் தெற்கே 13½ மைல் தூரத்தில் உள்ளது. திருச்சக்கரப் பள்ளிக்கு வடக்கே 3 மைல்; இது ஐயம் பேட்டை ரெயில் ஸ்டேஷனுக்கு ¼ மைல் தூரத்திலுள்ளது. |
| 102 | 48 | குரங்காடுதுறை (தென்) | சோழநாடு தென்கரை | ரெயில் ஸ்டேஷன். திருவிடைமருதூருக்கு கிழக்கே 2½ மைல். ஆடுதுறைக்கு வடமேற்கே 2 மைல். இத்தலம் 'ஆடுதுறை' என்று வழங்கப்படுகிறது. |
| 103 | 13 | குருகாவூர் | சோழநாடு வடகரை | சீகாழிக்குக் கிழக்கே 4 மைல். இத்தலம் 'திருக்கடாவூர்' என்று வழங்கப்படுகிறது. |
| 104 | 18 | குறுக்கை | ,, | ஆனந்ததாண்டவபுரம் ரெயில் ஸ்டேஷனுக்கு மேற்கே 6 மைல். திருஅன்னியூர் (நெ. 17) என்ற பொன்னூருக்கு வடக்கே 4 மைல். இது அஷ்டவீரட்டங்களில் ஒன்று. |
| 105 | 86 | குற்றாலம் | பாண்டி | தென்காசி ரெயில் ஸ்டேஷனுக்கு மேற்கே 3½ மைல். திருநெல்வேலிக்கு (நெ. 179) |

## சிவக்ஷேத்திரவிளக்கத்தில் காட்டப்பட்டிருக்கும் ஸ்தலங்களின் அகராதி

| தொகை எண் | நூலின் பக்கம் | ஸ்தலத்தின் பெயர் | நாடு | சமீப ரெயில் ஸ்டேஷனிலிருந்து திசையும், தூரமும், விசேஷக் குறிப்பும் |
|---|---|---|---|---|
| | | | | வடமேற்கே 22 மைல். இத்தலம் 'குறும்பலா' என்று வழங்கப்படுகிறது. |
| 106 | 91 | கூடலையாற்றூர் | நடுநாடு | சிதம்பரத்திற்கு மேற்கே 15 மைல். |
| 107 | 114 | கேதாரம் | வடநாடு | காட்மாண்டுக்கு வடக்கே 70 மைல். இமயமலைச்சாரலி லுள்ளது. |
| 108 | 80 | கேதீச்சுரம் | ஈழநாடு | இலங்கைத்தீவி லுள்ளது. |
| 109 | 77 | கைச்சினம் | சோழநாடு தெ-கரை | திருவாரூருக்குத் தெற்கிலுள்ள திருநெல்லிக்கா (செ. 175) ரெயில் ஸ்டேஷனுக்குக் கிழக்கே 2 மைல். திருத்தருப்பூண்டிக்கு வடக்கே 6½ மைல். |
| 110 | 88 | கொடிமாடச்செங்குன்றூர் | கொங்கு | சங்ககிரிதுர்க்கத்திற்கு வடமேற்கே 6 மைல்; இது ஈரோட்டிலிருந்து ரெயில் மார்க்கமாக மாக வடக்கில் 12½ மைல் தூரத்திலுள்ளது. இத்தலம் 'திருச்செங்கோடு' என்று வழங்கப்படுகிறது. |
| 111 | 83 | கொடுங்குன்றம் | பாண்டி | மதுரைக்கு வடகிழக்கே 42 மைல். அம்மையநாயக்கனூருக்கு வடகிழக்கு 16 மைல். இத்தலம் 'பிரான்மலை' என்று வழங்கப்படுகிறது. |
| 112 | 24 | கொட்டையூர் | சோழ-வட | கும்பகோணத்திற்கு மேற்கே 2 மைல். |

| | | | | |
|---|---|---|---|---|
| 113 | 61 | கொண்டீச்சரம் | சோழநாடு தெ-கரை | நன்னிலம் ரெயில் ஸ்டேஷனுக்கு மேற்கே 1½ மைல். |
| 114 | 75 | கொள்ளம்பூதூர் | ,, | நீடாமங்கலம் ரெயில் ஸ்டேஷனுக்கு வடகிழக்கே 6 மைல். கொரடாச்சேரிக்கு வடமேற்கே 5 மைல். இத்தலம் 'செல்லூர் அல்லது திருக்களம்பூர்' என்று வழங்கப்படுகிறது. |
| 115 | 76 | கொள்ளிக்காடு | ,, | ஆலத்தம்பாடி ரெயில் ஸ்டேஷனுக்கு மேற்கே 3½ மைல். பொன்னிறைக்கு மேற்கே 3½ மைல். |
| 116 | 113 | கோகர்ணம் | துளுவ | பம்பாய் இராஜதானியில் வடகன்னடம் ஜில்லாவில் உள்ளது. மார்மகோவாவில் கப்பல் ஏறி, கார்வார்-அங்கோலா வழியாய்ச் செல்லவேண்டும். |
| 117 | 80 | கோடி | சோழநாடு தெ-கரை | திருத்துறைப்பூண்டிக்குத் தென்கிழக்கே 32 மைல். வேதாரணியத்திற்குத் தெற்கே 6 மைல். இத்தலம் 'குழகர் கோயில்' என்று வழங்கப்படுகிறது. |
| 118 | 21 | கோடிகா | சோழநாடு வடகரை | திருவிடைமருதூருக்குக் கிழக்கே 1½ மைல். நரசிங்கன்பேட்டைக்கு வடகிழக்கே 2½ மைல். |
| 119 | 55 | கோட்டாறு | சோழநாடு தெ-கரை | திருநள்ளாறு (செ. 160) ரெயில் ஸ்டேஷனுக்கு வடமேற்கே 3 மைல். |
| 120 | 74 | கோட்டூர் | ,, | ராஜமன்னார்கோயிலுக்குத் தெற்கே 10 மைல். திருத்துறைப்பூண்டிக்கு வடமேற்கே 9 மைல். |

சிவக்ஷேத்திரவிளக்கத்தில் காட்டப்பட்டிருக்கும் ஸ்தலங்களின் அகராதி

| தொடர் எண் | தாலிகா பக்கம் | ஸ்தலத்தின் பெயர் | நாடு | சமீப ரெயில் ஸ்டேஷனிலிருந்து திசையும், தூரமும் விசேஷக் குறிப்பும் |
|---|---|---|---|---|
| 121 | 80 | கோணமலை | ஈழநாடு | இலங்கைத் தீவில் உள்ளது. |
| 122 | 9 | கோயில் | சோழநாடு வடகரை | சிதம்பரம் ரெயில் ஸ்டேஷனுக்கு மேற்கே 1 மைல். இத்தலம் 'சிதம்பரம்' என்று வழங்கப்படுகிறது. |
| 123 | 14 | கோலக்கா | ,, | சீர்காழி ரெயில் ஸ்டேஷனுக்குத் தெற்கே $\frac{1}{2}$ மைல். சீகாழி கோயிலுக்கு மேற்கே $\frac{1}{4}$ மைல். சீகாழிக்குக் கிழக்கே 1 மைல். இத்தலம் 'திருத்தாளமுடையார் கோயில்' என்று வழங்கப்படுகிறது. |
| 124 | 95 | கோவலூர் | நடுநாடு | திருக்கோவலூர் ரெயில் ஸ்டேஷனுக்குத் தெற்கே 1 மைல். இத்தலம் 'கீழூர்' என்று வழங்கப்படுகிறது. இது அஷ்டவீரட்டத்தில் ஒன்று; அந்தகாசுரனைச் சங்கரித்தருளிய தலம். |
| 125 | 49 | கோழம்பம் | சோழநாடு தென்கரை | நரசிங்கம்பேட்டை ரெயில் ஸ்டேஷனுக்குத் தென்கிழக்கே 2 மைல். |
| 126 | 78 | கோளிலி | ,, | திருவாரூருக்குத் தென்கிழக்கே 12 மைல். கீழ்வேளூர் (தெ. 94) ரெயில் ஸ்டேஷனுக்குத் தெற்கே 7 மைல். நாகபட்டணத்திற்கு மேற்கே 7 மைல். கைச்சினத்திற்குக் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | (செ. 109) கீழக்கே 4 மைல். இத்தலம் 'திருக்குவளை' என்று வழங்கப்படுகிறது. |
| 127 | 43 | சக்கரப்பள்ளி | சோழநாடு தெ-கரை | ஐயம்பேட்டை ரெயில் ஸ்டேஷனுக்கு மேற்கே $\frac{1}{2}$ மைல். இது தஞ்சாவூருக்கு வடகிழக்கே 11 மைல் தூரத்திலுள்ளது. இத்தலம் 'இராஜகிரி ஐயம்பேட்டை' என்று வழங்கப்படுகிறது. |
| 128 | 44 | சத்திமுத்தம் | ,, | கும்பகோணத்திலிருந்து தென்மேற்கே 4 மைல். தாராசுரத்திலிருந்து தென்மேற்கே 2 மைல். |
| 129 | 64 | சாத்தமங்கை | ,, | திருநள்ளாற்றுக்குத் (செ. 100 பார்க்க) தென்மேற்கே 5 மைல். நன்னிலத்திற்குக் கிழக்கே 8 மைல். |
| 130 | 12 | சாய்க்காடு | சோழநாடு வடகரை | சீகாழிக்குத் தென்கிழக்கே 9 மைல். மாயூரத்திற்குக் கிழக்கே 12 மைல். இத்தலம் 'சாயாவனம்' என்று வழங்கப்படுகிறது. |
| 131 | 66 | சிக்கல் | சோழநாடு தெ-கரை | சிக்கல் ரெயில் ஸ்டேஷனுக்கு வடக்கே $\frac{1}{2}$ மைல். நாகபட்டணத்திற்கு மேற்கே 3 மைல். |
| 132 | 40 | சிராப்பள்ளி | ,, | திருச்சி கோட்டைக்குக் கிழக்கே $\frac{1}{2}$ மைல். திரிசிரன் என்னும் அசுரன் பூசித்த தலம். இது 'தக்ஷிண கைலாசம்' என்று வழங்கப்படுகிறது. |
| 133 | 69 | சிவபுரம் | ,, | கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே 3 மைல். |

சிவக்ஷேத்திரவிளக்கத்தில் காட்டப்பட்டிருக்கும் ஸ்தலங்களின் அகராதி

| தொடர் எண் | நூலின் பக்கம் | ஸ்தலத்தின் பெயர் | நாடு | சமீப ரெயில் ஸ்டேஷனிலிருந்து திசையும், தூரமும், விசேஷக் குறிப்பும் |
|---|---|---|---|---|
| 134 | 58 | சிறுகுடி | சோழநாடு தெ-கரை | பேரளம் ரெயில் ஸ்டேஷனுக்குத் தென்மேற்கே $4\frac{1}{2}$ மைல். திருப்பாம்புரத்திலிருந்து மேற்கே 1 மைல்; (கெம். 200 பார்க்க.) |
| 135 | 73 | சிற்றேமம் | | திருநெல்லிக்காவுக்குத் தெற்கே 11 மைல். இத்தலம் 'சிற்றாப்பூர்' அல்லது 'சிற்றாய்மூர்' அல்லது 'எழிலூர் நேமம்' என்று வழங்கப்படுகிறது. |
| 136 | 85 | சுழியல் | பாண்டி | விருதுப்பட்டி ரெயில் ஸ்டேஷனுக்குத் தென்கிழக்கே 19 மைல். திருப்பூவணம் ரெயில் ஸ்டேஷனுக்குத் தென்கிழக்கே 20 மைல்; மதுரைக்குக் கிழக்கே 12 மைல் தூரத்தில் திருப்பூவணம் உள்ளது. மானாமதுரை ரெ-ஸ்டேஷனுக்குத் தென்கிழக்கே 25 மைல். |
| 137 | 64 | செங்காட்டங்குடி | சோழநாடு தெ-கரை | நன்னிலம் ரெயில் ஸ்டேஷனிலிருந்து திருப்புகலூர் (கெம். 203), முடிகொண்டான், திருக்கண்ணபுரம் வழியாகப் போகவேண்டும். திருக்கண்ணபுரத்திற்குக் கிழக்கே 1 மைல். நன்னிலத்திற்குத் தென்கிழக்கே 7 மைல். இத்தலம் 'கணபதீச்சரம்' என்று வழங்கப்படுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 138 | 51 | செம்பொன்பள்ளி | சோழநாடு தெ-கரை | மாயூரம் ரெயில் ஸ்டேஷனுக்குக் கிழக்கே 6¾ மைல். |
| 139 | 23 | சேய்ஞலூர் | சோழநாடு வடகரை | கும்பகோணம் ரெயில் ஸ்டேஷனுக்கு வடகிழக்கே 9½ மைல். ஆடுதுறைக்கு வடமேற்கே 6½ மைல். |
| 140 | 70 | சேறை | சோழநாடு தெ-கரை | கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே 9 மைல். கொரடாச்சேரிக்கு வடமேற்கே 9 மைல். இத்தலம் 'உடையார்கோயில்' என்று வழங்கப்படுகிறது. |
| 141 | 93 | சோபுரம் | நடுநாடு | ஆலப்பாக்கம் ரெயில் ஸ்டேஷனுக்குக் கிழக்கே 1½ மைல். கூடலூருக்குத் தெற்கே 7¼ மைல் தூரத்தில் ஆலப்பாக்கம் உள்ளது. இத்தலம் 'தியாகவல்லி' என்று வழங்கப்படுகிறது. |
| 142 | 42 | சோற்றுத்துறை | சோழநாடு தெ-கரை | தஞ்சாவூருக்கு வடகிழக்கே 9 மைல். திருக்கண்டியூருக்குத் (நெம். 68) தென்கிழக்கே 1½ மைல். இத்தலம் ஸப்த ஸ்தானங்களில் 3-வதாயுள்ளது. |
| 143 | 74 | தண்டலைநீணெறி | ,, | திருத்துறைப்பூண்டி ரெயில் ஸ்டேஷனுக்கு வடக்கே 3 மைல். திருவாரூருக்குத் தெற்கே 15 மைல். இத்தலம 'தண்டலைச்சேரி' என்று வழங்கப்படுகிறது. |
| 144 | 54 | தருமபுரம் | ,, | திருநள்ளாறுக்குக் கிழக்கே 2½ மைல். காரைக்கால் ரெயில் ஸ்டேஷனுக்கு மேற்கே ½ மைல். |

## சிவக்ஷேத்திரவிளக்கத்தில் காட்டப்பட்டிருக்கும் ஸ்தலங்களின் அகராதி

| தொடர் எண் | நூலின் பக்கம் | ஸ்தலத்தின் பெயர் | நாடு | சமீப ரெயில் ஸ்டேஷனிலிருந்து திசையும், தூரமும், விசேஷக் குறிப்பும். |
|---|---|---|---|---|
| 145 | 52 | தலைச்சங்காடு | சோழநாடு தெ-கரை | மாயூரம் ரெயில் ஸ்டேஷனிலிருந்து தரங்கம் பாடிக்குப் போகும் பாதையில் 12 மைல். சீகாழி ரெயில் ஸ்டேஷனிலிறங்கித் தரங்கம்பாடிக்குப் போகும் பாதையில் தென் கிழக்கே 10 மைல். |
| 146 | 69 | தலையாலங்காடு | ,, | குழிக்கரையிலிருந்து வடமேற்கே 8 மைல். திருக்குடவாயிலிலிருந்து (நெம். 93) கிழக்கே 5 மைல். கொரடாச்சேரி ரெயில் ஸ்டேஷனிலிருந்து செல்லூர் கிராமம்; திருக்குடவாயில் இவ்வழியாகப் போகவேண்டும். |
| 147 | 23 | திருந்துதேவன் குடி | சோழநாடு வடகரை | திருவிடைமருதூருக்கு வடமேற்கே $4\frac{1}{2}$ மைல். திருவியலூரிலிருந்து (நெம். 256) மைல் வழியாய் வடக்கே 1 மைல். |
| 148 | 57 | திலதைப்பதி | சோழநாடு தெ-கரை | பூந்தோட்டத்திற்கு மேற்கே 1 மைல். பேரளம் ரெயில் ஸ்டேஷனிலிறங்கித் தென்மேற்கே $3\frac{1}{4}$ மைல். இத்தலம் 'கோயிற்பத்து' அல்லது 'திலதர்ப்பணபுரி' 'மதிமுத்தம்' என்று வழங்கப்படுகின்றது. |
| 149 | 93 | திணைநகர் | நடுநாடு | பாங்கிப்பேட்டை ரெயில் ஸ்டேஷனுக்கு வடமேற்கே 7 மைல் தாழார் கிராமத்திலிரு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | த்து மேற்கே 1 மைல். ஆலப்பாக்கம் ஸ்டேஷனில் இறங்கி மஞ்சக்குப்பத்திலிருந்து சிதம்பரம் போகும் பெரிய பாதை, தாழூர் கிராமம் இவ்வழியாய்ப் போகவேண்டும். இத்தலம் 'தீர்த்தனகிரி' அல்லது 'தீர்த்தனகர்' என்று வழங்கப்படுகிறது. |
| 150 | 50 | துருத்தி | சோழநாடு தெ-கரை | குற்றாலத்திற்குத் தென்கிழக்கே 2 மைல். மயூரத்திற்குத் தென்மேற்கே 5½ மைல். திருத்துருத்தி ரெயில் ஸ்டேஷன். இத்தலம் 'குற்றாலம்' என்று வழங்கப்படுகிறது. |
| 151 | 97 | துறையூர் | நடுநாடு | பண்ணுருட்டி ரெயில் ஸ்டேஷனுக்கு வடமேற்கே 5 மைல். வரிஞ்சிபாக்கம் ரெயில் ஸ்டேஷனுக்கு மேற்கே 1½ மைல். இத்தலம் 'திருத்துறையூர்' என்று வழங்குகிறது. |
| 152 | 76 | தேங்கூர் | சோழநாடு தெ-கரை | திருநெல்லிக்கா (நெம். 175) வுக்குத் தென்மேற்கே ½ மைல். திருவாரூருக்குத் தெற்கே 10 மைல். |
| 153 | 54 | தெளிச்சேரி | ,, | காரைக்கால் ரெயில் ஸ்டேஷனுக்கு வடமேற்கே ¾ மைல். பொறையாறு ரோட்டுக்கு வடமேற்கே ½ மைல். இத்தலம் 'கோயிற்பத்து' என்று வழங்கப்படுகிறது. |
| 154 | 43 | தென்குடித்திட்டை | ,, | ரெயில் ஸ்டேஷன். திட்டைக்கு மேற்கே ¾ மைல். தஞ்சாவூருக்கு வடகிழக்கே 6 மைல். இத்தலம் 'திட்டை' என்று வழங்கப்படுகிறது. |

## சிவக்ஷேத்திரவிளக்கத்தில் காட்டப்பட்டிருக்கும் ஸ்தலங்களின் அகராதி

| தொடர் எண் | நூலின் பக்கம் | ஸ்தலத்தின் பெயர் | நாடு | சமீப ரெயில் ஸ்டேஷனிலிருந்து திசையும், தூரமும், விசேஷக் குறிப்பும் |
|---|---|---|---|---|
| 155 | 67 | தேவூர் | சோழநாடு தெ-கரை | கீழ்வேளூருக்குத் (கெம். 94) தெற்கே 2 மைல்; நாகப்பட்டினத்திலிருந்து மேற்கே 7 மைல் தூரத்தில் கீழ்வேளூர் உள்ளது. |
| 156 | 88 | நணா | கொங்கு | ஈரோடு ரெயில் ஸ்டேஷனுக்கு வடக்கே 8½ மைல்; பவானி ஆறு காவிரிநதியுடன் கூடுமிடத்திலிருக்கிறது இத்தலம் 'பவானி கூடல்' என்று வழங்கப்படுகிறது. |
| 157 | 49 | நல்லம் | சோழநாடு தெ-கரை | ஆடுதுறைக்குத் தென்கிழக்கே 7 மைல். திருவிடைமருதூருக்குத் தென்கிழக்கே 6 மைல். இத்தலம் 'கோனேரிராஜபுரம்' என்று வழங்கப்படுகிறது |
| 158 | 44 | நல்லூர் | ,, | சுந்தரப்பெருமாள் கோயில் ரெயில் ஸ்டேஷனுக்குத் தெற்கே 2 மைல். |
| 159 | 11 | நல்லூர்ப்பெருமணம் | சோழநாடு வடகரை | கொள்ளிடம் ரெயில் ஸ்டேஷனிலிறங்கி கொள்ளிடக் கரையோரமாய்க் கிழக்கே 3 மைல். இத்தலம் 'ஆச்சாபுரம்' என்று வழங்கப்படுகிறது. |
| 160 | 55 | நள்ளாறு | சோழநாடு தெ-கரை | நள்ளாறு ரெயில் ஸ்டேஷனுக்குத் தெற்கே ½ மைல், காரைக்காலுக்கு மேற்கே 3 மைல். இது ஸப்தவிடங்க ஸ்தலங்களில் ஒன்று. |

| | | | | |
|---|---|---|---|---|
| 161 | 60 | நறையூர்ச்சித்திச்சுரம் | சோழநாடு தெ-கரை | கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே 5½ மைல். |
| 162 | 52 | நனிபள்ளி | ,, | மாயூரம் ரெயில் ஸ்டேஷனுக்கு கிழக்கே 11 மைல். மாயூரம் ரெ-ஸ்-னுக்கு வடகிழக்கே 8 மைல். இத்தலம் 'புஞ்சை' என்று வழங்கப்படுகிறது. |
| 163 | 61 | நன்னிலம் | ,, | நன்னிலம் ரெயில் ஸ்டேஷனுக்கு மேற்கே 3 மைல். இத்தலம் 'பெருங்கோயில்' 'மதுவனம்' என்று வழங்கப்படுகிறது. |
| 164 | 47 | நாகேச்சுரம் | ,, | ரெயில்ஸ்டேஷன். கும்பகோணத்திற்குக் கிழக்கே 4 மைல். திருவிடைமருதூர் ரெயில் ஸ்டேஷனுக்குத் தென்மேற்கே 2½ மைல். |
| 165 | 65 | நாகைக்காரோணம் | ,, | ரெயில் ஸ்டேஷன். நாகபட்டணத்திற்கு வடமேற்கே ¾ மைல். இத்தலம் 'நாகபட்டணம்' என்று வழங்கப்படுகிறது. |
| 166 | 76 | நாட்டியத்தான்குடி | ,, | ரெயில் ஸ்டேஷன். திருவாரூருக்கு (கே. 23) தெற்கே 6 மைல். திருக்காறாயிலுக்கு (கெ. 90) வடமேற்கே 5½ மைல். திருநாட்டியத்தான்குடி ரெயில் ஸ்டேஷனுக்கு வடமேற்கே ¼ மைல். |
| 167 | 20 | [illegible] | சோழ-வட | வைத்தீஸ்வரன் கோயிலுக்கு வடக்கே 6 மைல். |
| 168 | 70 | நாலூர்மயானம் | சோழநாடு தெ-கரை | கொரடாச்சேரிக்கு வடக்கே 10 மைல். திருக்குடவாசலுக்கு (கெம். 58) வடகிழக்கே 3 மைல். இத்தலம் 'நாத்தூர்' என்று வழங்கப்படுகிறது. |

சிவக்ஷேத்திரவிளக்கத்தில் காட்டப்பட்டிருக்கும் ஸ்தலங்களின் அகராதி

| தொடர் எண் | தாலின் பக்கம் | ஸ்தலத்தின் பெயர் | நாடு | சமீப ரெயில் ஸ்டேஷனிலிருந்து திசையும், தூரமும், விசேஷக் குறிப்பும் |
|---|---|---|---|---|
| 169 | 94 | நாவலூர் | நடுநாடு | பண்ணுருட்டி ரெயில் ஸ்டேஷனிலிருந்து உளுந்தூருக்குப் போகும் வழியில் மேற்கே 11 மைல். இத்தலம் 'திருநாமநல்லூர்' என்று வழங்கப்படுகிறது; சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவவதாரம் செய்தருளிய ஸ்தலம். |
| 170 | 16 | நின்றியூர் | சோழநாடு வடகரை | ஆநந்ததாண்டவபுரம் ரெயில் ஸ்டேஷனுக்கு வடகிழக்கே 2 மைல். ஷை ஆநந்ததாண்டவபுரம் மாயூரத்திற்கு வடக்கே 4 மைல் தூரத்திலுள்ளது. |
| 171 | 16 | நீடூர் | ,, | ஆநந்ததாண்டவபுரம் ரெயில் ஸ்டேஷனுக்குத் தென்மேற்கே 1 மைல். மாயூரத்திலிருந்து மேற்கே 3 மைல். |
| 172 | 48 | நீலக்குடி | சோழநாடு தெ-கரை | ஆடுதுறை (செம். 102) ரெயில் ஸ்டேஷனிலிருந்து தெற்கே 2 மைல். திருவிடைமருதூர் ரெயில் ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்கே 5 மைல். இத்தலம் 'தென்னல்குடி' என்று வழங்கப்படுகிறது. |
| 173 | 40 | நெடுங்களம் | ,, | திரிசிரபுரத்திற்கு வடக்கே 6 மைலிலுள்ள திருஎறும்பியூர் (செம். 48) ரெயில் ஸ்டேஷனுக்குக் கிழக்கே 7 மைல். இத்தலம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | 'திருநெட்டாக்குளம்' என்று வழங்கப்படுகிறது. |
| 174 | 33 | நெய்த்தானம் | சோழநாடு வடகரை | திருவையாற்றுக்கு (நெம். 50) மேற்கே 1 மைல். தஞ்சாவூருக்கு வடக்கே 7½ மைல். இத்தலம் 'தில்லை ஸ்தானம்' என்று வழங்கப்படுகிறது. இது சப்த ஸ்தான க்ஷேத்திரங்களில் ஏழாவதாயுள்ளது. |
| 175 | 76 | நெல்லிக்கா | சோழநாடு தெ-கரை | ரயில் ஸ்டேஷனுக்கு மேற்கே ½ மைல். திருவாரூருக்குத் தெற்கே 8 மைல். |
| 176 | 10 | நெல்வாயில் (சிவபுரி) | சோழநாடு வடகரை | சிதம்பரத்திற்குத் தென்கிழக்கே 3 மைல். இத்தலம் 'சிவபுரி' என்று வழங்கப்படுகிறது. |
| 177 | 90* | நெல்வாயில் (திரு) அரத்துறை | நடுநாடு | சிதம்பரத்திற்கு மேற்கே 34 மைல். பெண்ணாகடமாகிய (நெம். 215) தூங்கானை மாடத்துக்குத் தென்மேற்கே 4 மைல். இது நிவா என்னும் நதியின் கரைமேலுள்ளது. |
| 178 | 96 | நெல்வெண்ணெ | ,, | மாம்பழப்பட்டுக்குத் தெற்கே 19 மைல். உளுந்தூர்பேட்டை என்னும் ஊரிலிருந்து வடமேற்கே 4 மைல்; பண்ணுருட்டி ரயில் ஸ்டேஷனிலிருந்து திருநாவலூர் (நெம். 169)-உளுந்தூர்பேட்டை வழியாகப் போகவேண்டும்; உளுந்தூர்பேட்டை திருநாவலூரிலிருந்து 11 மைல். இத்தலம் 'நெய்வெணை' என்று மருவி வழங்கப்படுகிறது. |

## சிவக்ஷேத்திரவிளக்கத்தில் காட்டப்பட்டிருக்கும் ஸ்தலங்களின் அகராதி

| தொடர் எண் | நூலின் பக்கம் | ஸ்தலத்தின் பெயர் | நாடு | சமீப ரெயில் ஸ்டேஷனிலிருந்து திசையும், தூரமும் விசேஷக் குறிப்பும் |
|---|---|---|---|---|
| 179 | 86 | நெல்வேலி | பாண்டி | திருநெல்வேலி ரெயில் ஸ்டேஷனுக்கு மேற்கே ½ மைல். தாம்பிரவர்ணி நதியின் கரையிலுள்ளது. |
| 180 | 45 | பட்டீச்சரம் | சோழநாடு தெ-கரை | தாராசுரத்திற்குத் தென்மேற்கே 2 மைல். கும்பகோணத்துக்குத் (நெம். 97) தென்மேற்கே 4 மைல். |
| 181 | 20 | பந்தணைநல்லூர் | சோழநாடு வடகரை | குற்றாலத்துக்கு வடகிழக்கே 7 மைல். கஞ்சனூரிலிருந்து (நெம். 60) வடகிழக்கே 2 மைல். வழி கஞ்சனூர்: திருவிடைமருதூர் (நெம். 34) ரெயில் ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே 5½ மைலில் உள்ளது. |
| 182 | 63 | பயற்றூர் | சோழநாடு தெ-கரை | வெட்டாறு ரெயில் ஸ்டேஷனுக்கு வடகிழக்கே 6 மைல். திருவாரூருக்கு (நெம். 23) வடக்கே 4 மைல் தூரத்தில் வெட்டாறு உள்ளது. திருவிற்குடியிலிருந்து (நெம். 259) கிழக்கே 3 மைல்; வழி வெட்டாறு ரெ-ஸ்-லிருந்து வடகிழக்கே 3½ மைல் தூரத்தில் 'திருவிற்குடி' உள்ளது. இத்தலம் 'திருப்பயற்றங்குடி' என்று வழங்குகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 183 | 82 | பரங்குன்றம் | பாண்டி | திருப்பரங்குன்றம் ரெயில் ஸ்டேஷனுக்குக் கிழக்கே $\frac{1}{2}$ மைல். மதுரைக்கு (கெம். 28) தென்மேற்கே 4 மைல். |
| 184 | 39 | பராய்த்துறை | சோழநாடு தெ-கரை | எழுமனூர் ரெயில் ஸ்டேஷனுக்கு வடமேற்கே $1\frac{1}{2}$ மைல்; திரிசிராப்பள்ளி கோட்டை ஸ்டேஷனுக்கு அடுத்து எழுமனூர் உள்ளது. இத்தலம் 'அகண்டகாவேரி' என்று வழங்கப்படுகிறது. |
| 185 | 71 | பரிதிநியமம் | ,, | தஞ்சாவூருக்குக் கிழக்கே 9 மைல். தூரமுள்ள சாலியமங்கலம் ரெயில் ஸ்டேஷனுக்குத் தென்மேற்கே 8 மைல். இத்தலம் 'பரிதியப்பர் கோயில்' என்று வழங்கப்படுகிறது. |
| 186 | 114 | பருப்பதம் | வடநாடு | கர்னூர் ஜில்லாவிலுள்ள நந்தியால் ரெயில் ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே 60 மைல். இத்தலம் 'ஸ்ரீ சைலம், மல்லிகார்ச்சுனபுரம்' என்று வழங்கப்படுகிறது. |
| 187 | 26 | பழனம் | சோழநாடு வடகரை | தஞ்சாவூருக்கு வடகிழக்கே 10 மைல். திருவையாற்றுக்கு (கெம். 50) கிழக்கே 2 மைல். இது சப்தஸ்தான க்ஷேத்திரங்களில் 2-வதாயுள்ளது. |
| 188 | 34 | பழுவூர் | ,, | தஞ்சாவூருக்கு வடக்கே 18 மைல். திருவையாற்றிலிருந்து (கெம். 50) வடக்கே அரியலூருக்குப் போகும் பாதையில் 10 மைல். இத்தலம் 'கீழ்ப்பழுவூர்' என்று வழங்கப்படுகிறது. |

## சிவக்ஷேத்திரவிளக்கத்தில் காட்டப்பட்டிருக்கும் ஸ்தலங்களின் அகராதி

| தொடர் எண் | நூலின் பக்கம் | ஸ்தலத்தின் பெயர் | நாடு | சமீப ரெயில் ஸ்டேஷனிலிருந்து திசையும், தூரமும், விசேஷக் குறிப்பும் |
|---|---|---|---|---|
| 189 | 45 | பழையாறைவடதளி | சோழநாடு தெ-கரை | வடதளி தாராசுரத்திற்குத் தென்மேற்கே 2 மைல். பட்டீச்சுரத்திலிருந்து (தெம். 180) கிழக்கே $\frac{1}{4}$ மைல். பழையாறை: தாராசுரத்திற்கு தென்கிழக்கே 3 மைல். [வடதளியிலிருந்து $\frac{3}{8}$ மைல் சென்று பம்பைப்படையென்னும் ஊரைச்சேர்ந்து தெற்கே திரும்பி திருமலைராயல் ஆற்றைக் கடந்து $\frac{1}{4}$ மைல் செல்லவேண்டும்.] |
| 190 | 67 | பள்ளியின் முக்கூடல் | ,, | திருவாரூருக்கு வடக்கே 4 மைலிலுள்ள வெட்டாறு ரெயில் ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்கே 1 மைல். திருவாரூருக்கு (தெம். 23) வடக்கே 3 மைல். கயாகரையிலிருந்து வடக்கே $1\frac{1}{2}$ மைல்; ஷெ கயாகரை திருவாரூரிலிருந்து கிழக்கே $1\frac{1}{2}$ மைல் தூரத்திலுள்ளது. இத்தலம் 'அரியான்பள்ளி' என்று வழங்கப்படுகிறது. |
| 191 | 51 | பரியலூர் | ,, | மாயூரத்திற்குக் கிழக்கே 8 மைல். திருவிளநகர் (தெம். 257) விருந்து 2 மைல். தூர்ஞ்சென்று தெற்கே திரும்பி 1 மைல். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | இத்தலம் 'பாசஹூர்' என்று வழங்கப்படுகிறது. இது அஷ்டவீரட்டத்திலொன்று. |
| 192 | 104 | பனங்காட்டூர் | தொண் | காஞ்சீபுரத்திற்கு (செம். 56) தென்கிழக்கே 10 மைல். [காஞ்சீபுரத்திலிருந்து தெற்கே 4 மைல் சென்று ஐயன்பூராம் என்னும் கிராமத்தைச்சேர்ந்து, அங்கிருந்து மேற்கே (ஆற்காடு) ஆறுகாட்டுக்குப் போகும் பாதையில் $3\frac{1}{2}$ மைல் சென்று, அங்கிருந்து வடக்கே திரும்பி $\frac{3}{4}$ மைல் செல்லவேண்டும்.] இத்தலம் 'வன்பாத்தான் பனங்காட்டூர்-திருப்பனங்காடு' என்று வழங்கப்படுகிறது. |
| 193 | 22 | பனந்தாள் | சோழநாடு வடகரை | ஆடுதுறைக்கு வடக்கே 6 மைல். கும்பகோணத்துக்கு (செம். 97) வடகிழக்கே 10 மைல். இவ்வூர் ஆலயம் 'தாடகேச்சுரம்' என்று வழங்கப்படுகிறது. |
| 194 | 62 | பனையூர் | சோழநாடு தெ-கரை | ஆண்டிப்பந்தல் கிராமத்திலிருந்து கிழக்கே 1 மைல்; ஷெ ஆண்டிப்பந்தல் திருவாரூரிலிருந்து (செம். 23) வடக்கே $6\frac{1}{2}$ மைல் தூரத்திலுள்ளது. நன்னிலத்திற்குத் தென்கிழக்கே 2 மைல். |
| 195 | 107 | பாசூர் | தொண் | திரு எவ்வுளூர் க்ஷேத்திரத்திலிருந்து மேற்கே 2 மைல். திருஎவ்வுளூர் ரெயில் ஸ்டேஷனுக்கு அடுத்த கடம்பத்தூர் ரெ-ஸ்-னுக்கு வடக்கே $3\frac{1}{2}$ மைல். |

## சிவக்ஷேத்திரவிளக்கத்தில் காட்டப்பட்டிருக்கும் ஸ்தலங்களின் அகராதி

| தொடர் எண் | நூலின் பக்கம் | ஸ்தலத்தின் பெயர் | நாடு | சமீப ரெயில் ஸ்டேஷனிலிருந்து திசையும், தூரமும், விசேஷக் குறிப்பும் |
|---|---|---|---|---|
| 196 | 57 | பாச்சிலாச்சிராமம் | சோழநாடு வடகரை | திருச்சிக் கோட்டைக்கு வடமேற்கே 6 மைல். திருவானைக்காவிலிருந்து (கெம். 31) வடமேற்கே 3 மைல்; ஷை திருவானைக்கா: திரிசிராப்பள்ளி மலையிலிருந்து வடக்கே 3 மைல் தூரத்திலுள்ளது. இத்தலம் 'திருவாசி' என்று வழங்கப்படுகிறது. |
| 197 | 59 | பாண்டிக்கொடுமுடி | கொங்கு | கொடுமுடி ரெயில் ஸ்டேஷனுக்கு வடக்கே ¼ மைல். திரிசிராப்பள்ளிக்கு (கெம். 132) மேற்கே 62 மைல். கருவூருக்கு (கெம். 76) மேற்கே 17 மைல். ஈரோட்டுக்குத் தென்கிழக்கே 23 மைல். இத்தலம் 'கொடுமுடி' என்று வழங்கப்படுகிறது. |
| 198 | 72 | பாதாளீச்சரம் | சோழநாடு தென்கரை | நீடாமங்கலம் ரெயில் ஸ்டேஷனுக்குத் தெற்கே 12 மைல். ஷை நீடாமங்கலம் ரெ-ஸ்-னுக்கு 8 மைல் தூரத்திலுள்ள இராஜமன்னார் கோயிலுக்கு வடக்கே 1½ மைல். இத்தலம் 'பாமணி' என்று வழங்கப்படுகிறது. |
| 199 | 98 | பாதிரிப்புலியூர் | நடுநாடு | திருப்பாதிரிப்புலியூர் ரெயில் ஸ்டேஷனுக்கு மேற்கே ½ மைல். கூடலூருக்கு வடக்கே 2 மைல். |

| | | | | |
|---|---|---|---|---|
| 200 | 58 | பாம்புரம் | சோழநாடு தெ-கரை | பேரளம் ரெயில் ஸ்டேஷனுக்கு மேற்கே $4\frac{1}{2}$ மைல். |
| 201 | 44 | பாலைத்துறை | ,, | கும்பகோணத்திற்குத் தெற்கேயுள்ள பாபநாசம் ரெயில் ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே 1 மைல். |
| 202 | 35 | பாற்றுறை | சோழநாடு வடகரை | திருவெறும்பூருக்கு வடக்கே 4 மைல். திருஆனைக்காவிலிருந்து (நெம். 31) கிழக்கே 5 மைல். |
| 203 | 62 | புகலூர் | சோழநாடு தெ-கரை | நன்னிலம் ரெயில் ஸ்டேஷனுக்குக் கிழக்கே 4 மைல். |
| 204 | 63 | புகலூர் வர்த்தமானீச்சரம் | ,, | நன்னிலம் ரெயில் ஸ்டேஷனுக்குக் கிழக்கே 4 மைல். திருப்புகலூர் (நெம் 203) ஆலயத்துள் வடபுறத்தி லிருக்கிறது. |
| 205 | 83 | புத்தூர் | பாண்டி | அறந்தாங்கி ரெயில் ஸ்டேஷனுக்குக் கிழக்கே 27 மைல். அம்மையநாயக்கனூருக்குக் கிழக்கே 25 மைல். திருக்கோஷ்டியூர் என்னும் விஷ்ணு க்ஷேத்திரத்துக்கு வடக்கே $5\frac{1}{2}$ மைல். |
| 206 | 43 | புள்ளமங்கை | சோழநாடு தெ-கரை | ஐயம்பேட்டை ரெயில் ஸ்டேஷனுக்கு மேற்கே 2 மைல். சக்கரப்பள்ளிக்கு மேற்கே $1\frac{1}{2}$ மைல். இத்தலம் 'பசுபதிகோயில்' என்று வழங்கப்படுகிறது. |
| 207 | 15 | புள்ளிருக்குவேளூர் | சோழநாடு வடகரை | வைத்தீசுவரன் கோயிலுக்குக் கிழக்கே $\frac{1}{2}$ மைல். சீகாழிக்குத் தென்மேற்கே $3\frac{1}{2}$ மைல். இத் |

## சிவக்ஷேத்திரவிளக்கத்தில் காட்டப்பட்டிருக்கும் ஸ்தலங்களின் அகராதி

| தொடர் எண் | நூலின் பக்கம் | ஸ்தலத்தின் பெயர் | நாடு | சமீப ரெயில் ஸ்டேஷனிலிருந்து திசையும், தூரமும், விசேஷக் குறிப்பும் |
|---|---|---|---|---|
| | | | | தலம் 'வைத்தீசுரன் கோயில்' என்று வழங்கப்படுகிறது. |
| 208 | 24 | புறம்பயம் | சோழநாடு வடகரை | கும்பகோணத்திற்கு வடமேற்கே 6 மைல். திரு இன்னம்பருக்கு (நெம். 42) வடக்கே 2 மைல். |
| 209 | 99 | புரவார் பனங்காட்டூர் | நடுநாடு | விழுப்புரம் ரெயில் ஸ்டேஷனுக்கு வடக்கே 5½ மைல். இத்தலம் 'பனையபுரம்' என்று வழங்கப்படுகிறது. |
| 210 | 84 | புனவாயில் | பாண்டி | அம்மையநாய்க்கனூருக்குத் தென்கிழக்கே 80 மைல். அறந்தாங்கி ரெயில் ஸ்டேஷனுக்குத் தென்கிழக்கே 30 மைல். திரு ஆடானையிலிருந்து (நெம். 19) வடக்கே 12 மைல். |
| 211 | 16 | புன்கூர் | சோழநாடு வடகரை | வைத்தீசுரன் கோயில் (நெம் 207) ரெயில் ஸ்டேஷனுக்கு மேற்கே 2 மைல். |
| 212 | 41 | பூந்துருத்தி | சோழநாடு தெ-கரை | தஞ்சாவூருக்கு வடக்கே 8 மைல். திருக்கண்டியூரிலிருந்து (நெ. 68) மேற்கே 2 மைல். |
| 213 | 85 | பூவணம் | பாண்டி | திருப்பூவணம் ரெயில் ஸ்டேஷனுக்கு கிழக்கே ½ மைல். மதுரைக்குக் கிழக்கே 12 மைல். |

| | | | | |
|---|---|---|---|---|
| 214 | 72 | பூவனூர் | சோழநாடு தெ-கரை | நீடாமங்கலம் ரெயில் ஸ்டேஷனிலிருந்து தென்மேற்கே ராஜமன்னார் கோயிலுக்குப் போகும் வழியில் $2\frac{1}{2}$ மைல். |
| 215 | 91 | பெண்ணாகடம் | நடுநாடு | சிதம்பரத்திற்கு மேற்கே 30 மைல். விருத்தாசலத்திற்குத் தென்மேற்கே 11 மைல். இத்தலம் 'திருக்கடந்தை நகர்-திருத்தூங்கானைமாடம்' என்று வழங்கப்படுகிறது. |
| 216 | 33 | பெரும்புலியூர் | சோழநாடு வடகரை | தஞ்சாவூருக்கு வடமேற்கே 9 மைல். திருவையாற்றுக்கு (நெம். 50) மேற்கே $2\frac{1}{2}$ மைல். |
| 217 | 69 | பெருவேளூர் | சோழநாடு தெ-கரை | தலையாலங்காட்டிலிருந்து (நெம். 146) கிழக்கே 3 மைல். திருக்காவிரம் அல்லது கரையபுரத்திலிருந்து (நெம். 71) வடமேற்கே $1\frac{1}{2}$ மைல். குழிக்கரைக்கு வடமேற்கே 6 மைல். இத்தலம் 'காட்டூரையன்பேட்டை' என்று வழங்கப்படுகிறது. |
| 218 | 59 | பேணுபெருந்துறை | ,, | கும்பகோணத்திற்கு (நெம். 97) தென்கிழக்கே 7 மைல். திருநறையூருக்கு (நெம். 161) கிழக்கே 1 மைல். இத்தலம் 'திருப்பந்துறை' என்று வழங்கப்படுகிறது. |
| 219 | 75 | பேரெயில் | ,, | திருநாட்டியத்தான்குடிக்குத் தென்மேற்கே 3 மைல். குழிக்கரை ரெயில் ஸ்டேஷனிலிருந்து தெற்கே வயல்வழியே 3 மைல். வண்டிப்பாதை 6 மைல். வடபாதிமங்கலத்திலிருந்து வடக்கே 1 மைல். இத்தலம் 'ஓகைப்பேரையூர்' என்று வழங்கப்படுகிறது. |

சிவக்ஷேத்திரவிளக்கத்தில் காட்டப்பட்டிருக்கும் ஸ்தலங்களின் அகராதி

| தொடர் எண் | நூலின் பக்கம் | ஸ்தலத்தின் பெயர் | நாடு | சமீப ரெயில் ஸ்டேஷனிலிருந்து திசையும், தூரமும், விசேஷக் குறிப்பும் |
| --- | --- | --- | --- | --- |
| 220 | 36 | பைஞ்ஞீலி | சோழநாடு வடகரை | கொள்ளிடத்திற்குக் கிழக்கே 8 மைல். திரிச்சிகோட்டைக்கு வடமேற்கே 11 மைல். இத்தலம் 'வாலிசெடி' என்று வழங்கப்படுகிறது. |
| 221 | 21 | மங்கலக்குடி | ,, | ஆடுதுறைக்கு வடக்கே 2½ மைல். திருவிடைமருதூருக்கு (கெம். 34) வடகிழக்கே 3½ மைல். |
| 222 | 17 | மணஞ்சேரி | ,, | குற்றாலத்திற்கு வடகிழக்கே 3½ மைல். இத்தலம் 'கீழைத்திருமணஞ்சேரி' என்று வழங்கப்படுகிறது. குற்றாலம் ரெயில் ஸ்டேஷனிலிருந்து திருத்துருத்தி என்கிற குற்றாலம், திருவேள்விக்குடி, எதிர்கொள்பாடி இவ்வழியாய்ப் போகவேண்டும். |
| 223 | 19 | மண்ணிப்படிக்கரை | ,, | வைத்தீசுவரன் கோயிலுக்கு (கெம். 207) மேற்கே 6 மைல். திருவாளொளிபுற்றூர் (கெம். 253) மேற்கே 1 மைல். [வைத்தீசுவரன் கோயிலிலிருந்து திருப்புன்கூர், திருவாளொளிபுற்றூர் இவ்வழியாகச் செல்லவேண்டும்]. இத்தலம் 'இலுப்பைப்பட்டு' என்று வழங்கப்படுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 224 | 50 | மயிலாடுதுறை | சோழநாடு தெ-கரை | மாயூரம் ரெயில் ஸ்டேஷனுக்குக் கிழக்கே 2 மைல். இத்தலம் 'மாயூரம்' என்று வழங்கப்படுகிறது |
| 225 | 110 | மயிலாப்பூர் | தொண் | சென்னைக்குத் தெற்கே 4 மைல். சென்னை எழும்பூர் ரெயில் ஸ்டேஷனுக்குத் தென்கிழக்கே 4 மைல். திருவள்ளுவ நாயனார் எழுந்தருளியிருந்த ஸ்தலம். |
| 226 | 11 | மயேந்திரப்பள்ளி | சோழநாடு வடகரை | கொள்ளிடத்திற்கு வடகிழக்கே 6 மைல். சிதம்பரத்திற்குத் தெற்கே 4½ மைல் தூரத்தில் கொள்ளிடம் ரெயில் ஸ்டேஷன் உள்ளது ஆச்சாபுரத்திற்கு (கெம். 159) வடகிழக்கே 4 மைல். இத்தலம் 'கோயிலடிப்பாளையம்' என்று வழங்கப்படுகிறது. |
| 227 | 64 | மருகல் | சோழநாடு தெ-கரை | நன்னிலம் ரெயில் ஸ்டேஷனுக்குக் கிழக்கே 7 மைல். திருப்புகலூரிலிருந்து (கெம். 203) தென்கிழக்கே 3½ மைல். |
| 228 | 34 | மழபாடி | சோழநாடு வடகரை | தஞ்சாவூருக்கு வடமேற்கே 11 மைல். திருநெய்த்தானத்திலிருந்து (கெம். 174) வடமேற்கே 2 மைல். |
| 229 | 79 | மறைக்காடு | சோழநாடு தெ-கரை | திருத்தருப்பூண்டி ரெயில் ஸ்டேஷனுக்கு தென்கிழக்கே 22 மைல். நாகபட்டினத்துக்கு (கெம். 165) தெற்கே 30 மைல். இத்தலம் 'வேதாரணியம்' என்று வழங்கப்படுகிறது. |
| 230 | 103 | மாகறல் | தொண் | காஞ்சீபுரத்திற்கு (கெம். 56) தெற்கே 10 மைல். வேடு தென்கிழக்கே 12 மைல். |

## சிவக்ஷேத்திரவிளக்கத்தில் காட்டப்பட்டிருக்கும் ஸ்தலங்களின் அகராதி

| தொடர் எண் | நூலின் பக்கம் | ஸ்தலத்தின் பெயர் | நாடு | சமீப ரெயில் ஸ்டேஷனிலிருந்து திசையும், தூரமும், விசேஷக் குறிப்பும் |
| --- | --- | --- | --- | --- |
| 231 | 98 | மாணிகுழி | நடுநாடு | திருப்பாதிரிப்புலியூருக்கு (நெம். 199) மேற்கே 5 மைல். திருவஹீந்திரபுரம் என்னும் விஷ்ணு க்ஷேத்திரத்தைச் சார்ந்து அங்குள்ள பெருமாள் கோயிலின் தென்புறத்திலிருக்கும் கெபர்மலை யோரமாகச் செல்லும் கொடிவழியே 1 மைல். திருப்பாதிரிப்புலியூர் ரெயில் ஸ்டேஷனிலிருந்து மேற்கே 2½ மைல் தூரத்தில் திருவஹீந்திரபுரம் உள்ளது. |
| 232 | 35 | மாந்துறை | சோழநாடு வடகரை | திரிசிரக்கோட்டைக்கு வடகிழக்கே 11 மைல். திருவானைக்காவிலிருந்து (நெம். 31) வடகிழக்கே 10 மைல். |
| 233 | 105 | மாற்பேறு | தொண் | பளூருக்குத் தென்மேற்கே 2½ மைல். காஞ்சிபுரத்திலிருந்து வடமேற்கே கொடிவழியே 7 மைல். காஞ்சிபுரத்திலிருந்து ரெயில் மார்க்கமாய் வடக்கே 9 மைல் தூரத்தில் பளூர் உள்ளது. |
| 234 | 57 | மீயச்சூர் | சோழநாடு தென்கரை | பேரளம் ரெயில் ஸ்டேஷனுக்கு மேற்கே 1 மைல். |

| | | | | |
|---|---|---|---|---|
| 235 | 57 | மீயச்சூர் இளங்கோயில் | சோழநாடு தெ-கரை | பேரளத்திற்கு மேற்கே 1 மைல். மீயச்சூர் (செம். 234) ஆலயத்திலுள்ள சுவாமி சந்நிதிக்குப் பக்கத்தில் வடபுறத்திலுள்ளது. |
| 236 | 99 | முண்டீச்சரம் | நடுநாடு | நெல்லிகுப்பத்திற்கு வடமேற்கே 1 மைல். திருவெண்ணெய் நல்லூருக்கு (செம். 263) கிழக்கே 3 மைல். |
| 237 | 95 | முதுகுன்றம் | ,, | சிதம்பரத்திற்கு மேற்கே 34 மைல். கூடலூருக்குத் தென்மேற்கே 35 மைல். இத்தலம் 'விருத்தாசலம்' என்று வழங்கப்படுகிறது. |
| 238 | 88 | முருகன்பூண்டி | கொங்கு | திருப்பூருக்கு வடமேற்கே 8 மைல். திருப்பூரிலிருந்து வடக்கே அவிநாசிக்குப் போம் வழியில் 5 மைல். அவிநாசிக்கு (செம். 12) தென்மேற்கே 3 மைல். |
| 239 | 109 | முல்லைவாயில் (வட-திரு) | தொண் | அம்பத்தூர் ரெயில் ஸ்டேஷனுக்கு வடமேற்கே 3 மைல். ஆவடி ரெயில் ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே 2½ மைல்; ஷெ ஆவடி சென்னைக்கு மேற்கே 13 மைல் தூரத்தில் உள்ளது. |
| 240 | 12 | முல்லைவாயில் (தென்-திரு) | சோழநாடு வடகரை | சீகாழிக்கு (செம். 88) கிழக்கே 5 மைல். |
| 241 | 39 | மூக்கீச்சரம் | சோழநாடு தெ-கரை | திரிசிராப்பள்ளிக்கு (செம். 132) மேற்கே 1 மைல். இத்தலம் 'உறையூர்' என்று வழங்கப்படுகிறது. |
| 242 | 112 | வக்கரை | தொண் | புதுச்சேரிக்கு வடமேற்கே 12 மைல். [விழுப்புரம் ரெயில் ஸ்டேஷனிலிருந்து புறவார் |

சிவக்ஷேத்திரவிளக்கத்தில் காட்டப்பட்டிருக்கும் ஸ்தலங்களின் அகராதி

| தொடர் எண் | நூலின் பக்கம் | ஸ்தலத்தின் பெயர் | நாடு | சமீப ரெயில் ஸ்டேஷனிலிருந்து திசையும், தூரமும், விசேஷக் குறிப்பும் |
|---|---|---|---|---|
| | | | | பனங்காட்டூர் (செம். 209), கூனிச்சம்பட்டு கிராமம், கொடுக்கூர் ஆறு இவ்வழியாய்ச் செல்லுதல் வேண்டும்.] புறவார் பனங்காட்டூர்: விழுப்புரம் ரெயில் ஸ்டேஷனுக்கு வடக்கே 5½ மைல் தூரத்திலுள்ளது. கூனிச்சம்பட்டு: புறவார் பனங்காட்டூருக்குக் கிழக்கே 8 மைல். கொடுக்கூர் ஆறு: கூனிச்சம்பட்டிலிருந்து வடக்கே 1 மைல். |
| 243 | 97 | வடுகூர் | நடுநாடு | கண்டமங்கலத்திற்கு மேற்கே 2 மைல். சின்னபாபு சமுத்திரம் ரெயில் ஸ்டேஷனுக்கு மேற்கே 2 மைல்; புதுசேரிக்கு மேற்கே 10 மைல் தூரத்தில் சின்னபாபு சமுத்திரம் உள்ளது. இத்தலம் 'ஆண்டார் கோயில்' என்று வழங்கப்படுகிறது |
| 244 | [illegible] | வலஞ்சுழி | சோழநாடு தென்கரை | சுந்தரப்பெருமாள் கோயிலுக்குக் கிழக்கே 1 மைல். கும்பகோணத்திற்கு (செம். 97) மேற்கே 4 மைல் |
| 245 | 52 | வலம்புரம் | „ | மாயூரத்திற்குக் கிழக்கே 11 மைல். [சீகாழியிலிருந்து காவிரிப்பூம்பட்டினம், திருவெண்காடு இவ்வழியாய்ச் செல்லவேண் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | டும்.] 'திருவெண்காடு: சீகாழியிலிருந்து (செம். 83) தென் கிழக்காகக் காவிரிப்பூம் பட்டினத்திற்குப் போகும்வழியில் 7 மைல் தூரத்திலுள்ளது. ஷை திருவெண்காட்டு வழியிலேயே $1\frac{1}{4}$ மைல் சென்று, மீண்டும் ஷை வழியைவிட்டு $\frac{1}{4}$ மைல் தூரஞ் சென்றால் இத்தலத்தை யடையலாம். |
| 246 | 109 | வலிதாயம் | தொண் | வில்லிவாக்கம் (சொன்னூர்) ரெயில் ஸ்டேஷனிலிறங்கித் தென்மேற்கே கொடிவழியாய் 2 மைல். சென்னைக்கு மேற்கே 6 மைல் தூரத்தில் வில்லிவாக்கம் உள்ளது. இத்தலம் 'பாடி' என்று வழங்கப்படுகிறது. |
| 247 | 77 | வலிவலம் | சோழநாடு தெ-கரை | திருநாட்டியத்தான்குடிக்குத் தென்கிழக்கே 3 மைல். திருவாரூருக்கு (செம்.23) தென்கிழக்கே 6 மைல். |
| 248 | 104 | வல்லம் | தொண் | திருவல்லம் ரெயில் ஸ்டேஷனுக்கு வடகிழக்கே $\frac{1}{2}$ மைல். ஆறுகாடு ரெயில் ஸ்டேஷனுக்கு மேற்கே 8 மைல் தூரத்தில் நீவா என்னும் நதியின் மேற்கரையிலுள்ளது. இத்தலம் 'திருவலம்' என்று வழங்கப்படுகிறது. |
| 249 | 59 | வன்னியூர் | சோழநாடு தெ-கரை | பூந்தோட்டத்திற்கு மேற்கே 6 மைல். திருவீழிமிழலைக்கு (செம். 261) வடமேற்கே 2 மைல். |
| 250 | 61 | வாஞ்சியம் | ,, | நன்னிலம் ரெயில் ஸ்டேஷனுக்கு மேற்கே $6\frac{1}{2}$ மைல். திருவாரூர் ஸ்டேஷனிலிறங்கி |

# சிவக்ஷேத்திரவிளக்கத்தில் காட்டப்பட்டிருக்கும் ஸ்தலங்களின் அகராதி

| தொடர் எண் | நூலின் பக்கம் | ஸ்தலத்தின் பெயர் | நாடு | சமீப ரெயில் ஸ்டேஷனிலிருந்து திசையும், தூரமும், விசேஷக் குறிப்பும் |
|---|---|---|---|---|
| | | | | வடமேற்காகக் கும்பகோணத்திற்குப் போகிற வழியில் வடமேற்கே 11 மைல். இத்தலம் 'புத்தாறு' என்னும் நதியின் வடகரையிலிருக்கிறது. |
| 251 | 33 | வாட்போக்கி | சோழநாடு தெ-கரை | குழித்தலை ரெயில் ஸ்டேஷனிலிறங்கி வடமேற்கே 5 மைல். டி ரா-ஸ்-னுக்குத் தெற்கே $6\frac{1}{2}$ மைல். திரிசிராப்பள்ளிக்கு மேற்கே 20 மைல் தூரத்தில் குழித்தலை உள்ளது. இத்தலம் 'இரத்தினகிரி' என்று வழங்கப்படுகிறது. |
| 252 | 78 | வாய்மூர் | ,, | திருநெல்லிக்காவுக்குத் தென்கிழக்கே 5 மைல். திருவாரூருக்குத் தென்கிழக்கே 15 மைல். திருக்கோளிலியிலிருந்து (நெம். 126) தென்கிழக்கே 3 மைல். |
| 253 | 18 | வாளொளிபுத்தூர் | சோழநாடு வடகரை | வைத்தீசுரன்கோயிலுக்கு (நெம். 207) மேற்கே 5 மைல். திருப்புன்கூர் (நெம். 211) என்னும் ஸ்தலத்திற்கு மேற்கே 3 மைல்; வைத்தீசுவரன்கோயில் ரெயில் ஸ்டேஷனுக்கு மேற்கே 2 மைல் தூரத்தில் திருப்புன்கூர் உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 254 | 111 | வான்மியூர் | தொண் | சென்னை எழும்பூர் ரெயில் ஸ்டேஷனுக்குத் தென்கிழக்கே 8 மைல். சைதாப்பேட்டை ரெ-ஸ்-இறங்கி அங்கிருந்து தென்கிழக்கே 4 மைல். மயிலாப்பூரிலிருந்து தென்கிழக்கே 3 மைல். சென்னைக்குத் தெற்கே 5 மைல் தூரத்தில் சைதாப்பேட்டை உள்ளது. |
| 255 | 25 | விசயமங்கை | சோழநாடு வடகரை | கும்பகோணத்திற்கு வடமேற்கே 7 மைல். திருப்புறம்பயம் ஸ்தலத்திற்கு (நெம். 208) மேற்கே $2\frac{1}{2}$ மைல். கும்பகோணத்திலிருந்து வடமேற்காக $3\frac{1}{2}$ மைல் சென்று இன்னம்பர் க்ஷேத்திரத்தை (நெம். 42) சார்ந்து அங்கிருந்து 2 மைல் சென்றால் திருப்புறம்பயத்தை யடையலாம். |
| 256 | 24 | வியலூர் | ,, | திருவிடைமருதூருக்கு வடமேற்கே 4 மைல். கும்பகோணத்திற்குக் கிழக்கே 4 மைல். |
| 257 | 51 | விளநகர் | சோ-தெ | மாயூரத்திற்குக் கிழக்கே $4\frac{1}{2}$ மைல். |
| 258 | 68 | விளமர் | ,, | திருவாரூருக்குத் தென்மேற்கே 2 மைல். இத்தலம் ஓடம்போக்கி யாற்றின் தென்கரையிலுள்ளது. |
| 259 | 62 | விற்குடி | ,, | வெட்டாறு ரெயில் ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே $3\frac{1}{2}$ மைல்; திருவாரூருக்கு வடக்கே $4\frac{1}{2}$ மைல் தூரத்தில் ஷை வெட்டாறு உள்ளது. |

# சிவக்ஷேத்திரவிளக்கத்தில் காட்டப்பட்டிருக்கும் ஸ்தலங்களின் அகராதி

| கோட்ட எண் | நூலின் பக்கம் | ஸ்தலத்தின் பெயர் | நாடு | சமீப ரெயில் ஸ்டேஷனிலிருந்து திசையும், தூரமும், விசேஷக் குறிப்பும் |
|---|---|---|---|---|
| 260 | 106 | விற்கோலம் (கூவம்) | தொண் | மணவூருக்குத் தெற்கே 4 மைல். கடம்பத்தூர் ரெயில் ஸ்டேஷனிலிறங்கித் தெற்கே புதுமாலகரம், பேரம்பாக்கம் என்னும் கிராமங்களின் வழியாய் 6 மைல். கடம்பத்தூர்: சென்னபட்டணத்துக்கு மேற்கே 30 மைல் தூரத்தில் உள்ளது. |
| 261 | 58 | வீழிமிழலை | சோழநாடு தெ-கரை | பூந்தோட்டத்திற்குத் தென்மேற்கே 5 மைல். குற்றாலம் ரெயில் ஸ்டேஷனிலிறங்கித் தெற்கே 6 மைல். மாயூரத்திற்கு மேற்கே $5\frac{1}{2}$ மைல் தூரத்தில் ஷை குற்றாலம் உள்ளது. பேரளம் ரெ-ஸ்-னுக்குத் தென்மேற்கே 8 மைல். |
| 262 | 89 | வெஞ்சமாக்கூடல் | கொங்கு | கருவூருக்குத் (நெம். 76) தெற்கே 12 மைல். |
| 263 | 1 | வெண்காடு | சோழநாடு வடகரை | மாயூரத்திற்குக் கிழக்கே 9 மைல். சீகாழிக்குத் (நெம். 88) தென்கிழக்கே 7 மைல். |
| 264 | 75 | வெண்டுறை | சோழநாடு தெ-கரை | பொன்னிரைக்கு மேற்கே $8\frac{1}{2}$ மைல். ராஜமன்னார் கோயிலுக்குக் கிழக்கே 6 மைல். நீடாமங்கலம் ரெயில் ஸ்டேஷனுக்கு 9 மைல் தூரத்தில் ஷை ராஜமன்னார் கோயில் உள்ளது. கோட்டூருக்கு (நெம். 120) வடமேற் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | கே $5\frac{1}{4}$ மைல். இத்தலம் 'திருவண்டுதுறை' என்று வழங்கப்படுகிறது. |
| 265 | 71 | வெண்ணியூர் | சோழநாடு தெ-கரை | அம்மாபேட்டை ரெயில் ஸ்டேஷனுக்கு வட கிழக்கே $3\frac{1}{2}$ மைல். அம்மாபேட்டை: தஞ்சைக்குக் கிழக்கே $12\frac{1}{2}$ மைல் தூரத்திலுள்ளது. நீடாமங்கலத்திலிருந்து மேற்கே $\frac{1}{4}$ மைல். இத்தலம் 'கோயில்வெண்ணி' என்று வழங்கப்படுகிறது. |
| 266 | 97 | வெண்ணெய் நல்லூர் | நடுநாடு | மாம்பழப்பட்டுக்குத தெற்கே 6 மைல். விழுப்புரம் ரெயில் ஸ்டேஷனிலிருந்து 12 மைல். திருக்கோவலூரிலிருந்து (நெம் 124) 14 மைல். பண்ணுருட்டி ரெ-ஸ்-லிருந்து மேற்கே திருக்கோவலூருக்குப் போகும் பாதையில் 15 மைல். |
| 267 | 107 | வெண்பாக்கம் | தொண் | திரு எவ்வுளூருக்கு வடமேற்கே 5 மைல். திருப்பாசூருக்கு வடக்கே 5 மைல். [சென்னையிலிருந்து திருஎவ்வுளூர், திருப்பாசூர், நாகலாபுரம், சத்தியவேடு, தங்காளூர், கொழுந்தலூர், வெண்பாக்கம் இவ்வழிகளின்படியே சென்றால் வெண்பாக்கத்தை யடையலாம்.] திருஎவ்வுளூர்: சென்னையிலிருந்து மேற்கே 26 மைல். ஷேத்திரம்:- ஷேஸ்டேஷனிலிறங்கி வடக்கே $2\frac{1}{2}$ மைல். ஷே க்ஷேத்திரத்திலிருந்து மேற்கே திருப்பாசூருக்குப் போகும் வழி |

## சிவக்ஷேத்திரவிளக்கத்தில் காட்டப்பட்டிருக்கும் ஸ்தலங்களின் அகராதி

| தொடர் எண் | நூலின் பக்கம் | ஸ்தலத்தின் பெயர் | நாடு | சமீப ரெயில் ஸ்டேஷனிலிருந்து திசையும், தூரமும், விசேஷக் குறிப்பும் |
| --- | --- | --- | --- | --- |
| | | | | யில் ½ மைல் செல்லவேண்டும். பிறகு இங்கிருந்து வடக்கே திரும்பி நாகலாபுரம், சத்தியவேடு இந்தஇடங்களுக்குப் போகும் வழியில் 1½ மைல் செல்லவேண்டும். பிறகு ஷெ வழியை விட்டு மேற்கே திரும்பித் தங்காலூர், கொழுந்தலூர், வெண்பாக்கம்என்னும் கிராமங்களின் மார்க்கமே சுமார் 2 மைல் செல்லவேண்டும். பிறகு வடக்கே திரும்பி ½ மைல் செல்லவேண்டும். இத்தலம் 'திருவிளம்பூர்' என்றும் 'திருவளம்பூர்' என்றும், 'திருவுளம்பூதூர்' என்றும் வழங்கப்படுகின்றது. |
| 268 | 10 | வேட்களம் | சோழநாடு வடகரை | சிதம்பரத்திற்குக் கிழக்கே 2 மைல். இத்தலம் 'மூங்கில் வனம்' என்று வழங்கப்படுகிறது. |
| 269 | 54 | வேட்டக்குடி | சோழநாடு தெ-கரை | பொறையாறுக்கு வடகிழக்கே 4 மைல். காரைக்காலிலிருந்து வடக்கே 5 மைல் சென்று பின்பு கிழக்கே திரும்பி ¾ மைல். |
| 270 | 42 | வேதிகுடி | ,, | தஞ்சாவூரிலிருந்து வடகிழக்கே 7½ மைல். திருக்கண்டியூரிலிருந்து (செம். 68) கிழக்கே 1 மைல். திருக்கண்டியூர் : தஞ்சையி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | விருந்து வடக்கே திருவையாற்றுக்குப் போகும் வழியில் 6 மைல் தூரத்திலுள்ளது. |
| 271 | 17 | வேள்விக்குடி | சோழநாடு வடகரை | குத்தாலம் ரெயில் ஸ்டேஷனிலிறங்கி வடகிழக்கே 3 மைல். ௸ குற்றாலம்: மாயூரத்திற்கு (ரெம். 150) தென்மேற்கே $5\frac{1}{2}$ மைலிலுள்ளது. |
| 272 | 110 | வேற்காடு | தொண் | ஆவடிக்குத் தெற்கே 2 மைல். சென்னைக்கு மேற்கே 13 மைல் தூரத்தில் ௸ ஆவடி உள்ளது |
| 273 | 48 | வைகன்மாடக்கோவில் | சோழநாடு தெ-கரை | திருநீலக்குடி (ரெம். 172) தென்கிழக்கே 3 மைல். ஆடுதுறைக்குத் தென்கிழக்கே 5 மைல். வைகலுக்குத் தென்மேற்கே $\frac{1}{8}$ மைல். ௸ திருநீலக்குடி: மாயூரத்திற்கடுத்த ஆடுதுறை (ரெம்.102) ரெயில் ஸ்டேஷனிலிருந்து தெற்கே 2 மைலில் உள்ளது. திருநீலக்குடிக்குத் 'தென்னல் குடி' என்று பேர் வழங்கப்படுகிறது. |
| 274 | 25 | வைகாவூர் | சோழநாடு வடகரை | கும்பகோணத்திற்கு வடமேற்கே 8 மைல். விஜயமங்கையிலிருந்து (ரெம். 255) மேற்கே $1\frac{1}{2}$ மைல். இத்தலம் 'வில்வவனம்' என்று வழங்கப்படுகிறது. |

## பாடல்பெற்ற ஸ்தலங்களின் விவரம்

| எண் | நாட்டின் பெயர் | பாடல் பெற்ற ஸ்தலங்கள் | பதிகங்கள் |
|---|---|---|---|
| 1 | சோழநாடு: காவேரிக்கு | | |
| | வடகரை | 63 | 238 |
| | ஷை. தென்கரை | 127 | 318 |
| 2 | ஈழநாடு | 2 | 3 |
| 3 | பாண்டிநாடு | 14 | 34 |
| 4 | மலைநாடு | 1 | 1 |
| 5 | கொங்குநாடு | 7 | 9 |
| 6 | நடுநாடு | 22 | 62 |
| 7 | தொண்டைநாடு | 32 | 68 |
| 8 | துளுவநாடு | 1 | 2 |
| 9 | வடநாடு | 5 | 14 |
| | | 274 | 749 |
| | பொதுப்பதிகம் ... | | 48 |
| | ஆகப் பதிகங்கள். | | 797 |

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41

சிவமயம்.

# முகவுரை.

உலகமாவது சித்தும், அசித்துமென விருவகைப் படும். பிரபஞ்சமாய்த் தோன்றி நின்றொடுங்கும் காரிய மாதலால், அதனை யுண்டாக்குங் கர்த்தர் ஒருவ ருள ரென்று துணியப்படும். படவே கர்த்த ரொருவ ருளரென் பதற்கு அவரால் உண்டாக்கப்பட்ட உலகமே சாக்ஷியா யிருக்கின்றது.

உலகத்தை உண்டாக்கிய கடவுள், அநாதிமுத்த சித் துருவாகிய சிவபெருமானே; அவர் உயிர்க ளுய்யும்பொரு ட்டு வேதம், ஆகமம் என்னும் முதனூல்களை யருளிச்செய் தார். அவற்றிற் கூறப்பட்ட பொருள்கள்: பதிலக்ஷணம், பசுலக்ஷணம், பாசலக்ஷண மென்னும் மூன்றுமாம். அவற் றை ஓதி யுணர்ந்து அநாதி நித்திய பரிபூரணமாகிய பரம பதி சிவபெருமானே யெனவும், அவரே பாசசம்பந்தமா யுள்ள பசுக்களை யப்பாசசம்பந்த நீக்கி ஆளுந் தலைவரெனவு முணர்ந்து, அந் நூல்களில் விதித்தனவற்றைச் செய்து, விலக்கியனவற்றை விடுத்து நன்மார்க்கத் தொழுகுவோரே சைவசமயிகள் எனப்படுவர். அவரொழுகும் மார்க்கம்: தாச மார்க்கம், புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கமென நான்காம். இவற்றை முறையே சரியை, கிரியை, யோகம்,

ஞானம் என்றும்; இவற்றுலடையும் பதங்களை சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்றும் சொல்வர்.

இவற்றுள், தாசமார்க்கமாவது: திரு நந்தனவனம் வைத்தல், பத்திர *புஷ்ப மெடுத்தல், திருமாலை கட்டுதல், தோத்திரம்பாடல், ஆலயத்தில் திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், திருவிளக்கேற்றுதல், சிவனடியாருக்கேவல் செய்தலாதிய சரியாபாதமாம். அன்புடனே இதனை அனுட்டிப்போர் சிவலோகத்திலே வாழ்தலாகிய சாலோக பதத்தைப் பெறுவர்.

புத்திர மார்க்கமாவது: வாசனைத் திரவியம், தூபம், தீபம், தீர்த்தம், புஷ்பம், பஞ்சகவ்வியம், பஞ்சாமிர்தம் ஆதிய பூசா திரவியங்களைக் கொண்டு பஞ்சசுத்தி செய்து; உட்பூசை, புறப்பூசை, அக்கினிகாரியம் முதலியவற்றை விதிப்படி செய்தலே கிரியாபாதமாம். அன்புடனே இதனை அனுட்டிப்போர் சிவசாமீபத்தி லிருத்தலாகிய சாமீப பதத்தைப் பெறுவர்.

சகமார்க்கமாவது: முக்குணங்களையும் ஐம்புலன்களையு மடக்கி மூலவாயுவை எழுப்புகின்ற இடைபிங்கலை என்னும் நாடிகளை அடைத்துச் சுழுமுனை வழியைத் திறந்து நடனச் சிலம்போசையுடன் சென்று பஞ்சாக்ஷரம், ஏகாமாக் தன்மை கண்டு அருளைத் தரும் பரவெளியிலே புகுந்தழுந்தி யிருத்தலே யோகபாதமாம். அன்புடனே இதனை அனுட்டிப்போர் சிவசாரூபத்தைப் பெறுதலாகிய சாரூப பதத்தைப் பெறுவர்.

சன்மார்க்கமாவது: பல நூல்களையு மாராய்ந்து, திரிபதார்த்த லக்ஷணங்களையுந் தெளிந்து, பூர்வ கன்மத்திற்கு ஈடாக வந்த சிற்றறிவு முற்றும் நீக்கி, பேரறிவாகிய சிவஞானம் விரிந்து தோன்றும் மனசுடைமையே ஞானபாதமாம். அன்புடனே இதனை அனுட்டிப்போர் சிவபெருமானுட னிரண்டறக் கலக்குஞ் சாயுச்சிய பதத்தைப் பெறுவர்.

இங்ஙனமே வழிபடுவார்க்கு, முற்றறிவு முற்றுந் தொழி லுடையராகிய சிவபெருமானே அவரவர் பக்குவத்துக்கேற்பப் பயனளித்தருளுவர். உயிர்கள் சிற்றறிவுடைமையால் தாஞ்செய்த வினைப்பயனை அனுபவிக்க மாட்டாமையானும், வினை சடப்பொரு ளாதலால் தானறிந்து சேர மாட்டாமையானும், பரமபதியாகிய சிவபெருமானே அளவறிந்து கூட்டி இருவினை யொப்பு வருங்கால் பிறவித் துயரத்தை நீக்கி முத்திகொடுத் தருளுவர்.

அங்கிங்கெனாதபடி எங்கும் வியாபகமாய்ப் பாலின் நெய்போல நிறைந்த சிவபெருமான், உயிர்க ளுய்யும்பொருட்டுச் சத்திகாரியமாகிய திருவுருக்கொண்டு தயிரில் நெய்போலத் தலங்கடோறும் வெளிப்பட் டெழுந்தருளுவர். அத் தலங்கடோறும் போய்த் தரிசன முதலிய செய்தலால் இருவினையொப்பு வரும். ஆகலின், சிவஸ்தல யாத்திரை முதலியன சைவசமயிகள் முக்கியமாகச் செய்யவேண்டியனவே.

சைவசமயாசாரியர்களாகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார்.

# முகவுரை.

ஆகிய மூவரும் ஸ்தலங்கடோறுஞ் சென்று ஆங்காங்கே சைவத்தின் மகிமைகள் விளங்கச் சிவபெருமானுடைய திருவருளினாலே தமிழ்வேதமாகிய தேவாரத் திருப்பதிகங்களை யருளிச்செய்தனர். அத்தேவாரத் திருப்பதிகங்கள் கற்றோர்க்கன்றி மற்றோர்க்குப் புலப்படுதல் அரிதாகலானும், அவ்வத் தலங்கடோறு மெழுந்தருளி யிருக்கின்ற சுவாமியும், தேவியும் ஆகிய இவர்களுடைய திருநாம முதலியவற்றை யுணராவழி அங்ஙனம் ஸ்தலயாத்திரை செய்வோர்க்கு மனவூக்கஞ் செல்லுதல் கூடாமையானும், அவ்வத் தலங்கட்குள்ள தேவாரத் திருப்பதிகத் தொகை யுணரின் தோத்திர ரூபமாகிய வத்திருப்பதிகங்களா லங்குள்ள விசேட முணர்த லெய்துமாதலானும், யாவரு மெளிதி னுணருமாறு செய்யப்பட்ட "சிவக்ஷேத்திர விளக்கம்" என்னும் இந்நூல் சைவ சமயிகளுக்கு ஆவசியகம் வேண்டியதேயாம். அங்ஙன முணர்ந்து யாத்திரை செய்வோர்க்குச் சிவஞான முண்டாய் முத்தி சித்திக்கும்.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

ஏழாலைச் சைவப்பிரகாச வித்தியாசாலை பிரதம உபாத்தியாயர்

சுன்னாகம் ம-ா-ா ஸ்ரீ

## அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்களியற்றிய

### ஆசிரிய விருத்தங்கள்.

பூவுலகி லுள்ளசிவ தலங்க டம்மைப்
பூரணமா யிஃதிஃதென் றொருங்கு காட்டி
மூவர்தமிழ்ப் பதிகமுறை தொகையுங் காட்டி
முதுசிவக்ஷேத் திரவிளக்கம் எனும்பேர் சூட்டி
ஆவலொடும் புத்தகமொன் றியற்றி னோர்க்கும்
ஆங்கதனை யச்சிடுவித் தெங்கு முள்ள
யாவர்களு முணரவெளி தாக்கு வோர்க்கும்
யாமியற்றுங் கைம்மாறொன் றில்லை தானே. (௧)

புண்ணியமாம் பாரதஞ்சேர் கண்டத் துள்ள
பொற்பமருஞ் சிவத்தலங்கள் பலவு மோரும்
வண்ணமுறுந் தீர்த்தாதி முறையே காட்டி
வரசிவக்ஷேத் திரவிளக்க மென்னு நூலை
மண்ணுலகோ ரெளிதுணரக் கைம்மா றின்றி
வழுக்களைந்து முழுப்பரிவின் வயங்கச் சிந்தைத்

## சிறப்புப்பாயிரம்.

திண்ணமுடன் அச்சிடுவித் திட்டான் சைவஞ்
சிறந்துநனி விளங்கியெங்குந் தேங்கத் தானே. (௨)

அன்னவன்யா ரெனிலுறைதும் பாண்டி நாட்டில்
ஆலவா யெனுமதுரை அதனைச் சேர்ந்த
செந்நெல்விளை கின்றசிவ கங்கை மிக்க
திருவீர சேகரமா புரத்து வாழ்வோன்
பண்ணுபுகழ் வசியர்குல திலக னாகப்
பகர்பெரிய கறுப்பவசி யற்கு மைந்தன்
மின்னுதிருத் தொண்டர்தமக் கன்பு செய்வோன்
வீரப்ப செட்டியெனு மெய்ம்மை யோனே. (௩)

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவக்ஷேத்திர விளக்கம்.

## விநாயக வணக்கம்.

### நேரிசை வெண்பா.

ஒன்றாதி யோரெழுபத் தொன்றீறாய்* மூவர்தமிழ்
சென்றார் சிவதலங்கள் செப்புதற்கு—நின்று
கடக்குஞ் சாமுகனேர் காய்விழியா னீன்ற
கடக்குஞ் சாமுகனே காப்பு.

## சிவ வணக்கம்.

### எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

ஆதிநடு வந்தமிலா வளவில் சோதி
யருண்ஞான மூர்த்தியா யகில மீன்ற
மாதுதனை யொருபாகத் திருத்தி வானோர்
மகுடசூ டாமணியாய் வையம் போற்றப்

* 'ஒன்றாதி யோரெழுபத் தொன்றீறாய்' என்றது, ஒரு திருப்பதிகமுதல் எழுபத்தொரு திருப்பதிக மீறாய், எ-று.

ஒவ்வொரு திருப்பதிக முடையன திருப்பழுவூர் முதலியன.

எழுபத்தொரு திருப்பதிகமுடையது சீர்காழி. இவைகளைத் திருபதிகக் கோவையிற் காண்க.

## சிவக்ஷேத்திர விளக்கம்.

பாதிமதி யணிபவளச் சடைகடாழப்
படரொளியம் பலத்தாடும் பரனார் பாதத்
தாதுமலி தாமரைகள் சிரத்தே வைத்துத்
தளராத பேரன்பு வளரா நிற்பாம்.

---

## சிவசத்தி வணக்கம்.

ஈசனரு ளிச்சையறி வியற்ற லின்ப
மிலயமொடு போகமதி கார மாகித்
தேசுருவ மருவுருவ மருவ மாகித்
தேவியுமாய்த் தேசமொடு செல்வ மாகிப்
பேசரிய வுயிரையெலாம் பெற்று நோக்கிப் [இட
பெரும்போக மவையளித்துப் பிறப்பிணையு மொழித்
டாசகலு மடியருளத் தப்பனுட னிருக்கும்
அன்னையருட் பாதமலர் சென்னி வைப்பாம்.

---

## சுப்பிரமணியக் கடவுள்.

அருமறையா கமமங்க மருங்கலைநூ றெரிந்த
வகத்தியனுக் கோத்துரைக்கு மருட்குருவாங் குருவை
திருமறைமா முனிவர்முனி தேவர்கடந் தேவன்
சிவனருள்சேர் திருமதலை தவநிலையோர் தெய்வம்
பொருமறையார் கழல்வீரர் வீரன் கையிற்
பூநீர்கொண் டோவாது போற்றுமடி யார்கள்
கருமறையா வகையருளிக் கதிவழங்குங் கந்தன்
கழலிணைக ளென்சிரத்திற் கருத்தில் வைப்பாம்.

---

## நால்வர்.

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்
யாழிமிசைக் கன்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி [றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
யூழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

---

## அறுபத்துமூவர்.

தத்து மூவெதயின் மூன்றுந் தழுவெழ
முத்த மூரன் முகிழ்த்த நிராமய
சித்து மூர்த்திதன் றாளிணை சேரறு
பத்து மூவர் பதமலர் போற்றுவாம்.

திருச்சிற்றம்பலம்.

---

## தேவாரப் பதிகமுள்ள சிவஸ்தலங்கள்.

ஈண்டுபுகழ்ச் சோணாட்டி லொருநூற்றுத்
தொண்ணூ றீழத் திரண்டு
பாண்டியிலீ ரேழ்மலைநாட் டொன்று
கொங்கேழ் மகதமிரு பத்திரண்டு
பூண்டதொண்டை நன்னாட்டெண் ணான்குநடு
வொன்றுவட புலத்தைந் தாக
வாண்டசிவ தலமிருநூற் றெழுபத்து
நான்குதொகை யாகு மன்றே.

திருச்சிற்றம்பலம்.

---

| திருநாமம். | தலப்பதிகம். | பொதுப் பதிகம். | இரண்டின் றொகை. |
|---|---|---|---|
| திருஞானசம்பந்தர் ... | கூளஎ | எ | கூஅச |
| திருநாவுக்கரசுநாயனார் ... | உஎரு | கூஎ | கூகஉ |
| சுந்தரமூர்த்திநாயனார் ... | கூஎ | ச | க0க |
| ஆக | எசக | சஅ | எகூஎ |

## அறுபத்துமூன்று நாயன்மார் திருவவதாரம்.

சித்திரையி லேவர்வை காசியினி லேவர்
    திகழானி தனிலேவ ராடியிலொ ரைவர்
பொத்தியசி ராவணியி லறுவர்புரட் டாசி
    புகழ்நால்வ ரைப்பசியி லறுவர்கார்த் திகையின்
வித்தகரா மோரைவர் மார்கழியொ ரைவர்
    விளங்கியந்தை மறுயெழுவர் மாசிதனி லேவர்
வைத்ததிறற் பங்குனியி லேவரீ ராறு
    மாதத்தி லறுபத்து மூவருதித் தனரே.

## சமயாசாரியர்கள் நால்வர் முத்திபெற்றநக்ஷத்திரம்

சித்திரைச் சதயத் தப்பர் சிறந்தவை காசி மூலத்
தத்தரைப் பணிசம் பந்த ராணிமா மகத்தி லந்த
முத்தமிழ் வாத வூரர் முதியநல் லாடி தன்னிற்
சுத்தமாஞ் சுவாதி நாளிற் சுந்தரர் கைலை புக்கார்.

உமாபதிசிவாசாரியர், சித்திரை அஸ்தம்.
சேக்கிழார்நாயனார், வைகாசி பூசம்.
மறைஞானசம்பந்தசிவாசாரி, ஆவணி உத்திரம்.
அருணந்திசிவாசாரியர், புரட்டாசி பூரம்.
மெய்கண்டதேவர், ஐப்பசி சுவாதி.

| திருநாமம். | மாதம். | நக்ஷத்திரம் | ஸ்தலம். | முத்தி பெற்ற மாதம், நக்ஷத்திரம். |
|---|---|---|---|---|
| புகழ்ச்சோழநாயனார் | சித்திரை | அச்சுவினி | உறையூர். | ஆடி-கார்த்தி |
| திருநீலகண்டநாயனார் [னார் | ,, | கார்த்திகை | சிதம்பரம் | தை-விசாகம் |
| திருக்குறிப்புத்தொண்டநாய | ,, | அனுடம் | காஞ்சிபுரம் | சித்தி-சுவாதி |
| புகழ்த்துணைநாயனார் | ,, | சதயம் | செருவிலிபுத்தூர் | ஆவணி-ஆயிலி |
| சேரமான்பெருமாணாயனார் | ,, | ரேவதி | கொடுங்கோளூர் | ஆடி-சுவாதி |
| கலிநீதிநாயனார் | வைகாசி | அச்சுவினி | திருவொற்றியூர் | ஆடி-கேட்டை |
| எறிபத்தநாயனார் | ,, | பரணி | கருவூர் | மாசி-அஸ்தம் |
| சண்டேசுரநாயனார் | ,, | திருவாதிரை | திருச்சேய்ஞலூர் | தை-உத்திரம் |
| காரியார்நாயனார் | ,, | அத்தம் | திருக்கடவூர் | மாசி-பூராடம் |
| திருமூலநாயனார் | ,, | சோதி | சாத்தனூர் | ஐப்பசி-அசுபதி |
| நேசநாயனார் | ஆனி. | கார்த்திகை | காம்பீலிநகரம் | பங்-ரோகிணி |
| கோட்புலிநாயனார் [னார் | ,, | திருவாதிரை | நாட்டியத்தான்குடி | ஆடி-கேட்டை |
| எயர்கோன்கலிக்காம நாய | ,, | பூசம் | பெருமங்கலக்குடி | ஆனி-ரேவதி |
| அரிவாட்டாயநாயனார் | ,, | கேட்டை | தணமங்கலம் | தை-திருவாதி |
| கணநாதநாயனார் | ,, | ரேவதி | சீகாழி | பங்-திருவாதி |
| குங்குலியக்கலயநாயனார் | ஆடி | அச்சுவினி | திருக்கடவூர் | ஆவணி-மூலம் |
| சடையநாயனார் | ,, | புநர்பூசம் | திருநாவலூர் | மார்கழி-திரு |
| திருநீலநக்கநாயனார் | ,, | பூரம் | சாத்தமங்கை | வைகாசி-மூல |
| மெய்ப்பொருணாயனார் [னார் | ,, | அத்தம் | கோவலூர் | கார்-உத்திரம் |
| இளையான்றன்குடிமாற நாய | ,, | சதயம் | இளையான்குடி | ஆவணி-மகம் |
| காரைக்காலம்மையார் [யனார் | ஆவணி | கார்த்திகை | காரைக்கால் | பங்கு-சுவாதி |
| திருஞான சம்பந்தமூர்த்திநா | ,, | திருவாதிரை | சீகாழி | வைகா-மூலம் |

| திருநாமம். | மாதம். | நக்ஷத்திரம். | ஸ்தலம். | முத்தி பெற்ற மாதம். நக்ஷத்திரம். |
|---|---|---|---|---|
| பூசலார் நாயனார் | ஆவணி | பூரம் | திருநின்றியூர் | ஐப்பசி-அநுட |
| சுந்தரமூர்த்தி நாயனார் | ,, | உத்திரம் | திருநாவலூர் | ஆடி-சுவாதி |
| இடங்கழி நாயனார் | ,, | சோதி | கொடும்பாளூர் | ஐப்பசி-கார்த்தி |
| விறன்மிண்ட நாயனார் | ,, | மூலம் | செங்குன்றூர் | சித்தி-திருவா |
| முனையடுவார் நாயனார் | புரட்டாசி | மகம் | திருநீடூர் | பங்குனி-பூசம் |
| உருத்திரபசுபதி நாயனார் | ,, | சோதி | திருத்தலையூர் | புரட்-அசுபதி |
| தண்டியடிகணாயனார் | ,, | விசாகம் | திருவாரூர் | பங்கு-சதயம் |
| சிறப்புலி நாயனார் | ,, | அவிட்டம் | திருவாக்கூர் | கார்த்-பூராடம் |
| நமிநந்தியடிகணாயனார் | ஐப்பசி | உத்திரம் | எமப்பேறூர் | வைகாசி-பூசம் |
| ஆனாய நாயனார் | ,, | சோதி | மங்கலவூர் | கார்த்-அஸ்தம் |
| திருநீலகண்ட யாழ்ப்பாண [நாயனார் | ,, | விசாகம் | எருக்கத்தம்புலியூர் | வைகா-மூலம் |
| இசைஞானியார் | ,, | மூலம் | திருநாவலூர் | சித்-சித்திரை |
| சாக்கிய நாயனார் | ,, | திருவோணம் | திருச்சங்கமங்கை | மார்க-பூராடம் |
| அதிபத்த நாயனார் | ,, | ரேவதி | நாகபட்டணம் | ஆவ-ஆயில்யம் |
| கண்ணப்ப நாயனார் | கார்த்திகை | அச்சுவினி | உடுப்பூர் | தை-மிருகசீரி |
| முருக நாயனார் | ,, | கார்த்திகை | புகலூர் | வைகா-மூலம் |
| கோச்செங்கட்சோழநாயனார் | ,, | மிருகசீரிடம் | உறையூர் | மாசி-சதயம் |
| தலச்சிறை நாயனார் | ,, | மூலம் | திருமணஞ்சேரி | ஆவ-அநுடம் |
| கூற்றுவ நாயனார் | ,, | உத்தராட்டா | களந்தையூர் | ஆடி-திருவாதி |
| மூர்க்க நாயனார் | மார்கழி | புனர்பூசம் | வேற்காடு | கார்த்தி-மூலம் |
| அப்பூதியடிகணாயனார் | ,, | பூசம் | திங்களூர் | தை-சதயம் |
| அமர்நீதி நாயனார் | ,, | சித்திரை | பழையாறை | ஆனி-பூரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| திருநாளைப்போவார்நாயனா | ,, | ,, | ஆதனூர் | புரட்-ரோக |
| கலிக்கம்பநாயனர் | ,, | பூரட்டாதி | தூங்கானைமாடம் | தை-ரேவதி |
| கழற்சிங்கநாயனர் | தை | அச்சுவினி | சோணாடு | வைகா-பரணி |
| சிறுத்தொண்டநாயனர் | ,, | ,, | செங்காட்டங்குடி | சித்தி-பரணி |
| இயற்பகைநாயனர் [ணர் | ,, | பூசம் | பல்லவனீச்சரம் | மார்க-உத்திர |
| ஐயடிகள் காடவர்கோன்நாய | ,, | சோதி | காஞ்சீபுரம் | ஐப்பசி-மூலம் |
| [மூ]ர்த்திநாயனர் | ,, | விசாகம் | திருவாலவாய் | ஆடி-கார்த்தி |
| [ம]ங்கையர்க்கரசியார் | ,, | சதயம் | சோணாடு | சித்-ரோகணி |
| [செ]ருத்துணைநாயனர் | ,, | உத்தரட்டா | தஞ்சாவூர் | ஆவணி-பூசம் |
| மானக்கஞ்சாறநாயனர் | மாசி | அச்சுவினி | கஞ்சனூர் | மார்க-சுவாதி |
| [கா]ரிசிங்கமுனையரையநாயனர் | ,, | ரோகிணி | திருமுனைப்பாடிநா | புரட்-சதயம் |
| [சே]ரமாசிமாறநாயனர் [ணர் | ,, | மகம் | திருவம்பர் [டு | வைகா-ஆயில் |
| [பெ]ருமிழலைக்குறும்பநாய | ,, | சோதி | பெருமிழலையூர் | ஆடி-சித்திரை |
| [மூ]த்திநாயனர் | ,, | ரேவதி | விரிஞ்சியூர் | ஐப்பசி-பூசம் |
| [நி]ன்றசீர்நெடுமாறநாயனர் | பங்குனி | அச்சுவினி | திருநெல்வேலி | ஐப்பசி-பரணி |
| [தி]ருநாவுக்கரசுநாயனர் | ,, | ரோகிணி | திருவாரூர் | சித்தி-சதயம் |
| [சோ]திநாதநாயனர் | ,, | பூசம் | எயினனூர் | புரட்-உத்திர |
| [தி]ணம்புல்லநாயனர் | ,, | சதயம் | திருவேளூர் | கார்த்-கார்த்தி |
| [க]யிலார்நாயனர் | ,, | உத்தரட்டா | மயிலாப்பூர் | மார்க-ரேவதி |

## திருச்சிற்றம்பலம்.

சர்வோத்கிருஷ்ட வேதாகம விபவானந்த சாக்ஷாத்காரமாயும், பரிபூரணராயும், சச்சிதானந்தராயும், விபுவாயும், அருவாயும், உருவாயும், அருவுருவாயும், ஆதிமத்தியாந்த ரகிதராயும், எண்குணக் கடவுளாயும் விளங்குகின்ற சிவபெருமான் தம தடியார்களுடைய பக்குவத்துக்குத் தக்கபடி சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய பதங்களை யளித் தாள்வதற்கான சத்திகாரியமாயுள்ள திருவுருவுட னெழுந்தருளி யிருக்கின்ற திவ்விய க்ஷேத்திரங்களினது திருநாமங்களும், அந்த க்ஷேத்திரங்கடோறு மெழுந்தருளியிருக்கின்ற அச் சிவபெருமானது திருநாமமும், அவரது பாகத்தமைந்த அருட்சத்தியாகிய தேவியினது திருநாமமும், அங்கங்குள்ள தீர்த்தமும், விருக்ஷமும், முக்கிய மான்மியங்களும், அங்ஙனம் பேறுள்ள நாயன்மாரது திருநாமங்களும், அங்ஙனமுள்ள தேவாரத் திருப்பதிகத் தொகையும், அங்ஙனநின்று மற்றொரு க்ஷேத்திரத்துக் கேகுந் திக்கும், கடிகைதூர வழியளவும் என்றிவற்றை அறிந்தவா றியம்புவா னெடுத்துக்கொண்டு, எந்நாட்டினுஞ் சிறப்புற்றோங்கிய தென்னாடாகிய சோழவளநாட்டிற் காவேரியின் வடகரையில் திருக்கோயிலென்னுஞ் சிதம்பரமாதியாகக் கூறுகின்றாம்.

திருச்சிற்றம்பலம்.

## காவேரிக்கு வடகரையிலுள்ள க்ஷேத்திரங்கள்.

1. கோயில் என்பது சிதம்பரம்.

*சுவாமியார் - திருமூலஸ்தானத்தி லெழுந்தருளியிருக்கின்ற சுவாமி-சிதம்பரேசுவர ரென்னும் திருமூலநாதர்*

*தேவியார் - உமையம்மையார்.*

*சுவாமியார் - அங்கே கனகசபையி லெழுந்தருளி யிருக்கின்ற நித்தியானந்த வைபவராகிய மூர்த்தி - சபாநாயகர்.*

*தேவியார் - சிவகாமியம்மையார்.*

*அச் சபாநாயகக் கடவுள், தேவியாராகிய சிவகாமியம்மையார் வாமபாகத்து நின்று திருநோக்குற்று மகிழவும்,*

*பதஞ்சலி வியாக்கிரபாதராதிய முனிவரரும், பிரமவிஷ்ணு இந்திராதி தேவர்களும், பிறரும் பேரானந்தத்தின் மூழ்கவும்,*

*சிற்சபையினின்று வலத்திருவடியை முயலகன்மீ தூன்றி இடத் திருவடியைக் குஞ்சித பாதமாக உயர்த்திச் சதாகாலமும் (பஞ்சகிருத்திய காரணமாகிய) திருநடனத்தைச் செய்தருளுவர்.*

*இது தில்லை மூவாயிரர் பூசிக்கும் தலம்.*

*சமஸ்த தலங்களிலுமுள்ள சிவகலைக ளனைத்தும் அர்த்தயாமத்தில் வந்தொடுங்கிப் பின் செல்லாநிற்கும் தலம்.*

---

*இவ்விலிங்கம் பஞ்சபூத லிங்கங்களுள் ஆகாய லிங்கம்.*

*பஞ்சபூத லிங்க ஸ்தலங்களாவன:—பிருதிவி லிங்கம்-காஞ்சி. அப்பு லிங்கம்-திருவானைக்கா. தேயு லிங்கம்-திருவண்ணாமலை. வாயு லிங்கம்-திருக்காளத்தி. ஆகாய லிங்கம்-சிதம்பரம்.*

தீர்த்தம் - சிவகங்கை.

கூபம் - பரமானந்த கூபம் முதலியன.

விருக்ஷம் - ஆல்.

மாணிக்கவாசக சுவாமிகள், திருநாளைப்போவார் நாயனார், திருநீலகண்ட நாயனார், உமாபதி சிவாசாரியார் ஆனந்த முத்தியுற்ற தலம்.

பதிகம் - இதற்குத் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிக ளருளிச் செய்த திருப்பதிகம் உ

| | | |
|---|---|---|
| திருநாவுக்கரசு சுவாமிகள் | ,, | அ |
| சுந்தரமூர்த்தி சுவாமிகள் | ,, | க |
| | ஆக - | கக. |

அதற்குத் தென்கிழக்கே 2-கடிகை தூரத்தில்,

**2.** திருவேட்களம் என்பது மூங்கில்வனம்.

சு - ர் - பாசுபதேசுவரர்.

தே-ர் - நல்ல நாயகியார்,

தீ - ம் - சிவகங்கை.

ப - ம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-க, ஆக-உ.

அதற்குத் தெற்கே 1-கடிகை தூரத்தில்,

**3.** திரிநேல்வாயில் ஏ-து. சிவபுரி.

சு - ர் - உச்சிநாதேசுவரர்.

தே-ர் - கனகாம்பிகையார்,

தீ - ம் - கிருபா சமுத்திரம்.

ப - ம் - திருஞான. பதிகம்-க.

அதற்குத் தெற்கே ½-கடிகை தூரத்தில்,

4. திருக்கழிப்பாலை எ-து காரைமேடு.

சுவாமியார் - பாலவெண்ணேசுவரர்.

தேவியார் - பொற்பதவேத நாயகியார்.

தீர்த்தம் - கொள்ளிடம்.

பதிகம் - திருஞான. பதிகம்-உ, திருநாவு. பதிகம்-ரு, சுந்தர. பதிகம்-க, ஆக-அ.

அதற்குத் தென்கிழக்கே 5 கடிகை தூரத்தில்.

5. திருப்பெருமணம் எ-து ஆச்சாபுரம்.

சுவாமியார் - சிவலோகத் தியாகேசுவரர்.

தேவியார் - நங்கையுமை யம்மையார்.

தீர்த்தம் - பஞ்சாக்கர தீர்த்தம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும், அவர் திருமணந் தரிசித்த திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார், முருகநாயனார், திருநீலநக்க நாயனார் முதலியோர்களுஞ் சோதியிற் கலந்த ஸ்தலம்.

அதற்கு வடகிழக்கே ப கடிகை தூரத்தில்,

6. திருமயேந்திரப்பள்ளி எ-து கோயிலடிப்பாளையம்.

சுவாமியார் - திருமேனியழகர்.

தேவியார் - வடிவாளம்மையார்.

தீர்த்தம் - மந்திரபுஷ்கரணி.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்குத் தெற்கே 10 கடிகை தூரத்தில்

**7.** திருமுல்லைவாயில் எ-து தென்றிருமுல்லைவாயில்.

*சுவாமியார் - முல்லைவனநாதர்.*

*தேவியார் - கோதையம்மையார்.*

*தீர்த்தம் - சக்கரதீர்த்தம்.*

*பதிகம் - திருஞான. பதிகம்-க.*

*அதற்குத் தென்மேற்கே 2½ கடிகை தூரத்தில்,*

**8.** திருக்கலிக்காமூர் எ-து அன்னப்பன்பேட்டை.

*சுவாமியார் - சுந்தரேசுவரர்.*

*தேவியார் - அழகுவனமுலை யம்மையார்.*

*தீர்த்தம் - அம்புலி தீர்த்தம்.*

*பதிகம் - திருஞான. பதிகம்-க.*

*அதற்குத் தெற்கே 3 கடிகை தூரத்தில்,*

**9.** திருச்சாய்க்காடு எ-து சாயாவனம்.

*சுவாமியார் - சாயாவனேசுவரர்.*

*தேவியார் - குயிலினு நன்மொழி யம்மையார்.*

*தீர்த்தம் - சங்கமுக தீர்த்தம்.*

*பதிகம் - திருஞான, பதிகம்-உ, திருநாவு. பதிகம்-உ, ஆக-ச*

*அதற்குக் கிழக்கே ½ கடிகை தூரத்தில்,*

**10.** திருப்பல்லவனீச்சரம் எ-து காவிரிப்பூம்பட்டணம்.

*சுவாமியார் - பல்லவனப் புரேசுவரர்,*

*தேவியார் - சௌந்தரியம்மையார்.*

*பதிகம் - திருஞான. பதிகம் - உ.*

*இயற்பகைநாயனார் வழிபட்ட தலம்.*

*அதற்கு வடமேற்கே 2½ கடிகை தூரத்தில்,*

**11.** திருவெண்காடு.

சுவாமியார் - சுவேதாரணியேசுவரர்.

தேவியார் - பிரமவித்தியா நாயகியார்.

தீர்த்தம் - சோமசூரியாக்கினியாகிய முக்குளம்.

விருக்ஷம் - வடவால்.

பதிகம் - திருஞான. பதிகம்-ரு, திருநாவு. பதிகம்-உ, சுந்தர. பதிகம்-க. ஆக-அ.

அதற்கு மேற்கே ¾ கடிகை தூரத்தில்,

**12.** திருக்காட்டுப்பள்ளி.

சுவாமியார் - சுந்தரேசுவரர்.

தேவியார் - அகிலாண்ட நாயகியார்.

தீர்த்தம் - அமிர்தப் பொய்கை.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்கு வடமேற்கே 4 கடிகை தூரத்தில்,

**13.** திருக்குருகாவூர்.

சுவாமியார் - திருமேனி வெள்ளடை யீசுவரர்.

தேவியார் - காவியங்கண்ணி யம்மையார்.

தீர்த்தம் - வெள்ளடை, (திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகளுக்குத் தை யமாவாசையிற் றிருவருளாற் றாகசாந்தி செய்வித்த) கூபதீர்த்தம்.

அதற்கு வடகிழக்கே யொரு கடிகை தூரத்திற் சிவபெருமான் சென்று, சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குச் சித்திராபருவத்தில் கட்டமுது கொடுத்து, ஆலயத்துக் கழைத்து வந்து மறைந்தஸ்தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, சுந்தர. பதிகம்-க, ஆக-உ.

இதற்குத் தென்மேற்கே 3 கடிகை தூரத்தில்,

## 14. திருச்சீர்காழி.

சுவாமியார் - பிரமபுரீசுவரர்.

தேவியார் - திருநிலைநாயகியார்.

தீர்த்தம் - பிரமதீர்த்தம் எ-து கழுமலநதி.

திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் (ஆவணித் திருவாதிரையில்) திருவவதாரஞ்செய்தனர். தேவியார் அவருக்கு மூன்றும் வயதில் (சித்திரைச் சட்டியில்) ஞானப்பாலை யூட்டினர். அத்தலம் பன்னிரண்டு திருநாமங்களை யுடையது.

பதிகம் - திருஞான. பதிகம்-சுஎ, திருநாவு. பதிகம்-ந, சுந்தரர் பதிகம்-க, ஆக-எக.

அதற்குத் தென்மேற்கே ½ கடிகை தூரத்தில்,

## 15. திருக்கோலக்கா எ-து திருத்தாளமுடையார் கோயில்.

சுவாமியார் - சப்தபுரீசுவரர்.

தேவியார் - ஓசைகொடுத்த நாயகியார்.

திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகட்குச் சுவாமியார் பொற்றாளங்கொடுக்க அதற்கு அம்மையார் ஓசை கொடுத்ததாக ஐதீகம் (இங்கே யிப்படிப்பட்ட தென்றல்).

தீர்த்தம் - சூரியதீர்த்தம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, சுந்தர. பதிகம்-க, ஆக-உ.

அதற்கு மேற்கே 3 கடிகை தூரத்தில்,

**16.** திருப்புள்ளிருக்குவேளூர் எ-து வைத்தீசுரன் கோயில்.

சுவாமியார் - வைத்தியநாதேசுவரர்.

தேவியார் - தையல் நாயகியார்.

தீர்த்தம் - சித்தாமிர்தம்,

விருக்ஷம் - வேம்பு.

வேதம், சூரியன், சம்பாதி, சடாயு, இராமஸ்வாமி, இலக்குமணர், சுப்பிரமணியக்கடவுள் முதலியோர் பூசித்துத் திருவருட்பெற்ற தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-உ, ஆக-ங.

அதற்குத் தென்கிழக்கே 1 கடிகை தூரத்தில்.

**17.** திருக்கண்ணார்கோயில் எ-து குறுமாணக்குடி.

சுவாமியார் - கண்ணாயிரவீசுவரர்.

தேவியார் - முருகுவளர் கோதை நாயகியார்.

தீர்த்தம் - மணிகர்ணிகை.

பதிகம் - திருஞான. பதிகம் - க.

அதற்குத் தென்கிழக்கே 3 கடிகை தூரத்தில்,

**18.** திருக்கடைமுடி எ-து கீழையூர்.

சுவாமியார் - கடைமுடி ஈசுவரர்.

தேவியார் - அபிராமியம்மையார்.

தீர்த்தம் - கடைமுடி.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்கு வடமேற்கே 3 கடிகை தூரத்தில்,

திருநின்றியூர்.

சுவாமியார் - மகாலக்குமீசுவரர்.

தேவியார் - உலகநாயகியார்.

தீர்த்தம் - நீலமலர்ப்பொய்கை.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-க, சுந்தர. பதிகம்-உ, ஆக-4.

அதற்கு வடமேற்கே 3 கடிகை தூரத்தில்,

## 20. திருப்புன்கூர்.

சுவாமியார் - சிவலோகநாதர்.

தேவியார் - சொக்கநாயகியார்.

தீர்த்தம் - இடபதீர்த்தம்.

சிவபெருமான், திருநாளைப்போவார் நாயனாருக்காக நந்தி சுவாமை விலகச்செய்து, தரிசனங் கொடுத்த தலம்.

பதிகம் - திருஞான. பதிகம் - க, திருநாவு. பதிகம்-க, சுந்தர. பதிகம்-க, ஆக - ௩.

அதற்குத் தென்மேற்கே 4 கடிகை தூரத்தில்,

## 21. திருநீடூர்.

சுவாமியார் - அருட்சோமநாதேசுவரர்.

தேவியார் - வேயுறுதோளி யம்மையார்.

தீர்த்தம் - செங்கழுநீரோடை.

முனையடுவார் நாயனார் முத்தியடைந்த தலம்.

பதிகம் - சுந்தர. பதிகம் - க.

அதற்கு மேற்கே 2 கடிகை தூரத்தில்,

**22.** திருவன்னியூர் என்று பொன்னூர்.

சுவாமியார் - ஆப்தசகாயேசுவரர்.

தேவியார் - பெரியநாயகியார்.

தீர்த்தம் - சிவகங்கை.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-க, ஆக-உ.

அதற்கு மேற்கே 2 கடிகை தூரத்தில்,

**23.** திருவேள்விக்குடி.

சுவாமியார் - கலியாணசுந்தரேசுவரர்.

தேவியார் - பரிமள சுகந்த நாயகியார்.

தீர்த்தம் - மங்கள தீர்த்தம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, சுந்தர. பதிகம்-க, ஆக-உ.

அதற்கு வடமேற்கே 1½ கடிகை தூரத்தில்,

**24.** திருவெதிர்கொள்பாடி என்று மேலைத்திருமணச்சேரி.

சுவாமியார் - ஐராவதேசுவரர்.

தேவியார் - மலர்க்குழன்மாது.

தீர்த்தம் - சிவகங்கை.

பதிகம் - சுந்தர. பதிகம் - க.

அதற்கு வடகிழக்கே ¼ கடிகை தூரத்தில்,

**25.** திருமணஞ்சேரி என்று கீழ்த்திருமணஞ்சேரி.

சுவாமியார் - அருள்வள்ளனாயகேசுவரர்.

தேவியார் - யாழின்மொழியம்மையார்.

தீர்த்தம் - சமுத்திர தீர்த்தம்.

குலச்சிறை நாயனார் வழிபட்ட தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-க, ஆக-உ
அதற்கு வடகிழக்கே 3 கடிகை தூரத்தில்,

26. திருக்குறுக்கை.

சுவாமியார் - வீரட்டேசுவரர்.

தேவியார் - ஞானம்பிகையார்.

தீர்த்தம் - சூலதீர்த்தம்.

அட்டவீரட்டங்களுட் காமதகன ஸ்தலம்.

பதிகம் - திருநாவு. பதிகம் - உ.

அதற்கு வடகிழக்கே 3 கடிகை தூரத்தில்,

27. திருக்கருப்பறியலூர் எ-து தலைஞாயிறு மேலைக்காழி.

சுவாமியார் - குற்றம் பொறுத்த ஈசுவரர்.

தேவியார் - கோல்வளை யம்மையார்.

தீர்த்தம் - சூரியதீர்த்தம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, சுந்தர. பதிகம்-க, ஆக-உ.

அதற்கு வடகிழக்கே 1 கடிகை தூரத்தில்,

28. திருக்குரக்குக்கா.

சுவாமியார் - கொந்தள ஈசுவரர்.

தேவியார் - கொந்தள நாயகியார்.

தீர்த்தம் - சுந்தர தீர்த்தம்.

பதிகம் - திருநாவு. பதிகம் - க.

அதற்குத் தென்மேற்கே 2½ கடிகை தூரத்தில்,

29. திருவாளொளிபுற்றூர்.

வாள்கொளிபுத்தூரெனவும் வழங்குகின்றது.

சுவாமியார் - மாணிக்கவண்ணேசுவரர்.

தேவியார் - வண்டார் பூங்குழலம்மையார்.

தீர்த்தம் - பிரம தீர்த்தம்.

விருக்ஷம் - வாகை.

பதிகம் - திருஞான. பதிகம்-உ, சுந்தர. பதிகம்-க, ஆக-௩

அதற்கு வடமேற்கே 1½ கடிகை தூரத்தில்,

**30.** திருமண்ணிப்படிக்கரை எ-து இலுப்பைப்பட்டு.

சுவாமியார் - நீலகண்டேசுவரர்.

தேவியார் - அமுதகரவல்லியார்.

தீர்த்தம் - அமிர்த தீர்த்தம்.

பதிகம் - சுந்தர. பதிகம்-க.

அதற்கு வடமேற்கே 2 கடிகை தூரத்தில்,

**31.** திருவோமாம்புலியூர்.

சுவாமியார் - துயரந்தீர்த்த ஈசுவரர்.

தேவியார் - பூங்கொடி யம்பிகையார்.

தீர்த்தம் - கொள்ளிடம்.

பதிகம் - இதனுடன் கீழ் பார்சுவத்தில் வடதளியென்று ஓர் ஆலய மிருக்கின்றது. (பார்சுவம் - பக்கம்.) இரண்டிற்கும் திருஞான. பதிகம்-க. திருநாவு. பதிகம்-க ஆக - உ.

அதற்கு வடகிழக்கே 2 கடிகை தூரத்தில்,

**32.** திருக்கானாட்டுமுள்ளூர்.

சுவாமியார் - பதஞ்சலி நாதேசுவரர்.

தேவியார் - கோல்வளைக்கை யம்மையார்.

தீர்த்தம் - புஷ்கரணி.

பதிகம் - சுந்தர. பதிகம்-க.

அதற்கு வடகிழக்கே 4 கடிகை தூரத்தில்,

33. திருநாரையூர்.

சுவாமியார் - சௌந்தரேசுவரர்.

தேவியார் - திரிபுரசுந்தர வல்லியார்.

தீர்த்தம் - காருண்ய தீர்த்தம்.

விருக்ஷம் - புன்னாகம்.

நம்பியாண்டார் நம்பி விநாயகக் கடவுளைப் பூசித்து மெய்ஞ் ஞான முதலிய பேறுக ளடைந்த தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-ங, திருநாவு. பதிகம்-உ, ஆக.ரு.

அதற்குத் தென்மேற்கே 5 கடிகை தூரத்தில்,

34. திருக்கடம்பூர் என்-று மேலைக்கடம்பூர்.

சுவாமியார் - அமிர்தகட நாயகேசுவரர்.

தேவியார் - சோதிமின்னம்மையார்.

தீர்த்தம் - ஆதி தீர்த்தம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-உ, ஆக-ங

அதற்குத் தென்மேற்கே 8 கடிகை தூரத்தில்,

35. திருப்பந்தணைநல்லூர்.

சுவாமியார் - பசுபதீசுவரர்.

தேவியார் - காம்பனதோளியம்மையார்

கோலம்-மணவாளக்கோலம். அம்மை சந்நிதி வடக்குமுகம்,

தீர்த்தம் - புஷ்கரணி.

விருக்ஷம் - கொன்றை.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-க, ஆக-உ.

அதற்குத் தென்மேற்கே 1 கடிகை தூரத்தில்,

## 36. திருக்கஞ்சனூர்.

சுவாமியார் - அக்கினீசுவரர்.

தேவியார் - கற்பகநாயகியார்.

தீர்த்தம் - அக்கினி தீர்த்தம்.

விருக்ஷம் - புரசு.

மானக்கஞ்சார நாயனர், தமது அருமைக் குமாரத்தியின் விவாக மகோற்சவ காலத்தி லப்பெண்ணின் கூந்தலை யடியோடரிந்து (மகாவிரத சமயத் திருவேடம் பூண்டுவந்த) சிவபெருமானுக்குக் கொடுக்க நீட்டி முத்தியடைந்த தலம்.

பதிகம் - திருநாவு. பதிகம்-க.

அதற்குக் கிழக்கே 1 கடிகை தூரத்தில்,

## 37. திருக்கோடிகா.

சுவாமியார் - கோடிகாவீசுவரர்.

தேவியார் - வடிவம்பிகை யம்மையார்.

தீர்த்தம் - அகஸ்திய தீர்த்தம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-ரு, ஆக-சு.

அதற்கு மேற்கே 2 கடிகை தூரத்தில்,

## 38. திருமங்கலக்குடி.

சுவாமியார் - பிராணவரதேசுவரர்.

தேவியார் - மங்களநாயகியார்.

தீர்த்தம் - மங்களதீர்த்தம்.

விருக்ஷம் - கோங்கிலவம்.

ஏயர்கோன் கலிக்காம நாயனார், சுந்தரமூர்த்தி சுவாமிகளிடத்திற் பத்தியுடையவராயிருந்து முத்தியடைந்த தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-க, ஆக-உ.

அதற்கு வடமேற்கே 3 கடிகை தூரத்தில்,

## 39. திருப்பனந்தாள்.

சுவாமியார் - சடையப்பவீசுவரர்.

தேவியார் - பெரியநாயகியார்.

தீர்த்தம் - பிரமதீர்த்தம்.

விருக்ஷம் - பனை.

சிவலிங்கப்பெருமானார் திருமாலை சாத்தும்பொழுது மனம் வருந்திய தாடகையம்மைக்கு வளைந்தும், குங்குலியக்கலய நாயனாருக்கு நிமிர்ந்துமருளிய தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

இதற்குத் தென்மேற்கே ¾ கடிகை தூரத்தில்,

## 40. திருவாப்பாடி.

சுவாமியார் - பாலுகந்தவீசுவரர்.

தேவியார் - பெரியநாயகியார்.

தீர்த்தம் - மண்ணியாறு.

விருக்ஷம் - ஆத்தி

அர்த்த மண்டபத்துக்கும் மகாமண்டபத்துக்கும் மத்தியில், உள்ளாலய சுவாமிக்குத் தீபாராதனை செய்தவுடன் சண்டேசுரருக்குத் தீபாராதனை செய்வது.

சண்டேசுரநாயனார் வழிபட்டு உடலுடன் சிவபெருமான் திருவடி அடைந்த தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்குத் தெற்கே ¼ கடிகை தூரத்தில்,

## 41. திருச்சேய்ஞலூர்.

சுவாமியார் - கிரீசுவரர். (சத்தகிரீசுரர் எனவும் வழங்குகின்றது.)

தேவியார் - ஜெபி தேவியம்மையார். (சகிதேவியம்மை யெனவும் வழங்குகின்றது.)

தீர்த்தம் - சத்த தீர்த்தம்.

சண்டேசுரநாயனார் திருவவதாரஞ் செய்த தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்குத் தென்மேற்கே ¾ கடிகை தூரத்தில்,

## 42. திருந்துதேவன்குடி.

சுவாமியார் - கர்க்கடகேசுவரர்.

தேவியார் - அருமருந்தம்பிகையார்.

தீர்த்தம் - பங்கயதீர்த்தம்.

நண்டு பூசித்த தலம். இப்போதும் ஒரு நிறப் பசுக்களின் பால் பதின்கலம் சிவலிங்கப்பெருமானார் திருமுடியி லபிடேகஞ் செய்தா லம்முடிமீது பொன்னிறமுடைய வொரு நண்டுருத் தரிசனமாகும்.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்குத் தெற்கே ½ கடிகை தூரத்தில்,

**43.** திருவியலூர் என்-று. பண்டாரவாடைத் திருவியலூர்.

சுவாமியார்-ஏகாந்தநாதேசுவரர். (யோகாநந்தேசுரர் எனவும் வழங்குகின்றது.)

தேவியார் - சௌந்தரநாயகியார்.

தீர்த்தம் - சடாயு தீர்த்தம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்கு மேற்கே ½ கடிகை தூரத்தில்,

**44.** திருக்கோட்டையூர்.

சுவாமியார் - கோடீசுவரர்

தேவியார் - பந்தாடு நாயகியார்.

தீர்த்தம் - கோடி தீர்த்தம்.

பதிகம் - திருநாவு. பதிகம் - க.

அதற்கு வடமேற்கே 1½ கடிகை தூரத்தில்,

**45.** திருவின்னம்பர்.

சுவாமியார் - அம்பர் தீர்த்தீசுவரர்; எழுத்தறி நாயகரென்றும் பெயருண்டு.

அச்சிவபெருமான் கணக்கர்கட்குட் கணக்கராகவிருந்து வெள்ளோட்டை வைத்து, கோயிற்கணக்கொன்றுங் குறைவுறாம லொப்பித்த தலம். இதை அப்பர் சுவாமிகள் பதிகத்திற் காண்க.

தேவியார் - கொந்தார் பூங்குழலம்மையார்.

தீர்த்தம் - ஐராவத தீர்த்தம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம் - ச, ஆக-ரு.

அதற்கு வடக்கே 1 கடிகை தூரத்தில்,

## 46. திருப்புறம்பயம்.

சுவாமியார் - சாக்ஷிநாதேசுவரர்.

தேவியார் - சொல்லனை நாயகியார்

தீர்த்தம் - பிரமதீர்த்தம்.

விருக்ஷம் - புன்னை.

இதிற் பிரளயங்காத்த பிள்ளையாருளர். ஆவணிமீ (விநாயக) சதுர்த்தியில் (கஉ) சேர் தேனைப் பரிவட்டங் கொண்டொற்றிக் கொடுக்க அவ்வளவு மவ்விநாயக மூர்த்தத்திற் சுவறிவிடுகின்றது.

வன்னியும் கிணறும் இலிங்கமும் வணிகப்பெண்ணுக்குச் சாக்ஷிசொன்ன தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-க, சுந்தர. பதிகம்-க, ஆக-ங.

அதற்கு வடமேற்கே 3 கடிகை தூரத்தில்.

## 47. திருவிசயமங்கை.

சுவாமியார் - விசயநாதேசுவரர்.

தேவியார் - மங்கைநாயகியார்,

தீர்த்தம் - அருச்சுன தீர்த்தம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-க, ஆக-உ.

அதற்கு வடமேற்கே ½ கடிகை தூரத்தில்,

## 48 திருவைகாவூர் எ-று வில்வவனம்.

சுவாமியார் - வில்வவனேசுவரர்.

தேவியார் - பூவைவல்லியார். (வளைக்கை நாயகியார் என்றும் வழங்குகின்றது.)

தீர்த்தம் - கூற்றுவ தீர்த்தம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்குத் தென்மேற்கே 6 கடிகை தூரத்தில்,

## 49. திருவடகுறங்காடுதுறை.

சுவாமியார் - குலைவணங்கீசுவரர். (அழகுசடைமுடிநாதர் எனவும் வழங்குகின்றது.)

தேவியார் - அழகுசடையம்மையார். (குவலய நாயகியார் எனவும் வழங்குகின்றது.)

தீர்த்தம் - காவேரி.

வாலி பூசித்த தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்கு மேற்கே $4\frac{1}{2}$ கடிகை தூரத்தில்,

## 50. திருப்பழனம்.

சுவாமியார் - ஆபத்சகாயேசுவரர்.

தேவியார் - பெரியநாயகியார்.

தீர்த்தம் - மங்கள தீர்த்தம்.

பதிகம் - இதற்குத் திருப்பதிகக் கோவையிலுள்ள தொகை பதிகம் ஐந்து.

திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-ரு, ஆக-சு. இருக்கின்றன. கூடவிருக்கிறவொரு பதிகம் மதிக்கப்படவில்லை.

அதற்கு மேற்கே $1\frac{1}{2}$ கடிகை தூரத்தில்,

## 51. திருவையாறு.

சுவாமியார் - செம்பொற்சோதிநாதர்.

தேவியார் - அறம்வளர்த்த நாயகியார்.

தீர்த்தம் - பஞ்சநத தீர்த்தம்; தென்பிரகாரத்திற் சூரியதீர்த்தம்.
நந்தீசுவரர் பூசித்த தலம்.

ஆடி அமாவாசையில் அப்பர்சுவாமிகளுக்கு அங்குள்ள சரா சர மெல்லாஞ் சிவமுஞ் சத்தியுமாகத் தோன்றச் செய்து கைலாசதரிசனமுங் கொடுத்த தலம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்காகக் காவேரியின் பிரவாக த்தை யொதுக்கித் திருக்கூட்டத்துட னழைத்துத் தரிசனங் கொடுத்த தலம்.

நந்தீசுவரருக்குத் திருமழபாடியிலே திருக்கலியாணம். சித் திரைமீ விசாகத்தில் சத்தஸ்தானம்.

பதிகம் - திருஞான. பதிகம்-ரு, திருநாவு. பதிகம்-கஉ, சுந்தர. பதிகம்-க, ஆக-கஅ.

அதற்கு மேற்கே ¾ கடிகை தூரத்தில்,

## 52. திருநெய்த்தானம் எ-அ தில்லைஸ்தானம்.

சுவாமியார் - நெய்யாடியப்பநாதர்.
தேவியார் - வாலாம்பிகையார்.
தீர்த்தம் - காவேரி.
பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-ரு, ஆக-சு.

அதற்கு மேற்கே 1 கடிகை தூரத்தில்,

## 53. திருப்பெரும்புலியூர்.

சுவாமியார் - வியாக்கிரபுரீசுவரர்.
தேவியார் - சௌந்தரநாயகியார்.
தீர்த்தம் - காவேரி.
பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்கு வடமேற்கே 2 கடிகை தூரத்தில்,

54. திருமழபாடி.

சுவாமியார் - வச்சிரதம்பேசுவரர்.

தேவியார் - அழகாம்பிகையார்.

தீர்த்தங்கள் - சிவகங்கை, இலக்குமி தீர்த்தம். இவை சிலநாளைக்குமுன் கொள்ளிடத்தில் மூழ்கிப்போயின; அந்நாட்டொடங்கிக் கொள்ளிடமே தீர்த்தமாயிருக்கின்றது. தீர்த்தங்க ளிருந்தமை புராணத்தாற் றெரிகின்றது.

பதிகம் - திருஞான. பதிகம்-ங, திருநாவு. பதிகம்-உ, சுந்தர. பதிகம்-க, ஆக-சு.

அதற்கு வடக்கே 7½ கடிகை தூரத்தில்.

55. திருப்பழுவூர் * என்-து கீழ்ப்பழுவூர்.

உழுவூர் எனவும் வழங்குகின்றது.

சுவாமியார் - வடமூலநாதர்.

தேவியார் - அருந்தவநாயகியார்.

தீர்த்தம் - பிரமதீர்த்தம்.

அட்ட வீரட்டங்களுள் யானையை யுரித்த தலம்.

இதற்கு 1½ கடிகையிலுள்ள மேலைப்பழுவூரி லிருக்கின்ற மீனாட்சி சுந்தரேசுவராலயம் சிலகாலத்துக்குமுன்னே பிரதிட்டை செய்யப்பட்டிருத்தலால் மேற்சொல்லிய கீழ்ப்பழுவூரே ஆதி க்ஷேத்திரம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்குத் தென்மேற்கே 7½ கடிகை தூரத்தில்.

56. திருக்கானூர்.

சுவாமியார் - செம்மேனியப்பர்.

தேவியார் - சிவயோக நாயகியார்.

தீர்த்தம் - வேததீர்த்தம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-க, ஆக-உ.

அதற்கு வடமேற்கே 4 கடிகை தூரத்தில்,

## 57. திருப்பேரன்பிலாலந்துறை எ-அ கீழன்பிலாலந்துறை.

சுவாமியார் - சத்தியவாகீசுவரர்.

தேவியார் - சௌந்தரியநாயகியார்.

தீர்த்தம் - காயத்திரி தீர்த்தம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-க, ஆக-உ.

அதற்கு வடமேற்கே 5 கடிகை தூரத்தில்,

## 58. திருமாந்துறை.

சுவாமியார் - ஆம்பிரவனேசர்.

தேவியார் - அழகிலுயர் நாயகியார்.

தீர்த்தம் - காயத்திரி தீர்த்தம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்குத் தென்மேற்கே 3 கடிகை தூரத்தில்,

## 59. திருப்பாற்றுறை.

சுவாமியார் - மூலநாதேசுவரர்.

தேவியார் - மோகாம்பிகையார்.

தீர்த்தம் - கொள்ளிடம்.

சிவபெருமான் பொன்னிறமாய்ப் புற்றிலெழுந்தருளி யிருந்த தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்குத் தென்மேற்கே 4 கடிகை தூரத்தில்,

## 60. திருவானைக்கா எ-து சம்புகேசுரம்.

சுவாமியார் - சம்புகேசுவரர்.
தேவியார் - அகிலாண்டவல்லியார்.
தீர்த்தம் - காவேரி.
விருக்ஷம் - நாவல்.

வெள்ளானை, சிலந்தி முதலியன பூசித்துப் பேறுற்ற தலம்.

சிவபெருமான், கோச்செங்கட்சோழன் கழுத்திலிருந்து காவேரியில் விழுந்துபோன முத்துமாலையைத் திருமஞ்சனக்குடத்தில் வரச்செய்து தரித்துக்கொண்ட தலம்.

ஈவர் திருக்கரத்தாலே விபூதியை யள்ளிக் கூலியாட்களுக்குக் கொடுத்து மதிலெழுப்பிய தலம். அது இப்போது நீறிட்டான் திருமதிலென வழங்குகின்றது.

பஞ்சபூத ஸ்தங்களி லொன்ருகிய அப்புலிங்க ஸ்தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-ரு, திருநாவு. பதிகம்-ரு, சுந்தர. பதிகம்-க, ஆக-எ.

அதற்கு வடமேற்கே 8 கடிகை தூரத்தில்,

## 61. திருப்பைஞ்ஞீலி எ-து லாலிகேடி.

சுவாமியார் - மாற்றறிவரதேசுவரர்.
தேவியார் - சௌந்தரியம்மையார்.
தீர்த்தம் - விசாலாக்ஷி தீர்த்தம்.

அதற்குத் தெற்கே ¾ கடிகையில் தடாகமுந் தோட்டமுமுண்டு. அதில், சிவபெருமான் பிராமணரூபமாயெழுந்தருளி, அப்பர் சுவாமிகளுக்குக் கட்டமுது கொடுத்து அழைத்துக் கொண்டுவந்து முதலாவது பிராகாரத்தில் விட்டு மறைந்தனர்; அதனற் சோறுடு

மீசரொன்று பதிகத்திற் கட்டளையிட் டிருக்கின்றனர்.
ஏழு தீர்த்தங்க ளிருக்கின்றன.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம் - க, சுந்தர.
பதிகம்-க, ஆக-ந.

அதற்குத் தென்கிழக்கே 3 கடிகை தூரத்தில்,

**62.** திருப்பாச்சிலாச்சிராமம் எ-து திருவாசி.

சுவாமியார் - நீலகண்டேசுவரர்.

தேவியார் - விசாலாக்ஷியார்.

திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் மழவராயன் மகளுக்கு முயலகன் வியாதியைத் தீர்த்த தலம். அவர் பதிகம் பாடியபடியால் முயலகனுக்கு மோக்ஷம்; அதனால் சபாநாயகமூர்த்தம் சர்ப்பத்தின்மேல் நடனமும் சடையிற் கிரீடமு முடையதா யிருக்கின்றது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்-அ-காப்புப் பாட ஆயிரம் பொன் செம்பாய்க் கொடுத்து, பின் ௬-காப்புப் பாடினவுடனே விஷ்ணுவைக் கொண்டு அச்செம்புக்காசு முழுதுமுரைத்துப் பொன்னைக் காண்பிக்கப்பெற்று ஆனந்த முற்ற ஸ்தலம்.

தீர்த்தம் - பிரமதீர்த்தம்; அன்னமாம் பொய்கை.

விருக்ஷம் - வன்னி.

பதிகம் - திருஞான. பதிகம்-க, சுந்தர. பதிகம்-க, ஆக - உ.

அதற்கு மேற்கே 15 கடிகை தூரத்தில்,

**63.** திருவீங்கோய்மலை.

(இப்போது திருவிங்கநாத மலையென வழங்குகின்றது.)

சுவாமியார் - மரகதாசலேசுவரர்

தேவியார் - மரகதவல்லி யம்மையார்.
தீர்த்தம் - அமிர்த தீர்த்தம்.
ஈ பூஜித்த ஸ்தலம்.
பதிகம் - திருஞான. பதிகம்

ஆக காவேரியின் வடகரையிலுள்ள
க்ஷேத்திரங்கள்-63.
திருச்சிற்றம்பலம்.

---

## காவேரிக்குத் தென்கரையிலுள்ள
## க்ஷேத்திரங்கள்.

திருவீங்கோய் மலைக்குத் தெற்கே 7 கடிகை தூரத்தில்,

1. திருவாட்போக்கி எ-து இரத்தினகிரி.
சுவாமியார் - இரத்தினகிரீசுவரர்.
தேவியார் - சுரும்பார் குழலம்மையார்.
தீர்த்தம் - கௌரி தீர்த்தம்.
பதிகம் - திருநாவு. பதிகம்-க.

அதற்கு வடகிழக்கே ½ கடிகை தூரத்தில்,

2. திருக்கடம்பந்துறை.
சுவாமியார் - கடம்பவனேசுவரர்.
தேவியார் - முற்றிலாமுலை யம்மையார்.
தீர்த்தம் - ஞான தீர்த்தம்.
விருக்ஷம் - கடம்பு.

வடக்குநோக்கிய சந்நிதி. காலைக் கடம்பர், மத்தியானச் சொக்கர், மாலைத் திருவிங்கநாதர்.

பதிகம் - திருநாவு. பதிகம்-க.

அதற்குக் கிழக்கே 7½ கடிகை தூரத்தில்,

**3.** திருப்பராய்த்துறை எ-து அகண்டகாவேரி.

சுவாமியார் - பராய்த்துறைநாதர்.

தேவியார் - பொன்மயிலாம்பிகையார்.

தீர்த்தம் - காவேரி தீர்த்தம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-க, ஆக-உ.

அதற்குத் தென்கிழக்கே 7 கடிகை தூரத்தில்,

**4.** திருக்கற்குடி எ-து உய்யக்கொண்டான் பெருமலை.

சுவாமியார் - உச்சிநாதேசுவரர்.

தேவியார் - அஞ்சனாட்சி யம்மையார்.

பதிகம் - திருஞான. பதிகம் - க, திருநாவு. பதிகம்-க, சுந்தர. பதிகம்-க, ஆக-ங.

அதற்கு வடகிழக்கே 3 கடிகை தூரத்தில்,

**5.** திருமூக்கீச்சரம் எ-து உறையூர்.

சுவாமியார் - பஞ்சவர்ணேசுவரர்.

தேவியார் - காந்திமதி யம்மையார்.

தீர்த்தம் - பஞ்சவர்ண தீர்த்தம்.

புகழ்ச்சோழநாயனார், கோச்செங்கட்சோழநாயனார் முத்தி யடைந்த ஸ்தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்கு வடகிழக்கே 1 கடிகை தூரத்தில்,

6. திருச்சிராப்பள்ளி.

சுவாமியார் - தாயுமானவீசுவரர்.
தேவியார் - மட்டுவார் குழலம்மையார்.
தீர்த்தம் - காவேரி; நன்று தீர்த்தம்; தீயதில்லாத் தீர்த்தம்.

கையலாத்துக் கொடுமுடி

[தக்ஷிணகைலாச மூன்றனு ளொன்று. அவையாவன:]
திருக்காளத்தி, திருச்சிராப்பள்ளி, திருக்கோணமலை.

சிவபெருமான், செவ்வந்திப் புட்பத்திற்காக மேற்குமுக மான ஸ்தலம்.

ஒரு பக்திமாதாகிய பிராமணக் கருப்பிணியின் வருத்த நோக்கிச் சிவபெருமான் தாய்போல வந்து மருத்துவம் பார்த்து மறைந்தமையால், தாயுமானவரென்று காரணப் பெயராயிற்று.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-க, ஆக-உ,

அதற்குக் கிழக்கே 3 கடிகை தூரத்தில்,

7. திருவெறும்பியூர்.

சுவாமியார் - எறும்பீசுவரர்.
தேவியார் - நறுங்குழலநாயகியார்
தீர்த்தம் - பிபீலிகம் (எறும்பு).

தேவதைகள் எறும்பாய் வந்து பூசித்த ஸ்தலம்.

பதிகம் - திருநாவு. பதிகம்-உ.

அதற்குக் கிழக்கே 4 கடிகை தூரத்தில்,

8. திருநெடுங்களம்.

சுவாமியார் - நித்தியசுந்தரேசுவரர்.
தேவியார் - ஒப்பிலா நாயகியார்.

தீர்த்தம் - சூரிய தீர்த்தம்.
பதிகம் - திருஞான. பதிகம்-க.
அதற்கு வடகிழக்கே 4 கடிகை தூரத்தில்,

## 9. திருக்காட்டுப்பள்ளி எ-து மேலக்காட்டுப்பள்ளி.

சுவாமியார் - தீயாடியப்பர்.
தேவியார் - வார்கொண்டமுலை யம்மையார்.
தீர்த்தம் - சூரிய தீர்த்தம்.
பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-க, ஆக-உ.
அதற்குக் கிழக்கே 7 கடிகை தூரத்தில்,

## 10. திருவாலம்பொழில்.

சுவாமியார் - ஆத்மநாதேசுவரர்.
தேவியார் - ஞானம்பிகையார்.
தீர்த்தம் - திருப்பாற்குளம்.
பதிகம் - திருநாவு. பதிகம்-க.
அதற்குக் கிழக்கே 1 கடிகை தூரத்தில்,

## 11. திருப்பூந்துருத்தி.

சுவாமியார் - புட்பவனநாதர்.
தேவியார் - அழகாலமைந்த அம்மையார்.
இங்கு அப்பர்சுவாமிகள் மடமொன்று செய்வித்து அங்கு சிலநாள் வசித்திருந்ததாகச் சொல்லப்படுகின்றது. அந்தமட மிருந்ததற் கறிகுறியாய் இன்னமும் மல்விடத்திற் காறையோடு கலந்த செங்கற்களும் இருக்கின்றன.
தீர்த்தம் - காசிக்கங்கை.
பதிகம் - திருநாவு. பதிகம்-ங.
அதற்குக் கிழக்கே 1 கடிகை தூரத்தில்,

## 12. திருக்கண்டியூர்.

சுவாமியார் - வீரட்டானநாதர்.

தேவியார் - மங்கலநாயகியார்.

தீர்த்தம் - காவேரி.

அட்டவீரட்டங்களுட் பிரமன் தலைகொய்த தலம்.

அந்தத் தலை, சந்திரசேகராலயத்தி லிருக்கின்றது.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-க, ஆக-உ.

அதற்குக் கிழக்கே 3 கடிகை தூரத்தில்,

## 13. திருச்சோற்றுத்துறை.

சுவாமியார் - தொலையாச்செல்வநாதர்.

தேவியார் - ஒப்பிலம்பிகை.

தீர்த்தம் - சூரியதீர்த்தம்.

பதிகம் - திருப்பதிகக் கோவையிலுள்ள பதிகம் எழு.

திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம் - ச, சுந்தர. பதிகம்-க, ஆக-கு இருக்கின்றன. இன்னுமொரு பதிகம் மதிக்கப்படவில்லை.

அதற்குத் தென்மேற்கே 1 கடிகை தூரத்தில்,

## 14. திருவேதிகுடி.

சுவாமியார் - வேதபுரீசுவரர்.

தேவியார் - மங்கையர்க் கரசியார்.

தீர்த்தம் - சுந்தரதீர்த்தம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-க, ஆக-உ.

அதற்குத் தென்கிழக்கே 3 கடிகை தூரத்தில்,

**15.** திருத்தென்குடித்திட்டை.

சுவாமியார் - பசுபதீசுவரர்.
தேவியார் - உலகநாயகியார்.
தீர்த்தம் - சக்கர தீர்த்தம்.
பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்கு வடமேற்கே 3 கடிகை தூரத்தில்,

**16.** திருப்புள்ளமங்கை.

சுவாமியார் - பசுபதிநாதேசுவரர்.
தேவியார் - பால்வளை நாயகியார்.
தீர்த்தம் - சிவதீர்த்தம்.
பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்குக் கிழக்கே 1 கடிகை தூரத்தில்,

**17.** திருச்சக்கரப்பள்ளி எ-து இராசகிரி யையம்பேட்டை.

சுவாமியார் - ஆலந்தரித்தவீசுவரர்.
தேவியார் - அல்லியங்கோதை நாயகியார்.
தீர்த்தம் - காகதீர்த்தம்.
பதிகம் - திருஞான. பதிகம்-க.

இதற்குத் தென்கிழக்கே 3 கடிகை தூரத்தில்,

**18.** திருக்கருகாவூர்.

சுவாமியார் - முல்லைவனேசுவரர்.
தேவியார் - கரும்பனைவல்லி யம்மையார்.
தீர்த்தம் - பிரமதீர்த்தம்.
பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-க, ஆக-உ.

அதற்கு வடக்கே 3 கடிகை தூரத்தில்,

## 19 திருப்பாலைத்துறை.

சுவாமியார் - பாலைவனநாதர்.
தேவியார் - தவளவெண்ணகை யம்மையார்.
தீர்த்தம் - காவேரி.
பதிகம் - திருநாவு. பதிகம்-௧.

அதற்குத் தென்கிழக்கே $1\frac{1}{2}$ கடிகை தூரத்தில்,

## 20. திருநல்லூர்.

சுவாமியார் - பெரியாண்டவீசுவரர்.
தேவியார் - திரிபுரசுந்தரி யம்மையார்.

அப்பர் சுவாமிகளுக்குத் திருவடி சூட்டிய தலம்.

தீர்த்தம் - சப்தசாகரம்.
பதிகம் - திருஞான. பதிகம்-௩, திருநாவு. பதிகம்-௨., ஆக-௫.

அதற்குத் தென்கிழக்கே 2 கடிகை தூரத்தில்,

## 21. திருவாலூர்ப்பசுபதீச்சரம்.

சுவாமியார் - பசுபதீசுவரர்.
தேவியார் - மங்களநாயகியார்.
தீர்த்தம் - பிரமதீர்த்தம்.

பசு பூசித்த தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-௧.

அதற்கு வடக்கே 3 கடிகை தூரத்தில்,

## 22. திருச்சத்திமுற்றம்.

சுவாமியார் - சிவக்கொழுந்தீசுவரர்.
தேவியார் - பெரியநாயகியார்.
தீர்த்தம் - சூலதீர்த்தம்.

சிவபெருமானைப் பராசத்தி தழுவி முத்தங்கொடுத்த தலம்.

பதிகம் - திருநாவு. பதிகம்-க.

அதற்குத் தெற்கே ¼ கடிகை தூரத்தில்,

**23.** திருப்பட்டீச்சரம்.

சுவாமியார் - பட்டீசுவரர்.

தேவியார் - பால்வளை நாயகியார்.

தீர்த்தம் - ஞானதீர்த்தம்.

இத்தீர்த்தத்தில், மார்கழிமீ அமாவாசையில் கருட தரிசனம்.

திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளுக்குச் சிவபெருமான் முத்துப்பந்தர் கொடுத்த தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்குத் தென்கிழக்கே 1 கடிகை தூரத்தில்,

**24.** திருவாறைவடதளி எ-து பழையாறை.

சுவாமியார் - சோமேசுவரர்.

தேவியார் - சோமகலை நாயகியார்.

தீர்த்தம் - சிவகங்கை.

இதன் வடமேற்கு 1 கடிகை தூரத்திலும், ஒரு திருமேற்றளி யிருக்கின்றது. வடதளி யென்கிற தலம். இவ்விரண்டில் இன்னதென்று மதிக்கப்படவில்லை.

சுவாமியார் - வடதளிநாதர்.

தேவியார் - கௌரியம்மையார்.

சமணரால் மூடப்பட்ட சிவலிங்கப்பெருமானுர் வெளிவந்து அப்பர் சுவாமிகளுக்குத் தரிசனங் கொடுத்த தலம்.

அமர்நீதி நாயனார் முத்தி தலம்.
பதிகம் - இவ்விரு தலத்திற்கும் திருநாவு. பதிகம்-க.
அதற்கு வடக்கே 1 கடிகை தூரத்தில்,

## 25. திருவலஞ்சுழி.

சுவாமியார் - கற்பகேசுவரர்.
தேவியார் - பெரிய நாயகியார்.
தீர்த்தம் - அறுபத்தாறுகோடி.
பதிகம் - திருஞான. பதிகம் ௩, திருநாவு. பதிகம்-உ, ஆக-ரு.
அதற்குக் கிழக்கே 4 கடிகை தூரத்தில்,

## 26. திருக்குடமூக்கு எ-து கும்பகோணம்.

சுவாமியார் - கும்பேசுவரர்.
தேவியார் - மங்களநாயகியார்

பன்னிரண்டு வருடத்திற் கொருதரம் (சிங்க ராசியிற் குரு வருங்கால்) மாசிமீ மக நட்சத்திரத்தில் மகாமக தீர்த்தம். இதிற் காசி கங்கை வருகின்றதென் றைதீகம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-க, ஆக-உ.
இதற்குக் கிழக்கே ¼ கடிகை தூரத்தில்,

## 27. திருக்குடந்தைக்கீழ்க்கோட்டம் எ-து

மடந்தையார் கோயில் என்றும், நாகேசுரன் கோயில் என்றும் வழங்குகின்றது.

சுவாமியார் - மடந்தைபாகர்.
தேவியார் - பெரியநாயகியார்.
தீர்த்தம் - மாமக தீர்த்தம்,

அங்கே சபாபதி மூர்த்தத்துக்கு ஆடவல்லவரென்று நாம முண்டு.

பதிகம் - திருநாவு. பதிகம்-க

இதற்குத் தென்கிழக்கே ¼ கடிகை தூரத்தில்,

**28.** திருக்குடந்தைக்காரோணம் எ-ற
காசி விசுவநாதர் கோயில்.

சுவாமியார் - சோமநாதேசுவரர்.

தேவியார் - தேனார்மொழி யம்மையார்.

தீர்த்தம் - காசிபதி.

இது மகாமக தீர்த்தத்திற்கு வடகரையிலிருக்கின்றது.

பதிகம் - திருஞான. பதிகம்-க,

அதற்குக் கிழக்கே 2 கடிகை தூரத்தில்,

**29.** திருநாகேச்சரம்.

சுவாமியார் - சண்பகாரணியேசுவரர்.

தேவியார் - குன்றுமுலை நாயகியார்.

தீர்த்தம் - நாகதீர்த்தம்.

நாகம் பூசித்த தலம்.

சேக்கிழார் நாயனார் வழிபட்ட ஸ்தலம்; அவர் குடும்பம் இக்காலத்து மிருக்கின்றது.

பதிகம் - திருஞான. பதிகம்-உ, திருநாவு. பதிகம்-ங, சுந்தர பதிகம்-க, ஆக-சு.

அதற்கு வடகிழக்கே 2 கடிகை தூரத்தில்,

**30.** திருவிடைமருதூர் எ-ற மத்தியார்ச்சுனம்.

சுவாமியார் - மருதப்பவீசுவரர்.

தேவியார் - பெருநலமாமுலை நாயகியார்.

தீர்த்தங்கள் - கருணாநதி, காவேரி.

விருக்ஷம் - மருது.

சிவபெருமான் வரகுண பாண்டியனுக்குப் பிரமஹத்தியைப் போக்கி அன்பன் மனைவியை யுட்கொண்ட தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-சு, திருநாவு. பதிகம்-ரு, சுந்தர. பதிகம்-க, ஆக கஉ.

அதற்குக் கிழக்கே 2 கடிகை தூரத்தில்,

**31.** திருத்தென்குரங்காடுதுறை எ-து ஆடுதுறை.

சுவாமியார் - ஆப்தசகாயநாதர்.

தேவியார் - பவளக்கொடி யம்மையார்.

தீர்த்தம் - சகாயதீர்த்தம்.

சுக்ரீவன் பூசித்த தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-க, ஆக-உ.

அதற்குத் தெற்கே 1 கடிகை தூரத்தில்,

**32.** திருநீலக்குடி எ-து தென்னலக்குடி.

சுவாமியார் - நல்லநாயகேசுவரர்.

தேவியார் - அழகம்பிகையார்.

தீர்த்தம் - வன்னீலம்.

பதிகம் - திருநாவு. பதிகம்-ட.

அதற்குத் தென்கிழக்கே 2 கடிகை தூரத்தில்,

**33.** திருவைகன் மாடக்கோயில்.

வைகலில்:-

சுவாமியார் - வைகநாதேசுவரர்.

தேவியார் - வைகலம்பிகையார்.

மாடக்கோயிலில்:-

சுவாமியார் - கோமளேசுவரர்.

தேவியார் - இளங்கோதை யம்மையார்.

(வைகல் வேறு, மாடக்கோயில் வேறு).

பதிகம் - இவ்விரண்டிற்கும் திருஞான. பதிகம்-க.

அதற்குத் தென்கிழக்கே 4 கடிகை தூரத்தில்,

**34.** திருநல்லம் எ-று கோனேரிராசபுரம்.

சுவாமியார்-மாமணீசுவரர்.

தேவியார் - மங்கள நாயகியார்.

தீர்த்தம் - கங்கை.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-க, ஆக-உ.

அதற்கு வடமேற்கே 2 கடிகை தூரத்தில்,

**35.** திருக்கோழம்பம்.

சுவாமியார் - கோகிலேசுவரர்.

தேவியார் - சௌந்தரியநாயகியார்.

தீர்த்தம் - மதுதீர்த்தம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-க, ஆக-உ.

அதற்கு வடகிழக்கே 1 கடிகை தூரத்தில்,

**36.** திருவாவடுதுறை.

சுவாமியார் - மாசிலாமணித் தியாகேசுவரர்.

தேவியார் - ஒப்பிலாமுலை யம்மையார்.

தீர்த்தம் - கோமுத்தி தீர்த்தம்.

விருக்ஷம் - படரரசு.

திருமூலநாயனார், வேதாகம சாரத்தை மூவாயிரம் பாவாகப் பாடி முத்திபெற்ற தலம்.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுக்குச் சிவபெருமான் பொற்கிழி யருளிய தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-ஐ, திருநாவு. பதிகம்-ரு, சுந்தர. பதிகம்-உ, ஆக-அ.

அதற்கு வடகிழக்கே 3 கடிகை தூரத்தில்,

**37. திருத்துருத்தி எ-து குற்றாலம்.**

சுவாமியார் - உக்தவேதீசுவரர்.
தேவியார் - முகிழம்பிகையார்.
தீர்த்தம் - காவேரி சுந்தரதீர்த்தம்.
விருக்ஷம் - குற்றால்.
பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-க, சுந்தர. பதிகம்-க, ஆக-ங.

அதற்குத் தென்கிழக்கே 1 கடிகை தூரத்தில்,

**38. திருவழுந்தூர் எ-து தேரழுந்தூர்.**

சுவாமியார் - வேதபுரீசர்.
தேவியார் - சௌந்தரியாம்பிகை.
தீர்த்தம் - சித்தாமிர்தம்.
பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்கு வடகிழக்கே 6 கடிகை தூரத்தில்,

**39. திருமயிலாடுதுறை எ-து மாயூரம்.**

சுவாமியார் - வதானீசுவரர், வள்ளலார்.
தேவியார் - அபயப்பிரதாம்பிகையார், அஞ்சனாயகி.

தேவி சிவபெருமானை மயிலாப்பூசித்து மணந்த தலம்.

தீர்த்தம் - காவேரி, இடபதீர்த்தம்.

துலாமாசம் விசேடம்.

விருக்ஷம் - மா.

பதிகம் - திருஞான. பதிகம்-உ, திருநாவு. பதிகம்-க, ஆக-௩.

அதற்கு வடகிழக்கே 3 கடிகை தூரத்தில்,

**40.** திருவிளநகர்.

சுவாமியார் - துறைகாட்டும் வள்ளலார்.

தேவியார் - தோழியம்மையார்.

தீர்த்தம் - காவேரி.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்குத் தெற்கே 2 கடிகை தூரத்தில்,

**41.** திருப்பறியலூர்.

சுவாமியார் - வீரட்டேசுவரர்.

தேவியார் - இளங்கொடி யம்மையார்.

தீர்த்தம் - சந்திரபுஷ்கரணி.

அட்டவீரட்டங்களுள் தக்கனுடைய யாகத்தை யழித்த தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்கு வடகிழக்கே 2 கடிகை தூரத்தில்;

**42.** திருச்செம்பொன்பள்ளி எ-து செம்பொனார்கோயில்.

சுவாமியார் - சொன்னபுரீசுவரர்.

தேவியார் - சுகந்தவன நாயகியார்.

தீர்த்தம் - வீரபத்திர தீர்த்தம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-உ, ஆக-ந.

அதற்கு வடகிழக்கே 1 கடிகை தூரத்தில்,

**43.** திருநனிபள்ளி எ-து புஞ்சை.

சுவாமியார் - நற்றுணையப்பர்.

தேவியார் - பருவதராஜ புத்திரி.

தீர்த்தம் - சொன்ன தீர்த்தம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு பதிகம்-க, சுந்தர. பதிகம்-க, ஆக-ந.

அதற்குக் கிழக்கே $2\frac{1}{2}$ கடிகை தூரத்தில்,

**44.** திருவலம்புரம் எ-து பெரும்பள்ளம்.

சுவாமியார் - வலம்புரிநாதேசுவரர்.

தேவியார் - வடுவகிர்விழி யம்மையார்.

தீர்த்தம் - பிரமதீர்த்தம்.

ஏரண்ட மஹாரிஷி திருவலஞ்சுழியிற் காவேரியில் விழுந்தெழுந்து சிவபெருமானைப் பூசித்து முத்தியுற்ற ஸ்தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-உ, சுந்தர. பதிகம்-க, ஆக-ச.

அதற்குத் தென்கேற்கே 1 கடிகை தூரத்தில்,

**45.** திருத்தலைச்சங்காடு.

சுவாமியார் - சங்காரணியேசுவரர்.

தேவியார் - சௌந்தரியநாயகியார்.

தீர்த்தம் - காவேரி.

விருக்ஷம் - வில்வம்.

விஷ்ணுமூர்த்தி பாஞ்சசன்ய மென்னுஞ் சங்கைப்பெற்ற ஸ்தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்குத் தென்கிழக்கே $1\frac{1}{2}$ கடிகை தூரத்தில்,

**46.** திருவாக்கூர் எ-து தான்தோன்றிமாடம்.

சுவாமியார் - சுயம்புநாதேசுவரர்.

தேவியார் - வாணெடுங்கணம்மையார்.

தீர்த்தம் - குமுததீர்த்தம்.

பதிகம் - திருஞான பதிகம்-க, திருநாவு. பதிகம்-க, ஆக-உ.

அதற்குத் தென்கிழக்கே $2\frac{1}{2}$ கடிகை தூரத்தில்,

**47.** திருக்கடவூர்.

சுவாமியார்-அமிர்தகடேசுவரர் மூர்த்தம், காலசங்கார மூர்த்தம்.

தேவியார் - அபிராமி யம்மையார்.

தீர்த்தம் - அமிர்த தீர்த்தம்.

விருக்ஷம் - வில்வம்.

இஃது அட்டவீரட்டங்களுள் (மார்க்கண்டேய முனிவர்க்காக யமனை உதைத்த தலம்).

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-௩, சுந்தர. பதிகம்-க, ஆக-ரு.

அதற்குக் கிழக்கே $\frac{1}{2}$ கடிகை தூரத்தில்,

**48.** திருக்கடவூர் மயானம்.

சுவாமியார் - பிரமபுரீசுவரர்.

தேவியார் - மலர்க்குழன் மின்னம்மையார்.

பங்குனிமீ அச்சுவினி நக்ஷத்திரத்தில், கூபத்திற் காசிக் கங்கை வருகின்றது. அப்பொழுது ஸ்நானம் விசேஷம். அக்கங்கை, காசிக் கங்கையை யொத்த சோதனை (சுத்தம்) யுள்ளதாக விருக்கும்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-க, சுந்தரர் பதிகம்-க, ஆக-ங.

அதற்குத் தென்கிழக்கே 5 கடிகை தூரத்தில்,

49. திருவேட்டக்குடி.

சுவாமியார் - திருமேனியழகீசுவரர்.
தேவியார் - சாந்தநாயகியார்.
தீர்த்தம் - சந்திர புஷ்கரணி.
பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்குத் தென்மேற்கே 4 கடிகை தூரத்தில்,

50. திருத்தெளிச்சேரி என்-று கோயிற்பத்து.

சுவாமியார் - பார்வதீசுவரர்.
தேவியார் - சத்தியம்மையார்.
தீர்த்தம் - சத்தி தீர்த்தம்.
பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்குத் தென்மேற்கே 2 கடிகை தூரத்தில்,

51. திருத்தருமபுரம்.

சுவாமியார் - யாழ்முரிநாதேசுவரர்.
தேவியார் - மதுரமின்னம்பிகையார்.
தீர்த்தங்கள் - விஷ்ணு தீர்த்தம், பிரமதீர்த்தம்.
பதிகம் - திருஞான. பதிகம் - (யாழ்முறி) க.

அதற்கு வடமேற்கே 1½ கடிகை தூரத்தில்,

**52. திருநள்ளாறு.**

சுவாமியார் - தெப்பாரணியேசுவரர்.

தேவியார் - போகமார்த்த பூண்முலை யம்மையார்.

முசுகுந்தச் சக்கரவர்த்தி இந்திரனிடத்திற் பெற்றுக் கொண்டுவந்து பிரதிட்டை செய்த சப்த விடங்கத் தலத்தி லொன்று. சப்தவிடங்களாவன - திருவாரூர், திருநள்ளாறு, திருநாகைக்காரோணம், திருக்காறு யல், திருக்கோளிலி, திருவாய்மூர், திருமறைக்காடு.

சப்த-ஏழு, வி-அன்மை, டங்கம் - உளி, அர்-பலர்பால் விகுதி; ஆகவே உளிபடா தமைந்த மூர்த்தி என்பது கருத்து

நகரவிடங்கர். உன்மத்த நடனம்.

தீர்த்தம் - நள தீர்த்தம்.

நளச்சக்கரவர்த்தி பூசித்து மனோரத மடைந்த தலம்.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் (மதுரையிலே சம ணர்களோடு வாது செய்யும்பொழுது அக்கினியின் வேகாது நின்று அச்சமணரை வென்ற) "போக மார்த்த பூண்முலையாள்" என்னும் பச்சைப் பதிக முள்ள ஸ்தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-௬, திருநாவு. பதிகம்-௩, சுந்தர். பதிகம்-௨, ஆக-௧.

அதற்கு வடமேற்கே 4 கடிகை தூரத்தில்,

**53. திருக்கோட்டாறு.**

சுவாமியார் - ஐராவதேசுவரர்.

தேவியார் - வண்டமர் பூங்குழலியார்.

தீர்த்தம் - சூரிய தீர்த்தம்.
பதிகம் - திருஞான. பதிகம் உ.

அதற்குத் தென்மேற்கே 4 கடிகை தூரத்தில்,

## 54. திருவம்பர்ப் பெருந்திருக்கோயில்.

சுவாமியார் - பிரமபுரீசுவரர்.
தேவியார் - பூங்குழலையகியார்.
தீர்த்தம் - அன்னமாம்பொய்கை.

சிலந்திச் சோழமஹாராஜாவுக்கு மணக்கோலக் காட்சிக் கொடுத்த தலம்.

சிலந்திச் சோழமஹாராஜா முற்பிறப்பிலே சிலந்தியாயிருந்து செய்தபூசாபலத்தினலே மறுபிறப்பிலே கோச் செங்கட் சோழராக அவதரித்தார்.

அந்தச் சோழராஜாவானவர் திருவானைக்காமுதல் இந்த வம்பர்ப் பெருந்திருக்கோயி லீறாக-சுஅ மாடக்கோயிற் றிருப்பணி செய்வித்தார். (மாடல்கோயில் எ-து கட்டுமலையும் யானைகள் செல்லக்கூடாதிருக்குஞ் சந்நிதியு முடையதாகக் கட்டப்படுவது.)

சோமாசிமாறநாயனர் முத்திபெற்ற தலம்.

பதிகம் - திருஞான. பதிகம் - க.

அதற்கு மேற்கே 1 கடிகை தூரத்தில்,

## 55. திருவம்பர் மாகாளம் எ-து கோயிற்றிருமாகாளம்.

சுவாமியார் - காளகண்டேசுவரர்.
தேவியார் - பக்ஷிநாயகியார்.
தீர்த்தம் - தேவ தீர்த்தம்.

சோமாசிமாறநாயனர் பிறந்து முத்தியடைந்த தலம்.

இப்போது, ஆலயத்தில் நாயனார் யாகஞ்செய்தவிடத்தில் திடாகேசரும் அம்மையாரும் நீசத் திருமேனியுடன் சகடையும் மதுக்குடமுங் கொண்டுவந்தபடியே திருவுருக்கொண் டிருக்கின்றனர்.

பதிகம் - திருஞான. பதிகம்-௩.

அதற்குத் தென்மேற்கே 3 கடிகை தூரத்தில்,

**56.** திருமீயச்சூர்.

சுவாமியார் - திருமுயற்சிநாதர்.

தேவியார் - சௌந்தரிய நாயகியார்.

தீர்த்தம் - கங்காகூபம்

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அத்திருக்கோயில் வடக்குப் பிரகாரத்தில்,

**57.** திருமீயச்சூரிளங்கோயில்.

சுவாமியார் - சகலபுவனேசுவரர்.

தேவியார் - மேகலாம்பிகையார்.

தீர்த்தம் - அமிர்த தீர்த்தம், இது போரளம்.

பதிகம் - திருநாவு. பதிகம்-க.

அதற்குத் தென்மேற்கே 1 கடிகை தூரத்தில்,

**58.** திருத்திலதைப்பதி எ-து கோயிற்பத்து மதிமுத்தம்.

சுவாமியார் - முத்தீசுவரர்.

தேவியார் - பொற்கொடி நாயகியார்.

தீர்த்தம் - சந்திர புஷ்கரணி.

சந்திரன் பூசித்த தலம்.

காசிப்படடணத்தரசர்களிற் சித்தோசி, மகாராஜா தரும்பணஞ் செய்த தலம். அவ்வாச மூர்த்தமு மாலயத்தி லிருக்கின்றது.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்கு வடமேற்கே 3 கடிகை தூரத்தில்,

## 59. திருப்பாம்புரம்.

சுவாமியார் - பாம்பீசுவரர்.

தேவியார் - வண்டார் பூங்குழலியார்.

பதிகம் - திருஞான. பதிகம்-க,

அதற்கு மேற்கே 1 கடிகை தூரத்தில்,

## 60. திருச்சிறுகுடி.

சுவாமியார் - மங்களேசுவரர்.

தேவியார் - மங்கள நாயகியார்.

தீர்த்தம் - சூரிய தீர்த்தம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்குத் தென்மேற்கே 1½ கடிகை தூரத்தில்,

## 61. திருவீழிமிழலை.

சுவாமியார் - வீழியழகீசுவரர்.

தேவியார் - சுந்தராம்பிகையார்.

தீர்த்தம் - விஷ்ணு தீர்த்தம்.

விருக்ஷம் - வீழி.

சிவபெருமான் காத்தியாயன மகாரிஷியின் மகத்திற் றோன்றிய உமாதேவியாகிய பெண்ணைத் திருமணம் புரிந்த கோலத்துட னெழுந்தருளியிருக்கின்றார். இதனாற்

பார்ப்பதி யம்மையாருக்குக் காத்தியாயனி யென
றும் ஒரு திருநாமமு மிருக்கின்றது.

விஷ்ணு நேத்திரார்ப்பணஞ் செய்து சக்கரம் பெற்ற தலம்.

திருஞானசம்பந்தமூர்த்திக ளாலயமும், அப்பர்சுவாமிக
ளாலயமும் வடக்கு வீதியி லிருக்கின்றன.

சிவபெருமான், இவ்விருவர்க்கும் துர்ப்பிக்ஷ காலம் (பஞ்ச
காலம்) நீங்கும்வரையும் பொற்காசு கொடுத்த தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-கரு, திருநாவு. பதிகம்-அ, சுந்தர.
பதிகம்-க, ஆக-உ௪.

அதற்குத் வடமேற்கே 1 கடிகை தூரத்தில்,

## 62. திருவன்னியூர்.

சுவாமியார் - அக்கினீசுவரர்.
தேவியார் - பார்வதியம்மையார்.
தீர்த்தம் - அக்கினி தீர்த்தம்.
பதிகம் - திருநாவு. பதிகம்-க.

அதற்குத் தென்மேற்கே 2 கடிகை தூரத்தில்,

## 63. திருக்கருவிலி.

சுவாமியார் - சற்குணேசுவரர்
தேவியார் - சர்வாங்க நாயகியார்.
பதிகம் - திருநாவு. பதிகம்-க.
அதற்குத் தென்மேற்கே 3 கடிகை தூரத்தில்,

## 64. திருப்பேணுபெருந்துறை ஈ-து திருப்பந்துறை.

சுவாமியார் - சிவானந்த நாதேசுவரர்.
தேவியார் - மலையரசி யம்மையார்.

தீர்த்தம் - சின்மயானந்த தீர்த்தம்.
பதிகம் - திருஞான. பதிகம்-க.
அதற்கு மேற்கே 1½ கடிகை தூரத்தில்,

## 65. திருநறையூர்ச்சித்தீச்சரம்.

சுவாமியார் - சித்தநாதேசுவரர்.
தேவியார் - அழகாம்பிகையார்.
தீர்த்தம் - பிரமதீர்த்தம்.
பதிகம் - திருஞான. பதிகம்-உ, சுந்தர. பதிகம்-க, ஆக்-ந.
அதற்கு வடமேற்கே 1 கடிகை தூரத்தில்,

## 66. திருவரிசோற்கரைப்புத்தூர் ஏ-து அழகார்புத்தூர்-சிறு விலிபுத்தூர்.

சுவாமியார் - படிக்காசளித்த வீசுவரர்.
தேவியார் - அழகம்மையார்.
தீர்த்தம் - வாணசுர தீர்த்தம்.
பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-க, சுந்தர. பதிகம்-க, ஆக - ந.
அதற்கு வடமேற்கே 1 கடிகை தூரத்தில்,

## 67. திருச்சிவபுரம்.

சுவாமியார் - பிரமபுரி நாயகேசுவரர்.
தேவியார் - பெரியநாயகியார்.
தீர்த்தம் - சூரிய தீர்த்தம்.
பதிகம் - திருஞான. பதிகம்-உ, திருநாவு. பதிகம்-க, ஆக-ந.
அதற்குத் தென்மேற்கே 1½ கடிகை தூரத்தில்,

## 68. திருக்கலயநல்லூர் ஏ-து சாய்க்கோட்டை.

சுவாமியார் - அமிர்தகலேசுவரர்.

தேவியார் - அமிர்தவல்லியார்.
தீர்த்தம் - நால்வேத தீர்த்தம்.
பதிகம் - சுந்தர. பதிகம்-க.

அதற்குத் தென்கிழக்கே ½ கடிகை தூரத்தில்,

**69.** திருக்கருக்குடி எ-து மருதாந்தநல்லூர்.
சுவாமியார் - சற்குண லிங்கேசுவரர்.
தேவியார் - சர்வாலங்கார மின்னம்மையார்.
தீர்த்தம் - எமதீர்த்தம்.
பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்குத் தென்கிழக்கே 10 கடிகை தூரத்தில்,

**70.** திருவாஞ்சியம்.
சுவாமியார் - வாஞ்சிலிங்கேசுவரர்.
தேவியார் - மங்களநாயகியார்.
தீர்த்தம் - கூபதீர்த்தம்.
பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-க, சுந்தர. பதிகம்-க, ஆக-௩.

அதற்குக் கிழக்கே 3 கடிகை தூரத்தில்,

**71.** திருநன்னிலத்துப் பெருங்கோயில்.
சுவாமியார் - பிரகாசநாதர்.
தேவியார் - பிரகாச நாயகியார்.
பதிகம் - சுந்தர. பதிகம்-க.

அதற்குக் கிழக்கே ¾ கடிகை தூரத்தில்,

**72.** திருக்கொண்டீச்சரம்.
சுவாமியார் - பசுபதீசுவரர்.

தேவியார் - சாந்தநாயகியார்.

பதிகம் - திருநாவு. பதிகம் - ௨.

அதற்குத் தென்கிழக்கே 1½ கடிகை தூரத்தில்,

## 73. திருப்பனையூர்.

சுவாமியார் - சௌந்தரியநாதர்.

தேவியார் - பெரியநாயகியார்.

தீர்த்தம் - அமிர்த தீர்த்தம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, சுந்தர. பதிகம்-க, ஆக-௨.

அதற்குத் தெற்கே 1½ கடிகை தூரத்தில்,

## 74. திருவிற்குடி.

சுவாமியார் - வீரட்டானேசுவரர்.

தேவியார் - மைவார் குழலி யம்மையார்.

அட்டவீரட்டங்களுள் சலந்தரனைச் சங்காரஞ்செய்த இடம். சந்திரசேகராலயத்திற் சக்கரமிருக்கின்றது.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்கு வடகிழக்கே 3 கடிகை தூரத்தில்,

## 75. திருப்புகலூர்.

சுவாமியார் - (கோணப்பிரானாகிய) அக்கினீசுவரர்.

தேவியார் - கருந்தார்குழ லம்மையார்.

தீர்த்தம் - அக்கினி தீர்த்தம்.

அப்பர் சுவாமிகள் சித்திரையீ சதயத்தில், "இங்கமே யுன்னடிக்கே போதுகின்றேன்" என்று திருத்தாண்டகத்திலே சிவபெருமானைப் பாடி மகாலிங்கத்தி லயிக்கியமான தலம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குச் செங்கல்லைப் பொன்னாக்கிக் கொடுத்த தலம்.

முருகநாயனார் திருவவதாரஞ் செய்த தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-உ, திருநாவு. பதிகம்-ரு, சுந்தர. பதிகம்-க, ஆக-அ.

அந்த ஆலயத்தின் வடபுறம்,

**76.** திருப்புகலூர் வர்த்தமானேச்சரம்.

சுவாமியார் - வர்த்தமானேசுவரர்.

தேவியார் - கருந்தார்குழ லம்மையார்.

தீர்த்தம் - அக்கினி தீர்த்தம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்குத் தெற்கே 1 கடிகை தூரத்தில்

**77.** திருவிராமனதீச்சரம்.

சுவாமியார் - இராமலிங்கேசுவரர்.

தேவியார் - சருவார்குழ லம்மையார்.

தீர்த்தம் - மணிகங்கை.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்குத் தெற்கே 1½ கடிகை தூரத்தில்,

**78.** திருப்பயற்றூர்.

சுவாமியார் - திருப்பயற்றீசுவரர்.

தேவியார் - காவியங்கண்ணம்மையார்.

பதிகம் - திருநாவு. பதிகம்-க.

அதற்கு வடகிழக்கே 3 கடிகை தூரத்தில்,

**79.** திருச்சேங்காட்டங்குடி எ-து கணபதீச்சரம்.

சுவாமியார் - கணபதீசுவரர்.

தேவியார் - திருக்குழன்மா தம்மையார்.

தீர்த்தம் - சத்தி தீர்த்தம்.

விருக்ஷம் - திருவாத்தி.

விநாயகக்கடவுள் பூசித்த தலம்.

சிவபெருமான் உட்சமயம் ஆறிலொன்றாகிய வயிரவ வேடங்கொண்டு சிறுத்தொண்ட நாயனாது பிள்ளைக்கறி யமுதைப் படைக்கச்செய்து, பின்னர் அப்பிள்ளையை யெழுப்பி இடபவாகனரூடரா யெழுந்தருளிக் காட்சி கொடுத்த தலம். அந்த மூர்த்திக்கு உருத்திராபதி யென்றோர் நாமமுண்டு.

பதிகம் - திருஞான. பதிகம்-உ, திருநாவு. பதிகம்-க, ஆக-ந.

அதற்கு வடகிழக்கே 1 கடிகை தூரத்தில்,

**80.** திருமருகல்.

சுவாமியார் - மாணிக்கவண்ணேசுவரர்.

தேவியார் - வண்டுவார்குழ லம்மையார்.

திருஞான சம்பந்தமூர்த்திநாயனார் ஒரு செட்டிப் பிள்ளைக்கு விடந்தீர்ந்த தலம்.

தீர்த்தம் - சிவகங்கை.

விருக்ஷம் - வன்னி.

பதிகம் - திருஞான. பதிகம்-உ, திருநாவு. பதிகம்-க, ஆக-ந.

அதற்கு வடகிழக்கே 1 கடிகை தூரத்தில்,

**81.** திருச்சாத்தமங்கை எ-து கோயிற்றிருசாத்தமங்கை.

சுவாமியார் - மாதீசுவரர்.

தேவியார் - தையலம்பிகையார்.
தீர்த்தம் - பிரமதீர்த்தம்.
பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்குத் தென்கிழக்கே 11 கடிகை தூரத்தில்,

**82. திருநாகைக்காரோணம் எ-து நாகபட்டணம்.**

சுவாமியார் - ஆதிபுராணேசுவரர்.
தேவியார் - நீலாயதாக்ஷி யம்மையார்.

தீர்த்தங்கள்-தேவதீர்த்தம், சர்வதீர்த்தம், புண்டரிகதீர்த்தம், அக்கினிதீர்த்தமாகிய காகதீர்த்தம், பிரமதீர்த்தம், முனிதீர்த்தம், வச்சிரதீர்த்தம் முதலியன.

இதுவும் சப்தவிடங்க தலத்திலொன்று. சுந்தரவிடங்கத்தியாகர்.

நடனம் - அலைபோனடனம்.

புண்டரீக மஹாரிஷியானவர் காசியிலிருந்து காமக்கோட்டி பீடமாகிய காஞ்சீபுரத்திலும், கும்பகோணத்திலும் மூன்று காரோணப் பிரதிட்டை செய்து பூசையாற்றி, கூசது வருடமுஞ் சென்று தாம் கினைத்தது முடிவுறாது மயங்குங்காலையில், கண்ணுவ முனிவர் தோன்றி யருள்செய்த பிரகாரம் வந்து தேவதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து மேலைக்காரோணம் பிரதிட்டைசெய்து பூசித்து ஆதிபுராணேசுவரரைத் தரிசித்து வருங்காலையில், சிவபெருமான் இரண்டுதரங் காட்சிகொடுத்து மூன்றாந்தரத்தி லவ்வாதி புராண லிங்கத்தில், காயத்துடன் அம்மஹாரிஷியை ஆரோகணஞ் செய்துகொண்டார். அது முதல் ஆதிபுராணேசுவரருக்கு காயாரோகணேசுவரரென்று திருநாம முண்டாயிற்று.

விருக்ஷம் - மா.

அதிபத்த நாயனார் முத்திபெற்ற தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-உ, திருநாவு. பதிகம்-ச, சுந்தர. பதிகம்-க, ஆக-எ.

அதற்கு மேற்கே $1\frac{1}{2}$ கடிகை தூரத்தில்,

83. திருச்சிக்கல்.

சுவாமியார் - நவநீதேசுவரர்.

தேவியார் - வேனெடுங்கண்ணியம்மையார்.

தீர்த்தம் - பாற்குளம்.

விருக்ஷம் - குடசமல்லிகை.

வசிட்டர் காமதேனு முதலியோர் பூசித்த தலம்.

சிங்காரவேலவர் சூரனைச் சங்காரஞ்செய்த விடமென்றுஞ் சொல்லுவார்கள். இப்போதும் கந்தசஷ்டி உற்சவம் வெகு மேம்பாட்டுட னடக்கின்றது.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்கு மேற்கே $3\frac{1}{2}$ கடிகை தூரத்தில்,

84. திருக்கீழ்வேளூர்.

சுவாமியார் - அக்ஷயலிங்கேசுவரர்.

தேவியார் - வனமுலைநாயகியம்மையார்.

தீர்த்தம் - சிவஞானதீர்த்தம்.

விருக்ஷம் - இலந்தை.

அகஸ்திய மகாமுனிவருக்கு வலது திருவடி தரிசனங் காட்டியருளிய பொநாயகமூர்த்த மங்குள்ளது.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-க, ஆக-உ.

அதற்குத் தெற்கே 2 கடிகை தூரத்தில்,

**85.** திருத்தேவூர்.

சுவாமியார் - தேவபுரீசர்.
தேவியார் - மதுரபாஷிணியம்மையார்.
தீர்த்தம் - தேவதீர்த்தம்.
விருக்ஷம் - வாழை.
பதிகம் - திருஞான. பதிகம்-உ.

அதற்கு வடமேற்கே 6 கடிகை தூரத்தில்,

**86.** திருப்பள்ளியின்முக்கூடல்.

சுவாமியார் - முக்கோணநாதர்.
தேவியார் - மைமேவுகண்ணியம்மையார்.
பதிகம் - திருநாவு. பதிகம்-க.

அதற்குத் தென்மேற்கே 2 கடிகை தூரத்தில்,

**87.** திருவாரூரரநெறி.

சுவாமியார் - அகிலேசுவரர்.
தேவியார் - புவனேஸ்வரியம்மையார்.
பதிகம் - திருநாவு. பதிகம்-உ.

அவ்வாலய வடமேற்கில்,

**88.** திருவாரூர் மூலட்டாணம்.

சுவாமியார் - வன்மீகநாதர்.
தேவியார் - அல்லியங்கோதையம்மையார்.
தீர்த்தங்கள் - கமலாலய தீர்த்தம், சங்கு தீர்த்தம்.
விருக்ஷம் - பாதிரி.

மனுச்சக்கரவர்த்திக் கனுக்கிரகம்பண்ணின ஸ்தலம்.

சிவபெருமான் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் திருத்தொண்டத்தொகை பாடும்பொருட்டுத் "தில்லைவா"

பூந்தணார்த மடியார்க்கு மடியேன்'' என்றடியெடுத் துக்கொடுத்தும், பரவைநாச்சியார் ஊடல் தீரப் பாதி யிரவிற் தூதுசென்றும், ஆட்கொண்ட தலம்.

இலக்குமி பூசித்து மங்கிலியம் பெற்ற தலம்.

இதுவும் சப்தவிடங்க ஸ்தலத்துளொன்று. வீதிவிடங்கர். நடனம் - அபசாநடனம்.

பதிகம் - திருஞான. பதிகம்-௫, திருநாவு. பதிகம்-உ௪, சுந்தர. பதிகம்-அ, ஆக-௩௭.

அந்த ஆலயத்தின் மகாரத நிலைக்குச் சமீபமாகத் தென் மேற்கில்,

**89.** பரவையுண்மண்டளி எ-து துலாநயினார்கோயில்.

சுவாமியார் - பரவையுண்மண்டலேசுவரர்.

தேவியார் - பஞ்சின்மெல்லடியம்மையார்.

சுந்தரமூர்த்திசுவாமிகளுக்குக் கண்கொடுத்த தலம்.

பதிகம் - சுந்தரர். பதிகம்-க.

அதற்கு மேற்கே 1½ கடிகை தூரத்தில்,

**90.** திருவிளமர்.

சுவாமியார் - பதஞ்சலி மனோகரேசுவரர்.

தேவியார் - யாழின்மொழி யம்மையார்.

தீர்த்தம் - அக்கினிதீர்த்தம்.

இதிற் பதஞ்சலி வியாக்கிரபாத ரிருக்கின்றார்கள்.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்கு வடமேற்கே 3 கடிகை தூரத்தில்,

91. திருக்கரவீரம் எ-து கரையபுரம்.

சுவாமியார் - கரவீரேசுவரர்.
தேவியார் - பிரத்தியக்ஷ மின்னம்மையார்.
தீர்த்தம் - பிரமதீர்த்தம்.
பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்கு வடமேற்கே முக்காற் கடிகை தூரத்தில்,

92. திருப்பெருவேளூர் எ-து காட்டூரையன்பேட்டை.

சுவாமியார் - பிரியாவீசுவரர்.
தேவியார் - மின்னனைய வம்மையார்.
தீர்த்தம் - மூஷிகதீர்த்தம்.
பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்கு மேற்கே 2½ கடிகை தூரத்தில்,

93. திருத்தலையாலங்காடு.

சுவாமியார் - ஆடவல்லவீசுவரர்.
தேவியார் - திருமடந்தை நாயகியார்.
தீர்த்தம் - சங்க தீர்த்தம்.
பதிகம் - திருநாவு. பதிகம்-க.

அதற்கு மேற்கே 3½ கடிகை தூரத்தில்,

94. திருக்குடவாயில்.

சுவாமியார் - கோணேசுவரர்.
தேவியார் - பெரிய நாயகியார்.
தீர்த்தம் - அமிர்த தீர்த்தம்.
பதிகம் - திருஞான. பதிகம்-உ.

அதற்கு வடமேற்கே 1 கடிகை தூரத்தி...,

95. திருச்சேறை எ-து உடையார்கோவில்.

சுவாமியார் - சந்நிதியப்பர்.
தேவியார் - ஞானவல்லியார்.
தீர்த்தம் - மார்க்கண்ட தீர்த்தம்.
பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-உ, ஆக-௩.;
அதற்குத் தென்கிழக்கே 1 கடிகை தூரத்தில்,

96. திருநாலூர் மயானம் எ-து நாத்தூர்.

சுவாமியார் - பல்லவனேசுவரர்.
தேவியார் - பெரியாம்பிகையார்.
தீர்த்தம் - சந்திர தீர்த்தம்.
பதிகம் - நாலூர் வேறு, மயானம் வேறு; இரண்டுக்கும் திரு ஞான. பதிகம்-க.
அதற்குத் தென்மேற்கே 3 கடிகை தூரத்தில்,

97. திருக்கடுவாய்க்கரைப்புத்தூர்.

சுவாமியார் - சொன்னபுரீசுவரர்.
தேவியார் - சிவாம்பிகையார்.
பதிகம் - திருநாவு. பதிகம்-க.
அதற்குத் தெற்கே 2 கடிகை தூ

98. திருவிரும்பூளை எ-து ஆலங்குடி.

சுவாமியார் - காசி யாரண்ணியேசுவரர்.
தேவியார் - ஏலவார்குழலி யம்மையார்.
தீர்த்தம் - அமிர்தப்பொய்கை.
பதிகம் - திருஞான. பதிகம்-க.
அதற்கு மேற்கே 3 கடிகை தூரத்தில்,

99. திருவரதைப்பெரும்பாளி எ-து அரித்துவாரமங்கலம்.

சுவாமியார் - பாதாளேசுவரர்.

தேவியார் - அலங்காரநாயகியார்.

தீர்த்தம் - பிரமதீர்த்தம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்கு மேற்கே 1 கடிகை தூரத்தில்,

100. திருவவளிவணல்லூர்.

சுவாமியார் - சாக்ஷிநாயகேசுவரர்.

தேவியார் - சௌந்தர நாயகியார்.

குருக்கள் பெண்ணுக்குச் சாட்சி சொன்ன இடபாரூட மூர்த்த மிருக்கின்றது.

தீர்த்தம் - சந்திர புஷ்கரணி.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-க, ஆக-உ.

அதற்குத் தென்மேற்கே 7½ கடிகை தூரத்தில்,

101. திருப்பரிதிநியமம் எ-து பரிதியப்பர் கோயில்.

சுவாமியார் - பரிதியப்பவீசுவரர்.

தேவியார் - மங்கள நாயகியார்.

தீர்த்தம் - சூரிய தீர்த்தம்.

சூரியன் பூசித்த தலம்.

பதிகம் - திருஞான. பதிகம் - க.

அதற்கு வடகிழக்கே 8 கடிகை தூரத்தில்,

102. திருவெண்ணியூர் எ-து கோவில்வெண்ணி.

சுவாமியார் - வெண்ணி நாயகேசுவரர்.

தேவியார் - அழகிய நாயகியம்மையார்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-உ, ஆக-௩.

அதற்குத் தென்கிழக்கே 3 கடிகை தூரத்தில்,

**103.** திருப்பூவனூர்.

சுவாமியார் - புஷ்பவனேசுவரர்.

தேவியார் - கற்பகவல்லியார்.

தீர்த்தம் - கருங்குழி தீர்த்தம்.

பதிகம் - திருநாவு. பதிகம்-க.

அதற்குத் தென்கிழக்கே 4 கடிகை தூரத்தில்,

**104.** திருப்பாதாளேச்சரம் எ-து பாம்பணி.

சுவாமியார் - சர்ப்பபுரேசுவரர்.

தேவியார் - அமிர்த நாயகியார்.

தீர்த்தம் - நாக தீர்த்தம்; இது, மன்னார்கோவிலுக்கு வடக்கே 1½ கடிகையி லிருக்கின்றது. இத்தலத்தினது பெயரினாற்றான் அவ்வாற்றுக்குப் பாம்பணியென்று பெயரிருக்கிறதாக ஐதீகம்.

பதிகம் - திருஞான. பதிகம் - க.

அதற்குத் தென்கிழக்கே 10 கடிகை தூரத்தில்,

**105.** திருக்களர்.

சுவாமியார் - களர்முளையீசுவரர்.

தேவியார் - அழகேசுவரியார்.

தீர்த்தம் - துருவாச தீர்த்தம்.

துருவாச மஹாரிஷிக்கு நடனதரிசனங் கொடுத்த நடேசமூர்த்தமும் அவ்விருடி மூர்த்தமு மாலயத்தி லிருக்கின்றன.

பதிகம் - திருஞான. பதிகம் - க.

அதற்குத் தென்கிழக்கே 2 கடிகை தூரத்தில்,

**106.** திருச்சிற்றேமம் எ - து எழிலூர்நேமம்.

சுவாமியார் - பொன்வைத்த நாயகர்.

தேவியார் - அகிலாண்ட நாயகியார்.

தீர்த்தம் - சொர்ன தீர்த்தம்.

பதிகம் - திருஞான. பதிகம் - க.

அதற்குத் தென்மேற்கே 10 கடிகை தூரத்தில்,

**107.** திருவுசாத்தனம் எ - து திருக்கோயிலூர்.

சுவாமியார் - மந்தரபுரீசுவரர்.

தேவியார் - பெரியநாயகியார்.

தீர்த்தம் - நின்மலதீர்த்தம்; இது, முத்துப்பேட்டைக்கு வடக்கே $1\frac{1}{2}$ கடிகை தூரத்தி லிருக்கின்றது.

பதிகம் - திருஞான. பதிகம் - க.

அதற்குத் தென்கிழக்கே $7\frac{1}{2}$ கடிகை தூரத்தில்,

**108.** திருவிடேம்பாவனம்.

சுவாமியார் - சற்குணநாதேசுவரர்.

தேவியார் - மங்கலநாயகியார்.

தீர்த்தம் - குசுமதீர்த்தம்.

பதிகம் - திருஞான. பதிகம் - க.

அதற்குக் கிழக்கே $\frac{3}{4}$ கடிகை தூரத்தில்,

**109.** திருக்கடிக்குளம் எ - து கற்பகனூர்கோயில்.

சுவாமியார் - கற்பகேசுவரர்.

தேவியார் - சவுந்தரநாயகியார்.
பதிகம் - திருஞான. பதிகம் - க.

அதற்கு வடகிழக்கே 10 கடிகை தூரத்தில்,

**110.** திருத்தண்டலைநீணெறி.

சுவாமியார் - நீணெறிநாதர்.
தேவியார் - ஞானம்பிகையார்.
தீர்த்தம் - ஓமகதீர்த்தம்.

இதற்கு ½ கடிகையிலே யிருக்கும் கணமங்கலத்திலே திருவவதாரஞ்செய்த தாயனாரென்னும் நாயனார், சிவபெருமானுக்குத் தாம் நிவேதிக்கக் கொண்டுவந்த செந்நெலரிசி மாவடு செங்கீரை என்னு மிவை கமரிற் சிந்தக்கண்டு பதைத்து அரிவாளைக் கழுத்திற் பூட்டி யூட்டியை யரிந்து உடனே சிவபெருமானுடைய திருவருளைப்பெற்று அரிவாட்டாயனா ரென்னும் காரணப் பெயரையும் பெற்று முத்தியடைந்த தலம். இப்போதும் அவ்விடங் கமரா யிருக்கின்றது. இத்தலத்தில் மாவடுநிவேதனம் விசேடம்.

பதிகம் - திருஞான. பதிகம் - க.

அதற்கு மேற்கே 5 கடிகை தூரத்தில்,

**111.** திருக்கோட்டூர்.

சுவாமியார் - கொழுந்தீசுவரர்.
தேவியார் - மதுரவசனாம்பிகையார்.
தீர்த்தம் - அமிர்த தீர்த்தம்.
பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்கு மேற்கே 7½ கடிகை தூரத்தில்,

**112.** திருவெண்டுறை.

சுவாமியார் - வெண்டுறை நாதேசுவரர்.

தேவியார் - வேனெடுங்கணம்மையார்.

தீர்த்தம் - அகத்திய தீர்த்தம்.

பதிகம் - திருஞான. பதிகம் - க.

அதற்கு வடகிழக்கே ¼ கடிகை தூரத்தில்,

**113.** திருக்கொள்ளம்பூதூர் எ-து செல்லூர் அல்லது திருக்களம்பூர்.

சுவாமியார் - வில்வவனேசுவரர்.

தேவியார் - சவுந்தரியம்மையார்.

தீர்த்தம் - பிரமதீர்த்தம்.

விருக்ஷம் - வில்வம்.

ஐப்பசி௴ அமாவாசையில் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளுக்கு நம்பனுரென்கின்ற சுவாமி ஓடம் விட்டு வெட்டாறு கரையேற்றி இடபாரூடராய்க் காட்சி கொடுத்த தலம்.

பதிகம் - திருஞான. பதிகம் - க.

அதற்குத் தென்கிழக்கே 10 கடிகை தூரத்தில்,

**114.** திருப்பேரெயில் எ-து ஓகைப்பேரெயில்.

சுவாமியார் - சகதீசுரர்.

தேவியார் - பெண்ணமிர்தநாயகியார்.

தீர்த்தம் - அக்கினி தீர்த்தம்.

பதிகம் - திருநாவு. பதிகம் - க.

அதற்குத் தெற்கே 3 கடிகை தூரத்தில்,

**115.** திருக்கோள்ளிக்காடு.

*சுவாமியார் - தீவண்ணநாதர்.*

*தேவியார் - பஞ்சின்மெல்லடியம்மையார்.*

*பதிகம் - திருஞான. பதிகம் - க.*

*அதற்குக் கிழக்கே ¼ கடிகை தூரத்தில்,*

**116.** திருத்தங்கூர்.

*சுவாமியார் - வெள்ளிமலையப்பர்.*

*தேவியார் - பெரியநாயகியார்.*

*தீர்த்தம் - சிவகங்கை.*

*பதிகம் - திருஞான. பதிகம் - க.*

*அதற்கு வடகிழக்கே ½ கடிகை தூரத்தில்,*

**117.** திருநெல்லிக்கா.

*சுவாமியார் - நெல்லிவனேசுவரர்.*

*தேவியார் - மங்களேசுவரியார்.*

*தீர்த்தம் - பிரமதீர்த்தம்.*

*பதிகம் - திருஞான. பதிகம் - க.*

*அதற்கு வடக்கே 3 கடிகை தூரத்தில்,*

**118.** திருநாட்டியத்தான்குடி.

*சுவாமியார் - கரிநாதேசுவரர்.*

*தேவியார் - மலர்மங்கை யம்மையார்.*

*தீர்த்தம் - சூரிய தீர்த்தம்.*

*பதிகம் - சுந்தர. பதிகம் - க.*

*அதற்குத் தென்கிழக்கே 4 கடிகை தூரத்தில்,*

**119.** திருக்காருயல் எ-து திருக்காறைவாயில்.

சுவாமியார் - கண்ணாயிரநாதர்.

தேவியார் - கைலாயநாயகியார்.

இதுவும் சப்தவிடங்க ஸ்தலத்தி லொன்று. ஆதிவிடங்கர்.

நடனம் - குக்குடநடனம்.

தீர்த்தம் - பிரமதீர்த்தம்.

பதிகம் - திருஞான. பதிகம் - க.

அதற்குக் கிழக்கே 2 கடிகை தூரத்தில்,

**120.** திருக்கன்றுப்பூர்.

சுவாமியார் - நடுதறியப்பர்.

தேவியார் - மாதுநாயகியார்.

ஒரு பிராமணப் பெண்ணுக்காக நடுத்தறியிற் சுவாமி தோற்றிய தலம்.

தீர்த்தம் - ஞானதீர்த்தம்.

பதிகம் - திருநாவு. பதிகம் - க.

அதற்குத் தெற்கே $1\frac{1}{2}$ கடிகை தூரத்தில்,

**121.** திருவலிவலம்.

சுவாமியார் - மனத்துணைநாதர்.

தேவியார் - வாளையங்கணம்மையார்.

தீர்த்தம் - சக்கரதீர்த்தம்.

பதிகம் - திருஞான. பதிகம்-உ, திருநாவு. பதிகம்-க, சுந்தர. பதிகம்-க, ஆக-ச.

அதற்குத் தென்மேற்கே 2 கடிகை தூரத்தில்,

**122.** திருக்கச்சினம்.

சுவாமியார் - கச்சிநாயகேசுவரர்.

தேவியார் - வெள்ளைநாயகியார்.
தீர்த்தம் - இந்திர தீர்த்தம்.
பதிகம் - திருஞான. பதிகம் - க.
அதற்குக் கிழக்கே 3 கடிகை தூரத்தில்,

## 123. திருக்கோளிலி எ-து திருக்குவளை.

சுவாமியார் - கோளிலிநாதர்.
தேவியார் - வண்டமர் பூங்குழலம்மையார்.
இதுவும் சப்தவிடங்கஸ்தலத்திலொன்று. அவனிவிடங்கர்.
நடனம் - வண்டு நடனம்.
தீர்த்தம் - பிரமதீர்த்தம்.

பரவைநாச்சியாருக்காகக் குன்றையூர்க் கிழாரிடத்தில் வாங்கிய நெற்களைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் கேட்டுக்கொண்டபடி சிவபெருமான் பூதங்களைக்கொண்டு திருவாரூரிற் சேர்ப்பித்த தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம் உ, சுந்தர. பதிகம்-க, ஆக-சு.
அதற்குத் தென்கிழக்கே 2½ கடிகை தூரத்தில்,

## 124. திருத்தேன்றிருவாய்மூர்.

சுவாமியார் - வாய்மூரடிகளீசுவரர்.
தேவியார் - பாலினு நன்மொழி யம்மையார்.
தீர்த்தம் - சூரிய தீர்த்தம்.
நடனம் - கமலநடனம்.

இதுவும் சப்தவிடங்க ஸ்தலத்திலொன்று. நீலவிடங்கர்.
திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் பாடியருளத் திருநாவுக்கரசு சுவாமிகளுக்குச் சிவபெருமான் தரிசனங் கொடுக்க ஸ்தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம் - உ, ஆக-ங.
அதற்குத் தென்கிழக்கே 17½ கடிகை தூரத்தில்,

## 125. திருமறைக்காடு என்று வேதாரணியம்.

சுவாமியார் - மறைக்காட்டீசுவரர்.
தேவியார் - யாழைப் பழிமொழி யம்மையார்.
நடனம் - அமிர்தநடனம்.
இதுவும் சப்தவிடங்க ஸ்தலத்தி லொன்று. புவனி விடங்கர்.
விருக்ஷம் - வன்னி.
தீர்த்தங்கள் - மணிகர்ணிகை, வேதநதி.
வேதம் பூசித்த தலம்.
மறையாற் றிருக்காப்புச் செய்யப்பட்ட திருக்கதவைத் திருநாவுக்கரசு சுவாமிகளும், திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளும், திறக்கவும் அடைக்கவும் பாடியருளிய தலம்.
பதிகங்கள் - திருப்பதிகக்கோவையிற் றொகை பதிகம்-கக. திருஞான. பதிகம்-ச, திருநாவு. பதிகம்-கு, சுந்தர. பதிகம்-க, ஆக-க0. இன்னுமொரு பதிகம் மதிக்கப்படவில்லை.
அதற்குத் தெற்கே 1 கடிகை தூரத்தில்,

## 126. திரு அகத்தியான்பள்ளி.

சுவாமியார் - அகத்தீசுவரர்.
தேவியார் - மங்கைநாயகியார், பாகம்பிரியாள்.
தீர்த்தம் - அக்கினி தீர்த்தம்.
அகஸ்திய மஹாமுனிவர் பூசித்த தலம்.
பதிகம் - திருஞான. பதிகம்-க.
அதற்குத் தெற்கே 5 கடிகை தூரத்தில்,

**127.** திருக்கோடிக்குழகர் எ-து குழகர் கோயில்.

சுவாமியார் - அமிர்தகடேசுவரர்.
தேவியார் - மையார் தடங்கணம்மையார்.
தீர்த்தம் - அமிர்த தீர்த்தம்.
பதிகம் - சுந்தர. பதிகம்-க.

காவேரியின் தென்கரையிலுள்ள
க்ஷேத்திரங்கள் 127.
ஆக சோழநாட்டிலுள்ள க்ஷேத்திரங்கள் 190.
திருச்சிற்றம்பலம்.

---

## ஈழநாட்டிலுள்ள க்ஷேத்திரங்கள்.

**1.** திருக்கோணமலை.

சுவாமியார் - கோணேசுவரர்.
தேவியார் - மாதுமை யம்மையார்.
இது, கைலாசத்தினது கொடுமுடிகளில் ஒன்று.
பதிகம் - திருஞான. பதிகம் - க.

**2.** திருக்கேதீச்சரம்.

சுவாமியார் - கேதீசுவரர்.
தேவியார் - கௌரியம்பிகையார்.
தீர்த்தம் - கௌரி தீர்த்தம்.
பதிகம் - திருஞான. பதிகம்-க, சுந்தர. பதிகம்-க, ஆக-உ.

ஆக ஈழநாட்டிலுள்ள க்ஷேத்திரங்கள் 2.
திருச்சிற்றம்பலம்.

## பாண்டிநாட்டிலுள்ள க்ஷேத்திரங்கள்.

1. திருவாலவாய் எ - து மதுரை.

சுவாமியார் - சொக்கநாதேசுவரர்.

தேவியார் - மீனாக்ஷியம்மையார்.

இது மதுராமாநகர், சமட்டி விச்சாபுரம், நான்மாடக்கூடல், திருவாலவாய், கடம்பவனம், துவாதசாந்த ஸ்தலம் எனப் பல நாமங்களை யுடையது.

அச் சொக்கலிங்கமூர்த்திக்குக் கற்பூரசுந்தரர், கலியாணசுந்தரர், மீனாக்ஷிசுந்தரர், சண்பகசுந்தரர், கடம்பவனசுந்தரர், பழியஞ்சிய சுந்தரர், ஆலவாய்ச்சுந்தரர், சோமசுந்தர ரெனப் பல திருநாமங்கள் உண்டு.

தீர்த்தங்கள் - பொற்றாமரை, எழுகடல், வைகை முதலியன.

விருக்ஷம் - கடம்பு.

அந்தக் கடவுள், அத்தலம் புரக்கும் பாண்டியர்களை வழியடிமை கொண்டதுமன்றிக் கைலாயத்தி லிருந்து பிரதம கணங்களுடன் வந்து ராஜ ராஜேசுவரியாகிய தடாதகைப் பிராட்டியாரைத் திருமணஞ்செய்து அச் செங்கோலைத் தாங்கிச் சோமசுந்தர பாண்டியனெனத் திருப்பெயர் பூண்டு அரசு செய்தும், வெள்ளியம்பலத்தாடியும், எழுகடலழைத்தும், எல்லாம்வல்ல சித்தராய்வந்து கல்லானைக்குக் கரும்பூட்டியும், மாணிக்கம்-விறகு-வளையல் விற்றும், வரகுண பாண்டியனுக்குச் சிவலோகங் காட்டியும், கான்மாறி நடித்தும், வேதத்திற்குப் பொருளுரைத்தும், பிட்டுக்கு மண் சுமந்து பாண்டியன் கைப்பிரம்படி பட்டும், நரியைப் பரியாக்கியும், பரியை நரியாக்கியும், இவை முதலிய

அறுபத்து நான்கு திருவிளையாடல் செய்தருளிய தலம்.

நெடுமாற நாயனார், குலச்சிறை நாயனார், மங்கையர்க் கரசியார் ஆகிய இவர்கள் சிவபெருமானை வழிபட்டுச் சைவப் பயிரை வளர்த்த ஸ்தலம்.

திருஞானசம்பந்த சுவாமிகள் சமணரைக் கழுவேற்றிய ஸ்தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-கூ, திருநாவு. பதிகம்-உ, ஆக-கக.

அதற்கு வடக்கே 1 கடிகை தூரத்தில்,

## 2. திருவாப்பனூர் எ-அ திருவாப்புடையார் கோயில்.

சுவாமியார் - ஆப்பனூரப்பேசுவரர்.

தேவியார் - அம்பிகை யம்மையார்.

இராஜாவின் மந்திரிக்காக ஆப்புச் சிவலிங்கமான ஸ்தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்குத் தென்மேற்கே 4 கடிகை தூரத்தில்,

## 3. திருப்பரங்குன்றம்.

சுவாமியார் - பரங்கிரிநாயகேசுவரர்.

தேவியார் - ஆவிடை நாயகியார்.

சுப்பிரமணியக் கடவுள் தெய்வயானை அம்மையாரைத் திருமணஞ் செய்த ஸ்தலம்.

தீர்த்தம் - சரவணப்பொய்கை.

பதிகம் - திருஞான. பதிகம்-க, சுந்தர. பதிகம்-க, ஆக-உ.

அதற்கு வடமேற்கே 8 கடிகை தூரத்தில்.

4. திருவேடகம்.

சுவாமியார் - ஏடகநாதேசுவரர்.

தேவியார் - மாதேவியம்மையார்.

தீர்த்தம் - வேகவதி.

திருஞானசம்பந்த சுவாமிகள், சமணருடன் செய்த வாதில் வைகையில் விட்ட திருப்பாசுரவேடு எதிரேறி வெளிப்பட்ட தலம்.

பதிகம் - திருஞான. பதிகம் - க.

அதற்கு வடகிழக்கே 30 கடிகை தூரத்தில்,

5. திருக்கோடுங்குன்றம் என-து பிரான்மலை.

சுவாமியார் - கொடுங்குன்றீசுவரர்.

தேவியார் - குயிலமிர்த நாயகியார், மங்கை நாயகியார்.

கோலம் - மணவாளக்கோலம்.

தீர்த்தம் - சுந்தர தீர்த்தம்.

விருக்ஷம் - பேர் மதிக்கப்படவில்லை.

கார்த்திகைமீ கார்த்திகை நக்ஷத்திரத்திற் பருவத வுச்சியிற் றீப தரிசனம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்குத் தென்கிழக்கே 15 கடிகை தூரத்தில்,

6. திருப்புத்தூர்.

சுவாமியார் - புத்தூரீசுவரர்.

தேவியார் - சிவகாமியம்மையார்.

தீர்த்தங்கள் - கருட தீர்த்தம், சீதளி தீர்த்தம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-க, ஆக-உ.

அதற்குத் தென்கிழக்கே 37 கடிகை தூரத்தில்,

7. திருப்புனவாயில்.

சுவாமியார் - பழம்பதிநாதேசுவரர்.
தேவியார் - கருணைநாயகியார்.
தீர்த்தம் - கருணாநதி.
பதிகம் - திருஞான. பதிகம்-க, சுந்தர. பதிகம்-க, ஆக-உ.

அதற்குத் தென்கிழக்கே 44 கடிகை தூரத்தில்,

8. திருவிராமேச்சுரம்.

சுவாமியார் - இராமலிங்கேசுவரர்.
தேவியார் - பருவதவர்த்தனி யம்மையார்.
தீர்த்தங்கள் - தனுக்கோடி முதலாக (சுஉ) உள்ளன.

இராமஸ்வாமி, இராவணன் முதலியோரைக் கொன்ற பிரமஹத்தி நீங்க இராமலிங்கப் பிரதிட்டை செய்து சிவபிரானது திருவருட் பெற்ற ஸ்தலம். ஆதலால், அத்தலத்துக்கும் அங்குள்ள சிவலிங்கப் பெருமானுக்கும் அவ்விராமன் பெயர் முதலினதாயிற்று.

பதிகம் - திருஞான. பதிகம்-உ, திருநாவு. பதிகம்-க, ஆக-ங.

அதற்கு வடமேற்கே 45 கடிகை தூரத்தில்,

9. திருவாடானை.

சுவாமியார் - ஆடானைநாதர். (ஆதிரத்தினேசுரர் எனவும் வழங்குகின்றது.)

தேவியார் - அம்பாயிரவல்லியார்.
ஆடு பூசித்த தலம்.
பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்கு மேற்கே 20 கடிகை தூரத்தில்,

**10.** திருக்கானப்பேர் எ-து காளையார்கோயில்.

சுவாமியார் - காளையீசுவரர்.

தேவியார் - மஹாமாயியம்மையார்.

தீர்த்தங்கள் - பொன்விம்பமிராசாவான தீர்த்தம், புட்பவன தீர்த்தம், யானைமடுவென்னுந் தீர்த்தம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, சுந்தர. பதிகம்-க, ஆக-உ.

அதற்கு மேற்கே 19 கடிகை தூரத்தில்,

**11.** திருப்பூவணம்.

சுவாமியார் - பூவணநாதேசுவரர்.

தேவியார் - மின்னம்பிகையார்.

தீர்த்தம் - வையை.

சொக்கலிங்கமூர்த்தி பொன்னனையாளென்னும் உருத்திர கணிகைக்கு இரசவாதஞ்செய்து கொடுக்க, அப் பொன்னாலய திருவுருவைக் கண்ட அப்பெண் அச் சோ அழகென்று வலது கபோலத்தைக் கிள்ளி முத்தமிட்டாள். அக்கிள் இன்னமு மிருக்கின்ற தினாலம்மூர்த்தத்துக்கு 'அச்சோ அழகிய பிரான்' என்று திருநாமமுண்டு.

பதிகம் - திருஞான. பதிகம்-உ, திருநாவு. பதிகம்-க, சுந்தர. பதிகம்-க, ஆக-ச.

அதற்குத் தென்மேற்கே 15 கடிகை தூரத்தில்,

**12.** திருச்சுழியல்.

சுவாமியார் - திருமேனிநாதேசுவரர்.

தேவியார் - துணைமாலையம்பிகையார்.

தீர்த்தம் - பிரளயதீர்த்தம்.

பதிகம் - சுந்தர. பதிகம்-க.

அதற்குத் தென்மேற்கே 100 கடிகை தூரத்தில்,

## 13. திருக்குற்றாலம்.

சுவாமியார் - குறும்பலாவீசுவரர்.

தேவியார் - குழல்வாய் மொழியம்மையார்.

தீர்த்தம் - சித்திராநதி.

சிவசொரூபமாகிய குறும்பலாவையுஞ் சித்திர சபையையு முடைய தலம்.

அகஸ்திய மகாமுனிவர் கைலாயத்திலிருந்து பொதியா சலத்துக் கெழுந்தருளினபோது விஷ்ணுமூர்த்தத் தைச் சிவலிங்கமாக்கிய ஸ்தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-உ.

அதற்குத் தென்கிழக்கே 25 கடிகை தூரத்தில்,

## 14. திருநெல்வேலி.

சுவாமியார் - வேணுவனேசுவரர், சாலிவாடீசுரர், (நெல்லுக்கு வேலி கட்டு) நெல்லையப்பர், அனவரதநாதர்.

தேவியார் - காந்திமதியம்மையார்.

தீர்த்தங்கள் - தாமிரபர்ணிநதி, பொற்றாமரை, கம்பாநதி முதலியன.

சபை - தாமிரசபை.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

ஆக பாண்டிநாட்டிலுள்ள க்ஷேத்திரங்கள் 14.

திருச்சிற்றம்பலம்.

## சேரநாடு அல்லது மலைநாட்டிலுள்ள க்ஷேத்திரம்.

கொச்சி மலையாளத்துக்கு வடக்கே 16 கடிகை தூரத்தில்,

1. திருவஞ்சைக்களம்.

சுவாமியார் - அஞ்சக்களத்தீசுவரர்.
தேவியார் - உமையம்பிகையார்.
தீர்த்தம் - சிவகங்கை.

இதற்கு வடக்கே கொடுங்கோளூரில், சித்திரைமீ ரேவதியி லவதரித்த கழறிற்றறிவாரென்னும் சேரமான் பெருமாணயனார், குதிரையின்மேல் வந்து வெள்ளையானையின்மேற் சென்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளுடன் ஆடிமீ சுவாதியிற் கைலாயத்திற் கெழுந்தருளிய தலம்.

பதிகம் - சுந்தர. பதிகம்-க.

ஆக சேரநாட்டிலுள்ள க்ஷேத்திரம் 1.

திருச்சிற்றம்பலம்.

---

## கொங்கநாட்டிலுள்ள க்ஷேத்திரங்கள்.

1. திரு அவிநாசி.

சுவாமியார் - அவிநாசியீசுவரர்.
தேவியார் - பெருங்கருணை நாயகியார்.
தீர்த்தம் - முதலை.

சுந்தரமூர்த்தி சுவாமிகள், அவிநாசியென்னு மக்கிரகாரத்துக்குத் தென்புறமிருக்கின்ற சிற்றேரியில் மூன்று வருடத்துக்கு முன்னே முதலை பிடித்துத்தின்ற பின்

ளையை (அவ்வேரியிலே நீரில்லாக்காலத்து அப்பிள்ளையின் பிதாமாதாக்களின் வருத்தம் நீக்குவதற்காகப் பதிகமருளி ஏரி நிரம்ப நீர் பெருகச்செய்து, அம்முதலையை யழைத்து) உயிரும் வயதுங் குறைவுறாது மீளச்செய்து உபநயனமுஞ் செய்வித்த தலம். இப்போதும் அந்த ஏரியின் கரையில் அத்திருவிளையாடல் நடக்கும்படியாகிய குறிப்புகளுடனாலய மிருக்கின்றது.

பதிகம் - சுந்தர. பதிகம்-க.

அதற்குத் தென்கிழக்கே 3 கடிகை தூரத்தில்,

**2. திருமுருகன்பூண்டி.**

சுவாமியார் - முருகேசுவரர்.
தேவியார் - ஆவுடைநாயகியார்.
தீர்த்தம் - ஆவுடை தீர்த்தம்.

சிவபெருமான் பூதங்களை வேடராக அனுப்பிச் சுந்தரமூர்த்திசுவாமிகள் பொருளைப் பறித்துப் பின்பு கொடுத்துப் பதிகம் பெற்ற ஸ்தலம்.

பதிகம் - சுந்தர. பதிகம்-க.

அதற்கு வடகிழக்கே 25 கடிகை தூரத்தில்,

**3. திருநணா எ-னு பவானிகூடல்.**

சுவாமியார் - சங்கமுகநாதேசுவரர்.
தேவியார் - வேதமங்கையார்.
தீர்த்தம் - பவானிநதியும் காவிரி நதியுங் கூடுஞ் சங்கமம்.
பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்குத் தென்மேற்கே 10 கடிகை தூரத்தில்,

4. திருச்செங்குன்றூர் எ-து திருச்செங்கோடு.

சுவாமியார் - அர்த்தநாரீசுவரர்.
தேவியார் - அர்த்தநாரீசுவரி.
தீர்த்தம் - சங்குதீர்த்தம்.

மலையின்மேற் றலம்.
பிரிங்கி மகா முனிவருக்காக வந்த அவதாரம்.
திருமேனி விபூதி நிறம். திருவடியின் கீழ் கங்கை.

பதிகம் - திருஞான. பதிகம் - க.

அதற்குத் தென்கிழக்கே 25 கடிகை தூரத்தில்,

5. திருவெஞ்சமாக்கூடல்.

சுவாமியார் - விகிர்தேசுவரர்.
தேவியார் - விகிர்தேசுவரியார்.
தீர்த்தம் - விகிர்த தீர்த்தம்.
பதிகம் - சுந்தர. பதிகம்-க.

அதற்கு வடமேற்கே 18 கடிகை தூரத்தில்;

6. திருப்பாண்டிக் கொடுமுடி.

சுவாமியார் - கொடுமுடி நாதேசுவரர்.
தேவியார் - பண்மொழிநாயகி யம்மையார்.
தீர்த்தம் - காவேரி.

இதிற் பழனி ஆண்டவருக்குத் திருமஞ்சன தீர்த்தம் தினம் காவடிக் கட்டி யெடுத்துக்கொண்டுபோய் அடியார்க் கெளியரென்னும் நம்மிறைவ ரருள் குமார வேளாகிய தெண்டாயுதபாணிக்கு அபிஷேகஞ் செய்கிறதுண்டு.

பதிகம் - திருஞான. பதிகம் - க, திருநாவு. பதிகம்-க, சுந்தர. பதிகம்-க, ஆக-௩.

அதற்குக் கிழக்கே 10 கடிகை தூரத்தில்,

7. திருக்கருவூர் எ-து திருவானிலை.

சுவாமியார் - பசுபதீசுவரர்.

தேவியார் - கிருபா நாயகியார்.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

ஆக கொங்கநாட்டிலுள்ள க்ஷேத்திரங்கள் 7.

திருச்சிற்றம்பலம்.

---

## நடுநாடு அல்லது மகதநாட்டிலுள்ள க்ஷேத்திரங்கள்.

1. திருவரத்துறை.

சுவாமியார் - அரத்துறையப்பர்.

தேவியார் - ஆனந்த நாயகியார்.

தீர்த்தம் - வெள்ளாறு.

திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் மாறன்பாடியில் வந்திருக்கும்போது அரத்துறைக்கு மேற்கே முக்காற் கடிகை நெய்வாச லென்கின்ற திருநெல்வாயிலி லிருந்து பிராமணர்கள் சிவபெருமான் உத்தரவின்பிரகார மவருக்கு முத்துச் சிவிகை முதலிய திருச்சின்னங் கொடுத்த தலம்.

ஆதித்துறை - காரியனூர்.

அதன் கிழக்கே திருவாலத்துறை.

திருமாந்துறை.

அதன் கிழக்கே திரு ஆடுதுறை.

,, ,, திருவதிட்டத்துறை யென்னும் திட்டக்குடி.

,, ,, அரத்துறை.

,, ,, திருக்கைத்துறை.

இந்தத் துறை யேழுஞ் சப்தரிஷிகள் பூசை செய்யவேண்டியதற்கு 'நீ வா' என்று கூப்பிட்டதாக ஐதீகம். அதனால் நீவாநதி யென்றும், அந்நீவா நதியே வெள்ளாறென்றும் வழங்குகின்றது.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-க, சுந்தர். பதிகம்-க, ஆக-௩.

அதற்கு வடகிழக்கே 3 கடிகை தூரத்தில்,

## 2. திருத்தூங்கானைமாடம் எ-து பெண்ணாகடம்.

சுவாமியார் - சுடர்க்கொழுந்தீசுவரர்.

தேவியார் - கடந்தை நாயகியார்.

தீர்த்தம் - பெண்ணைநதி.

விமானம் - கசவிமானம்.

பிரளயங்காத்த வீசுவரர்.

கலிக்காம நாயனார் முத்தியடைந்த தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-க, ஆக-உ.

அதற்குக் கிழக்கே 12 கடிகை தூரத்தில்,

## 3. திருக்கூடலையாற்றூர்.

சுவாமியார் - நெறிகாட்டு நாயகர்.

தேவியார் - புரிகுழலம்பிகையார்.

தீர்த்தம் - சங்கு தீர்த்தம்.

வடமேற்கிலிருந்து மணிமுத்தா நதியுந் தென்மேற்கிலிருந்து நீவா நதியும் இரண்டுங் கூடிக் கிழக்கே நோக்குகின்றபடியாற் கூடலையாற்றூரென் றுரைப்பார்கள்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருபுறம்பயமென்னுங் கிராமத்தினின்று எழுந்தருளி யத்தலத்துக்குச் சமீபமாகச் செல்கின்றவ ரித்தலத்தை விட்டு விருத்தாசலத்துக்குச் செல்லுங் கருத்தினராய் நடக்குங்கால், கூடவையிற் சிவபெருமான் ஒரு பிராமணராய் நிற்கக்கண்டு, "ஐயரே! விருத்தாசலத்துக் கேகும் மார்க்கமெது?", எனச், சிவபெருமானாகிய ஐயரும், "இக்கூடலை யாற்றூர் மார்க்கமாகச் செல்லுகின்றது", என்றழைத்துக்கொண்டுவந்து கூடலையாற்றூருக்குச் சமீபத்தில் விட்டு மறைந்தனர்; அது கண்டு ஆராமை மேற்கொண்டு பாடி யருளிய தலம்.

பதிகம் - சுந்தர. பதிகம்-க.

அதற்கு மேற்கே 6 கடிகை தூரத்தில்,

4. திருவெருக்கத்தம்புலியூர் எ-து இராசேந்திரன் பட்டினம்.

சுவாமியார் - நீலகண்டேசுவரர்.

தேவியார் - நீலமலர்க்க ணம்மையார்.

தீர்த்தம் - நீலோற்பலம்.

நீலேந்திர னாண்ட தலம்.

சாரங்கன் வெள்ளெருக்கஞ் செடியின் கீழே சுவாமியார் உற்பவம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்கு வடகிழக்கே 20 கடிகை தூரத்தில்,

**5. திருத்தினைநகர் என்று தீர்த்தன நகர்.**

சுவாமியார் - திருந்தீசுவரர்.
தேவியார் - ஒப்பிலா நாயகியார்.
தீர்த்தம் - திருந்து தீர்த்தம்.
விருக்ஷம் - கொன்றை.
நைவேதனம் - தினையமுது.
பதிகம் - சுந்தர. பதிகம் - க.

அதற்கு வடகிழக்கே 5 கடிகை தூரத்தில்,

**6. திருச்சோபுரம் என்று தியாகவல்லி.**

சுவாமியார் - சோபுரநாதர்.
தேவியார் - சோபுர நாயகியார்.
தீர்த்தம் - சோபுரி தீர்த்தம்.
பதிகம் - திருஞான. பதிகம் - க.

அதற்கு வடமேற்கே 19 கடிகை தூரத்தில்,

**7. திருவதிகை.**

சுவாமியார் - வீரட்டேசுவரர்.
தேவியார் - திரிபுரசுந்தரி யம்மையார்.
தீர்த்தம் - கெடிலநதி.

இஃது அட்டவீரட்டத்திற் றிரிபுரதகன தலம்.

அப்பர் சுவாமிகளுக்குச் சூலைநோய் விட்ட தலம். அவர் அந்நோய் தீரும்படிக்குக் "கூற்றாயினவாறு விலக்க கிலீர்" என்று திருப்பதிகம் பாடி வழிபட்ட தலம். அச்சந்நிதிக் கீசான பாகத்தில் அப்பர் சுவாமிகள் சிவ பெருமானை வழிபட்ட இந்த மடமென் றின்னமும் வழங்குகின்றது.

பிஞகபாணியாய்ச் சிவபெருமானுந் தேவியாருந் தக்ஷண முகமாக இருந்து" திரிபுர சங்காரம் பண்ணின அவதார மிருக்கின்றது.

விருக்ஷம் - சரக்கொன்றை.

அப்பர் சுவாமிகளுக்குச் சூலைநோய் தீர்த்த தீர்த்தம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குச் சித்தவட மடத்திற் றிருவடி சூட்டின தலம்.

பதிகம் - திருஞான. பதிகம் - க, திருநாவு. பதிகம் - கக, சுந்தர. பதிகம்-க, ஆக-கஅ.

அதற்கு மேற்கே 5 கடிகை தூரத்தில், திருவாமூரில், பங்குனிமீ ரோகணியில் அப்பர் சுவாமிக டிருவவதாரம். வேளாளமரபு. உழவாரப் பணிவிடையுடன் அரனைப்பாடுந் திருத்தொண்டு. அவரும் பசுபதீஸ்வரருந் திரிபுரசுந்தரி யம்மையாரும் வீற்றிருக்கின்ற ஆலய மவ்வூரி லிருக்கின்றது. அப்பர் சுவாமிகளை முன் னீற்றறையி லிட்டவிட மிப்போது ஓடையாக விருக்கின்றது. அதுதான் தீர்த்தம்.

அவ் வதிகைக்குத் தென்மேற்கே 10 கடிகை தூரத்தில்,

## 8. திருநாவலூர்.

சுவாமியார் - நாவலீசுவரர்.

தேவியார் - சுந்தர நாயகியார்.

தீர்த்தம் - கருட தீர்த்தம்.

விருக்ஷம் - நாவல்.

ஆவணிமீ உத்தர நக்ஷத்திரத் திடப லிலக்கினத்திற் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவவதாரம். ஆதிசைவப் பிராமண மரபு. அரனைப் பாடுந் திருத்தொண்டு.

சடையநாயனார், இசைஞானியார், புகழ்த்துணை நாயனார் முத்தி தலம்.

பதிகம் - சுந்தர. பதிகம்-க.

அதற்குத் தெற்கே 15 கடிகை தூரத்தில்,

## 9. திருமுதுகுன்றம் எ-து விருத்தாசலம்.

சுவாமியார் - பழமலை நாதர்.
தேவியார் - பெரிய நாயகியார்.
தீர்த்தம் - மணிமுத்தா நதி.
விருக்ஷம் - வன்னி.

சுந்தரமூர்த்தி சுவாமிக ளாலயத்துட் சென்று சிவபெருமானைக் காணுது இரண்டாம் பிராகாரத்தில் வரும் போது தக்ஷிணமூர்த்தி சந்நிதிக்குப் பக்கத்தில் சம்பி உருவமுற்றிருக்கக்கண்டு "பரவையாருக்குப் பணம் வேண்டும்" என்று பாடிக்கேட்டார். உடனே "நம்பி" என்று பாடச் சொல்லிந் தாம் "பொன் றருகிறோம்" என்று திருப்பதிகமு மொப்புக்கொண்டு அப்பொருளைக் கொடுத்தருளினது மன்றி மணிமுத்தாற்றிற் செம்பொனுக்கிப் போட்டுத் திருவாரூர்க் கமலாலயத்தில் வந்தெடுத்துப் பாசியா லழுக்கேறியிருக்கக்கண்டு அவரிடத்திலிருந்த மச்சத்தையும் அப்பொன்னையும் மாற்றுரைத்துச் சரியா யிருக்கும்படி யருளிய தலம்.

திருவாரூரிற் கமலாலயம் கீழ்க் கரையில் கெஜமுக ரூபமாக மாற்றுரைத்த பிள்ளையாருளர். முதுகுன்றத்திலு மப்படியே யுளர்.

பதிகம் - திருஞான. பதிகம்-எ, திருநாவு. பதிகம்-க, சுந்தா. பதிகம்-ங, ஆக-கக.

அதற்கு வடமேற்கே 15 கடிகை தூரத்தில்,

**10.** திருநெல்வெண்ணெய் எ-து நெல்வெண்ணெய்.

சுவாமியார் - வெண்ணெயப்பர்.
தேவியார் - நீலமர்க்கண்ணியம்மையார்.
தீர்த்தம் - வெண்ணெய் தீர்த்தம்.
பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்கு வடமேற்கே 10 கடிகை தூரத்தில்,

**11.** திருக்கோவலூர் எ-து கீழூர்.

சுவாமியார் - வீரட்டேசுவரர்.
தேவியார் - சிவானந்தவல்லியார்.
தீர்த்தம் - பெண்ணைநதி.

இஃது அட்டவீரட்டத்துளந்தகாசுரனை வதைசெய்ததலம்.
பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-க, ஆக-உ.

அதற்கு வடகிழக்கே ¾ கடிகை தூரத்தில்,

**12.** திருவரையணிநல்லூர் எ-து அறைகண்டநல்லூர்.

சுவாமியார் - அறையணிநாயகர்.
தேவியார் - அருள்நாயகியார்.
தீர்த்தங்கள் - பாண்டவதீர்த்தம், ஆரணியதீர்த்தம்.
பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்குத் தென்கிழக்கே 7½ கடிகை தூரத்தில்,

**13.** திருவிடையாறு.

சுவாமியார் - இடையாற்றீசுவரர்.
தேவியார் - சிற்றிடைநாயகியார்.

தீர்த்தம் - சிற்றடை.

பதிகம் - சுந்தர. பதிகம்-க.

அதற்குக் கிழக்கே $2\frac{1}{2}$ கடிகை தூரத்தில்,

14. திருவெண்ணெய்நல்லூர்.

சுவாமியார் - தடுத்தாட்கொண்டவீசுவரர்.

தேவியார் - வேற்கணம்மையார்.

தீர்த்தம் - பெண்ணைநதி.

சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தியாகராசர் தடுத்தாட்கொண்ட தலம். அவ்விடத்துச் சிவபெருமானிடபாரூடரா யிருக்கின்றனர்.

பதிகம் - சுந்தர. பதிகம்-க.

அதற்கு வடகிழக்கே 10 கடிகை தூரத்தில்,

15. திருத்துறையூர் எ-து திருத்தலூர்.

சுவாமியார் - பசுபதீசுவரர்.

தேவியார் - பூங்கோதைநாயகியார்.

சுவாமி, சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் திருவடிசூட்டிக் குருமூர்த்தமா யெழுந்தருளி யுபதேசஞ் செய்த தலம்.

சுவாமியார் - சிட்டகுருநாதர்.

தேவியார் - சிவலோக நாயகியார்.

பதிகம் - சுந்தர. பதிகம்-க.

அதற்கு வடகிழக்கே 1 கடிகை தூரத்தில்,

16. திருவடுகூர் எ-து ஆண்டார்கோயில்.

சுவாமியார் - வடுகீசுவரர்.

தேவியார் - வடுவகிர்கண்ணம்மையார்.

பஞ்சைநதீசுவரர், திரிபுரசுந்தரி யம்மையா ரெனவும் வழங்குகின்றது.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்குத் தென்கிழக்கே 10 கடிகை தூரத்தில்,

## 17. திருமாணிகுழி.

சுவாமியார் - மாணிக்கவரதேசுவரர்.

தேவியார் - மாணிக்கவல்லி.

தீர்த்தம் - மாணிக்க தீர்த்தம்.

விருக்ஷம் - கொன்றை.

வாமனவதாரத்தில் விஷ்ணு பூசித்த ஸ்தலம்.

இன்னம் வணிகருக் குதவிசெய்ததனால், உதவிநாயகரென்றும், அம்பலக்கணம்மையென்றும் பெயர் கொண்ட மூர்த்திகளு முண்டு.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்கு வடகிழக்கே 5 கடிகை தூரத்தில்,

## 18. திருப்பாதிரிப்புலியூர்.

சுவாமியார் - தோன்றுத்துணை நாதர்.

தேவியார் - தோகையம்பிகையார்.

விருக்ஷம் - பாதிரி.

சிவபெருமான் அப்பர் சுவாமிகளைக் கடலினின்றுங் கரையேற்றிவிட்ட ஸ்தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-க, ஆக-உ.

அதற்கு வடமேற்கே 5 கடிகை தூரத்தில்,

**19.** திருமுண்டீச்சரம் எ-று திருக்கண்டீச்சரம்.

சுவாமியார் - முண்டீசுவரர்.

தேவியார் - கானார் குழலியம்மையார்.

நடனபாதேசுவரர், அஸ்தகாளாம்பிகை யென்னும் மூர்த்திகளு முண்டு.

தீர்த்தம் - முண்டக தீர்த்தம்.

பதிகம் - திருநாவு. பதிகம்-க.

இதற்கு வடமேற்கே 13 கடிகை தூரத்தில்,

**20.** திருப்புறவார் பனங்காட்டூர் எ-று பனையபுரம்.

சுவாமியார் - பனங்காட்டீசுவரர்.

தேவியார் - திருப்புறவ மின்னம்மையார்.

தீர்த்தம் - பதுமதீர்த்தம்.

விருக்ஷம் - தாலவிருக்ஷம்.

சிபிச்சக்கரவர்த்திக்குத் தரிசனங் கொடுத்த ஸ்தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்கு மேற்கே 4 கடிகை தூரத்தில்,

**21.** திருவாமாத்தூர்.

சுவாமியார் - காமரர்த்தேசுவரர்.

தேவியார் - அழகிய நாயகியார்.

தீர்த்தம் - பதுமதீர்த்தம்.

விருக்ஷம் - வன்னி.

கோடி மகாரிஷியும் பசுவும் பூசையாற்றிய தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-உ, திருநாவு. பதிகம்-உ, சுந்தர. பதிகம்-க, ஆக-ரு.

அதற்கு வடமேற்கே 30 கடிகை தூரத்தில்,

**22.** திருவண்ணாமலை.

சுவாமியார் - அருணாசலேசுவரர்.

தேவியார் - உண்ணாமுலையம்மையார்.

தீர்த்தங்கள் - சிவகங்கை, பிரமதீர்த்தம், திக்குபாலகர்கள் தீர்த்தங்கள் முதலிய அநேக திவ்விய தீர்த்தங்கள்.

சிவபெருமான் வல்லாளராஜனுக்குப் புத்திரனாகத் தோன்றி உத்தரகிரியையும் செய்த தலம்.

இரண்டாம்பிரகார மேற்புறத்தில் விஷ்ணு தமது வாயிலே புள்ளாங்குழல் வைத்தூதிக்கொண்டிருக்கிறார். இவ்வாறே, திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தமது பதிகத்திலுங் கட்டளையிட்டிருக்கின்றனர்.

பிரம விஷ்ணுக்களுடைய மமகாரந் தீர வாஞ்ஞாபித்த பிரகாரம் விஷ்ணுவானவர் வராக அவதாரமாய்த் திருவடியைத் தேடிக் காணாதயரவும், பிரமதேவர் அன்னமாய்த் திருமுடியைத் தேடி மொழிமாறிக் காணாதயரவும், சிவபெருமான் அக்கினிமலையா யெழுந்த தலம். அம்மலை கிருதயுகத்தி லக்கினி மலையாயும், திரேதா யுகத்திற் சுவர்ணமலையாயும், துவாபரயுகத்திற் றாமிரமலையாயும், கலியுகத்திற் கன்மலையாயு மிருக்கும். நினைக்க முத்திதருந் தலம்.

கார்த்திகையில் கார்த்திகை நக்ஷத்திரத்திற் சுடர்த்தீப தரிசனம்.

பதிகம் - திருஞான. பதிகம்-உ, திருநாவு. பதிகம்-ந, ஆக-ரு.

ஆக, நடுநாட்டிலுள்ள க்ஷேத்திரங்கள் **22.**

திருச்சிற்றம்பலம்.

## தொண்டைநாட்டிலுள்ள க்ஷேத்திரங்கள்.

1. திருக்கச்சியேகம்பம் எ-று காஞ்சீபுரம்.

சுவாமியார் - ஏகாம்பரநாதர்.

தேவியார் - காமாக்ஷியம்மையார்.

ஈசுவரி தழுவக் குழைந்து முலை வளைச் சுவடணிந்தவர்.

அத்தலத்தி னிரண்டாம் பிரகாரத் தென்பாலிற் பிரமனாற் பூசிக்கப்பட்டவர் வெள்ளைக் கம்பமொன்றும், வடபாலில் விஷ்ணுவாற் பூசிக்கப்பட்டவர் கள்ளக்கம்ப மொன்று மிரண்டு சிவலிங்கப் பெருமானார் எழுந்தருளியிருக்கின்றனர்.

ஆடிசன் பேட்டையில் திருக்குறிப்புத் தொண்டநாயனாராலயமுளது.

பிருதிவிலிங்க ஸ்தலம்.

தீர்த்தங்கள் - சிவகங்கை, கம்பாநதி முதலிய அனந்த புண்ணிய தீர்த்தங்களுண்டு.

விருக்ஷம் - மா.

பதிகம் - திருஞான. பதிகம்-௪, திருநாவு. பதிகம்-௭, சுந்தர. பதிகம்-௧, ஆக-௧௨.

அதற்குத் தென்மேற்கே 1 கடிகை தூரத்தில்,

திருமேற்றளி எ-து கச்சிமேற்றளி.

சுவாமியார் - திருமேற்றளிநாதர்.

தேவியார் - காமாக்ஷியம்மையார்.

பதிகம் - திருநாவு. பதிகம்-௧, சுந்தர. பதிகம்-௧, ஆக-௨.

அதற்கு வடக்கே 1 கடிகை தூரத்தில்,

3. திருவோணகாந்தன்றளி.

சுவாமியார் - ஓணகாந்தீசுவரர்.

தேவியார் - காமாக்ஷியம்மையார்.

தீர்த்தம் - ஓணகாந்ததீர்த்தம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகட்குப் பொற்காசளித்த தலம்.
ஓணன் என்றும், காந்தன் என்றும் பெயரையுடைய இரண்டசுரராற் பூசிக்கப்பட்ட தலம்.

பதிகம் - சுந்தர. பதிகம்-க.

அதற்குத் தெற்கே ½ கடிகை தூரத்தில்,

4. திருவனேகதங்காவதம் எ-து கச்சியனேகதங்காவதம்.

சுவாமியார் - திருவனேகதங்காவதேசுவரர்.

தேவியார் - காமாக்ஷியம்மையார்.

தீர்த்தம் - தாணுதீர்த்தம்.

பதிகம் - சுந்தர. பதிகம்-க.

அதற்குக் கிழக்கே 2 கடிகை தூரத்தில்,

5. திருக்கச்சிநெறிக் காரைக்காடு எ-து திருக்காவீசுவரர் கோயில்.

சுவாமியார் - காரைத்திருநாதேசுவரர்.

தேவியார் - காமாட்சியம்மையார்.

காஞ்சி முதலிய இவ்வைந்து தலங்களுக்குந் தேவியார் காமாக்ஷியம்மையே யாதலாற் கச்சியேகம்பத்தைக் காமக்கோட்டி பீடமென் றுரைப்பது.

தீர்த்தம் - இந்திரதீர்த்தம், காரை தீர்த்தம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்குத் தெற்கே 1 கடிகை தூரத்தில்,

6. திருக்குரக்கணின்முட்டம்.

சுவாமியார் - வாலீசுவரர்.

தேவியார் - இறையார்வளைநாயகியார்.

சுவாமிக்குக் கொய்யாமலீசுவரரென்றொரு பெயர் வழங்குகின்றது.

தீர்த்தங்கள் - வாலிதீர்த்தம், நளகங்கை.

குரங்கு, அணில், காக்கை இவை பூசித்த தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்குத் தென்கிழக்கே 5 கடிகை தூரத்தில்,

7. திருமாகறல்.

சுவாமியார் - கலங்காத்த வரதேசுவரர்.

தேவியார் - புவனநாயகியார்.

தீர்த்தம் - நவ்விதீர்த்தம்.

நண்டுவளையிலிருந்து சிவபெருமானுதயமான தலம்.

உடும்பு தழுவிக்கொண்டிருக்கின்றது.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்குத் தெற்மேற்கே 13 கடிகை தூரத்தில்,

8. திருவோத்தூர்.

சுவாமியார் - வேதநாதேசுவரர்.

தேவியார் - இளமுலை நாயகியார்.

திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் ஆண்பனையை பெண்பனை யாக்கிய தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்கு வடக்கே 8 கடிகை தூரத்தில்,

9. திருப்பனங்காட்டூர் எ-து வன்பார்த்தான் பனங்காட்டூர்.

சுவாமியார் - பனங்காட்டீசுவரர்.

தேவியார் - அமிர்தவல்லியம்மையார்.

தீர்த்தங்கள்-சம்பந்த தீர்த்தம், அப்பர் தீர்த்தம், சுந்தர தீர்த்தம்.

சிவபெருமானுக்குப் பனம்பழம் நிவேதன மாகுந் தலம். சந்நிதியில், சமனிலையாக இரண்டு பனைவிருக்ஷங்களிருக்கின்றன.

அதற்குத் தெற்கே 1 கடிகை தூரத்தில்,

வன்பார்க்கம்.

சுவாமியார் - இராமசாமீசுவரர்.

தேவியார் - பஞ்சின் மெல்லடி யம்மையார்.

அம்மார்க்கத்திற் சுந்தரமூர்த்தி சுவாமிக ளெழுந்தருளி வந்தபோது சிவபெருமான் பிராமண வேடங்கொண்டு வந்து கொடுத்த கட்டமுதைப் புசித்து, அவரை நோக்கி, "ஐயரே! எவ்வூர்?" என்று கேட்க, "வன்பார்க்கத்துக்கும் பனங்காட்டூருக்குமாக இருப்போம்" என்று சொல்லி மறைந்தருளினர். உடனே, "இதுவுஞ் சிவபெருமானுடைய திருவிளையாடல்" எனத் தேர்ந்து திருப்பதிகம் பாடியருளினர்.

பதிகம் - இவ்விரு தலத்திற்கும் சுந்தர. பதிகம் - க.

அதற்கு வடமேற்கே 20 கடிகை தூரத்தில்,

10. திருவல்லம.

சுவாமியார் - வல்லநாயகேசுவரர்.

தேவியார் - வல்லாம்பிகையார்.

தீர்த்தம் - திருவல்லம்.

வாலாம்பேட்டை மலையிற் கஞ்சாராராக்ஷத னென்பவனைச் சங்காரஞ் செய்ததாகப் புராணத்தி லிருக்கின்றது.

அந்தத் தலத்தில் நந்திகேசுவரர் கிழக்கு முகமாக விருக்கின்றார்.

பதிகம் - திருஞான. பதிகம் - க.

அதற்குக் கிழக்கே 16 கடிகை தூரத்தில்,

**11.** திருமாற்பேறு.

சுவாமியார் - மால்வணங்கீசுவரர்.

தேவியார் - கருணை நாயகியார்

தீர்த்தம் - அரி தீர்த்தம்.

பதிகம்-திருஞான. பதிகம்-உ, திருநாவு. பதிகம்-ச, ஆக-சு.

அதற்கு வடகிழக்கே 5 கடிகை தூரத்தில்,

**12.** திருவூறல் எ-து தக்கோலம்.

சுவாமியார் - உமாபதீசுவரர்.

தேவியார் - உமையம்மையார்.

சேலநாதேசுரர், சரிசாகண்ணியம்மை யெனவும் வழங்குகின்றது.

தீர்த்தம் - ஊறல்.

இதற்குச் சமீபத்தில் வடபாலில் கங்காதரேசுவரர், மோகனவல்லியெனப் பெயர்பெற்ற சுவாமி யம்மை யெழுந்தருளிய வோராலய மிருக்கின்றது.

அவ்வாலயத்தின் நந்தியின் வாயினின்று துங்கை உதயமாகி அச் சிவபிரானைப் பிரதக்ஷிணஞ் செய்துகொண்டு அவ்வுமாபதீசுவரர் துசத்தம்பத் திடமான நந்தி யருகில் வந்து குளத்திற் றேங்கிக் கால்வாய் வழியாகக் கழனிகளிற் செல்கின்றது.

பதிகம் - திருஞான. பதிகம் - க.

அதற்குத் தென்கிழக்கே 5 கடிகை தூரத்தில்,

## 13. திருவிலம்பையங்கோட்டூர்.

சுவாமியார் - சந்திரசேகரேசுவரர்.

தேவியார் - கோடேந்துமாமுலேயம்மையார்.

தேவநாயகர், கதிர்முலேயம்மை எனவும் இக்காலத்தில் வழங்குகின்றது.

அரம்பையர் பூசித்த தலம்.

தீர்த்தம் - இந்து தீர்த்தம்.

பதிகம் - திருஞான. பதிகம் - க.

அதற்கு வடகிழக்கே 1½ கடிகை தூரத்தில்,

## 14. திருவிற்கோலம் எ-து கூவம்.

சுவாமியார் - புராந்தகேசுவரர்.

தேவியார் - புராந்தகியம்மை.

தீர்த்தம் - விற்கோலம்.

இத்தலத்தின் வடக்கு ஒரு கடிகை தூரத்தில் விர்த்தவீர நதி, (உத்தரவாகினியாக வந்தவிடத்தில் ஒரு திடரில் உத்தேசம் அரைக்காணி நில மணலாயிருக்கின்றது. அதி ஊற்றுண்டாகி நான்கு காலத்துக்கும் புனிதத்துடன் திருமஞ்சனங் கொண்டுவந்து சிவலிங்கப் பெருமானுக்கு அபிடேகஞ் செய்கின்றனர்.)

தீர்த்தம் - கூபாக்கினி தீர்த்தம்.

பதிகம் - திருஞான. பதிகம் - ௧.

அதற்கு வடமேற்கே 8 கடிகை தூரத்தில்.

**15.** திருவாலங்காடு.

சுவாமியார் - அமிர்ததாண்டகேசுவரர்.

தேவியார் - வண்டார்குழலம்மையார்.

விருக்ஷம் - பலா.

காரைக்காலம்மை தலையானடந்து பங்குனியின் சோதியில் சிவபெருமான் "அம்மையே!" என வழைக்க, "அப்பா!" என்று சொல்லிக்கொண்டு திருவடியை யடைந்த தலம்.

சபை - இரத்தின சபை.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம் - உ, சுந்தர, பதிகம்-க, ஆக-ச.

அதற்குக் கிழக்கே 5 கடிகை தூரத்தில்,

**16.** திருப்பாசூர்.

சுவாமியார் - பாசூர்நாதர்.

தேவியார் - பசுபதி நாயகியார்.

(இக்காலத்து வாசீசுவரர், சுயம்புவனி யம்மை யென வழங்குகின்றது.)

மூங்கி லடியிற் சிவபெருமா னுதித்த தலம்.

சோழனுக்கு ஒரு காரணார்த்தமாகப் பாம்பாட்டியாகத் திருவுருக்கொண்டு ஆடல் காட்டிய தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-உ, ஆக-ஈ.

அதற்கு வடக்கே 3 கடிகை தூரத்தில்,

**17.** திருவெண்பாக்கம் எ-து திருவிளம்பூர்.

சுவாமியார் - வெண்பாக்கநாதர்.

தேவியார் - கனிவாய்மொழி யம்மை.

(ஊணீசுவரர், மின்னலொளித்தா யெனவும் வழங்குகின்றது.)

தீர்த்தம் - கைலாய தீர்த்தம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குக் கோல் கொடுத்த தலம்.

இதற்கு தெற்கே ½ கடிகை தூரத்தில், வெண்பாக்கமென்கின்றதில் கைகாட்டிய நாதர், பரமேசுவரியம்மை யெழுந்தருளியிருக்கின்ற வோராலய மிருக்கின்றது.

பதிகம் - சுந்தர. பதிகம்-க.

அதற்கு வடகிழக்கே 10 கடிகை தூரத்தில்,

**18.** திருக்கள்ளில் எ-து திருக்கள்ளம்.

சுவாமியார் - சிவானந்த நாதர்.

தேவியார் - ஆனந்தவல்லி யம்மையார்.

தீர்த்தம் - ஆனந்தம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்கு வடமேற்கே 40 கடிகை தூரத்தில்,

**19.** திருக்காளத்தி.

சுவாமியார் - காளத்தி நாதேசுவரர்.

தேவியார் - ஞானப்பூங்கோதை யம்மையார்.

தீர்த்தம் - பொன்முகலி.

பாம்பு, யானை, சிலந்தி, கண்ணப்பநாயனார், நக்கீரர், சிவகோசரியார் முதலியோர் முத்தி பெற்ற தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-உ, திருநாவு. பதிகம்-க, சுந்தர. பதிகம்-க, ஆக-ச.

அதற்குத் தென்கிழக்கே 50 கடிகை தூரத்தில்,

**20.** திருவொற்றியூர்.

சுவாமியார் - மாணிக்கத் தியாகேசர்.

தேவியார் - வடிவுடை யம்மையார்.

(ஆதிபுரீசுரர், திரிபுரசுந்தரியம்மை யெனவும் வழங்குகின்றது.)

தீர்த்தம் - பிரம தீர்த்தம்.

விருக்ஷம் - மகிழ்.

சிவபெருமான், சுந்தர மூர்த்தி சுவாமிகளுக்குச் சங்கிலி நாச்சியாரைத் திருமணஞ் செய்வித்த தலம்.

கலிநீதி நாயனார் வழிபாடாற்றி முத்தியுற்ற தலம்.

பிரமன் பூசித்த தலம்.

அத்தலத்தின்கண் பட்டணத்துப் பிள்ளையாரது திவ்விய சமாதியு மிருக்கின்றது.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-ரு, சுந்தர பதிகம் - உ, ஆக-அ.

அதற்குத் தென்மேற்கே 7 கடிகை தூரத்தில்,

**21.** திருவலிதாயம் எ-து பாடி.

சுவாமியார் - வலிதாயநாதர்.

தேவியார் - தாயம்மையார்.

தீர்த்தம் - வலிதாயம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்கு வடமேற்கே 5 கடிகை தூரத்தில்,

**22.** திருவடமுல்லைவாயில்.

சுவாமியார் - மாசிலாமணியீசுவரர்.

தேவியார் - கொடியிடை நாயகியார்.

தீர்த்தங்கள் - பாலாறு, சுப்பிரமணிய தீர்த்தம்.

சிவபெருமானர், ஆதொண்டைச் சக்கரவர்த்தி வெட்டுத் தாங்கி வெளிப்பட்ட தலம்.

சுப்பிரமணியர் பூசித்த தலம்.

பதிகம் - சுந்தர. பதிகம்-க.

அதற்குத் தென்மேற்கே 2 கடிகை தூரத்தில்,

## 23. திருவேற்காடு.

சுவாமியார் - வேற்காட்டீசுவரர்.

தேவியார் - வேற்கண்ணி யம்மையார்.

தீர்த்தம் - வேற்கண்ணி.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்குத் தென்கிழக்கே 10 கடிகை தூரத்தில்,

## 24. திருமயிலாப்பூர்.

சுவாமியார் - கபாலீசுவரர்.

தேவியார் - கற்பகவல்லியார்.

தீர்த்தங்கள் - கபாலி, மணிகர்ணிகை.

விருக்ஷம் - புன்னைகம்.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் பூம்பாவை என்னும் பெண்ணினுடைய என்பைப் பெண்ணாகும்படி பாடி யருளிய தலம்.

பார்வதியார் மயிலாய்ப் பூசித்த தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்குத் தென்கிழக்கே 3 கடிகை தூரத்தில்,

**25.** திருவான்மியூர்.

சுவாமியார் - மருந்தீசுவரர்.

தேவியார் - சொக்கநாயகியார்.

சிவபெருமான் வான்மீக ரிஷிக்கு நடன தரிசனங் காட்டிய தலம்

பதிகம் - திருஞான. பதிகம்-உ, திருநாவு. பதிகம்-க, ஆக-ங.

அதற்குத் தென்மேற்கே 18 கடிகை தூரத்தில்,

**26.** திருக்கச்சூராலக்கோயில்.

சுவாமியார் - விருந்திட்டநாதர்.

தேவியார் - அஞ்சனாக்ஷியார்.

தீர்த்தம் - விருந்து தீர்த்தம்.

சிவபெருமான் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு அமுது கொடுத்த தலம்.

பதிகம் - சுந்தர. பதிகம் - க.

அதற்குத் தென்கிழக்கே 5 கடிகை தூரத்தில்,

**27.** திருவிடைச்சுரம்.

சுவாமியார் - இடைச்சுரநாதர்.

தேவியார் - மடக்கொடி நாயகியார்.

(ஞானபுரீசுவரர், கோவர்த்தனாம்பிகை என்றும் வழங்குகின்றது.)

தீர்த்தம் - மதுர தீர்த்தம். (நான்கு திக்கும் பருப்பதங்கள்.)

மலை - நந்திமலை.

தீபம் - கிருத்திகை தீபம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

அதற்குத் தெற்கே 5 கடிகை தூரத்தில்,

## 28. திருக்கழுக்குன்றம்.

சுவாமியார் - வேதகிரீசுவரர்.

தேவியார் - பெண்ணினல்லா ளம்மையார்.

தீர்த்தங்கள் - பக்ஷி தீர்த்தங்கள், நந்தீசுர தீர்த்தம் முதலியன.

கழுகுகள் பூசிக்கும் தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-க, சுந்தர பதிகம்-க, ஆக-௩.

அதற்குத் தென்மேற்கே 20 கடிகை தூரத்தில்,

## 29. திரு அச்சிறுபாக்கம்.

சுவாமியார் - பாக்கபுரேசுவரர், ஆக்ஷிபீசுவரர்.

தேவியார் - சுந்தரமின்னம்மையார், மரகதவல்லி யம்மையார்.

திரிபுர தகனத்துக்குச் சிவபெருமா னேறிய ரதம் அச்சிற்று, விநாயகரருளாற் கூடிய தலம்.

தீர்த்தம் - சங்கு தீர்த்தம்.

விருக்ஷம் - கொன்றை.

பதிகம் - திருஞான. பதிகம் - க.

அதற்குத் தென்மேற்கே 25 கடிகை தூரத்தில்,

## 30. திருவக்கரை.

சுவாமியார் - சந்திரசேகரேசுவரர்.

தேவியார் - வடிவம்பிகையார் (அமிர்தாம்பிகையா ரென்று வழங்குகின்றது.)

தீர்த்தங்கள் - சந்திர தீர்த்தம், பிரம தீர்த்தம்.

வக்கிராசுரன் பூசித்த தலம்.

பதிகம் - திருஞான. பதிகம் - க.

அதற்குக் கிழக்கே 6 கடிகை தூரத்தில்,

31. திருஅரசிலி எ - து ஒழுந்தியாப்பட்டி.

சுவாமியார் - அரசிலிநாதர்.

தேவியார் - பெரிய நாயகியார்.

தீர்த்தம் - அரசிலி.

பதிகம் - திருஞான. பதிகம் - க

அதற்குத் தென்மேற்கே 2 கடிகை தூரத்தில்,

32. திருவிரும்பைமாகாளம்.

சுவாமியார் - மாகாளேசுவரர்.

தேவியார் - குயின்மொழி நாயகியார், (மதுசுந்தர நாயகியா ரெனவும் வழங்குகின்றது.)

பதிகம் - திருஞான. பதிகம் - க.

ஆக, தொண்டைநாட்டிலுள்ள க்ஷேத்திரங்கள் 32.

திருச்சிற்றம்பலம்.

---

## துளுவநாட்டிலுள்ள க்ஷேத்திரம்.

1. திருக்கோகர்ணம்.

சுவாமியார் - மகாபலநாதர்.

தேவியார் - கோகர்ண நாயகியார்.

தீர்த்தம் - கோகர்ண தீர்த்தம்.

இராவணன் கைலாயத்திலிருந்து சிவபிரானனுக்கிரகத்தாற் கொண்டுவந்த சிவலிங்கப்பெருமானை விநாயகக் கடவுள் உபாயத்தால் வாங்கிப் பிரதிஷ்டை செய்த தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, திருநாவு. பதிகம்-க, ஆக-உ.

திருச்சிற்றம்பலம்.

## வடநாட்டிலுள்ள க்ஷேத்திரங்கள்.

1. திருப்பருப்பதம்.

சுவாமியார் - பருப்பத நாதர்.

தேவியார் - பருப்பத நாயகியார்.

தீர்த்தம் - பாலாழி.

மல்லிகார்ச்சுனம், ஸ்ரீசயிலம் என்பதும் இது.

நந்திகேசுரர் பூசித்த மலை.

பதிகம் - திருஞான. பதிகம் - க, திருநாவு. பதிகம்-க, சுந்தர. பதிகம்-க, ஆக-௩.

2. திருவிந்திர நீலபருப்பதம்.

சுவாமியார் - நீலாசலநாயகேசுவரர்.

தேவியார் - நீலாம்பிகையார்.

தீர்த்தம் - நீலாம்பிகை.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

3. திருவனேகதங்காவதம்.

சுவாமியார் - அருண்மன்னநாயகர்.

தேவியார் - மனோன்மணி யம்மையார்.

தீர்த்தம் - ஞான தீர்த்தம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க.

4. திருக்கேதாரம்.

சுவாமியார் - கேதாரேசுவரர்.

தேவியார் - கேதார கௌரியம்மையார்.

தீர்த்தம் - மந்தாகினி.

ஆறுமாதந் தேவர்களும், ஆறுமாதம் மனுடரும் பூசித்து வருந் தலம்.

பதிகம் - திருஞான. பதிகம்-க, சுந்தர. பதிகம்-க, ஆக-உ.

5. திருநொடித்தான்மலை எ-து ஸ்ரீ கைலாசமலை.

சுவாமியார் - பரமசிவம்.

தேவியார் - பார்வதி யம்மையார்.

தீர்த்தம் - சரவணப் பொய்கை.

பதிகம் - திருஞான. பதிகம்-உ, திருநாவு. பதிகம்-௪, சுந்தர. பதிகம்-க, ஆக-எ.

ஆக வடநாட்டிலுள்ள க்ஷேத்திரங்கள் 5.

திருச்சிற்றம்பலம்.

சிவக்ஷேத்திர விளக்கம் முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

# தேவாரம்.

கற்றுக் கொள்வன வாயுள நாவுள
இட்டுக் கொள்வன பூவுள நீருள
கற்றைச் செஞ்சடை யானுள னாமுளோ
மெற்றுக் கோநம னார்முனி வண்ணமே.

உ

திருச்சிற்றம்பலம்.

# அட்டவீரட்டம்

கட்டளைக்கலித்துறை.

பூமன் சிரங்கண்டி யந்தகன் கோவல் புரமதிகை
மாமன் பறியல் சலந்தரன் விற்குடி மாவழுவூர்
காமன் குறுக்கை யமன்கட வூரிந்தக் காசினியிற்
றேமன்னு கொன்றையுந் திங்களுஞ் சூடிதன் சேவகமே.

௧. திருக்கண்டியூர் - பிரமனது சிரங்கொய்த தலம்.
௨. திருக்கோவலூர் - அந்தகாசுரனைக் கொன்ற தலம்.
௩. திருவதிகை - திரிபுரத்தை யெரித்த தலம்.
௪. திருப்பறியலூர் - தக்கன் சிரசைத் தடிந்த தலம்.
௫. திருவிற்குடி - சலந்தரனை வதைத்த தலம்.
௬. திருவழுவூர் - யானையை யுரித்த தலம்.
௭. திருக்குறுக்கை - மன்மதனை யெரித்த தலம்.
௮. திருக்கடவூர் - இயமனை யுதைத்த தலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

# திருஞானசம்பந்தமூர்த்தி

# திருப்பாசுரம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீரவே.

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதி துணை.

# சைவசமயம், சைவசமயி,

# அநாசாரம்,

# திருக்கோயிற் குற்றங்கள்.

இவை

யாழ்ப்பாணத்து

நல்லூர்

ஆறுமுகநாவலரவர்கள்

எழுதப்பட்டன.

கணபதி துணை.

# சைவ சமயம்

பிறப்பும் இறப்பும் உடையவர்கள் பசுக்கள்; பசுக்கள் எண்ணில்லாதவர்கள்; பசுக்களாவார், தேவர்கள் முதலாகக் கிருமிகள் ஈறாக உள்ள சீவர்கள்.

பிறப்பும் இறப்பும் இல்லாதவர் பதி; பதி ஒருவரே; அந்தப் பதி சிவபெருமான். சிவபெருமானுக்குப் பசுக்களெல்லாம் என்றும் அடிமைகள்; சிவபெருமான் அந்தப் பசுக்கள் தோறும் நிறைந்து நின்று அவர்களை எல்லாம் ஆளுந் தலைவர். ஆதலாற் சிவபெருமான் ஒருவரே பசுபதி. [பசுக்களுக்குப் பதி. பசுபதி: பசு-ஆன்மா, பதி-தலைவன்.]

இந்த உண்மையை விசுவசித்துச் சிவபெருமானை வழிபடுகிற மார்க்கஞ் சைவசமயம். பலரைப் பரம் என்று கொண்டு வணங்குகிற சமயம் சைவ சமயம் ஆகாது. சிவபெருமானிலும் உயர்ந்தவர் உண்டு என்றலவது, சிவபெருமானுக்குச் சமத்துவம் உடையவர் உண்டு என்றலவது, கொள்வதுஞ் சிவத்துரோகம்.

சிவபெருமானின் வேறாகாத திருவருளே சிவசத்தி; அந்தச் சிவசத்தியே பார்வதி தேவியாரென்று சொல்லப்படும். சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அருள்செய்யும் பொருட்டுக் கொண்டருளிய மூர்த்தங்கள்:—

விநாயகக்கடவுள், சுப்பிரமணியக்கடவுள், வைரவக் கடவுள், வீரபத்திரக் கடவுள். இவர்களுக்குச் செய்யும் வணக்கம், சிவபெருமான் ஒருவரைக் குறித்த வணக்கமே யாம். சத்தி-வல்லமை.

முப்பத்துமுக்கோடி தேவர்களைப் பரம் என்று கொண்டு வணங்குகிற மார்க்கமே சைவசமயம் என்று மூடர்கள் பலர் சொல்லுகிறார்கள். மனிதர்களைப்போலவே பிறந்தும் இறந்தும் உழலுகிற தேவர்களைப் பரம் என்று கொள்வது சைவசமயத்துக்கு முற்றும் விரோதம்.

சைவசமயிகளை அஞ்ஞானிகள் (Heathens) என்று கிறிஸ்தவர்கள் வழங்குகிறார்கள். அஞ்ஞானி என்கிற சொல் லுக்குப் பொருள் மெய்க்கடவுளை அறிகிற அறிவு இல்லா தவன். கிறிஸ்தவர்கள் தங்கள் கருத்தின்படி தாங்கள் சைவ சமயிகளை அஞ்ஞானிகள் என்று வழங்கலாம் என்றால், சைவசமயிகளுந் தங்கள் கருத்தின்படி தாங்கள் கிறிஸ்த வர்களை அஞ்ஞானிகளென்று வழங்கலாமே!

சைவசமயிகள் என்று பெயர் இட்டுக்கொண்டு, அநேக மூடர்கள், உயிர்ப்பலி ஏற்கிற துட்ட தேவதைகளை யும்; காடன், மாடன், சுடலைமாடன், காடேறி, மதுரை வீரன், கறுப்பன், பதினெட்டாம்படிக் கறுப்பன், சங்கிலிக் கறுப்பன், பெரியதம்பிரான், முனி, கண்ணகி, பேய்ச்சி முதலானவர்களையும் வணங்குகிறார்கள். இந்தியாவில் அநேக மூடர்கள் மகமதியர்களுடைய பள்ளிவாயிலைச் சேவிக்கிறார்கள். இலங்கையில் அநேக மூடர்கள் ரோமாநு

கத்தோலிக்கருடைய மரியை கோயிலுக்குக் காணிக்கை செலுத்துகிறார்கள். இவர்கள் எல்லாருஞ் சிவத்துரோகி கள்; இவர்களே அஞ்ஞானிகள்.

சைவசமயத்தைத் தமிழ்ச்சமயம் என்றும், சைவசம யக் கோயிலைத் தமிழ்க்கோயில் என்றும், அறிவில்லாத சனங்கள் வழங்குகிறார்கள். தமிழ் என்பது ஒரு சமயத் தின் பெயரன்று, ஒரு பாஷையின் பெயர்.

பெறுதற்கு அரிய மனிதப் பிறவியைப் பெற்றும், மிக மேலாகிய சைவசமய மரபிலே பிறந்தும், சைவசமயம் இப்படிப்பட்டது, அந்தச் சமயக்கடவுள் இப்படிப்பட்டவர், அவரை வழிபடுகிற முறைமை இப்படிப்பட்டது என்று ஆராய்ந்து அறிந்துகொண்டு சைவசமயத்தை அநுஷ்டி யாது, நேர்ந்த நேர்ந்தபடி நடப்பது, ஐயையோ! நரகத் துன்பத்துக்குக் காரணம்.

சைவசமயிகள் சைவசமயத்தை அறியாது கெடுவ தற்குக் காரணம், சைவசமயத்தைச் சைவசமய குருமார் கள் பிரசங்கஞ் செய்யாது விடுதலே. யாதாயினும் ஒரு சமயத்தை அறிந்து பிரசங்கஞ் செய்யாதவர்கள், அந்தச் சமயத்துக்குத் தாங்கள் குருமார்கள் என்று சொல்லிக் கொண்டு திரிவதும், அந்தக் குருத்துவத்துக்கு உரிய பொருளையும் மரியாதையையும் தாங்கள் பெற விரும்புவ தும் என்னை! வெட்கம்! வெட்கம்!!

சிவமயம்.

# சைவசமயி.

விபூதி தரிப்பது மாத்திரமே சைவசமயிக்கு இலக்கணம் என்று அநேகர் எண்ணுகிறார்கள்.

விபூதி தரிப்பது, மற்சமாமிசம் புசியாது விடுவது இந்த இரண்டு மாத்திரமே சைவசமயிக்கு இலக்கணம் என்று வேறு அநேகர் எண்ணுகிறார்கள்.

விபூதி தரிப்பது, மற்ச மாமிசம் புசியாது விடுவது, மற்ச மாமிசம் புசிக்கிறவர் காணமற் போசனஞ் செய்வது இந்த மூன்று மாத்திரமே சைவசமயிக்கு இலக்கணம் என்று வேறு அநேகர் எண்ணுகிறார்கள்.

சைவசமயிக்கு உரிய முக்கிய இலக்கணங்களாவன:—

க. கொலை, களவு, கள்ளுண்ணல், மற்சமாமிசம் புசித்தல், வியபிசாரம், பொய் முதலாகிய பாவங்களை மரணபரியந்தம் விலக்கி நடப்பது.

உ. உயிர்களுக்கு இரங்குதல், மெய்பேசுதல், வறியவர்களுக்கு ஒருபிடி அன்னமாவது கொடுத்தல், செய்ந்நன்றி அறிதல் இந்தத் தருமங்களை மரணபரியந்தம் பாதுகாத்து நடப்பது.

௩. பிதா, மாதா, பாட்டன், பாட்டி, தமையன், மாமன், உபாத்தியாயர், குரு, இராசா முதலிய பெரியோர்களை மரணபரியந்தம் உபசரிப்பது.

௪. சிவதீக்ஷை பெற்றுக்கொள்வது.

௫. விபூதி ருத்திராக்ஷந் தரிப்பது.

௬. சந்தியாவந்தனம், சிவத்தியானம், பஞ்சாக்ஷர செபம், சிவஸ்தோத்திரம், இவைகளை மரணபரியந்தம், நித்தமும், ஒருபக்ஷ நியமத்தோடேயாவது, மனத்தை ஒருக்கி, விதிப்படி அன்புடன் செய்து முடிப்பது.

௭. நித்தமுமாவது, புண்ணிய காலங்களிலாவது சிவலிங்கப்பெருமானை அன்புடன் விதிப்படி வலஞ்செய்து வணங்கித் துதிப்பது.

௮. சைவவினாவிடை, சிதம்பர மான்மிய வசனம், பெரியபுராண வசனம் முதலாகிய புத்தகங்களை வாசித்தாவது கேட்டாவது அறிவது.

௯. சிவபெருமானுடைய மகிமையையும், புண்ணிய பாவங்களையும், சிவபெருமானை வழிபடு முறைமையையும் அறிவிக்கிற சைவப்பிரசங்கங்களைக் கேட்டுச் சிந்திப்பது.

௧௦. சிவநிந்தை, சிவசாத்திர நிந்தை, குரு நிந்தை, சிவனடியார் நிந்தை இவைகளைக் கேளாது நீங்கிவிடுவது.

௧௧. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக

சுவாமிகள் என்னுஞ் சைவசமய குரவர் நால்வருடைய திரு நக்ஷத்திரங்களிலே, அவரவருடைய சரித்திரத்தைக் கேட்டுச் சிவனடியார் ஒருவருக்காவது அன்னங் கொடுத்து, விரதத்துடன் இருப்பது.

கஉ. செய்யத்தகாத பாவத்தைச் செய்தாலும், செய்யத்தக்க புண்ணியத்தைச் செய்யாது விட்டாலும், மனம் பதைபதைத்து அஞ்சி நடுநடுங்கி, குருவை அடுத்து, அவர் சிவாகமப் பிரகாரம் விதித்த பிராயச்சித்தத்தை விசுவாசத்துடன், செய்து கொள்வது.

---

## அநாசாரம்.

1. மற்சம் மாமிசம் புசித்தல்.
2. கள்ளுச் சாராயங் குடித்தல்.
3. மற்சம் மாமிசம் புசிப்பவர், கள்ளுச் சாராயங் குடிப்பவர், தாழ்ந்த சாதியார், அன்னிய சமயிகள் என்கிற இவர்களிடத்தாவது, இவர்களுடன் இருந்தாவது, இவர்கள் காணவாவது போசனம் பண்ணுதல்.
4. சனனசௌசம் மரணசௌசம் உடையவரிடத்தே போசனம் பண்ணுதல்.
5. போசனஞ் செய்தவுடனே எச்சில் தெளியாது விடுதல்.

6. எந்தப் பாத்திரத்தையாவது எச்சிலாக்குதல்.

7. பலகாரம் பழம் முதலியவைகளை எச்சில்பண்ணிப் புசித்தல்.

8. புகையிலைச் சுருட்டுப் பிடித்தல்.

9. வெற்றிலைப்பாக்கு வாயிலிருக்கச் சயனித்தல்.

10. காலையிலே தந்தசுத்தி பண்ணுமுன்னே வெற்றிலைப் பாக்குப் போடுதல்.

11. வாயோடு கையையுங் கையோடு பாத்திரத்தையும் அணைத்து, எச்சில்பண்ணித் தண்ணீர் குடித்தல்.

12. வீட்டு முற்றத்திலும் - கிணற்றங்கரையிலும் - குளக் கரையிலும் - ஆற்றங்கரையிலும் - பூந்தோட்டத்தி லும் - திருவீதியிலும் - எச்சில் உமிழ்தல், மலசலங் கழித்தல்.

13. ஸ்நானத்துக்குஞ் சமையலுக்கும் உபயோகப்படுகிற சலத்திலே சௌசம் பண்ணுதல்.

14. கிணற்றங்கரையிலே சௌசம் பண்ணுதல்.

15. சௌசத்தின் பொருட்டுப் பாத்திரத்திலே சலங் கொண்டுவைத்துக்கொள்ளாது மலசலங் கழித்தல்.

16. சௌசஞ்செய்த உடனும், தந்தசுத்திசெய்த உடனும், போசனஞ்செய்த உடனும், வாய்கொப்பளித்துக் கால் கழுவாது விடுதல்.

17. க்ஷௌரம் பண்ணுவித்துக்கொண்டாலும், துக்க வீட்டுக்குப் போனாலும் உடுத்த வஸ்திரத்துடனே முழுகாது விடுதல்.

18. முகமாத்திரம் க்ஷௌரம் பண்ணுவித்துக்கொள்ளு தல்.

19. மத்தியானத்துக்குப் பின் க்ஷௌரம் பண்ணுவித்தல்.

20. தைச் சங்கிராந்தியிலும், ஆசௌசமுடிவிலும், பழைய மட்பாண்டங்களைத் தள்ளாது விடுதல்.

21. மட்பாண்டங்களை எல்லாருங் காணும்படி வெளியிலே வைத்தல்.

22. பாண்டங்களை நாய், காகம் முதலியவைகள் தீண்ட விடுதல்.

23. ஓரத்திலே துப்பாது வழியிலே துப்புதல்.

24. கஞ்சா, அபின் உண்டல்.

இந்த அநாசாரங்களை எல்லாரும் விலக்கித் திருத்தம் உற நடக்கக்கடவர்கள்.

# திருக்கோயிலிலுந் திருவீதியிலுஞ் செய்யத்தகாத குற்றங்கள்.

1. ஸ்நானஞ் செய்யாது போதல்.
2. தோய்த் துலராத வேட்டி தரித்துக்கொண்டுபோதல்.
3. கால் கழுவாது போதல்.
4. ஆசௌசத்துடனே போதல்.
5. தலையில் வஸ்திரந் தரித்துக்கொள்ளுதல்.
6. சட்டையிட்டுக் கொள்ளுதல்.
7. போர்த்துக் கொள்ளுதல்.
8. மேல் வேட்டி போட்டுக்கொள்ளுதல்.
9. பாதரக்ஷை யிட்டுக்கொள்ளுதல்.
10. வாகன மேறிக்கொள்ளுதல்.
11. குடை பிடித்துக்கொள்ளுதல்.
12. வெற்றிலை பாக்கு உண்டல்.
13. துப்புதல்.
14. மலசலங் கழித்தல்.
15. மூக்குநீர் சிந்துதல்.

16. மயிர் கோதி முடித்தல்.
17. சூதாடுதல்.
18. சிரித்தல்.
19. சண்டையிடுதல்.
20. வீண் வார்த்தை பேசுதல்.
21. காமப்பற்று வைத்தல்.
22. காலை நீட்டிக்கொண்டிருத்தல்.
23. சயனித்தல்.
24. ஆசனத்திருத்தல்.
25. சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் குறுக்கே போதல்.
26. சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் இடையிலே நமஸ்காரம் பண்ணுதல்.
27. சுவாமிக்குக் காலை நீட்டி நமஸ்காரம் பண்ணுதல்.
28. சுவாமிக்குக் காலை நீட்டி அங்கப் பிரதக்ஷிணம் பண்ணுதல்.
29. நிருமாலியத்தைக் கடத்தல்.
30. நிருமாலியத்தை மிதித்தல்.
31. தூபி, துசத்தம்பம், பலிபீடம், விக்கிரகம எனனும் இவைகளின் நிழலை மிதித்தல்.
32. விக்கிரகத்தைத் தொடுதல்.

இந்தக் குற்றங்களைச் செய்தவர்கள் நரகத்திலே தண்டிக்கப்படுவார்கள் என்று ஆகமங்களும், புராணங்களுஞ் சொல்லுகின்றன. குளிக்கப் போய்ச் சேறு பூசிக்கொள்வது போலச் சுவாமி தரிசனமாகிய புண்ணியஞ் செய்யப் போய்ப் பாவத்தைத் தேடிக்கொள்வது புத்தியன்று. எல்லாரும், இந்தக் குற்றங்களை விட்டு விதிப்படி சுவாமி தரிசனஞ் செய்து, திருவருளைப் பெற்று உய்யக்கடவர்கள்.

இந்தியாவிலே, உத்தியோகஸ்தர்கள் அநேகர் சுவாமி சந்நிதானத்திலே விதிக்கு விரோதமாகச் சட்டையிட்டுக் கொண்டும், போர்த்துக்கொண்டும், மேல்வேட்டி போட்டுக் கொண்டும், தலையில் வஸ்திரந் தரித்துக்கொண்டும், பாதரக்ஷை யிட்டுக்கொண்டும், குடை பிடித்துக்கொண்டும் போகிறார்கள். அவர்கள் தங்கள் சமயத்தில் விசுவாசம் உடையவர்களானால் இப்படிச் செய்வார்களா! கிறிஸ்தவர்களுள்ளே கவர்னர் முதலிய பெரிய உத்தியோகஸ்தர்களுந் தங்கள் கோயில்களுக்குத் தங்கள் சமயக் கிரமப்படியே போவதை அவர்கள் காணவில்லையா! தங்களிற் றாழ்ந்த மனுஷர்கள் தங்களெதிரே பாதரக்ஷை இட்டுக் கொண்டாயினும் குடை பிடித்துக்கொண்டாயினும் நின்றால், அவர்களைக் கோபிக்கிறார்களே! இது குற்றம் என்று கொண்டவர்கள், இந்தக் குற்றத்தைத் தாங்கள் சுவாமி சந்நிதானத்திலே செய்யத் துணிவது என்ன செருக்கு!!!

திருச்சிற்றம்பலம்.

# சிவக்ஷேத்திராலய மகோத்ஸவ உண்மை விளக்கம்

உ

சிவமயம்

# சிவக்ஷேத்திராலய மகோற்சவ உண்மை விளக்கத்தின்

## விஷய அட்டவணை


| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| க. | விஷயசூசிகை (நூதனமாக எழுதப்பட்டது; மிக விரிவாயுள்ளது) ... | க-கரு |
| உ. | சிவாலய தரிசனவிதி ... | கசு |
| ௩. | காப்பு, அவையடக்கம் முதலியன ... | 1-2 |
| ச. | க-வது: சிவ விளக்கம் ... | 2-39 |
| | உ-வது: க்ஷேத்திர, ஆலய விளக்கம் ... | 40-84 |
| | ௩-வது: மகோற்சவ விளக்கம் .. | 85-128 |

ரிப்பன் புஸ்தகசாலை, 87, தம்புசெட்டி வீதி, சென்னை

## ஆரியர் திவ்வியதேச யாத்திரையின் சரித்திரம்

[வட இந்தியாவிலுள்ள பல திவ்விய தீர்த்த, திவ்விய ஸ்தலங்களின் மகிமையும் விசேஷங்களும், அந்த ஸ்தலங்களுக்கு இந்நூலின் ஆசிரியர் செய்த யாத்திரையின் வரலாறும்]

உயர்ந்த கிலிட்டு பயிண்டு: விலை ரூபா 2.

ஆரியர் திவ்வியதேச யாத்திரையின் சரித்திர இரண்டாம் பாகமாகிய

## தக்ஷிண இந்தியா சரித்திரம்

உயர்ந்த கிலிட்டு பயிண்டு: விலை ரூபா 5

ஆரியர் திவ்வியதேச யாத்திரையின் சரித்திர முதற் பாகத்தில் ஆரிய நாடாகிய நமது இந்தியா தேசத்தின் வடக்கு, கிழக்கு, மேற்குப் பாகங்களிலுள்ள திவ்ய தீர்த்த, திவ்ய ஸ்தல, திவ்ய பர்வதங்களின் சரித்திரத்தைக் கூறியதுபோல், இவ் விரண்டாம் பாகத்தில் மேடி இந்தியா தேசத்தின் தென்பாகத்திலுள்ள திவ்விய தீர்த்த, திவ்விய ஸ்தல, திவ்விய பர்வதாதி பிரதேசங்களின் விவரங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

மறைஞானசம்பந்த நாயனார் வடமொழியினின்றும் தமிழில் மொழிபெயர்த்தருளிய

## சிவதருமோத்தரம்

[மூலமும் உரையும்: உயர்ந்த கிலிட்டு பயிண்டு: விலை ரூபா 3]

சிவதருமோத்தரம் என்பது ஸ்ரீ குமாரஸ்வாமியார் அகஸ்தியர் வினவிய சிவதருமத்திற்கு உத்தரமாகக் கூறப்பட்ட நூல் எனப் பொருள்படும். இது உயர்ந்த ஓர் சைவாகம சாஸ்திரம். இதனுள் பதிபசுபாச இலக்கணங்களும், சரியாதிபத இலக்கணங்களும், சாலோகாதிபத இலக்கணங்களும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

சிவமயம்

# சிவக்ஷேத்திராலய மகோற்சவ உண்மை விளக்கத்தின்

# விஷய சூசிகை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| காப்பு, அவையடக்கம் | | | 1 |
| 1-வது: சிவ விளக்கம்:— | | | 2-39 |
| (௧) தியாதா | சங்கரன் | சுயம்பு | |
| பரப்பிரமம் | பராபரன் | சம்பு | |
| பரமன் | அரன் | திரியம்பகன் | |
| முன்னோன் | பிஞ்ஞகன் | பர்க்கன் | |
| தாணு | நக்கன் | சாமி | |
| நம்பன் | நிராமயன் | ஈசானன் | |
| தேவன் | உக்கிரன் | மகேச்சுரன் | |
| மாதேவன் | பீமன் | காலகாலன் | |
| சித்தன் | பசுபதி | உருத்திரன் | |
| தற்பரன் | சதாசிவன் | பகவன் | |
| நந்தி | பவன் | எண்குணன் | |
| நிராலம்பன் | ஏகன் | வரதன் | |
| சோதி | நிருமலன் | வாமதேவன் | |
| ஞானமூர்த்தி | அமலன் | சோமசுந்தரன் | |
| நாராயணன் | பிரான் | வைதியன் | |
| அச்சுதன் | அனந்தன் | மறைமுதலி | |
| இறையோன் | ஆதி | விருபாக்கன் | |
| ஷை திருநாமங்களின் பொருள் | | | 14-15 |

(உ) சிவபெருமானது முத்திறத் திருமேனி 16

(ங) சிவபெருமானினின்றும் வேறாகாத திருமூர்த்தங்கள் 16

(ச) சபாபதி, மாதேவி, கணபதி, சுப்பிரமணியர், விட்டுணு ஆதி திருநாமங்களின் விளக்கம் 17

(ரு) பெரும்பாலுஞ் சொற்பொருளொத்தனவாய்ச் சிவபெருமானதும் தேவியினதும் திருநாமங்களின் விபரம் 18

(சு) சிவபெருமானது திருவுருவ விளக்கம் 19-20

(எ) சிவபெருமான் திருத்தாண்டவஞ் செய்தருளும் கோலத்தின் விளக்கம் 22

(அ) சிவபெருமானது பஞ்சப்பிரம மந்திரங்களின் பொருள் விளக்கம் 23

(கூ) சிவபெருமானது திருச்சிகை, திருமுடி, திருமுகம் இவற்றின் தத்வார்த்த விளக்கம் 26

(க0) சிவபெருமானது பஞ்சமுகங்களின் தொழில் முதலியன 27

(கக) சிவபெருமானது திருநேத்திரம், இருதயம், திருவடி இவற்றின் உண்மை விளக்கம் 27, 28

(கஉ) சிவபெருமான் சிகை முதலாயின கொண்டமையின் உட்பொருள் விளக்கம்:

(1) சிகை கொண்டது
(2) உபவீதம் பூண்டது } 28

(3) சந்திரனைச் சூடினது
(4) இடபங் கொண்டது
(5) ஸ்திரீபுஞ்ச நபுஞ்சக வடிவமானது
(6) திருநேத்திரங் கொண்டது
(7) மானேந்தியது
(8) சூலம் பிடித்தது — 29

(9) அட்டமூர்த்தியானது
(10) மழுத் தாங்கியது
(11) வாள் ஏந்தியது
(12) வச்சிரங் கொண்டது
(13) பாசந் தரித்தது
(14) தமருகந் தாங்கியது
(15) சர்ப்பம் பூண்டது — 30

(16) கண்டாமணி தாங்கினது
(17) நீலோற்பலம் தரித்தது
(18) அங்குசம் கொண்டது
(19) பரிவட்டம் கொண்டது
(20) அக்கினி யேந்தியது
(21) வரதாபயங் கொண்டது
(22) கலசமிட்டது — 31

(23) கொன்றைமுதலிய மாலை தரித்தது
(24) பளிங்குநிறங் கொண்டது
(25) அத்திரமுடைமை
(26) முயலகனை யூன்றி நிற்றல்
(27) தூக்கிய திருவடியாதல் — 32


---

## 2-வது: க்ஷேத்திர, ஆலய விளக்கம்:—


(க) சைவசமயத்தின் நான்கு உபாயங்கள்:

(1) தாத மார்க்கத்தின் உண்மை — 41

(2) புத்திர — 42

விஷய சூசிகை


(3) சகமார்க்கத்தின் உண்மை 42
(4) சன்மார்க்கத்தின் ,, 42

(உ) சிவதலங்களின் விசேடம் முதலியன 44-62

(ங) சரீரமும் அண்டமுஞ் சமம் 62-63

(ச) அண்டமானது பஞ்சபூதங்களையுங்கொண்டு விளங்கி நிற்றல்போன்று சரீரமானது பஞ்சபூதமுடைமையைக் கொண்டு நிற்றலின் விளக்கம் 63-64

(ரு) மூத்தானம், மும்மண்டலம், பதினுன்குலோகம், மலைகள், தீவுகள், சமுத்திரங்கள், கிரகங்கள் ஆகிய இவற்றின் உண்மை விளக்கம் 64-65

(சூ) தாவரமாகிய அண்டத்திலே பற்பல உயிர்கள் தோன்றிநின்று அழிதல்போலவே, சங்கமமாகிய சரீரமுஞ் சமம் எனப்பட்டு, முற்கூறிய தலம், தீர்த்தம், ஆலயம், உபசாராதியவற்றை உண்மை நூற் பிரமாண உவமவாயிலாக அதிலறிந்து உண்மை விளங்கக் காட்டுதல்:—

(1) சிவயோகிகள் வீற்றிருக்கும் அந்தர்முகக்ஷேத்திரங்கள் ஆறின் உண்மை 66
(2) ஆருதார க்ஷேத்திரங்களின் விளக்கம் 66
(3) ஜனன மரண தரிசனத்தான் முத்திதரும் தலங்கள் 67
(4) கைலாசம் 68
(5) முத்திகள்: சிவசாலோக்கிய முத்தியின் விளக்கம் 69
,, சிவசாமீப்பிய ,, ,, 69
,, சிவசாரூப்பிய ,, ,, 69
,, சிவசாயுச்சிய ,, ,, 69

(6) ஞானிகள் முழுகி வீடடையும் அகத்தீர்த்தங்களின் உண்மை விளக்கம்:.

(a) சரீரத்தில் — பிரமதீர்த்தம்
(b) கைந்நுதி — தேவதீர்த்தம்
(c) விரல்களின் இறைச்சந்தி — ஆரிடதீர்த்தம்
(d) கனிட்டிகைமூலம் — மானுடதீர்த்தம்
(e) மணிக்கட்டு — பூததீர்த்தம்
(f) தர்ச்சனி அங்குட்டங்களினடு — பிதிர்தீர்த்தம்
69-70

(7) மானத தீர்த்தங்களின் உண்மை விளக்கம்:
(உண்மைபேசல், தானஞ் செய்தல், சமமாய் நிற்றல், தமமுறல், இன்சொற் கூறல், அந்தக்கரணமடக்கல், புறக்கரண மொடுக்கல், ஒருவழிப்படல், பொறுமை யுடைமை, திடமுடைமை; ஞானமுடைமை, உயிர்கட் கிதஞ்செய்தல்) 70

(8) மானத விசேட ஸ்நானஞ் செய்தலின் விளக்கம் 70, 71

(9) புறத்தும் அகத்தும் உள்ள இருவகை ஆலயங்களின் உண்மை விளக்கம் 72

10) புறத்தே காணப்படும் ஆலயத்துள்ள மூலத்தான மண்டபங்கள் ஆறின் விவரமும், தேகாலயத்தி லுள்ள ஆறு ஆதாரங்களின் விவரமும் 72-73

11) புறத்தேயும் தேகாலயத்திலும் காணப்படும் ஆயிரக்கான் மண்டபமும் தீர்த்தமும் 73

12) ஆலயத்தின் பிரகாரங்கள்:

(a) புறத்தேயுள்ள ஆலயத்தின் ஐந்து ஆவரணங்கள், தேகாலயத்திலுள்ள ஐந்து கோசங்கள் இவற்றின் விளக்கம் 73

# விஷய சூசிகை


(b) புறத்தேயுள்ள சில ஆலயங்களின் ஏழு பிரகாரங்கள், தேகாலயத்திலுள்ள சப்த தாதுக்கள் ஆகிய இவற்றின் விளக்கம் 73

(c) புறத்தேயுள்ள சில ஆலயங்களின் மூன்று பிரகாரங்கள், தேகாலயத்தின் மூன்று தேகங்கள் ஆகிய இவற்றின் விளக்கம் 73

(13) கதவு: இதன் உண்மை 73

(14) புறத்தேயுள்ள ஆலயத்தின் சபைகள் ஐந்து, அகத்தேயுள்ள ஆலயத்தின் கோசங்கள் ஐந்து ஆகிய இவற்றின் உண்மை 74

(15) தூபியின் இரகசிய விளக்கம் 74

(16) புறத்தேயுள்ள ஆலயத்தில் காணப்படும் உத்தர கோபுரவாயில், தக்கண கோபுரவாயில், அந்தராள கோபுரவாயில், பலிபீடம், துவசத்தம்பம், நந்தி ஆகிய இவற்றின் தத்துவங்களைத் தேகாலயத்தில் பொருந்தக் காட்டுதல் 74

(17) துவசத்தம்பத்தின் உண்மை விளக்கம் 74-75

(18) சிவலிங்கம்:

(a) மூவித லிங்கங்களின் விவரம் 75

(b) 'லிங்கம்' என்னும் பதத்தின் தத்வார்த்தம் 75

(19) சிவலிங்கத்தினது ஒவ்வொரு பகுதியின் தத்வார்த்தம் 76

(20) 'லிங்கம்' என்னும் பதத்திற்குப் பலர் பலவிதமாகக் கூறும் மாறுபாடான பொருள்களும் கண்டனமும் 76

(21) சிவயோகியர் தமது தேகாலயத்திலிருக்கும் ஆதாரங்களுள் அநாகதம், மணிபூரகம், ஆக்கினை இவற்றின் மூலயாகத் திருவருளினால் அறியப்படும் லிங்கங்களின் விவரம் 76-77

(22) ஆலயத்தில் தேவமூர்த்தங்கள் இருத்தல்போல, சரீரத்தின் ஒவ்வொரு பாகத்திலும் விளங்கும் தேவமூர்த்தங்களை விளக்கிக் காட்டுதல் 78

(23) சிவயோகிகள்: சரீரத்தின் பிருதிவு, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் ஆகிய பஞ்சபாகங்களிலும் பிரமன், விட்டுணு, உருத்திரர், மகேசுரர், சதாசிவம் ஆகிய பஞ்சமூர்த்திகளைத் தாரணை செய்தல் 79

(24) சிவலிங்கம், நந்தி, பலிபீடம் இவற்றின் தத்துவார்த்தம் 79

(25) திருவாசியின் தத்துவம் 80

(26) திருவலகிடலின் தத்துவம் 81

(27) திருமெழுக்கிடலின் தத்துவம் 82

(28) திருவிளக்கிடல், விதானங்கட்டல், இவற்றின் தத்துவம் 83

(29) திரைச்சீலையின் இரகசியார்த்தம் 83

---

## 3-வது: மகோற்சவ விளக்கம் :—

(க) பிரதக்ஷிணம் என்பதன் உண்மை 85

(உ) நமஸ்காரம் ,, ,, 85

(ங) சிவதரிசனத்தின் ,, 86

(ச) சிவமூர்த்தங்கட்குப் பலவிதமாகச் செய்யும் அபிடேக விவரங்களும் அதன் பலன்களும் 86-87

முத்திகாமிகள் அபிடேகஞ் செய்தலின் விவரமும் பலனும் 87

(ரு) திருப்பள்ளித்தாமத்தின் தத்துவம் 88

(சு) முரசு முதலிய வாத்தியங்கள் இசைத்தலின் தத்துவம் 88
(எ) சிவயோகிகளின் தசநாடிகளினின்றெழும் நாதங்களின் விவரம் 88-89
(அ) கீதம் பாடுதலின் உண்மை 90
(கூ) உற்சவாதிகளிலே செய்யப்படும் உபசாரம் மூன்றின் விவரம் 90
(க0) சோடசோபசாரமாவன 90
(கக) ஷை சோடசோபசாரம் சிலவற்றின் உண்மை:
(a) ஆவாகனம்: இதன் உண்மை 90
(b) தாபனம்: ,, ,, 91
(c) சந்நிதானம்: ,, ,, 91
(d) சந்நிரோதனம்: ,, ,, 91
(e) பாத்தியம்: ,, ,, 91
(f) ஆசமனீயம்: ,, ,, 92
(g) அருக்கியம்: ,, ,, 92
(h) புட்பதானம்: ,, ,, 92
(i) தூபதீபம்: ,, ,, 93
(j) நைவேத்தியம்-முகவாசம்: இவற்றின் உண்மை 93-94
(k) செப சமர்ப்பணையின் தத்துவம் 94
(l) ஆராத்திரிகையின் விசேடமும், தத்வார்த்தமும் 94-95
(கஉ) தசோபசாரங்களாவன 96
(கங) பஞ்சோபசாரங்களின் பெயர்களும், இவற்றிற் கடுத்த பொருள்களும் 96
(கச) யாகத்தின் உண்மை விளக்கம்:
(1) இருவகை யாகத்தின் பெயர் 96
(2) தூலயாகமாவது 96

(3) சூக்குமயாகமாவது 96
(4) கருமயாகத்தின் மூன்று வகை 96
(5) காயிகயாகத்தின் ,, ,, 96
(6) வாசிகமாவது. 96
(7) மானதமாவது 96
(8) ஞானயாகமாவது 96
(9) அகத்தில் அறிவு மாத்திரையானே செய்யப்படும் ஞானயாகத்தின் உண்மை 96

(கரு) மகோற்சவாதிகளிலே நிறுத்தப்படும் கும்பங்களின் உண்மை விளக்கம் 97

(கசு) புறத்தே நிகழும் காலவிசேடத்தைப்போன்று சரீரத்திலே நிகழும் கால விசேடங்களின் விவரமும், அவற்றின் தத்துவமும் 98-99

(கஎ) துவசாரோகணத்தின் தத்துவம் 99-101

(கஅ) மஹோற்சவங்களின் தத்துவம்:

(1) முதலாநாள் உற்சவத்தின் இரகசியம் 101-102
(2) 2-ம் ,, ,, ,, 102
(3) 3-ம் ,, ,, ,, 102

(மூவினை, முப்புத்தி, முக்குணம், மும்மனம், முக்குற்றம், முப்பிறப்பு, முப்பற்று இவை நீக்குதல் காரணமாகச் செய்யப்படுவது.)

(a) மூவினையின் விவரம்
(b) முப்புத்தியின் ,,
(c) முக்குணத்தின் ,,
(d) மும்மனத்தின் ,,
(e) முக்குற்றத்தின் ,,
(f) முப்பிறப்பின் ,,
(g) முப்பற்றின் ,,
} 102

(4) 4-ம் நாள் உற்சவத்தின் இரகசியம்: 102
(நாற்கரணமும் நால்வகைத் தோற்றமும் நீக்குதற்பொருட்டுச் செய்யப்படுவது.)

(a) நாற்கரணமாவன
(b) நால்வகைத் தோற்றமாவன } 102

(5) 5-ம் நாள் உற்சவத்தின் இரகசியம்: 102-3
(ஐம்பொறிகளும், ஐந்தவத்தையும், ஐந்து மலங்களும் நீக்குதற்பொருட்டுச் செய்யப் படுவது.)

(a) ஐம்பொறிகளாவன
(b) ஐந்தவத்தைகளாவன
(c) ஐந்துமலங்களாவன } 102-3

(6) 6-ம் நாள் உற்சவத்தின் உண்மை: 103
(உட்பகையாறு, கலையாதியாறு, கன்மமல குணமாறு, பதமுத்தி ஆறு, இவை நீக்குதல் காரணமாகச் செய்யப்படுவது.)

(a) உட்பகை ஆறுவன
(b) கலையாதி ,,
(c) கன்மமலகுணம் ,,
(d) பதமுத்தி ,, } 103

(7) 7-ம் நாள் உற்சவத்தின் உண்மை: 103
(எழ்வகைப் பிறப்பும், வித்தியா தத்துவங்கள் எழும், மாயேய மலகுணம் எழும் நீக்கற் பொருட்டுச் செய்யப்படுவது.)

(a) எழ்வகைப் பிறப்பாவன
(b) வித்தியாதத்துவங்கள் எழாவன
(c) மாயேயமலகுணம் ,, } 103

(8) 8-ம் நாள் உற்சவத்தின் உண்மை: 103
(எண்குணமும் விளக்குதற்பொருட்டுச் செய்யப்படுவது.)
(a) எண்குணங்களாவன 103
(9) 9-ம் நாள் உற்சவத்தின் உண்மை: 104
(மூவடிவங்களும், முக்கிருத்தியங்களும், மூன்றிடத் துறைதலும் இல்லையெனற் பொருட்டாகச் செய்யப்படுவது)
(a) மூவடிவங்களாவன
(b) முக்கிருத்தியங்களாவன } 104
(c) மூன்றிடத்துறைதலாவன
(10) 10-ம் நாள் உற்சவத்தின் உண்மை: 104
(சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத்தாய், அந்தமிலின்பத் தழிவில் வீடான பரானந்த மாக்கடலில் அழுந்துதற்பொருட்டாகச் செய்யப்படுவது)
(11) பதினொருநாள் செய்யப்படும் உற்சவங்களுள், ஒவ்வொருநாள் விழாவிற்கும் வழங்கும் நடனத்தின் விவரம்:—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1-ம் | நாள் | விழா | பிரகிருதி | நடனம் | 104 |
| 2-ம் | ,, | ,, | இருவினை | ,, | ,, |
| 3-ம் | ,, | ,, | முக்குண | ,, | ,, |
| 4-ம் | ,, | ,, | அந்தக்கரண | ,, | ,, |
| 5-ம் | ,, | ,, | பஞ்சேந்திரிய | ,, | 105 |
| 6-ம் | ,, | ,, | காமாதியாறினடனம் | | ,, |

7-ம் நாள் விழா - சத்தகோடி மகா மந்திர நடனம் 105
8-ம் ,, ,, வித்தியாதத்துவ ஆணவ நடனம் ,,
திருக்காப்புநாள் திரோதாயி நடனம் ,,
நவபத ,, ,,
திருவுலாப்புறம் சத்திமுத்தி ,, ,,
திருவணக்கல் வாதனை ,, ,,
10-ம் நாள் விழா பேரின்பாதீத ,, ,,
11-ம் ,, ,, பதிபசுபாச ,, ,,
(கக) பதினொருநாள் திருவிழாக்களின் தத்வார்த்தம்:
(1) 1-ம் நாள் விழா - விருக்ஷத்தடிச் சேவையின் தத்துவம் 105
(2) 2-ம் ,, ,, - சூரிய சந்திர பிரபாகார திருக்காட்சியின் தத்துவம் 105-6
(3) 3-ம் ,, ,, - நந்தி, பூதவாகன ஆரோகணத்தின் தத்துவம் 106
(4) 4-ம் ,, ,, - பல்லக்குச் சேவை, ஐம்முக நாகாரோகணம் இவற்றின் தத்துவம் 106-7
(a) திரைகள் நான்காவன
(b) ஐம்முகங்களாவன
(c) ஆவரணங்கள் ஐந்தாவன } 107
(5) 5-ம் ,, ,, - இலிங்காகார, இடபவாகன ஆரோகணத்தின் இரகசியம் 107-8
(6) 6-ம் ,, ,, - யானைவாகன ஆரோகணத்தின் தத்துவம் 108-9

(7) 7-ம் நாள் விழா - இரதாரூட திருக்காட்சியின்
உண்மை விளக்கம் 110-114
இரதத்தின் ஒவ்வொரு உருப்பு
களுக்கும் இரகசியார்த்தம்
விளக்கப்பட்டுள்ளன.)

(8) 8-ம் நாள் விழா - அசுவவாகனாரோகண திருக்காட்சி
யின் இரகசியார்த்தம் 114-116
(இது லயக்கிரம சங்காரகோலம்
எனப்படும்.)

(9) 9-ம் நாள் விழா - பிக்ஷாடனமூர்த்த திருக்காட்சி
யின் தத்துவ விளக்கம் 116

(10) 10.-ம் ,, ,, -திருநடனக்காட்சியின் வைபவம் 116-7

(a) திருநடனஞ்செய்த மூர்த்திகளின் பெயர்களும்,
திருநடனக்காட்சியின் விவரமும், அவற்றின்
காரணமும்:

(1) கண்ணமூர்த்தி-அல்லியம், குடம், மல்.
(2) காமன் - பேடு.
(3) இந்திராணி - கடையம்.
(4) இலக்குமிதேவி - பாவை
(5) துர்க்காதேவி - மரக்கால்.
(6) சதிரைவேற் பெருமான்-குடை, துடி.
(ஷெ திருநடனங்களுக்குக் காரணம்
விளக்கப்பட்டுள்ளது.)
116-117

(b) சிவபெருமான் ஆடியருளிய திருநடனங்கள்
பலவற்றுள் பிரதானமான பத்து நடனங்களின்
பெயர்களும் அவற்றின் விளக்கமும்:

(1) கான்மாறியாடு நடன விளக்கம் 118
(2) பாண்டரங்க ஷெ 113

(3) கொடுகொட்டி நடன விளக்கம் 118
(4) சந்தியாநிருத்தம் ௸ 118-119
(5) சண்டதாண்டவம் ௸ 119-120
(இதைப் பாண்டரங்கம் எனவும் கூறுப.)
(6) கௌரிதாண்டவம் விளக்கம் 120
(7) வீராட்டகாசம் ௸ 120
(8) ஆனந்தத் தாண்டவம் ௸ 121
(9) அனவரத திருநடனம் ௸ 121-122

(c) பிரதம மகாசங்கார நிருத்தத்தின் தத்துவம் 122-125

(d) அசைவுத்தாண்டவம், குதிக்கும்நடம், சாயும் ஆடல், அசைவற்று நிற்றல் இவற்றால் குறிக்கப்படும் ஞானம், வட்டம், அநுக்கிரகம், பந்தம் ஆகிய இவற்றின் விளக்கம்:—

(1) ௸ ஞானத்தின் விவரம்: (பிரமஞானம், ஈஸ்வரஞானம், சத்திஞானம், ஆன்மஞானம்) 125-6

(2) ௸ நான்கு வட்டங்கள்: (ஓங்காரவட்டம், அகாரவட்டம், உகாரவட்டம், மகாரவட்டம்.) 125-126

(3) ௸ நான்குவித அனுக்கிரகங்கள்: 126
ஆன்ம ஞானுனுக்கிரகம்,
சத்தி ,,
ஈஸ்வர ,,
பிரம ,,

(4) ௸ பந்தங்களின் விவரம்: 126
சன்மபந்தம்
கன்மபந்தம்
விருத்திகுணபந்தம்
அபிமானபந்தம்
அவிவேகபந்தம்

தொந்தார்த்த பந்தம்
விடயபந்தம்
வாசனுபந்தம் } 126

(11) 11-ம் நாள் விழா - நடராஜ, தியாகராஜ மூர்த்த தரிசன கோலத்தின் இரகசியார்த்தம் 126

(உ௦) பதினொருநாட் செய்யப்படும் உற்சவங்களுக்குக் காரணம்:—

(1) முதல் ஐந்து நாள் உற்சவம் - (தோற்றக்கிரம பஞ்சகிருத்திய விளக்கங் காரணம்) 126

(2) பின் ஐந்து நாள் உற்சவம்-(லயக்கிரம பஞ்சகிருத்திய விளக்கங் காரணம்) 126

(3) 11-ம் நாள் உற்சவம் - (மோக்ஷப் பிராப்தி உணர்த்தல் காரணம்) 126

(உக) இருபத்தொரு நாள் செய்யப்படும் உற்சவங்களுக்குக் காரணம்:—

(1) முற்பதினறு நாள் உற்சவம் - (சோடசகலா தரிசன நிமித்தம்.) 127

(2) பின் நாலு நாள் உற்சவம்-(சதுர்தாரக பிரமக் காட்சி நிமித்தம்.) 127

(3) 21 - ஆம் நாள் உற்சவம் - (சிவ சிவைக்கிய முத்தி விளக்கங் காரணம்) 127

சிவ, க்ஷேத்திராலய, மகோற்சவ உண்மை விளக்கத்தின் விஷய சூசிகை முற்றுப்பெற்றது.

# சிவாலய தரிசன விதி

## திருக்கோயிலுக்கு எப்படிப் போதல்வேண்டும்?

ஸ்நானஞ்செய்து, தோய்த்துலர்ந்த வஸ்திரந்தரித்து, சந்தியாவந்தன முதலியன முடித்துக்கொண்டு, தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை, கருப்பூரம் முதலியன வைக்கப்பட்ட பாத்திரத்தைத் தாமே எடுத்துக்கொண்டேனும், பிறரால் எடுப்பித்துக் கொண்டேனும், வாகனாதிகளின்றி நடந்து போதல்வேண்டும்.

## திருக்கோயிலுக்குச் சமீபித்தவுடனே யாது செய்தல் வேண்டும்?

கால்களைக் கழுவி ஆசமனஞ்செய்து, தூல லிங்கமாகிய திருக்கோபுரத்தைத் தரிசித்து, இரண்டு கைகளையுஞ் சிரசிலே குவித்து, சிவநாமங்களை உச்சரித்துக்கொண்டு உள்ளே போதல்வேண்டும்.

## திருக்கோயிலுள்ளே போனவுடன் யாது செய்தல் வேண்டும்?

பலிபீடத்தையும் துவஜஸ்தம்பத்தையும் இடபதேவரையும் கும்பிட்டு, பலிபீடத்துக்கு இப்பால், வடக்கு நோக்கிய சந்நிதியாயினும் மேற்கு நோக்கிய சந்நிதியாயினும் இடப்பக்கத்திலும், கிழக்கு நோக்கிய சந்நிதியாயினும் தெற்கு நோக்கிய சந்நிதியாயினும் வலப்பக்கத்திலும் நின்று, அபிஷேக சமயம் நிவேதன சமயமல்லாத சமயத்திலே, ஆடவர் அஷ்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும், மூன்றுதரமாயினும், ஐந்துதரமாயினும், ஏழுதரமாயினும், ஒன்பதுதரமாயினும், பன்னிரண்டுதரமாயினும் பண்ணல்வேண்டும். நமஸ்காரம் ஒருதரம் இருதரம் பண்ணல் குற்றம்.

## நமஸ்காரம் பண்ணியபின் யாதுசெய்தல் வேண்டும்?

எழுந்து, இரண்டு கைகளையும் குவித்து, ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை உச்சரித்துக்கொண்டு, கால்களை மெல்லவைத்து மூன்றுதரமாயினும் ஐந்துதரமாயினும் ஏழுதரமாயினும் ஒன்பதுதரமாயினும் பதினைந்துதரமாயினும் இருபத்தொருதரமாயினும் பிரதக்ஷிணம் பண்ணி, மீண்டும் சந்நிதானத்திலே நமஸ்காரம் பண்ணல்வேண்டும்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவக்ஷேத்திராலய மகோற்சவ உண்மை விளக்கம்.

## காப்பு.

### நேரிசை வெண்பா.

பூதலத்தா ருய்யவே போற்றுசிவன் கோயிறலை
மோதருமா வுற்சவத்தி னுண்மைசில—பேதையே
னேற்றவே யாமுகனைம் மாமுகமா தாபரையே
யேற்றுமே நல்லருளோ டெண்.

ஸ்ரீலங்கா யாழ்ப்பாணத் தேமேற் புலோலியிலே
யூரிலங்குஞ் சந்நிதியா ருய்யவே—பேரிலங்கக்
கோணும்பா ளன்பாற் குடிகொண்டெம் மான்கதிரை
வாணுதா நல்லருடான் வை.

## அவையடக்கம்.

### ஆசிரியவிருத்தம்.

சிவன்றல மிகுமா லயமேலோற் சவத்தைத்
தேர்ந்திடா திகழ்பவத் துச்சஞ்
சிவன்றல மிகுமா லயர்க்கிடா திவெட்
டையமோ சிறியதே னானெய்

*சிவன்றல மிகுமா லறிவுளோர் குணநெய்த்*
*தேக்குதோங் திரித்தளிப் பாரஞ்*
*சிவன்றல மிகுமா லிருந்தலா லிகழா*
*செம்பொரு டெளிப்பாற் சீரே.*

**கட்டளைக் கலிப்பா.**

*நல்ல யாழ்ப்பாண மேலைப் புலோலியி*
*ளுளு மெங்கட் கருட்செய வந்துறை*
*செல்வ ளுதுங் கதிரையில் வேலவன்*
*சீர டித்துணை செய்துணை யாவலு*
*கல்ல லோட லறிவில னீங்கிதை*
*யேற்றி னேன்குறை யாண்டிட லீங்கிது*
*மல்கு நந்தா மணிவிளக் காயெழ*
*மாசி லெந்தை யருளேண்டு முண்மையே.*

---

## நூல்.

### முதலாவது

# சிவ விளக்கம்.

*அருமணிக் கடல் சூழ்ந்த நிலவுலகத்திலே, கிறிஸ்து, மகமதியம், பூதம், உலோகாயதம், சௌத்திராந்திகம், யோகசாரம், மாத்மிகம், வைபாடிகம், ஆருகதம், ஆசீவகம், பாட்டம், பிரபாகரம், சூரியவாதம், மிச்சிரவாதம், கருமவாதம், சூனியவாதம், தார்க்கீகம், மீமாஞ்சகம், ஏகான்மவாதம், சத்தப்பிரமவாதம், பாற்கரியவாதம், கிரீடாப்பிரமவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம், சாத்தேயம், காபாலிகம், துவிதவாதம், சிவசமவாதம், சைவம், பாசுபதம், மகாவிரதம், காளாமுகம், வாமம், வைரவம், பாடாணவாதம், சங்கி*

## உண்மை விளக்கம்.

சாங்கவாதம், அவிகாரவாதம், பரிணாமவாதம், சுத்தசைவம், பேதவாத சைவம், முதலிய அநேக சமயங்கள் இருக்கின்றன.

இவைகள் எல்லாவற்றையும் கடந்து சிரம்போல நின்றொளிர்வதும், அகச்சமயம் ஆறுக்கும் விரோதமின்றி யவற்றின் முடிவாய் நிற்பதும், வேதாந்தத் தெளிவுண்மைப் பொருளை உணர்த்துவதும், வைதிகசைவ சுத்தாத்துவித சைவசித்தாந்த சமயமே யாம்.

சிவப்பிரகாசம்.

"புறச்சமயத் தவர்க்கிருளா யகச்சமயத் தொளியாய்ப்
புகலளவைக் களவாகிப் பொற்பணிபோ லபேதப்
பிறப்பிலதா யிருள்வெளிபோற் பேதமுஞ்சொற் பொருள்போற்
பேதாபே தமுமின்றிப் பெருநூல் சொன்ன
அறத்திறனால் விளைவதா யுடலுயிர்கண் ணருக்க
னறிவொளிபோற் பிறிவருமத் துவித மாகுஞ்
சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாஞ் சைவ
சித்தாந்தத் திறனிங்கு தெரிக்க லுற்றாம்."

அவிரோதவுந்தியார்.

"ஆறு நெறிக்கு மவிரோத போதமே
தேறுமெய்ஞ் ஞானியென் றுந்தீபற
சித்தாந்த மாகுமென் றுந்தீபற."

அன்றியும், அநாதி பரமார்த்த பரவஸ்துவினாலே சுத்தமாயா வயலிலே திருவருள் என்னும் வித்தையிட்டுச் சிவ கருணைவெள்ளப் பெருக்கால் வளர்க்கப்பட்ட வேதம் என்னும் விருட்சத்துக்கு இலை, தளிர், அரும்பு, மலர், பிஞ்சு, காயாதியன அகமதங்கள் எனவும், உச்சியிற் கனிந்த பெரும்பழப்பொருள் வேதாந்தம் எனவும், அப்பழத்தின் சாரமாய் மாதுரசுவையா யுள்ள தேனாயிருப்பது இது சைவசித்தாந்தமே எனவும், ஆன்றோர் வற்புறுத்திக் கூறிநு

ராயின், பேரானந்தப் பெருவாழ்வளிக்கும் இஞ்ஞானத்தேனின் பிர பாவத்தை யினைத்தென வியம்பல் எளிதன்றே!

பண்டார மும்மணிக்கோவை.

"தடிலை யென்னுந் தடவய ணுப்ப
ணருள்வித் திட்டுக் கருணைநீர்ப் பாய்ச்சி
வேத மென்னும் பாதபம் வளர்த்தனை
பாதபந் தன்னிற் படுபயன் பலவே - யவற்று
ளிலைகொண் டுவந்தனர் பலரே யிலையொரீஇத்
தளிர்கொண் டுவந்தனர் பலரே தளிரொரீஇ
யரும்பொடு மலர்பிஞ் சருங்கா யென்றிவை
விரும்பினர் கொண்டுகொண் டுவந்தனர் பலரே
யவ்வா றுறுப்பு மிவ்வாறு பயப்ப
வோரும்பே ராந்தமென் றுச்சியிற் பழுத்த
வாரா வின்ப வருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே."

இத்துணை விசேடமுற்ற அதன் கருத்தாக வெல்லாவற்றையும், திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் முதலிய சைவசித்தாந்த சந்தானாசாரியர்கள், செந்தமிழ் மொழியிலே திருவுந்தியார் முத லிய பதினான்கு சாத்திரங்களால் தெளிவுறத் திரட்டி விளக்கியருளி னார். அவைகள்:—

"உந்தி களிறு வுயர்போதஞ் சித்தியார்
பிந்திருபா வுண்மை பிரகாசம்—வந்தவருட்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
வுண்மைநெறி சங்கற்ப முற்று." என்பனவாம்.

இவைகளிலே தெரித்துணர்த்துவது சிவ முதலாய திரிபதார்த்த உண்மையேயாம். இதுவே மற்றை யறிவுடையோரானும் ஞாயம், சோதனை, பொருத்தானுபவங்களால் ஆராயப்பட்டு, உண்மையென

நிச்சயிக்கப்பட்டதாம். இதைத் தெரிவித்தலே வேதமுதலாய சகல கலைகளினதுங் கருத்ததாகும்.

சிவப்பிரகாசம்.

"பலகலையாகம வேதம் யாவையினுங் கருத்துப் பதிபசுபாசந் தெரித்தல்."

கந்தபுராணம்.

"சான்றவ ராய்ந்திடத் தக்க வாம்பொருண்
மூன்றுள மறையெலா மொழிய நின்றன
வான்றதோர் தொல்பதி யாருயிர்த்தொகை
வான்றிகழ் தளையென வகுப்ப ரன்னவே."

அந்த முப்பொருளையுங் காண்பாம்.

சிவதத்துவ முதற் பிருதிவி தத்துவ மீறாகத் தத்துவ தாத்துவிகமாய் நின்று, அவன், அவள், அதுவெனச் சுட்டி யுணரப்படும் உலகமானது, கடம்போற் றோன்றிநின்றழியுங் குணவய முடைமையாற் காரியமேயென்று அநுமிக்கப்படும். அது சித்து அசித்து என இருபாற்படும். அவற்றுட் சித்துப் பொருளான ஆன்ம வர்க்கங்கள் தாமே யறியாது ஒருவர் அறிவிக்க அறியுஞ் சிற்றறி வுடைமையானும், அசித்துப் பொருளான தேகாதி மல மாயாகர்ம காரியங்கள் தாமே அசையமாட்டாவாய் ஒருவர் அசைவிக்க அசையுஞ் சடத்துவ முடைமையானும், இவ்விருவகைப் பிரபஞ்சங்களுந் தாமே இயங்க மாட்டாவாம். இவைகளை இயக்கி மகாசங்கார கிருத்திய மியற்றும் சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்தத்துவ ஆதியந்தரகித பரவஸ்து ஒன்று வேண்டப்படும்.

சிவஞானபோதம்.

"அவனவ ளதுவெனு மவைமூ வினைமையிற்
றோற்றிய திதியே யொடுங்கிமலத் துளதா
மந்த மாதி யென்மனார் புலவர்."

சிவதருமோத்தரம்.

"ஆக்கைசடந் தனித்தியங்கா தறிவனையு மின்றியகத்
தாக்கைவினைக் கெனவறியப் படுங்காண மான்மாவுக்
காக்கைவித் மபேதமென வைத்தியக்க மறிவிக்கு
மாக்கைவிதத் ததிபதியே யமலனுயிர்க் கதிபதியே."

திருவள்ளுவர் குறள்.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

அவ்வஸ்துவே பதி, அது அறிவிக்க அறிவதே பசு, அசைவிக்க அசைவதே பாசம் ஆம்.

தணிகைப்புராணம்.

"அறிந்துயிர்க் கறிவிப் பதுபதி யறிவித்தா
லறிந்துநிற் பதுபசு வதுசிவத் தடையாமைச்
செறிந்துவையகத் தாய்ப்பதா ணவந்திரள் கருவிச்
துறந்தமாயை மற்றாணது பலைறிறக் கருமம்."

பதி என்னும் பதத்தை பா-பகுதி (காத்தல்), தி - வினைமுதற் பொருள் விகுதி எனக் கொண்டு காப்பது எனவும்; பசு என்னும் பதத்தை பச்-பகுதி (பந்தித்தல்), உ-செயப்படுபொருள் விகுதி எனக் கொண்டு பந்திக்கப்படுவது எனவும்; பாசம் என்னும் பதத்தை பச்-பகுதி (பந்தித்தல்), அ-கருவிப்பொருள் விகுதி யெனக் கொண்டு பந்திக்குங் கருவி எனவும் பொருளுரைத்து மூன்றும் அநாதி நித்தியம் என்ப. இக்கருத்துத் தோன்றவே திருக்கடவூர் உய்யவந்ததேவ நாயனர்,

"அநாதி சிவனுடைமை யாவெவையு மாங்கே
யநாதியெனப் பெற்ற வனுவை—யநாதியே
யாத்த துயரகல வம்பிகையோ டெவ்விடத்துங்
காத்த லவன்கடனே காண்." எனக் கூறினர்

இவைகளுள் பதிவஸ்துவோ ஒன்று மல்ல, இரண்டு மல்ல, ஒன்றிரண்டு மல்ல, உள்ளது மல்ல, இல்லது மல்ல, நல்லது மல்ல. தீயது மல்ல, நாமே பிரமம் என அகங்கரிக்கும் பசுஞானமு மல்ல, மற்றைய பாசஞானமு மல்ல, ஆன்மாவு மல்ல, அதற்கறிவாய் நிற்கும் ஞானமு மல்ல, இவைகளோடு ஆதியந்தமு மின்றி விளங்குவதாம்.

திருக்களிற்றுப்படியார்.

"ஒன்றன் றிரண்டன் றுளதன் றிலதன்று
நன்றன்று தீதன்று நானன்று—நின்ற
நிலையன்று நீயன்று நின்னறிவு மன்று
தலையன் றடியன்று தான்."

அது ஞாதுரு ஞான ஞேயம் என்னுஞ் சங்கற்பனைகளை விட்டு ஒன்றா யுணருஞ் சிவஞானத்தா னன்றி யேனையவாய பசு பாச ஞானங்களால் அறியப்படாததாய், உருவம் நாமம் முதலிய கற்பனை கடந்ததாய், அருவமாய் விளங்கினும் சிற்றறிவினர்களாகிய ஆன்மாக்கள் வழிபட் டுய்யவேண்டுமென முகிழ்த்த பெருங் கருணையினாலே சகளீகரிக்கும் என்பதும், ஆயிரம் பதினாயிர முதலான நாமங்களைத் தனக்கு வழங்க நிற்கும் என்பதும் ஆப்த வாக்கேயாம்.

பிரமகீதை.

"சமபுவி னருளா லன்றிமா மறையுஞ் சகலதே வதைகளு மந்த [வாஞ்
வும்பனை யுணரோ மருள்பெறும் பொருட்டே யோதிய யாவையு முனை
செம்பொரு டன்னை யருளினாலொழியத் தெரிவினாற் றெரிக்குவ ராக
நம்புமா னுடவர் கையினா லூற்ற மறிவரோ நாசியா லொழிய."

சூதசங்கிதை.

"மறைமுத றனக்கு நாமரூ பங்கள் மருவுத லில்லையே யெனினுங்
கறையற விளங்கு மாயையி னாலே கற்பிக்கப் பட்டன வாகு
முறைமையச் சிவன்மா தேவன்முற் பெயர்க ளுருத்திர னுமங்க ளாகு
மறைபரம் பிரம முதற்பெயர் பாதத் துவ்விர் வாசக மாமால்."

திருவுந்தியார்.

"அகளமா யாரு மறிவரி தப்பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீபற
தானாகத் தந்ததென் றுந்தீபற."

திருவாசகம்.

"ஒருநாம மோருருவ மொன்றுமில்லாற் காயிரந்
திருநாமம் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ."

பதினோராந் திருமுறை.

"ஒருபதி னாயிரந் திருநெடு நாமமும்.

அப் பதிப்பொருளுக்கு வேதாகமாந்தங்கள் கற்பிக்கும் நாமரூபங்களோ ஏனைய மதத்தர்கள் கற்பிக்கும் பயனில்லா நாமவடிவங்களைப் போலாது ஒவ்வொன்றும் ஆன்மாக்கட்குக் கடவுட் பிரபாவத்தை விளக்கி உண்மையைக் காட்டுவனவாம். அவற்றுள்ளும் திருநாமங்கள் ஒவ்வோர் தாதுக்களுக்கும் பொருள் கொள்ளப்படும் விசேடமுடைத்து. அத் திருநாமங்கள் மிக விசேடமுடையதும், தான் ஒன்றே நின்று அப் பதிவஸ்துவி னிலக்கணங்களை அறிவித்து முத்தி கொடுப்பதும், சிவ என்னும் திருநாமமேயாம்.

இதன் பிரபாவத்தை ஆராயப்புகின்,

"அளவி றந்தது வருள்சிவ சிவசிவ
யகதி றைந்தது வடியிணை சிவசிவ
உளவி றந்துயி ருணர்வொடு பரமற
வெளிரு கின்றது சிவசிவ சிவசிவ."

என வருவன அறிவுளார் வாக்காகலான் அதனுண்மை இருவினையொப்பு மலபரிபாகமுற்ற சிவாநுபவ மகான்களுக்கே யன்றி நம்போல்வார்க்கு விளங்கத் தக்கதன்று. ஆயினும் உண்மை நூன் முகத்தாற் சிறிது கூறுவாம்.

வேதம் நான்கும், வேதாங்கம் ஆறும், மீமாஞ்சை - நியாயம் - புராணம்-மிருதி என்னும் உபாங்கம் நான்கும், ஆகிய பதினான்கும் வித்தைகள் எனப்படும். அவைகளுள் வேதமே மேலானது.

கூர்மபுராணம்.

"அங்க மாறு மறைநான்கு மீமாங் கியமென் றருள்கொழித்துத்
தங்கு நீதி நூலொன்று புராண மொன்று தவநெறிந்து
பொங்கு தரும நூலொன்று புகன்ற வீரேழ் விஞ்சையினை [யோர்."
அங்க னுலகின் றவனளித்தா னவற்றை யுணர்ந்தோ ரறிவுடை

சூதசங்கிதை.

"எல்லாப் பிரமா ணங்களுக்கு மிமைமுக் கியமாம் பிரமாணம்
வல்லா ருரைக்கும் வேதமே."

அவ் வேதத்தினுள்ளும் சதருத்திரீயம் என்னும் உருத்திரைகாதசனி மேலானது; அதனுள்ளும் ஸ்ரீ பஞ்சாக்கரமே மேலானது; அதனுள்ளும் சிவ என்னும் இரண்டெழுத்தே மேலானது; ஆகவே, வேத புருடனுக்கு உருத்திரைகாதசனி கண்ணும், பஞ்சாக்கரம் கண்மணியும், சிவ என்பது கட்பார்வையுமாம்.

இச் சிவ என்பது மகாகாரண பஞ்சாட்சரம் எனவும், உருத்திரம் எனவும் பெயர் பெறும்.

பஞ்சாக்ஷரப் பதி பசு பாச விளக்கம்.

"பாச மாகிய விரண்டையும் படிறெனத் தள்ளி
நேச மாகிய விரண்டையு நெஞ்சிடை யழுத்திக்
காச நீங்கிய கண்ணென முத்தியைக் காண்பா
யாசை நீங்கிய நிலையிது விதற்கிலை யையம்."

திருவருட்பயன்.

"சிவமுதலே யாமாறு சேருமேற் றரும்
பவமிதுநீ யோதும் படி."

பெரியபுராணம்.

"அருமறைப்பய னாகிய வுருத்திர மதனை
வருமுறைப்பெரும் பகலுமெல் லியும்வழு வாமே
திருமலர்ப்பொகுட் டிருந்தவ னனையவர் சிலநாள்
ஒருமை யுய்த்திட வுமையிட மகிழ்ந்தவ ருவந்தார்."

"சிவ என்னும் இத் திருநாமத்தை அன்புடன் உச்சரித்தலினாலும் கேட்டலினாலும் சமஸ்த பாவங்களும் அழிக்கப்படும்" என்று சிவார்ச்சனாமணிதீபிகை செப்புகின்றது. அன்றியும், இதை உச்சரித்துக் கடவுட் டியானஞ் செய்வோர் ஒரு மாத்திரைக்குள்ளே அவரது திருவருளைப் பெற்றுச் சிவகதி யடைவார்கள்.

தேவாரம்.

"சாத்தி ரம்பல பேசுஞ் சழக்கர்காள்
கோத்திர முங்குல முங்கொண் டென்செய்வீர்
பாத்தி ரஞ்சிவ மென்று பணிதிரேன்
மாத்தி ரைக்கு ளருளுமாற் பேறரே."

திருமந்திரம்.

"சிவசிவ வென்கிலர் தீவினை யாளர்
சிவசிவ வென்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ வென்றிடத் தேவரு மாவர்
சிவசிவ வென்னச் சிவகதி தானே."

இவ் வுருத்திர மந்திரத்தையே சோணாட்டுத் திருத்தலையூர்த் தூய வேதியர்குலத் தோன்றலான ஸ்ரீ பசுபதிநாயனார் அவர்கள் செந்தாமரைத் தடாகத்திற் கழுத்தளவு நீர்க்குள் நின்று அகோராத்திரஞ் செபித்தமையா லன்றோ உருத்திரபசுபதி (நாயனார்) என்னுங் காரணத் திருநாமத்தையும் பெற்றதோடு சிவ சாலோக்கிய மடைந்து, திருவடிநீழற் கருகிருக்கும் சிவசாமீப்பிய முத்தியையும் அடைந்தார்.

## பெரியபுராணம்.

"நீடு மன்பினி லுருத்திர மோதிய நிலையா
லாடு சேவடி யருகுற வணைந்தன ரவர்க்குப்
பாடு பெற்றசீ ருருத்திர பசுபதி யாராங்
கூடு நாமமு நிகழ்ந்தது குவலயம் போற்ற."

இன்னும் இவ்வுலகத்தார் முத்தி யடைதற்கு ஆசைகொள்ளும் பொருட்டு இந்தச் சிவ என்னுந் திருநாமத்தை யுச்சரித்துக்கொண்டு, அவதரித்தமையா லன்றோ காரணச் சிறப்புப் பெயரோடு சிவஞான முத்தியையும் பெற்றார் சிவவாக்கியர்.

## தாயுமானசுவாமிகள் பாடல்.

"தேவர்தொழும் வாதவூர்த் தேவே யென்பேன்
திருமூலத் தேவேயிச் சகத்தோர் முத்திக்
காவலுறச் சிவவென்வாக் குடனே வந்த
வரசேசும் மாவிருந்துன் னருளைச் சாரப்
பூவுலகில் வளரருணை கிரியே மற்றைப்
புண்ணியர்கா ளோவென்பேன்."

சிவ என்னும் இஃதை சி, வ எனத் தனித்தனி பிரித்து (மகாரத்திலே மலமும், நகாரத்திலே திரோதசத்தியும், யகாரத்திலே ஆன்மாவும் நிற்றல்போல) சிகாரத்திலே பதியும் வகாரத்திலே அருளும் நின்றடங்கலால், சிகாரம்: பதியக்ஷரம் எனவும், மகாமனுவெனவும், பெருவெழுத்து எனவும், பேசா எழுத்து எனவும்; வகாரம்: பரையக்ஷரம் எனவும், பிஞ்செழுத்து எனவும், பேசும் எழுத்து எனவும் பெயர்பெறும். இவை யிரண்டும் சூரியனும் ஒளியும்போல் நிற்கும்.

## கோடிக்கவி.

"பிஞ்செழுத்து மேலைப் பெருவெழுத்து—நெஞ்சழுத்திப்
பேசு மெழுத்துடனே பேசாவெழுத்தினையும்......"

திருமந்திரம்.

"நாயோட்டு மந்திர நான்மறை வேதம்
நாயோட்டு மந்திர நாதாந்த சோதி
நாயோட்டு மந்திர நாதனி ருப்பிட
நாயோட்டு மந்திர நாமறி யோமே."

பஞ்சாட்சரப் பதி பசு பாச விளக்கம்.

"பானுவா மிறையெ ழுத்து அதனொளி பரையெ ழுத்து."
இவ்விரண்டக்ஷரங்களுள்

பதியெழுத்தாகிய சிகாரம்: அருமையான தேயுதத்துவமாய், ரூபவிடயமாய், செந்நிறத்ததாய், அக்கினிமயமாய், (தன்னிடத்திற் பொருந்தின ஆன்மாக்கட்குச் சங்கற்ப விடுதி நிலைபெற்றுத் திடமானத்திற் சர்வார்த்த ஞானத்தைப் பிரகாசிப்பிக்கும்) வித்தியாகலையாய், அகோரமுகமாய், (இச்சா ஞானக் கிரியையை விளக்கும் திரிநேத்திரங்களோடு கூடிய ஓர் திருமுகமுடைத்தான) மூர்த்திசாதாக்கியமாய், உருத்திர வடிவமாய், பாச சங்காரத்தைத் தருகின்ற ஞான சூரியப் பிரகாசமாய் இருக்கும் என்ப.

பரையெழுத்தாகிய வகாரம்: வாயு தத்துவமாய், பரிச விடயமாய், புகைநிறத்ததாய், காற்றுமயமாய், (தன்னிடத்திற் பொருந்தின ஆன்மாக்கட்குச் சர்வார்த்தஞானப் பிரகாசத்தால் இராகத்துவேஷமின்றி யிருத்துவிப்பதாகிய) சாந்தி கலையாய், தற்புருடமுகமாய் (கலைகளுக்கப்பாற்பட்டதும் ஸ்தம்பாகாரமான லிங்கமாகி விளங்குவதும் கோடிசூரியப் பிரகாசமாகி யிருப்பதும் சோதியினூடே அந்தர்க்கதமூர்த்தியா யுள்ளதும் ஆன) அமூர்த்தி சாதாக்கியமாய், மாகேசுர ரூபமாய், திரோபவத்தைத் தருகின்ற சத்தி வடிவமா யிருக்கும் என்ப.

"இவ்விரு அக்ஷரங்களையுஞ் சேர்த்து மெய்யன்புடனே மனத்தில் சதா தியானிப்பவர்கள் பிறவாமுத்தி யடைவார்கள்; செபிப்

போர் இஷ்ட சித்தியை யடைவார்கள்," என்று பரம கருணாநிதியாகிய சிவபெருமானே உலக மாதாவாகிய தேவியார்க் குபதேசித்தருளினார் எனின், அதன் பெருமை யினைத்தென்று அறிவாராக.

நிஷ்டாநுபூதி.

"விதிசேர் பஞ்சாட் சரந்தன்னை விளங்க வுரைத்தோ மேலியம்பல்
பதியின் மூனுவா மதையுளத்திற் பதித்தோர் பரம பதமடைவார்
கதிசேர் செபமு நீங்காதோர் கருதும் பலனே யடைவரென
மதிசேர்சடையெம் மண்ணலுமை மகிழ வுரைத்தான்வாய்மலர்ந்தே."

இத்துணை விசேடமுற்ற ஶிவ (சிவ) என்னுஞ் சம்ஸ்கிருத பதமே தமிழில் சிவன் என்றாயிற்று. அதன் சூக்குமப் பொருளிருக்க வெளிப்படையான பொருளை யொருவாறு காட்டுவாம்.

ஶிவ (சிவ) என்னும் பதத்தில் ஶி என்னுந் தாது "கிடத்தல்" எனவும், ஶோ என நின்று "மெலிவித்தல், கூருவித்தல்," எனவும் பொருட்டாலனும், ஶிவ என்னும் பதம் மங்கலம் எனப் பொருள் கொடுத்தலானும், எழுத்து நிலைமாறலால் வந்த வஶி (வசி) எனும் பதம் காந்தி எனப் பொருட்டாலனும், தோன்றும் பொருள்களாவன:—

(க) சாதுக்களுடைய மனந் தம்பாற் கிடக்கப்படுபவர்.
(உ) மகா சங்காரகாலத்து உலகமெல்லாந் தம்மிடத்து ஒடுங்கிக் கிடக்கப்படுபவர்.
(ங) சாதுக்களுடைய மனசிலே தங்கியிருப்பவர்.
(ச) பாச சத்தியை மெலிவித்துச் சிற்சத்தியைக் கூருவித்தலை யுடையவர்.
(ரு) பரமானந்த ரூபியாய் நிர்விகாரியா யிருப்பவர்.
(சு) சுகத்தோடு கூடினவர்.
(எ) சுகங்களைக் கொடுப்பவர்.

(௯) காந்தியை யுடையவர்.

(௯) அநாதியேயுள்ள முற்றறிவு முற்றுத்தொழிலாகிய சிவத்துவ முடையவர்.

(௧௦) சிவத்துவம் என்னும் அதிகாத்தமுடையவர்.

எனப் பொருள் விரிக்கப்பட்டு இவைகளானே தியானிக்கப்படு பவர் எனப் பொருள்படும் தியாதா, மேலான வியாபியாயுள்ளவர் எ-ம். பரப்பிரமம், சிரேட்டர் எ-ம். பரமன்-முன்னோன், எக்காலத் தும் நிலைத்திருப்பவர் - ஆதாரமா யிருப்பவர் எ-ம். தாணு, விரும்பப் படுபவர் எ-ம். நம்பன், பிரகாசமுடையவர்-மகிழ்ச்சியுடையவர் எ-ம், தேவன், தேவர்களுட் சிரேட்டர் எ-ம். மாதேவன், என்று முள்ள வர் எ-ம். நித்தர், ஆன்மாவுக்கு மேலாயிருப்பவர்-ஆன்மாக்களிடத் திற் பிரியமுள்ளவர்-அரு என்னும் மேலான பொருளாயிருப்பவர் எ-ம். தற்பரன், மகிழ்ச்சி யுடையவர் எ-ம். நந்தி, பற்றுக்கோடில் லாதவர் எ-ம். நிராலம்பன், ஒளிவடிவாயுள்ளவர் எ-ம். சோதி, அறி வுருவாயுள்ளவர் எ-ம். ஞானமூர்த்தி, அன்பர் இருதயத்தில் வசிப் பவர் எ-ம். நாராயணன், அழிவில்லாதவர் எ-ம். அச்சுதன், எங்குந் தங்குதலையுடையவர் எ-ம். இறையோன், சுகத்தைச் செய்கிறவர் எ-ம். சங்கரன், பரைக்கு நாயகர்-பராசத்திக்கு மேலானவர் எ-ம். பராபரன், எல்லாவற்றையும் அழிப்பவர்-மலநாசஞ் செய்பவர் எ-ம். அரன், தலைக்கோலத்தையுடையவர்-சங்காரகர்த்தர் எ-ம். பிஞ்சகன், சங்காரகர்த்தர்-திருவாணி எ-ம். நக்கன், நோய் இல்லாதவர் எ-ம். நிராமயன், வுரத்தன்மை யுடையவர் எ-ம். உக்கிரன், மூவுலகும் பயப்படுந் தன்மை யுடையவர் எ-ம். பீமன், பசுக்களைச் சம்சாரபந் தத்தி னின்றுங் காப்பவர்-ஆன்மாக்களுக்கு நாயகர் எ-ம், பசுபதி, எப்பொழுதும் நன்மையைச் செய்பவர் எ-ம் சதாசிவன், எல்லா வற்றையுந் தோற்றுவிப்பவர் எ-ம். பவன், ஒன்றா யுள்ளவர் எ-ம். ஏகன், மலமில்லாதவர் எ-ம். நிருமலன் - அமலன், உபகாரகர்

எ-ம். பிரான், முடிவில்லாதவர் எ-ம். அனந்தன், முதல்வர் எ-ம். ஆதி, தானே யுண்டானவர் எ-ம. சுயம்பு, பரமானந்தரூபி-சுகத்தை யுண்டாக்குகிறவர் எ-ம். சிம்பு, மூவுலகிற்குந் தாய் - முக்கண்களை யுடையவர் எ-ம். திரியம்பகன், ஒளியையுடையவர் எ-ம். பர்க்கன், எல்லா முடையவர் எ-ம். சாமி, ஐசுவரிய முடையவர் எ-ம், ஈசானன், மேலாய ஐசுவரிய முடையவர் எ-ம். மகேச்சுரன், யமனுக்கும் முடிவைச் செய்பவர் எ-ம். காலகாலன், சத்துருக்களை அழச்செய்கிறவர் - சம்சார ரோகத்தை யொழிப்பவர் எ-ம். உருத்திரன், அறுகுணங்களை யுடையவர் எ-ம். பகவன், எண்குணங்களையுடையவர் எ-ம். எண்குணன், அருட் கொடையை யுடையவர் எ-ம். வாதன், மேலான தேவன்-இடப்பாகத்திற் றேவியை யுடையவர் எ-ம். வாமதேவன், உமையோடு கூடி அழகு செய்கிறவர் எ-ம். சோமசுந்தரன், வேதங்களுக்குத் தலைவர் எ-ம். வேதியன் - மறைமுதலி, மேனோக்குங் கண்ணையுடையவர் எ-ம். விருபாக்கன், என்னும் இன்னோரன்ன அளவிலாத் திருநாமங்களும் அவ்வவைகளின் காரணங்களுந் திருவருட் செயலாதியனவும் பெறப்படும்.

ஆகவே, சிவன் என்னுந் திருநாமம் ஒன்றே மேற்கூறியவாறே பொருள்பட்டு அப்பதியின் உரு, குணம், குறி, செயல் ஆதியனவற்றைக் கருதுமாறு விசிட்டமாய் நிற்றலால் அஃது, மறுமத வெறு மொழிகள்போ லாகாது, தன்னை நினைத்தல் கேட்டல் செய்தவழி உண்மையை விளக்கிச் சிவசாயுச்சிய முத்தியைக் கொடுக்க வல்லதாய்ப் பதியைக் குறிப்பிக்குந் திருநாமமாயிற்று.

ஆகலால், அநாதிமலமுத்தராய், நித்தியானந்தராய், நித்தியராய், சாந்தராய், சர்வதோமுகராய், சர்வஞ்ஞராய், சர்வாநுக்கிரகாகராய், சர்வ கர்த்தாவாய், சர்வ வியாபகராய், அசலராய், சுவதந்திர முடையராய், அதிசூக்குமராய், சுவபாரப்பிரகாசராய், சின்மாத்திர மூர்த்தியாய், அதுலராய், நிருபாதிகராய், அதிமகானாய், அதிபரமாய்த பதியா யுள்ளவர் சிவனே யாம்.

அவர் அநாதி மலமுத்தர்களாகிய ஆன்மாக்கள் தம்மை யறிந்து வழிபட்டுய்ய நிமித்தத்தானே அருவம், அருவுருவம், உருவம் என்னு மூத்திறத் திருமேனி கொண்டருளினார்.

சிவஞானசித்தியார்.

"உருமேனி தரித்துக் கொண்ட தென்றலு முருவி றந்த
வருமேனி யதுவுங் கண்டோ மருவுரு வான போது
திருமேனி யுபயம் பெற்றோஞ் செப்பிய மூன்று நந்தங்
கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு தானே.

சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், மகேசுரன், உருத்திரன், விஷ்ணு, பிரமன் என்னும் நவ வடிவங்களே யன்றி, ஆன்மாக்களுக்குப் போகத்தை யூட்டவும், யோகமுத்தி யுதவவும், வினைகளை யழிக்கவும் கொண்டருளிய மூர்த்தங்களாகிய சந்திரசேகரர் முதலாய இருபத்தைந்து வடிவங்களும், விநாயகர் வைரவர் வீரபத்திரர் சுப்பிரமணியர் என்னுந் திருமூர்த்தங்களும், முறையே சதாசிவ மாகேசுர வடிவங்களினின்றுந் தோற்றலால் அவற்றின் அடங்குவர். அடங்கவே விநாயகர் வைரவர் வீரபத்திரர் சுப்பிரமணியர் என்னு மூர்த்தங்களும், மாணிக்க ரத்தினத்தையும் அதனொளியையும், அக்கினியையும் அதனது (சுடுதல் அடுதல் உருக்குதல் விளக்குதல் முதலிய பலவகைப்பட்டு விளங்கும்) சத்தி யொன்றனையும், மரத்தையும் அதனது வயிரத்தையும் போன்று சிவபெருமானினின்றும் வேறுகாராக அவர்களும் சிவன் எனப்படுவர்.

கந்தபுராணம்.

'ஒன்று யிருதிறமா யோரைந்தா யையைந்தா
யன்று தியின்மீட்டு மைந்தா யளப்பிலவாய்
நின்றாய் சிவனேயிந் நீர்மையெலாந் நீங்ககற்றி
நன்று விகட்கு நலம்புரிதற் கேயன்றோ."

### சிவஞான சித்தியார்.

"ஒருவனே யிராவ ணாதி பாவக மேற்றாற் போலத்
தருவனில் வுருவ மெல்லாந் தன்மையுந் திரியா னாகும்
வரும்வடி வெல்லாஞ் சத்தி சத்திதான் மரமுங் காழ்ப்பு
மிருமையும் போல மன்னிச் சிவத்திரே டியைந்து நிற்கும்."

இன்னும், சிவபெருமான் ஒருவரே எங்கும் என்னும் அகண்ட சபைக்கு அநாதி மூலகாரண பரமஞான புருடனா யிருத்தலால் சபாபதி எனவும், மகா மகிமைபொருந்திய திருவருளம்சமா யிருத்தலால் மாதேவி எனவும், சத்தகோடி தத்துவகூட்ட விருத்திகளுக் கெகலாங் காரணமாய், பரமமய புருடத்துவ பதியாயிருத்தலாற் கணபதி எனவும், சுயம்பிரகாசமா யிருத்தலாற் சுப்பிரமணியர் எனவும், மாட்சிமை பொருந்திய சர்வசத்தி வியாப்தியா யிருத்தலால் விட்டுணு எனவும், பெயர் பெற்று உண்மை விளங்க நிற்பார் என்ப.

சிவபெருமான் வடிவங்கொள்வது சுத்த தத்துவங்களிலானமை யால், அவர் வடிவங்கள் தோல், இரத்தம், மாமிசம் முதலியனவற் றால் ஆக்கப்பட்ட நமது அசுத்த தேகத்தைப் போன்றனவல்ல. அவை, விசுத்தமாய் ஞானரூபமாகிய சத்தி வடிவெனப்படும்.

### சிவஞான சித்தியார்.

"காயமோ மாயை யன்று காண்பது சத்தி தன்னால்"
"சத்திதன் வடிவே தென்னிற் றடையிலா ஞான மாகும்."

சிவபெருமான் விட்டுணுமுதலினோர்போற் பேதித்துநிற்காது, திருவருட் சத்தியாராகிய உமாதேவியார் எவ்வெவ் வண்ணமாவரோ அவ்வவ்வண்ணமாக அபேதமாய் நிற்பர். ஆகலின், அவர் வடி ...ன்றே யென்பது உண்மையாம்.

சர்வ
ஞாய்
யாய்
பதி

### திருக்களிற்றுப்படியார்.

"பொன்னிறங் கட்டியினும் பூணினு நின்றாற்போ
லந்நிற மண்ணனு மம்பிகையும்—செந்நிறத்த

னெங்கிறத்த னாயிருப்ப னெங்கள் சிவபதியு
மங்கிறத்த னாயிருப்ப னங்கு.''

## சௌந்தரியலகரி.

''இருசுடர் மூலத்துணைச் சிவன்வடிவு நீயதனை யானுருவ மாக நினைவேன், உருவுபிறை தன்னிலனை வொத்தபர மானந்த முடைய பர னெனுடப மையுமாய், மருவுமினி தாமுங்கள் கூட்டமது சேடமு மறுத்ததனை யுடைய தாவுமா, யருகிலிரு வர்க்குமொரு பொதுவாகி நிற்குங்கொ லழிவற்ற ஞான முதலே.''

இவ்வுண்மை அவ்வவர் நாமங்களாலும் பெரும்பான்மையும் அறியப்படும். எங்ஙனமெனின், விட்டுணுவினது ''கண்ணன்'' முதலாய ஆண்பாற் பெயர்களுக்குக் ''கண்ணி'' முதலாய பெண்பாற் பெயர்கள் இலக்குமிக்கும், பிரமனது ''எண்கணன்'' முதலாய ஆண்பாற் பெயர்களுக்கு ''எண்கணி'' முதலாய பெண்பாற் பெயர்கள் சரஸ்வதிக்கும், இவரல்லாத மற்றையோர்க்கும் இல்லாமையானும், பரசிவற்கும் பராசிவைக்கும், அவ்வமுவுறீது சங்கரன் - சங்கரி, இறைவன்-இறைவி, சம்பு-சாம்பவி, மகேஸ்வரன் - மகேஸ்வரி, புராதனன் - புராதனி, மாதேவன் - மாதேவி, நாராயணன் - நாராயணி, உருத்திரன் - உருத்திராணி, கங்காளன் - கங்காளி, விமலன் - விமலை, பகவன் - பகவதி, பரன் - பரை, பராபரன் - பராபரை, காரணன் - காரணி, திரியம்பகன் - திரியம்பகி, ஆரணன் - ஆரணி, நித்தன் - நித்தியை, தேவன் - தேவி, ஐயன்-ஐயை, பூரணன் - பூரணி, ஆனந்தன் - ஆனந்தி எனப் பெரும்பாலுஞ் சொற்பொரு ளொத்தனவாய திருநாமங்கள் உண்மையானும் உணர்க. ஆகவே, அவர்க ளிருவருமே அபேத நிலையுடையவராய்த் தியானிக்கப்படத் தக்கவர் என்பது போந்தவாறு காண்க.

## அருணகிரியந்தாதி.

''அல்லதொரு தெய்வ மறியே னறிந்தாலு
நல்லதென்று நெஞ்சத்தி னடேன்யான்—சொல்லரிய

வண்ணா மலைமேவு மண்ணலையு மண்ணாமலையிடத்
துண்ணா முலையாளை யும்."

இதனாற்றான் அரன் என்னும் ஆண்பாற் பெயர்க்கு அரி என்பது பெண்பாற் பெயரெனப் பொருத்திக் காட்டி, சிவபெருமானுக்கு விட்டுணுவும் ஓர் சத்தியாம் என்னும் உண்மை நூல் மொழியைப் பெரியோர் பிரகாசப்படுத்துப.

தேவாரம்.

"எரியலா லுருவ மில்லை யேறலா லேற லில்லைக்
கரியலாற் போர்வை யில்லைக் காண்டகு சோதி யார்க்குப்
பிரிவிலா வமரர் கூடிப் பெருந்தகைப் பிரானென் றேத்தும்
அரியலாற் றேவி யில்லை யையனை யாற னார்க்கே."

கந்தபுராணம்.

"நால்வ கைப்பட நண்ணிய சத்தியுண்
மாலு மாதலின் மற்றது காட்டுவா
னால கண்டத்த னச்சுத னச்சுறுங்
கோல மெய்திக் குறுகின னவ்விடை."

இரட்டைப்புலவர்.

"வருக்கைத் தடம்பொழி லாமாதை யையர்க்கு மாசொன் றில்லா
முருக்கொத் தமேனி யழகிய நாதர்க்கு மூச்சாலத்
திருக்கைக் கமல வாணார்க் கரிதிருத் தேவியன்றேல்
அரிக்குப் பொருளுரை யீர்கெடு வீர்நும் மறிவின்மையே."

சிவபெருமான்: பாலசந்திரன், கங்கை, கொன்றை முதலியன விளங்குஞ் செஞ்சடா முடியையும், ஐந்து திருமுகங்களையும், பத்துத் திருக்கரங்களையும், திரிநேத்திரங்களையும், ஏக தேகத்தையும், இரு திருவடிகளையும் உடையாராய்; சூலம், மான், மழு, வாள், அக்கினி, வச்சிரம் டமருகம், நாகம், பாசம், அங்குசம், கண்டாமணி, நீலோற்

பலம், பரிவட்டம், மாதுளம்பழம், மாத்திரைக்கோல் ஆதியனவற்
றைத் தரித்தவராய்; வரதாபயமுடையராய்; தெளிபளிங்கு வடிவின
ராய் இருப்பர். அவர்க்கு வாகனம் இடபமாம்.

பரப்பிரம பரவஸ்துவாகிய சிவபெருமான் இவற்றைக் கொ
ண்டமை தம் பயன் கருதியன்று. எற்றுக்கெனின், ஆன்மாக்கள்
அஞ்ஞான மேலீட்டானே நாமே பிரமம் என அகங்கரித் தாழாது
உண்மையை யறிந்து தம்மையே பதியெனக் கண்டு, சார்ந் துய்யக்
கொண்ட பெருங்கருணைத் திறனேயாம்.

கந்தபுராணம்.

"ஆத லாற்றனை வியப்பதற் கன்றவை யணித
லீத லாலொரு திறமுள தியாவரு மெவர்க்கு
நாத னேயிவ னென்றுதன் பாங்கரே நண்ணித்
தீதெ லாமொரீஇ முத்திபெற் றுய்ந்திடுஞ் செயலே."

சிவஞான சித்தியார்.

"தனக்கொன் றின்றி
யருளுரு வுயிருக் கென்றே யாக்குவ னசிந்த னன்றே."

இங்ஙனமாகவும் உண்மை யறியா அதிபாதகர்கள் சிலர், "நுங்
கடவுளாகிய சிவன் ரூபியெனின் யாவர்க்குங் காணப்படல்வேண்டும்;
அன்றியும், அவ்வுருவை யாக்கற் கொருவரும் வேண்டும்; அவ்வா
றாக்குவார் ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொருவர் வேண்டப்பட்டு அந
வஸ்தா தோஷம் எய்தலால், உருவமுடையர் என்பதூம், அவ்வுருவத்தி
லே சந்திரன் பாம்பு முதலாயினவற்றைச் சுமந்தார் என்பதும்,
இரத்தினாபரண முதலியவற்றை யணியாது ஈனர்போலக் கபாலம்
புலித்தோலாதியவற்றை அணிந்தார் என்பதும், கொலைத்தொழி
லாளர்போலக் கரங்களிலே யாவர்க்கும் அச்சம் விளைக்குஞ் சூலம்
வாள் கோடரி அக்கினியாதிய ஏந்துகின்றார் என்பதும், பதி இலக்
கணத்துக்கு மாறன்றோ?" என வாயில்வந்தன வந்தன பேசி யொழிவா

ஞாயினர். ஆகலால் அவைகளி னுண்மையை இயன்றவாறு புகட்டு வாம்.

சிவபெருமானே பிருதிவி அப்பு தேயு வாயு என்னும் நாற் பூதங்களுக்கும் முதலாய ஆகாயத்திற்கு மேலவர்; அதற்கும் ஏது வாய் நிற்கும் பிரகிருதி மாயைக்கும் மேலாயிருப்பவர்; அப்பிரகிரு திக்கும் ஆதாரமான கலாரூபமா யுள்ளவர்; அதற்குக் காரணமான அசுத்த மாயைக்குங் கடந்த சுத்த வித்தைக்கும் அதீதமான விந்து தத்துவத்தி லிருப்பவர். அதற்கும் அப்பாற்பட்ட சதாசிவாதீதமான பராசத்திக் காதாரமாய்ப் பரசிவனுமா யிருப்பவர்; அன்றியும், எண் ணல் எடுத்தல்முதலிய அளவைகளுக்கும், பிரத்தியக்ஷம் அநுமானம் ஆகமம் என்று மேலளவைக்கும் மிக்க தனியளவுங் கடந்து எல்லைப் படுத்தற் கரியவர்; தற்போத வழியால் அறியப்படாதவர்; அவர் அருவமுமாகுவர்-உருவமுமாகுவர் - அருவுருவமுமாகுவர்; அவை கடந்த அகண்டாகாரமுமாகுவர்; காரியமுமாகுவர் காரணமுமாகுவர். ஆகலால், அவரது வடிவ மாதியவற்றை இத்தன்மையன, இந்நிறத் தன, இவ்வண்ணமுடையன, என்று எழுதியுங் காட்டல் கூடாவாம்.

### நெஞ்சுவிடுதூது.

"வெளியில் வெளியில் வெளியன் வெளியி
லொளியி லொளியி லொளியன் - ஒளியி
லளியி லளியி லளிய னளியி
லளவி லளவி லளவ - னளவிறந்து
நின்றா னினைத்து நிறைந்தா னினைப்பவர்பாற்
சென்றான் றெரியத் தெரியாதான் - றெரியா
வருவா னுருவா னருவுருவு மில்லான்......"

### கந்தபுராணம்.

"அருவு மாகுவ னுருவமு மாகுவ னருவு
முருவு மில்லதோர் தன்மையு மாகுவ னூழின்

கரும மாகுவ னிமித்தமு மாகுவன் கண்டாய்
பரம னுடலை யாவரே பகர்ந்திடற் பாலார்."

தேவாரம்.

"அவனருளே கண்ணாகக் காணி னல்லா லிப்படிய னிந்நிறத்த
னிவ்வண்ணத்த, னிவனிறைவ னென்றெழுதிக் காட்டொணாதே."

ஆயினும், மேற்கூறியவாறே உண்மை நூல்கள் அவர்க்கு நானாவித வடிவங்களைக் கற்பியாநிற்கும். அவைகளை நோக்குமிடத்துச் சில விடங்களிலே பரசிவம் அளவில்லாத பலகோடி திருவடிகள், முடிகள், புயங்கள், நேத்திரங்கள் முகங்கள், வினையறுப்புகள் முதலானவற்றை உடையர் எனவும், மொழியாநிற்கும்.

திருவிசைப்பா.

"எண்ணில்பல் கோடி சேவடி முடிக
ளெண்ணில்பல் கோடி திண்டோள்க
ளெண்ணில்பல் கோடி திருவுரு நாம
மேர்கொண்முக் கண்முக மியல்பு
மெண்ணில்பல் கோடி யெல்லைக்கப் பாலாய்
நின்றைந்நூற் றந்தண ரேத்து
மெண்ணில்பல் கோடி குணத்த ரேர்வீழி
யிவர்நம்மை யாளுடை யாரே."

சிலவிடங்களிலே சிவபெருமான் ஸ்ரீபாதத்திலே நகாரமும், திருவுந்தியிலே மகாரமும், திருத்தோளிலே சிகாரமும், திருமுகத்திலே வகாரமும், திருமுடியிலே யகாரமுமாக தூல பஞ்சாக்ஷரமும்; டமருகந் தாங்குந் திருக்கரத்திலே சிகாரமும், வீசுந் திருக்கரத்திலே வகாரமும், அபயதிருக்கரத்திலே யகாரமும், அக்கினியேந்துந் திருக்கரத்திலே நகாரமும், முயலகனை யூன்றிய ஸ்ரீபாதத்திலே மகாரமுமாக சூக்கும பஞ்சாக்ஷரமும்; இம்முறையே பொருந்த

வடிவுகொண்டு அனவரத திருத்தாண்டவஞ் செய்தருளுவர் எனவுங் கூறுநிற்கும்.

உண்மை விளக்கம்.

"ஆடும்படி கேணல் லம்பலத்தா னையனே
நாடுந் திருவடியி லேநகரங்—கூடு
மகர முதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார்."

"சேர்க்குந் துடிசிகரஞ் சிக்கனவா வீசுகர
மார்க்கும் யகர மபயகரம்—பார்க்கிலிறைக்
கங்கி நகர மடிக்கீழ் முயலகனார்
தங்கு மகரமது தான்."

இவைகளேயன்றி ஈசானயநம என்பதற்கு "தேவர் மானுடர் முதலாய சராசர தோற்றங்களி னுள்ளும் புறம்பு நிறைந்து அவ்வவைகளின் கன்மாநுசாரப்படி ஆட்டுவித்தாளும் மகைஸ்வரியத்தை யுடையவரே நமஸ்காரம்" எனவும், தற்புருடாயநம என்பதற்கு "எல்லா அண்டங்களினு முள்ள ஆன்மாக்கள் காரணமாகப் பஞ்ச கிருத்தியங்களையும் நடாத்தி அவைகட் கதிகாரியாய், அதுவென்னும் பொருளா யிருக்கின்ற விராட்புருடரே நமஸ்காரம்" எனவும், அகோராயநம என்பதற்கு "மகா சங்கார காலத்தில் அகோர ரூபமாய் எல்லாவற்றையும் அழித்தருள்பவரே நமஸ்காரம்" எனவும், வாமதேவாயநம என்பதற்கு "எல்லாவற்றையுந் தம்மிடத்தே யொடுக்கிப் பின்னர்த் தோற்றுவிக்கும் பராபர பரப்பிரகாசானந்தரே நமஸ்காரம்" எனவும், சத்தியோசாதாயநம என்பதற்கு "சத்துரூபசத்தி சித்துரூபசத்தி ஆனந்தரூபசத்தி யென்னும் இம்மூன்றும் மகா காரணதேக மாதலின் சச்சிதானந்த வஸ்துவா யிருப்பவரே நமஸ்காரம்" எனவும் ஒருவாறு கருத்துரைத்து இம்மந்திரங்கள் பிரதம சிருட்டியாய், ஏனைய மந்திரங்களுள் விசேடமாய், ஆன்மாக்கட் கறிந்

ந்ருள் செய்யுங் குணமாய், மகாகாரண வடிவாயு மிருத்தலாற் பஞ்சப் பிரம மந்திரம் எனப்படும் இவைகளே அவர்க்கு வடிவமெனவும் கூறாநிற்கும்.

சிவஞான சித்தியார்.

"மந்திர மதனிற் பஞ்ச மந்திரம் வடிவ மாகத்
தந்திரஞ் சொன்ன வாறிங் கென்னெனிற் சாற்றக் கேணீ
முந்திய தோற்றத் தாலு மந்திர மூலத் தாலு
மந்தமில் சத்தி யாதிக் கிசைத்தலு மாகு மன்றே."

சிலவிடங்களிலே அவர்க்கு அக்கினியே சிரம், வேதங்களே வாய்கள், சந்திர சூரியர்களே கண்கள், திக்குகளே செவிகள், வாயுவே பிராணன், ஏனையன்வைகளே இருதயம், எனவுஞ் சொல்லப் படும்.

"அங்கிதலை வாய்விவித மானமறை பானு
திங்கள்விழி யெண்டிசைக ளுஞ்செவிகள் வாயு
தங்குமுயிர் தன்னிதய மேசகல முந்தா
னிங்கவனி சங்கா னிருக்கும்வடி வீதால்."

சிலவிடங்களிலே தாத்துவிக சூக்கும புவனோற்பத்தியான தேகப் பிரபஞ்சமே உபசார தூலசரீர மாகவும், தேவர் மனிதர் விலங்கு பறவை ஊர்வன நீர்வாழ்வன தாவரம் முதலிய யோனிகளின் தூல சரீரங்களே புற அவயவங்களாகவும், ஆரணி செனனி ரோத வித்திரி என்னுஞ் சத்திகளின் கலைகளே புறக்காரணங்களாகவும், சமனைகலையின் உபாதியுற்ற இச்சாசத்தி ஞானசத்தி கிரியாசத்தி என்பவைகளே உட்காரணமாகவும், உன்மனை அல்லது அநிலுபாதியுற்ற பராசத்தியே பரதேகமாகவும் கொண்டருளி ஆன்மாக்கட்குப் புத்தி முத்திக ளுண்டாகும் பொருட்டு பஞ்ச கிருத்தியங்களையும் செய்யாநிற்பர்.

### சிவஞான சித்தியார்.

"உலகமே யுருவ மாக யோனிக ளுறுப்ப தாக
விலகுபே ரிச்சா ஞானக் கிரியையுட் கரண மாக
வலகிலா வுயிர்கட் கெல்லா மிருபய னுதவ வைத்து
நலமிகு தொழில்க ளோடு நாடக நடிப்ப னாதன்."

சில விடங்களிலே, சிவபெருமான் நித்தியராய் இடைவிடாது எங்கும் வியாபித்துப் பிரியாதிருத்தலாலும், சேதனாசேதனப் பிரபஞ்சங்கள் அனைத்துக்கும் பிரேரகராய் நிற்றலாலும், அவர்க்கு சாந்தியாதீதகலை-சாந்திகலை-வித்தியாகலை-பிரதிட்டாகலை - நிவிர்த்திகலை என்னும் ஐந்தையும் முடிகளாகவும், சாந்தி முதலிய நான்கு கலைகளையு மார்பமாகவும், வித்தியாகலை முதலிய மூன்றையும் உந்தியாகவும், நிவிர்த்திகலையைப் பாதமாகவும், அக்ஷரங்களைத் தோலாகவும், புவனங்களை உரோமங்களாகவும், மந்திரங்களை இரத்தமாகவும், பதங்களைத் தசையாகவும், தத்துவங்களை இரேதசு எலும்பு நிணம் மூளை என்பவைகளாகவும், சத்திகளைப் பதினெண் கண்களாகவும் அமைத்து ஆறத்துவாக்களும் வடிவம் என்று வேதாகமங்கள் கூறுநிற்கும்.

"அத்துவா மூர்த்தி யாக வறைகுவ தென்னை யென்னி
னித்தனாய் நிறைந்த வற்றி னீங்கிடா நிலைமை யானுஞ்
சித்துட னசித்துக் கெல்லாஞ் சேட்டித னாதலானும்
வைத்ததா மத்து வாவும் வடிவென மறைக ளெல்லாம்."

### சிவஞானதீபம்.

"அத்துவா வடிவாமெம் மிறைமுடிதான் கலைக
ளைந்தாகுஞ் சாந்திமுத லானநான் குரமாம்
வித்தைமுதன் மூன்றிரண்டாம் பிரதிட்டாதி யுந்தி
வியன்பாத நிவிர்த்தியதா மிளிர்துவக்கக் கரங்கள்
வைத்தபுவ னங்கண்மயிர் மந்திரங்க ணெய்த்தோர்
வனக்கிகழும் பதங்களுருத் தசையாகு மதித்த

தத்துவங்கள் சுக்கிலமோ டத்திகிண மூளை
சத்திகடா நேத்திரமு வைந்தாமித் தகையே.''

இவைகளே யல்லாமல் சில நூல்கள் சிவபெருமானுக்கு வால்தவ தேகமின்மையாற் றியானபூசா நிமித்தங் காற்பனிக தேகத்தை யொட்டிக் காட்டாநிற்கும். அவ்வுண்மை வருமாறு:—

## திருச்சிகை.

அநாதியே அவர்க்குச் சுதந்தரமாயுள்ள சிவகரணமே சிகையாகும்.

சதாசிவரூபம்.

"ஒங்கள வின்மை யுயர்சிகை."

## திருமுடி.

ஆன்மாக்கள் திருவருளைக் கண்டு அநுபவிக்கும் அவதரத்திலே தற்செயல் தோன்றாது பரவசப்படுதலையே சிவபெருமானது திருமுடியாகக் காண்பார்கள்.

உண்மைநெறி விளக்கம்.

"உரையிறந்த சுகமதுவே முடியாகும்."

## திருமுகம்.

ஆன்மாக்கள் தம்மை யறிவிக்கும் பான்மையாகத் தாக்குவனவாய விடய போகங்களை அவன் அவள் அதுவாய்ப் பார்க்குமிடமெல்லாம் அவனருளையே கண்டு அநுபவிப்பதையே அவர்க்குத் திருமுகம் என்ப.

உண்மைநெறி விளக்கம்.

"பார்ப்பிட மெங்குஞ் சிவமாய்த் தோன்றலது முகமாம்."

அன்றியும், ஈசானம்-தற்புருடம்-அகோரம் வாமதேவம் - சத்தியோசாதம், என ஐந்துமுகமு முண்டென்ப. ஒரு முகமுதல் நாறு

ஆயிரம் என்னும் அளவாக ஏனையோர்க்கும் முகங்களை இயம்ப, இவைகளில் விசேட மென்னை யெனின்? மற்றையோர் முகங்களால் யாதோர் பயனும் உலகிற் கில்லையென்பதும், இவர் முகங்களால் அநேக பெரும்பய னுண்டென்பதும், அவைகளின் தன்மையால் விளங்கப்படும். அவற்றுள்,

ஊர்த்துவமுகமாய் வடகீழ்த்திக்கை நோக்கி நிற்பதாய்ப் படிகமயமாய் விளங்கும் ஈசானமுகமானது, புரோற்கீத முதலிய ஆகமங்கள் எட்டையும் மந்திர ஞானத்தையுந் தோற்றுவித்து, அனைத்தையும் ஆளுங்குணத்தையு முடையதாம். அதோமுகங்களுள் ஒன்றாய்க் கிழக்கு நோக்கி நிற்பதாய்க் கோங்கம்பூ நிறத்ததாய் விளங்கும் தற்புருடமுகமானது, ரௌரவ முதலிய ஆகமங்கள் ஐந்தையும் அதிமார்க்க ஞானத்தையுந் தோற்றுவித்து யாவற்றையும் காக்குங் குணத்தையுமுடையதாம். தெற்கு நோக்கியதாய்க் கருநிற முடைத்தாய் விளங்கும் அகோரமுகமானது, விசயம் முதலிய ஐந்தாகமங்களையும் அத்தியான்மகஞானத்தையும் தோற்றுவித்து எவைகளையும் அழிக்குங் குணத்தையு முடையதாம். வடக்கு நோக்கியதாய் வெட்சிப்பூ நிறத்ததாய் விளங்கும் வாமதேவமுகமானது, தீப்தம் முதலிய ஆகமங்கள் ஐந்தையும் வைதிக ஞானத்தையும் தோற்றுவித்து அனைத்தையும் விளக்குங் குணத்தையுமுடையதாம். மேற்கு நோக்கியதாய்ப் பானிறத்ததாய் விளங்கும் சத்தியோசாதமுகமானது, காமிக முதலாய ஆகமங்கள் ஐந்தையும் லௌகிக ஞானத்தையும் தோற்றுவித்து எவைகளையும் ஆக்குங் குணத்தினையு முடைத்தாம். இவ்வாறன்றி ஊர்த்துவமுகம் குறித்த ஆகமங்கள் இருபத்தெட்டையும், அதோமுக நான்கும் முறையே இருக்கு முதலான நான்கு வேதங்களையுந் தோற்றுவித்தவெனவுங் கூறுப.

## திருநேத்திரம்.

இச்சா ஞானக் கிரியைகளால் எல்லாவற்றையும் அதிட்டித்தறிந்து செய்யுந் தொழில்களாகி நின்ற குணவியலையே அவர்க்குத் திருநேத்திரம் என்பர்.

சதாசிவரூபம்.

"இவர்தா, மெல்லா மறியு மியல்பது நயனம்."

## இருதயம்.

முத்தான்மாக்களுக்கு உணர்த்தப்படும் அருட்சத்தியையே இருதயம் என்று கூறுவர்.

"நல்லோ ருணரவரு ஞானம திதயம்."

## திருவடி.

ஆன்மாவென்பது எவ்விடத்திலுந் தோன்றாது யான் எனது என்னும் அகங்கார மமகாரமாய் நின்ற பொய்யறிவு நீங்க திருவருண் ஞானம் பிரகாசித்து நின்ற அவதாரத்தையே சிவபெருமானது ஸ்ரீ பாதம் என்ப.

உண்மைநெறி விளக்கம்.

"பரையுயிரில் யானெனதென் றறநின்ற தடியாம்."

இவ்வாறே அவர்க்கு வடிவங்கள் பற்பலவிதமாகக் கூறலையும், அவைகளின் உண்மைகளையும் உண்மைநூல் ஆசிரியர் வாய்க் கேட்டுணர்க.

சிவபெருமான் சிகைமுதலாயின கொண்டவும் உலகமுய்யத் தோன்றும் பெருங்கருணையே என்பது போதா அவற்றின் உண்மைகளுட் சிலவற்றைச் சுருக்கிக் காட்டுவாம்.

**க. சிகை கொண்டது.**

சிகை ஞானக்குறி யாதலால், ஞானரூபியாயிருப்பவர் தாமே என்பதையும்,

**உ. உபவீதம் பூண்டது.**

பூணூல் வேதாந்தக் குறியாகக் கொள்ளப்படலால், வேதாந்தப் பொருளாயிருப்பவர் தாமே என்பதையும்,

### ௩. சந்திரனைச் சூடினது.

தூமதியை மேற்கொண்டார் எனக் கருதக் கிடத்தலால், எல்லாம் அறிபவர் (சருவஞ்ஞத்துவர்) தாமே என்பதையும்,

### ௪. இடபங் கொண்டது.

தருமதேவனை நயே இடபம்-ஞானமயமே இடபம்-எனக் கூறலால்: தர்ம பரிபாலர், தர்ம வடிவர், ஞான மயமாயுள்ளவர், எப்பொருட்கும் இறைவர் தாமே என்பதையும்,

### ௫. ஸ்திரீ புஞ்ச நபுஞ்சக வடிவானது.

அவள் அவன் அதுவாய் நிற்கும் உலகிலுள்ள எவர்க்கும் எவைக்கும் பொதுநிலையர் தாமே என்பதையும்,

### ௬. திரிநேத்திரங் கொண்டது.

மூன்று கண்களும் முச்சுடரெனப் படலால், காருகபத்தியம், ஆகவனீயம், தக்ஷிணாக்கினியம் என்னும் முத்தீவேள்வியில் அவை யாவும் தம்மிடத்தே கூடியுள்ளன என்பதையும், அன்றியும் எல்லாக் காரியங்களையும், அறிந்து செய்யும் இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியா சத்திகளை யுடையவர் தாமே என்பதையும்,

### ௭. மானேந்தியது.

அதனது நான்கு கால்களையும், நான்கு வேதங்கள் எனக் கொள்ளநிற்றலால், அவ் வேதங்களுக்கு நாதர் தாமே என்பதையும்,

### ௮. சூலம் பிடித்தது.

அது முத்தலையையும் ஒரு தாளையு முடையதாகலால், சாத்துவிகம் ராசதம் தாமதம் என்று முக்குணங்களையும், சிருட்டி திதி சங்காரம் என்னும் முக்கிருத்தியங்களையுமுடைய பிரமா, விஷ்ணு, உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளாய் நிற்பவர் தாம் ஒருவரே என்பதையும், ஆன்மாக்கட்குப் பேரின்ப வீடளிக்க விரும்பும் விருப்ப

மெனப்படும் இச்சாசத்தியையும், அதற்கு வேண்டுவனவையும் அறிவெனப்படும் ஞானசத்தியையும், அறிந்து செய்யவெனப்படும் கிரியாசத்தியையும் உடையவர் தாமே என்பதை,

௯. அட்டமூர்த்தியானது. யமே

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆ என உலகத் துண்மையா யிருப்பவர் தாமே என்பதையும்,

௧௦. மழுந் தாங்கியது.

அது பராசத்தி ரூபமாய், இலயத்தானமெனக் கொள்ளக் கிடத்தலால், பராசத்திக்கு மேலானவர், பணிக்கு நாயகர், இலயத்தானமா யிருப்பவர், சத்தியமுடையவர் தாமே என்பதையும்,

௧௧. வாள் ஏந்தியது.

சனனமாகிய கொடியின் வேரை அறுப்பவரும், எல்லாரையும் அடக்கியாளலால் வந்த புகழொளியை யுடையவரும் தாமே என்பதையும்,

௧௨. வச்சிரங் கொண்டது.

ஒருவராலுங் கெடுக்கப்படாதவர் தாமே என்பதையும்,

௧௩. பாசந் தரித்தது.

இந்திரியங்கள் பத்தும், தூல சூக்கும பூதங்கள் பத்தும், தன்மாத்திரைகள் ஐந்தும் ஆகிய இருபத்தைந்தையுங் காட்டி நடாத்து மாயாவடிவை யுடையவர் தாமே என்பதையும்,

௧௪. தமருகந் தாங்கியது.

சுத்தாசுத்த அத்துவாவைப் பிரவர்த்திக்குங் குணத்தினை யுடையவர் தாமே என்பதையும்,

௧௫. சர்ப்பம் பூண்டது.

குண்டலினிசத்தி பாம்புவடிவாயிருக்கிறதென்று உருவகப்படுத்துகிறபடியாலும், அது அவர்க்குப் பரிக்கிரகசத்தியாத லுண்மை

யானும், அதனுடைய விரிவு சுருக்கங்களே பிரபஞ்சத்தோற்ற ஒடுக்கங்க ளாகையானும், அதனை யுடையரா யிருத்தலாற் சகத்திற்கு நிமித்தகாரணர் தாமே என்பதையும்,

இஃதன்றி "இருத்தியே ஈாகரூபம்" எனக் கூறலால், இருத்தி என்பதற்குப் பொருள் நல்லசெல்வம், ஐஸ்வரியம் அதிகப்படல், நிறைவு, மேலாந்தன்மை, என்பனவாக இவைகளையுடையவர் தாமே என்பதையும்,

கசு. கண்டாமணி தாங்கினது.

நாதமயமாயிருப்பவர் தாமே என்பதையும்,

கஎ. நீலோற்பலம் தரித்தது.

சங்கற்ப விகற்பமாகிய மன தத்துவத்தை நடாத்துங் குணவய மூடையவர் தாமே என்பதையும்,

கஅ, கசு. அங்குசம்—பாிவட்டங் கொண்டது.

விவரணகுணத்தை யுடையவர், திரோபவ கிருத்தியர், தாமே என்பதையும்,

உ௦. அக்கினி யேந்தியது.

ஆன்மாக்களைப் பந்தித்த பாசங்களைச் சங்கரித்துக் காப்பவர் தாமே என்பதையும்,

உக. வாதாபயங் கொண்டது.

முறையே ஆன்மாக்களின் கன்மங்களுக் கீடாகப் போக முத்தி என்பவைகளை அளிப்பவரும், போகத்தானமாகிய சாதாக்கிய தத்துவத்தை யடைந்தவர்க்குச் சணபயத்தைப் போக்கிப் பேரானந்த வெள்ளத்தில் அழுத்துவோரும் தாமே என்பதையும்,

உஉ. கவசமிட்டது.

நிஷ்களத் தன்மையை மறைத்து நின்ற ஞானக்கிரியைகள் மேற்பட்ட பிரகாசமே அங்கியாக, அதனை யுடையவர் தாமே என்பதையும்,

உங. கொன்றைமுதலிய மாலை தரித்தது.

ஓங்காரப் பொருளாயிருப்பவர் தாமே என்பதையும்,

உச. பளிங்குநிறங் கொண்டது.

சாத்துவிகம் பளிங்குநிறமும், ராஜதம் செந்நிறமும், தாமதம் கருநிறமும் உடைத்தெனலால், அவைகளை முறையே ஓரோவழி யுபசாரமாக விஷ்ணுவுக்கும், பிரமனுக்கும், இவர்க்கும் சொல்லப் படுவதனுலும், அவ்வாறு கூறினும் அரி, பிரமன் என்பவர்களின் கிருத்தியங்கள் புறத்தே முற்சொல்லிய குண மமைந்தவாகக் காணப் படினும், அகத்தே அவையின்றித் தாமத ராசதமாகக் காணப்படுவதனு னும், உருத்திரராய் அதிட்டித்து நிற்கும் இவரது சங்கார கிருத் தியம் புறத்தே தாமதகுணம்போற் காணப்படினும், அது ஆன்மாக் களுக்குக் கன்மத்தைப் புசிப்பித்துத் தொலைத்துப் பேரின்ப வீடளி க்க வேண்டும் என்னுங் காருண்ய செயலாய், அகத்தே சத்துவ குணமயமாய் நிற்றலானும், இன்னும் அவ்வவர் குணவுண்மையை அவ்வவர் வடிவங்களே தெளிவித்து நிற்றலானும், சத்துவகுண சுதந் தரரும், சுகத்துக்கும் ஞானத்துக்கும் இடமா யுள்ளவரும், யோகி கட்கு அவ்வடிவோடு சென்று ஞானோபதேசஞ் செய்வோரும் தாமே என்பதையும்,

உரு. அத்திரமுடைமை.

ஆன்மாவின் மூல மலத்தைச் சங்கரிக்கும் பெருமையே அத் திர மெனப்படலால் அதை யுடையவர் தாமே என்பதையும்,

உசா. முயலகனை யூன்றி நிற்றல்.

பிரபஞ்சத்தை மறைக்குந் திரோபவ கிருத்தியஞ் செய்து ஆன் மாக்களது மூலமல சத்திகளை மேலிடாமல் அமிழ்த்துவோர் தாமே என்பதையும்,

உஎ. தூக்கிய திருவடியராதல்.

ஆன்மாக்களுக்கு அருளே தனுவாக எடுத்து அருள் செய் வோர் தாமே என்பதையும், பரம கருணகர பரஞ்சோதிப் பிழம்

ராகிய பாசிவம், சிற்றறிவினர்களாகிய ஆன்மாக்கட்கு அறிவித்து டய்விப்பான் கொண்ட திருச் சின்னங்களேயாம். இங்ஙனமே ஏனைய பற்றின் உண்மைகளையும் பெரியோர்வாய்க் கேட்டமைக. இவ் வுண்மைகளை யறியாது, சிவதூஷணஞ் செய்யும் ஈசுரத் துரோகி ன் எரிவாய் நரகால் விழுங்கப்பட்டு அதற்கு இரையாவார் என்பதற் கையமேயின்று.

## திருமந்திரம்.

"நூலுஞ் சிகையு நுவலிற் பிரமமோ
நூலது கார்ப்பாச நுண்சிகை கேசமாம்
நூலது வேதாந்த நுண்சிகை ஞானமாம்
நூலுடை யந்தணர் காணு நுவலிலே."

## பதினோராந் திருமுறை.

"தூமதி சடைமிசைச் சூடுதெ றாவென்றி
யாமதி யானென வமைத்த வாறே
யறனுரு வாகிய வானே றூர்த
லிறையவ னியானென வியற்று மாறே
யதுவவ னவனென நின்றமை யார்க்கும்
பொதுநிலை யானென வுணர்த்திய பொருளே
முக்கண னென்பது முத்தீ வேள்வியிற்
றொக்க தென்னிடை யென்பதோர் சுருக்கே
வேத மான்மறி யேந்துதன் மற்றத
ஞாத ஞென்ன நவிற்று மாறே
மூவிலை யொருதாட் சூல மேந்துதன்
மூவரும் யானென மொழிந்த வாறே
யெண்வகை மூர்த்தி யுன்பதிவ் வுலகினி
லுண்மை யானென வுணர்த்திய வாறே
நிலம்நீர் தீவளி யனல்வா னென்று

மூலவாத் தொல்புக ழுடையோ யென்றும்
பொருளுநற் பூதப் படையோ யேன்றுந்
தெருளகின் றலகினிற் றெருட்டு மாறே
யீங்கிவை முதலா வண்ணமும் வடிவு
மோங்குநின் பெருமையு முணர்த்தவு முணராத்
தற்கொலி மாந்தர்,"

## சௌந்தரியலகரி.

"தாளிணைக் கமல மூறித் தருமமிழ் துடல மூழ்க
மீளவப் பதங்கள் யாவும் விட்டுமுற் பழைய மூலம்
வாளர வாக மென்ன வளைத்துயர் பணத்தி ளேடு
நாளுமைக் கயற்கண் டுஞ்சு ஞானவா னந்த மின்னே."

## கந்தபுராணம்.

"வன்மை பெற்றகுண் டோதரன் மொய்ம்பிடை வைத்துச்
சின்ம யத்தனி மால்விடை யேறினன் சிவனே."

"மேனிபொற் கென்றலின் விமல வான்பொரு
ளெனு மருட்கையி னவையி லீசனைத்
தானுணர் தெளிவினிற் றவத்திற் பூசையி
லான து குணனெலா மயன்ற னாக்குமே."

"நேமியாற் குருவெலா நீல மாயதுந்
தோமறு கடலிடைத் துயில்கொள் பான்மையு
மேமுறு மகந்தையும் பிறவு மெய்துமேற்
றமத ராசதந் தானு முற்றவே."

"மாமன்ற யளப்பில வரம்பி லாகமந்
தோமற வுதவியோர் தொன்ம ரத்திடைக்
காமரு முனிவரர் கணங்கட் கன்னவை
தாமத குணத்தனேற் சாற்ற வல்லனோ."

திருக்களிற்றுப்படியார்.

"முத்தி முதற்கொடிக்கே மோகக் கொடிபடர்ந்
தத்தி பழுத்த தருவென்னுங்—கத்தியினேன்
மோகக் கொடியறுக்க முத்திப் பழம்பழுக்கு
மேகக் கொடியெழுங்கா ணின்று."

உண்மைவிளக்கம்.

"தோற்றத் துடியதனிற் றோயுந் திதியமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்கார—மூற்றமா
யூன்று மலர்ப்பதத்தி லுற்ற திரோதமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு."

"மாயை தனையுதறி வல்வினையைச் சுட்டுமலஞ்
சாய வமுக்கியரு டானெடுத்து—நேயத்தா
லானந்த வாரிதியி லான்மாவைத் தானழுத்த
ருனெந்தை யார்பாதந் தான்."

சதாசிவரூபம்.

"ஒள்ளொளி கவசம் பெருமை யத்திரம்."

இவைகளாலும் பிறவாற்றாலும் உய்த்துணரப்படும்.

ஆகவே, சிவபெருமானுடைய சிரம்-முகம்- இருதயம் என்னும் அங்கங்களும், வக்ஷசு-கண்டம்-தனங்கள்-புயங்கள்-நாபி-உதரம்-குகியம்-நேத்திரங்கள்-நாசி-செவிகள்-கரங்கள்-பாதங்கள்-விரல்கள்-தொடைகள்-முழந்தாள்கள்-கணைக்கால்கள் என்னும் பிரத்தியங்கங்களும், சூலம்-மான்-மழு-வாளாதிய சாங்கங்களும், உடை-மாலை-கந்தம்-ஆபரணம்-ஆசனம்-உபவீதம் என்னும் உபாங்கங்களும், ஆன்மாக்கட்கு உண்மையை விளக்கும் பொருள் வடிவம் என்பதும், எல்லாமாய் அல்லதுமாய் நிற்கும் எம்பிரான் தம்பயன் கருதிக் கொண்டவையன்றென்பதும், தெளியக்கிடந்தவாறு காண்க.

சிவஞான சித்தியார்.

"உருவருள் குணங்க ளோடு முணர்வரு ளுருவிற் றோன்றுங்
கருமமு மருளா ரன்றன் கரசர ணாதி சாங்கந்
தருமரு ளுபாங்க மெல்லாந் தானரு டனக்கொன் றின்றி
யருளுரு வுயிருக் கென்றே யாக்குவ னசிந்த னன்றே."

இங்ஙனமாக, அநாதிமலமுத்த பதியாகிய சிவபெருமானே சுத்தாத்துவித முத்தியாகிய பேரின்பவீட்டை யருள்வர்.

சூதசங்கிதை.

"வேதமார்க் கத்தின் முக்கிய மாக விளங்கிடப் பட்டநஞ் சிவனே
யேதமின் முத்தி கொடுப்பவன்."

ஆகலால் அவ்விறைவன் திருவடியாகிய தெப்பத்தை யடைந்தவர்களே மேற்கண்ட முத்திக்கரையை அடைவார்கள். மற்றவர்களோ பிறப்பு இறப்பு என்னுஞ் சலத்தை யுடையனவாய், மதியை விழுங்குகின்ற காமம் என்னும் பாம்பு விரிந்து நிற்பனவாய், இடைவிடாது நிகழும் விடயங்கள் என்னும் இரைகளைத் தின்னுகின்ற கரணங்கள் ஆகிய மீன் கூட்டங்கள் சுழல்வனவாய், பெருமிதம் என்னும் பாசியை யுடையனவாய், நோய்கள் என்னும் ஒழியாத புலால்மணம் வீசுவனவாய், மாறி மாறித் தோன்றுஞ் சுகதுக்கங்கள் என்னும் அலைகள் மோதுவனவாய், மனம் என்னுங் கபடமுள்ள இராசமகரஞ் சுழல்வனவாய், அகம்பாவம் என்னும் ஆமைகள் இருப்பனவாய், அவா என்னும் அளவுகடந்த ஆழத்தை யுடையனவாய், களவு என்னும் பாரும் மலையு முடையனவாய், கலக மென்னும் விடங்கள் தங்கிய புழுக்கள் நெளிவனவாய், குற்றமென்னும் நுரைகள் தோன்றுவனவாய், நிரதிசயானந்தமென்னும் முத்திக்கரையை விட்டு விலக்குகின்ற பெண்களென்னுங் கொடுஞ்சுழிகளை யுடையனவாய், கோபம் என்னும் வடவாமுகாக்கினியைக் கொண்டவாய், போகம் என்னும் முதலைகள் செறிந்திருப்பனவாய், இருமல் மூ

லாகிய ஒலிகளை யுடையனவாய், ஆசை - தேகம் - வாதம் - பித்தம் - சிலேத்துமம் என்னும் ஐவகைப்பட்ட பெருங்காற்றுகள் இடையறாது வீசுவனவாய், குடர்கள் என்னும் ஆலாக்கூட்டங்கள் ஒலிப்பனவாய், மலமென்னும் உவர்ப்புச் செறிந்திருப்பனவாய், மார்க்கங்களாகிய பல துறைகளை யுடையனவாய், தேவர்-மனிதர் - விலங்கு - பறவை-ஊர்வன-நீர்வாழ்வன-தாவரம் என்னும் பெயர்களை யுடையனவாய் இருக்குஞ் சத்த சமுத்திரங்களில் ஒன்றனையேனுங் கடக்க மாட்டாதாராய் அவற்றுள் அழுந்தி யுழல்வார்கள் என்பது சத்திய மேயாம்.

சசிவன்னபோதம்.

"மரண பவங்களான புனலை யுடையது
மதியை விழுங்குகாம வரவு பெரியது
கரண வொழுங்கறாத விடய விரைநுகர்
கரணமொ டியங்குமீன மிகவு முகள்வதே."

"பெருமித மென்றகூறு பெருமை யுடையது
பிணிக ளெனுங்கெடாத புலவு கமழ்வது
வருமிட ரின்பமான திரைகள் பொருவது
மனமெனும் வஞ்சராச மகர முறைவதே."

"அளவி லகந்தை யாமை யபரி மிதமுள
வவாவெ னிறந்த வாழ மறிய வரியது
கனவு நெருங்குபாரு மலையு முடையது
கலக விடங்கண்மேவு கிருமி நெளிவதே."

"துகளெனு நன்கிலாத நுரைகூ டருவது
துறவினி லின்பமான கரையை விடவகல்
மகளி ரெனுந்தவாத வலிய சுழியது
மறலியு மஞ்சுகோப வடவை யெரியதே."

"வெருவரு கின்றபோக முதலை யடர்வது
விவித மனந்தமான துறையு மறிபவ
ரொருவர் கடந்துபோக விரகி லெழுபவ
வுததி விளம்பயாவ ருலகி லறிவரே."

சிந்தாந்தகரணம்.

"மந்திரவாட் பெற்றும் பகைவெல்லான் மற்றதுகொண்
டந்தோ தன் மெய்யை யரிந்தான்போன் — றிந்தவுடற்
கொண்டுமுத்தி செல்லுங் குறிப்பின்றிச் சிற்றின்பங்
கண்டுவினைக் காளாங் கணக்கு."

திருவள்ளுவர் குறள்.

"பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார்."

இங்ஙனமாக நாம் ஒவ்வொருவரும் இவ்வுடல் நீர்க்குமிழி போன்றதெனவும், இதனால் வரும் இன்பமோ மிகச் சிறியதெனவும், துன்பமோ அளவில்லையெனவும் அறிந்து, இப் பிறவிக் கடல்களைக் கடந்து, சிவசாயுச்சிய முத்திக் கரைசேர்ந்து பேரின்புற்றிருக்க, இதுகாறுங் கூறி விளக்கப்பட்ட பதியாகிய பாசிவத்தினது திருவடித் தெப்பத்தையே அடையவேண்டும். அதுவொன்றே சுகநிலை யருளாநிற்கும்.

போதரத்நாகரம்.

"காயநீர்க் குமிழி யதிலுறு மின்பங் கானலிற் புனலது தனக்கிங்
காயவத் துயர மளவிலை யதுநீ யாய்வுறு மையினாற்றிந் தற்றாய்
நீயினிக்கவலைமயல்களைத் தவிர்ந்து நெஞ்சமே வந்தெனக்குடன்பட்
டாயவச் சொரூபற் கரிபதே புரியி லரியதே தார்கமக் கெதிரே."

## வைராக்கிய சதகம்.

"ஓரீ னுள்ளமே பாரின்மா னுடர்முத லுளவரு பிறப்பூடுஞ்
சேரு மின்பமொன் றில்லையென் பதுபிரத் தியக்கமா நீவல்லாய்
போர்க ளாதிதுன் பிமையவ ரடைவதும் புகலநூ லுணர்ந்தாயே
நேரிலா வரன் கழலலான் மிகுசுக நிலைபிறி திலையன்றே."

## காரைக்காலம்மையார் அற்புதத் திருவந்தாதி.

"இனியோநா முய்ந்தோ மிறைவன்றாள் சேர்ந்தோ
மினியோ ரிடரில்லோ நெஞ்சே—யினியோர்
வினைக்கடலை யாக்குவிக்கு மீளாப் பிறவிக்
கனைக்கடலை நீந்தினோங் காண்."

ற்றிற்று.

உ

## இரண்டாவது

# க்ஷேத்திராலய விளக்கம்.

சிவபெருமானது திருவடிப் புணையை அடைதற்குச் சமயம் முன்னாக் காட்டப்பட்ட வைதிக சைவ சுத்தாத்துவித சைவ சித்தாந்த சமயமேயாம். இதுவே உண்மைச் சமயமாம். இதைக் கைவிடுவேமாயின், இதுபோலுஞ் சமயம் வாய்த்தல் அருமையினும் பேருமையாம்.

சிவஞான சித்தியார்.

"வாழ்வெனு மையல் விட்டு வறுமையாஞ் சிறுமை தப்பித்
தாழ்வெனுந் தன்மை யோடுஞ் சைவமாஞ் சமயஞ் சாரு
மூழ்பெற லரிது சால வுயர்சிவ ஞானத் தாலே
போழிள மதியி னானைப் போற்றுவா ரருள்பெற் றாரே."

தாயுமான சுவாமிகள் பாடல்.

"சைவ சமய மேசமயஞ் சமயா தீதப் பழம்பொருளைக்
கைவந் திடவே மன்றுள்வெளி காட்டு மிந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந் துழலுஞ் சமயநெறி புகுத வேண்டா முத்திதருந்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேர வாருஞ் சகத்தீரே."

இச் சமயத்திலே நான்கு உபாயங்கள் உண்டு. அவையாவன:— தாதமார்க்கம், புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்பனவாம். இவைகள் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனவும் பெயர் பெறும். இம் மார்க்கங்களினும் முறையே சென்றாற்றான் அது கிடைக்கும் என்க.

சிவஞான சித்தியார்.

"சன்மார்க்கஞ் சகமார்க்கஞ் சற்புத் திரமார்க்கந்
தாதமார்க்க மென்று சங்கரனை யடையு
நன்மார்க்க நாலிவைதான் ஞான யோக
நற்கிரியா சரியையென நவிற்றுவதுஞ் செய்வர்."

இங்ஙனமாக, சரியை யின்றேல் கிரியையும், கிரியை யின்றேல் யோகமும், யோக மின்றேல் ஞானமும், (சிவ) ஞான மின்றேல் சிவபெருமானது திருவடிப்பேறாகிய முத்தியுங் கைகூடாவாம். அதனாற்றான் அம் முத்திரசங் கொள்ளற்கு, அவைகள் முறையே அரும்பு, மலர், காய், கனிபோலக் கருவியாய் நிற்கும் என்ப.

தாயுமான சுவாமிகள் பாடல்.

"விரும்புஞ் சரியைமுதன் மெய்ஞ்ஞான நான்கு
மரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே."

பிரபுலிங்கலீலை.

"உரைசெயிற் பரம ஞான மொன்றுமே முத்திக் கேது
சரியைநற் கிரியை யோகந் தாமொரு மூன்றுஞ் ஞான
மருவுதற் கேது வென்று மறைபுகன் றிடுமால்."

தாதமார்க்கம்: (சரியை) ஆவது, புறத்தொழின் மாத்திரையானே சிவபெருமானுடைய உருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு.

இதின் உண்மையாவது: இத் தேகத்தை மலச்சுமை யெனவும், துக்கம் விளைக்கும் புன்குரம்பை எனவும், அநித்தியம் எனவும் கண்டு, உண்டிசுருக்குதன் முதலியவற்றால் தேகத்தை வெறுத்தலும், வேடத்தானும், சிவோகம் பாவனையானும், பிராசாதயோகஞ் செய்தலானும், திருவேடமுடைய மெய்யடியாரையும் சிவலிங்கப் பெருமானையும் உண்மை யுணர்ந்து வழிபடுதலுமாம்.

புத்திரமார்க்கம்: (கிரியை) ஆவது, புறத்தொழில் அகத்தொழில் என்னு மிரண்டானும் சிவபெருமானுடைய அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு. இதின் உண்மையாவது, பிருதிவியாதி முப்பத்தாறு தத்துவங்களையும் நேதி களைந்து, பஞ்சசுத்திகளையுஞ் செய்து தன்னை உள்ளபடி யறிதலாம்.

சகமார்க்கம்: (யோகம்) ஆவது, அகத்தொழின் மாத்திரையானே சிவபெருமானுடைய அருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடாம். இதனுண்மையாவது, அங்ஙனம் தன்னை யறிந்தவிடத்துத் தன்னுயிர்க் குயிராயிருந்த திருவருளைக் கண்டு, அவ்வருளே வடிவாகியிருந்து, முன் நீங்கிநின்ற கருவிகளோடுங் கூடாதிருத்தலாம்.

சன்மார்க்கம்: (ஞானம்) ஆவது, அறிவுத்தொழின் மாத்திரையானே உருவம், அருவுருவம், அருவம் என்னும் முத்திறத் திருமேனிகளையுங் கடந்துநின்ற, அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பான சிவபெருமானை நோக்கிச் செய்யும் வழிபாடாம். இதனுண்மையாவது, அஞ்ஞானிகட்கு மருண்மேலீட்டினாலே சிவம் முற்றுந் தோன்றப்பெறாது பிரபஞ்ச வாசனையோடு நிற்கு நிலைபோல, சிவஞானிகள் அருண்மேலீட்டினாலே பிரபஞ்சவாசனையும், அவ்வருளே வடிவாயிருந்த தானுஞ் சிறிதுந் தோன்றப்பெறாமல், பரையே ஆகிய வேறின்மையினையும் அதன்மேற் பேரின்பம் விட்டுத் தோன்றாத மேலீட்டினையும், இவ்வின்பத்தைப் பெற்றேனென்னும் பேறின்மையினையும் பெற்றுச் சிவத்தோடு அத்துவிதமாய் நிற்றலாம்.

இங்ஙனமாகக் கிரியைகளிற் பயனில்லையென அவற்றை யிகழ்ந்து ஞான முத்தியடைய விரும்புவோர், ஆகாயத்தினின்றுந் தொலையுரித்துடுக்க விரும்பினோரையும், படிவழியேறிச் செல்லாது கீழ்நின்று, மலையினுச்சிக்குப் பாய விரும்புவோரையும்

போன்றவர்களாய், அவர் கதி எய்தப்பெறுவார் என்பது உண்மை நூற் றுணிபேயாம்.

இவ்வண்ணமிருத்தலால், வீடடைய விரும்பினோர், புறத்தும் அகத்துஞ் சிவபெருமானை வழிபடல் அத்தியாவசியகமேயாம். சிவபெருமான் புறத்தே திருப்பதிக்ஷேத்திரங்களிலுள்ள ஆலயங்களில் இருக்கும் சிவலிங்கமுதலிய திருமூர்த்தங்களையும் - மெய்யடியாரது திருவேடங்களையும்-ஆதாரமாகக்கொண்டு நின்றும், அகத்தே உயிர் இடமாகக்கொண்டு நின்றும், இவ்வுலகாராற் செய்யப்படும் வழிபாட்டையேற்றருள் செய்வார்.

### சிவஞான சித்தியார்.

"தாபர சங்க மங்க ளென்றிரண் டுருவி னின்று
மாபரன் பூசை கொண்டு மன்னுயிர்க் கருளை வைப்ப
னீபரன் றன்னை நெஞ்சி னினைவையே னிறைந்த பூசை
யாய்பரம் பொருளை நாளு மர்ச்சிநீ யன்பு செய்தே."

சிவபெருமான் இம்மண்ணுலகத்திலே நால்வகையோனியிலும், எழுவகைப் பிறப்பிலும், எண்பத்துநான்கு லக்ஷம் யோனி பேதங்களிலும், அளவின்றி வினைவயத்தாற் பிறந்திறந் துழலும் ஆன்மாக்களை, அவற்றினின்று மெடுக்கு நிமித்தத்தானன்றே, விரிந்த உலகத்திலே தலம், தீர்த்தம், மூர்த்தியென்னும் மூன்று வடிவாய் விளங்கினர் என்ப.

### தணிகைப்புராணம்.

"ஈண்டுநாற் பிறப்பி னெழுவகைத் தோற்றத்
தெண்பத்து நான்கெனு மிலக்க
மாண்டபல் பவத்திற் பன்முறை வினையான்
மறிதரு முயிர்களை யெடுப்ப
வாண்டரு ளமல னாதியி லுலக
மாக்குழி யருந்தலந் தீர்த்தம்

காண்டகு மூர்த்தி யென்னமூன் றுருவாய்க்
கண்ணகன் ஞாலமெலாங் கீர்த்து."

இம் மூன்றனையுஞ் சிவபெருமா னாகவே எண்ண வேண்டும். அவ்வாறு அவைகளை முறையாக வணங்குவோர் பரமஞானசாரிய ரால் உண்மை விளங்கப்பெற்று முத்தியடைவார்கள்.

தாயுமான சுவாமிகள் பாடல்.

"மூர்த்திதலந் தீர்த்த முறையாற் றொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே."

சிவவடிவங்களாகிய இவற்றுள் தலங்களோ அளவில்லாதன இருக்கின்றன. அவைகளுள்ளுந் தரும தலங்களே விசேடம்; அவைக ளுள்ளும் சைவதலங்களே விசேடம்; அச் சிவக்ஷேத்திரங்களோ ஆயிரகோடியுண்டு; அவைகளுள்ளும் ஆயிரத்தெட்டுத் தலங்களே மேலானவை; அவைகளுள்ளும் நூற்றெட்டுத் தலங்களே மேலா கும்; அவற்றுள்ளும் அறுபத்தெட்டுத் தலங்களே சிறந்தன; அவற் றுள்ளும் பதினறு தெய்வத் தலங்களே விசேடமுற்றன; அவைகளி னும் முத்திநகர்களெனக் கூறும் அயோத்தி, மதுரை, மாயை, அவந் திகை, காசி, காஞ்சி, துவாரகை என்னுஞ் சத்தக்ஷேத்திரங்களே உயர்ந்தனவாம்; இவைகளினும் ஆதாரக்ஷேத்திரங்களாகிய திருவா ரூர், திருவானைக்கா, திருவண்ணாமலை, சிதம்பரம், திருக்காளத்தி, காசி என்பவைகளே மேலானவை; இவைகளினும் பஞ்சபூத லிங்க க்ஷேத்திரமாகிய காஞ்சி, திருவானைக்கா, திருவண்ணாமலை, திருக் காளத்தி, சிதம்பரம் என்பனவே விசேடமுற்றன; இவைகளினும் திருவாரூர், காசி, சிதம்பரம் என்பவைகளே விசேடமுற்றன; இவற் றுள்ளுஞ் சிதம்பரமே விசேடமுற்றது.

திருவிளையாடற் புராணம்.

அவ்வகைய மூன்றின்முதற் றலப்பெருமை
தனைச்சுருக்கி யுரையக் கேண்மி

னெவ்வகைய வுலகத்தாங் தருமதல
மதிகமவற் றீறி லாத
சைவதல மதிகமவற் றறுபத்தெட்
டதிகமவை தமிலீ ரெட்டுத்
தெய்வதல மதிகம்."

## திருவிரிஞ்சைப் புராணம்.

"ஏற்ற மாந்தல மாயிர கோடியில் விடத்தி
னூற்று நாலிரண் டவையினும் பெருமையா றவல்லவர்."

## கந்தபுராணம்.

"மன்னுமகேந்திரமலயஞ்சையங் சத்திமாநிருடம்பாரியாத்திரமேவிந்த, மென்னுமலேயோரேழுங்காஞ்சியாதியெழுகருந்தாணமொராயிரமேலெட்டும்......"

## கோயிற்புராணம்.

"பிறந்தில மாரூர் தன்னிற் பேசிய காசி மேவி
யிறந்தில மிரண்டு முத்தி யின்பமும் பின்ப தாநா
முறைந்திடுந் தில்லை ஞான யோகமார் தான மாமாற்
செறிந்தடி காணச் சீவன் மூத்தராய்த் திரிய லாமே."

இவைகளாலும் பிறவாற்றாலும் அறியப்படும்.

இத்தலங்கடோறும், சிவலிங்கமுதலிய திருமேனிகள் விளங்கும் ஆலயங்கள் இருக்கின்றன. இந்த க்ஷேத்திர ஆலயங்களின் வரலாற்றை ஆராயுங்கால், அவைகளெல்லாம் ஒவ்வோர் காலவிசேடத்திலே சிவபெருமான் தம் மெய்யன்பர் பொருட்டாக அவர்க்குத் தரிசனங் கொடுத்துத் திருவருள் புரிந்தகாலத்து அவ்வடியார்கள், தாம் அரிதில் அடைந்தபேறு யாவரும் எளிதில் அடைய வேண்டுமென்னுங் கருணைநோக்கத்துடன் பெருமானைப் பார்த்து, "சுவாமீ! தேவரீர் இவ்விடத்துத் திருக்கோயில்கொண்டு வீற்றிருந்து வருகின்ற

மெய்யன்பர்கட்கு எளிதில் அருள்புரியவேண்டும்" எனப் பலவாறு வணங்கித் துதித்துக் குறையிரக்க; அன்பர்கள் வேண்டிய வேண்டியாங்கீயும் பெருமான் அதற்குடன்பட்டு வீற்றிருக் தருளுந் திருத் தானங்களேயாம்.

இங்ஙனமே க்ஷேத்திராலயங்கள் பல அநேகர்களால் உண்டாக்கப்பட்டமை சிவாகம வேதோபாங்கத்தாலும், அவ்வத்தல புராணங்களாலும், தலந் தீர்த்தம் மூர்த்தி நாமங்களானும் அறியத்தக்கதாம். இச் சிவக்ஷேத்திராலய சேவைப்பெருமையை உலகத்தார்க் கறிவித்து உய்விக்க நினைந்த பேரருளாலே, உலகமாதாவாகிய உமாபிராட்டியாரும், குமாரர்களாகிய விநாயகக்கடவுளும் - சுப்பிரமணியக் கடவுளும் பூவுலகடைந்து திருவானைக்கா, திருக்கேதாரம், காஞ்சி, மாயூரம், திருச்செங்காட்டங்குடி, திருச்சேய்ஞலூர் முதலிய தலங்களில் ஆலயங்கண்டு பூசித்து விளக்கினார்கள்.

## திருவானைக்காப்புராணம்.

"நிச்சலுங் காலந் தொறுந்தொறு முள்ள
நெகிழ்தர வருங்கியல் வாறங்
கெச்சமில் பூசை புரிகுவா ளொருநா
ளினிதுபூ சனைமுடிந் ததற்பின்
முச்சகம் பழிச்சு முதல்வனைத் தணந்த
முறைமையை நினைந்தன ளாகி
வெச்சென வுயிர்த்துப் புளகமெய் போர்ப்ப
விழுத்தகு துதிவிளம் பினளால்."

## திருவிளையாடற்புராணம்.

"கரிமுகத் தவுணற் காய்ந்து கரிமுகத் தண்ணல் பூசை
புரிசிவ நகர மீது தாரகற் பொருது செவ்வேள்
அரனையர்ச் சித்த தாங்கீழ் மணற்குறி யான்பா லாட்டிப்
பரன்முடி மாலை சூடுஞ் சேய்வளம் பதியீ தாகும்."

என்பவற்றானும் பிறவற்றானு மறிக.

இவர்களும் அல்லாமல், பரமபதியாகிய சிவபெருமானே உலகர்க்கு விளக்கும் ஓர் திருவிளையாட்டி னிமித்தம் தந்திருக்குமாரராகிய சாமிநாதக் கடவுளைக் குறித்து, ஓர் கணப்பொழுது தவஞ் செய்தலாற் "கணிகவரை" என்று திருத்தணிகைவரை, காரணத் திருநாமத்தைக் காட்டிமோயின் அவற்றின் பெருமையை யார் சொல்லவல்லார்?

தணிகைப்புராணம்.

"பணிகிளர் ராரப் பண்ணவன் முருகற்
படர்ந்தருந் தவத்தினை யாங்குக்
கணிகமே புரிந்து கருத்துமுற் றுறலாற்
கணிகவெற் பெனப்பெயர் விளங்கும்."

இவர்களேயன்றி, கோடி உருத்திரர்கள், நந்திதேவர், விஷ்ணு, பிரமன், காளி, இலக்குமி, சரஸ்வதி, மார்க்கண்டேயர், அகத்தியர், வசிட்டர், கபிலர், தும்புருநாரதர், திக்குப் பாலகர்கள், இயக்கர், கின்னரர், கிம்புருடர், சித்தர், கருடர், துவாதசாதித்தர், சந்திரன், மற்றைய கிரகங்கள், துருவன், தக்கன், அட்ட வசுக்கள், அட்ட நாகர்கள், ஆதிசேடன், ஏனையமுனிவர், தேவர்கள், தேவப்பெண்கள், அசுரர்கள், இராக்ஷதர்கள், சைவசமய பரமாசாரியர்களாதிய உண்மை நாயன்மார்களுள் அநேகர், பட்டணத்தடிகள், சேந்தனார், அரசர்கள், அரிவையர்கள் முதலாய பற்பலரும் சிவக்ஷேத்திராலய சேவாதியவற்று லன்றோ தாந்தா மெண்ணியன வெல்லாம் எய்தப்பெற்றின்புற்றார்.

தேவாரம்.

"இயக்கர் கின்னரர் யமனொடு வருணர்
இயங்கு தீவளி ஞாயிறு திங்கள்
மயக்க மில்புலி வானர நாகம்
வசுக்கள் வானவர் தானவ ரெல்லாம்

அயர்ப்பொன் றின்றி நின்றிரு வடியினை
யர்ச்சித் தாற்பெரு மாரருள் கண்டு
திகைப்பொன் றின்றிநின் றிருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூரு ளானே."

உபதேசகாண்டம்.

"தேவர் கின்னர ரியக்கர்கிம் புருடர்காந் தருவர்
மேவ ருந்தவ முனிவரர் சித்தர்வெள் ளெயிற்றுப்
பாவ காரிய நிருதர்வித் தியாதரர் படப்பாம்
பாவ தாகிய வெண்மரு மருச்சனை யயர்ந்தார்."

"கருடர் மானிட ரரக்கர்மண் புரந்தருள் கமஞ்சூல்
வருட மெண்டிசை மரவரை மால்வரைக் குலங்கள்
பொருவ ரும்பதம் புகுந்தது மருவலர் புரந்தீத்
தொருவு மெம்பிரா னருச்சனை யன்றிவே றுளதோ."

பிரபுலிங்கலீலை.

"வாசவ னரியயன் வான நாட்டுளோர்
பாசமின் முனிவரர் பலரு மண்ணிடைப்
பூசனை விதிமுறை புரிந்த வாலயங்
காசணி யல்குலாய் காண்கி லாய்கொலோ."

"மலைமகள் முரா மகளிர் பாற்கடல்
அலைமகள் முனிவ ரில்லறக் கிழத்தியர்
கலைமகள் விழிநுதற் கடவுட் பூசையா
னிலைமைக ளடைந்தமை நினைந்தி லாய்கொலோ."

இன்னுந் துவாதசாந்தத் தலமாகிய மதுராபுரியின்கட் டோன்றிய அரசரேறான வரகுணதேவர், பிரமகத்தியாற் பீடிக்கப்பட்டு வருந்தி, அதை நீக்கற்கு அந்தணாளர்க்கு வேண்டியன ஈந்தும், திரிமூர்த்தி வடிவமான அரசவிருட்சத்தைப் பிரதக்கிணஞ் செய்தும்,

பசுக்களுக்குப் புல் முதலாயின அருத்தியும், உண்டவர்க்கு முறையே செல்வம், நோய்நீக்கம், சந்தானாகும், புத்திரப்பேறு, யாவரானும் பூசிக்குமேன்மை என்னு மிவைகளைக் கொடுக்கின்ற கோசலம், கோமயம், பால், தயிர், நெய் என்பவைகளை உண்டும், பின்னரும் பற்பல புண்ணியங்களைச் செய்தும் நீங்கப்பெறாமல், இறுதியில் ஆலய பிரதக்கிணஞ் செய்தபின்னரன்றோ தந்திராநோய் நீங்கப்பெற்றனர்.

நீங்கப்பெற்றவுடனே, அளவில்லா ஆனந்தங்கொண்டு மெய்யன்புடனே சிவாலயஞ் சமைப்பித்தும், நித்திய நித்தியாங்க நைமித்திக நைமித்திகாங்க காமிக காமிகாங்க உறுப்புக்களால் பூசையாதியன செய்வித்தும், தலயாத்திரை செய்தும் வருகிவருநாளில், ஓர் தினம் (திருவிடைமருதூர்ச்) சிவாலயசந்நிதியிலே தலையோடொன்றிருக்கக் கண்டு, அதைத் தங் கையாலெடுத்தூக் கண்ணீர் வெள்ளத்தி லாட்டி, "உம்மைப்போல அடியேன் தலையுங் கிடக்கப்பெறுமோ" என்று மனமுருகியும், அங்ஙனே நாய்மலங் கிடத்தலைப் பார்த்து, "அதை முதலாம் ஆவரணத்தில் எடுப்பார்க்குத் தந்தேசத்திற் காற்கூறும், இரண்டாம் ஆவரணத்தில் எடுப்பார்க்கு அரைக்கூறும், மூன்றாம் ஆவரணத்தில் எடுப்பார்க்கு முக்காற்கூறும், நான்காம் ஆவரணத்தில் எடுப்பார்க்கு முழுக்கூறும் கொடுப்பதாக வாக்குப் பண்ணியும், ஒருவரும் எடுக்காமையால் தேசம் தமக்கே உடையது" என்று அம்மலத்தைத் தாமே தம் அருமைக் கரத்தால் எடுத்துப் புறத்தே யெறிந்தும், ஆலய வீதியினின்ற வேப்பமரங்கள் பழுத்து வெயிலி னிற்றலைப் பார்த்து, "ஐயோ! இவைகள் சிவலிங்கப் பெருமானை யொத்த திருவுருவங்கள் பலவற்றையுஞ் சுமந்து வெதும்புகின்றனவே" என்று மனம் பதைபதைத்து, அங்ஙனின்ற மரங்கட்கெல்லாம் மேற்கட்டி கட்டுவித்தும், இன்னும் அநேக சிவபுண்ணியங்களைச் செய்தும், ஒழுகிய சிவக்ஷேத்திராலய அன்புமேலீட்டானன்றோ பெறுதற்கரிய சிவசாலோக்கிய தரிசனமும், பின்னர்

முப்பத்தாறு தத்துவங்கட்கும் மேலாகிய பரசிவ நாதனது திருவடிப் பேறாகிய பேரின்பநிலைச் சாகரமுங் கிடைக்கப்பெற்றனர். இதனைச் சிவஞானச் செல்வராகிய திருவெண்காட நாயனார் அவர்கள் சிறப்பித்து விளக்கியருளினர்.

## பதினோராந் திருமுறை.

"மருக வட்டத் தொருதனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி
யும்மைப் போல வெம்மித் தலையுங்
கிடத்தல் வேண்டுமென் றடுத்தடுத் திரந்துங்
கோயின் முற்றத்து மீமிசைக் கிடப்ப
வாய்த்தன வென்று நாய்க்கட்ட மெடுத்துங்
காம்புகுத் துதிர்ந்த கனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதான மமைத்துப்
பெரிய வன்பின் வரகுண தேவரும்,"

என்பதனாலும் அறிக.

மேலே கூறப்பட்ட தேவர் முதலாயினோரே அன்றிக் கீழ்ப் பிறவிகளான யானை, சிங்கம், யாளி, புலி, குதிரை, பசு, எருது, பன்றி, குரங்கு, பாம்பு, மீன், ஆமை, நண்டு, வண்டு, சிலாப்புள், முயல், தவளை, நாரை, கரிக்குருவி, கருடன், சிலந்தி, முதலாயினவும் சிவாலயார்ச்சனை புரிந்து முத்தி யடைந்தனவேயன்றோ?

## தனியூர்ப் புராணம்.

"பிறைம ருப்புரற் கான்முறச் செவிப்பெரு வேழ
நிறைவ லிக்கொடுங் கூற்றென நிகழ்தரு மடங்க
லறைமு ரட்சின வாளிகாற் கதியமை பாய்மா
வுறைசெ ருத்தலா னோங்கிமி லேறுழல் பன்றி."

என வரும் புழுகீசப்படலச் செய்யுள்களால் உணர்க.

இவ்வாறே எவர்களும், எவைகளும், பரமபதியாகிய சிவபெருமானை க்ஷேத்திராலயங்களில் வழிபட்டு இஷ்ட பர சாதனங்களை யடைந்த உண்மையானது, இன்னோரன்ன நூல்களானும் அநுபவத்தானும் வெளிப்படவே, அவைகள் உறுதிப்பொருளை யடைதற்குக் கருவிகளென்பது பெறப்பட்டன.

இங்ஙனமாகவும், ஓர் சாரார், 'பத்மாசுரனுக்கு அஞ்சி உய்யவழி தெரியாது ஒளித்தவனும், நம் பாதத்தால் விழுங்கப்பட்டவனுமாகிய சிவனையா எல்லா வலிமையும், எல்லாச் சிறப்பும், எல்லாச் செல்வமும் உடைய நம் பகவானை ஸ்ரீமந் நாராயண மூர்த்தி ஆலயஞ் சமைத்து அருச்சிப்பார். நன்று! நன்று!! இது வந்தியா புத்திரன் ஆகாயப் பூக்கொய்து சூடினான் என்பதுபோல்வதன்றி உண்மையாகா,' என வாயில் வந்தன வந்தன கூறி நிந்தனை செய்வாராயினர். இவர்கள் அறியாமைக் கென்செய்வோம். விட்டுணுமூர்த்தி பலகாலங்களினும் பல தலங்களிற் சென்று சிவாலயார்ச்சனை செய்தார் என்பது, நூன்முகத்தானும், தலதீர்த்த மூர்த்த நாமங்களானும், அநுபவத்தானும், விளங்கக் கிடக்கின்றதே. ஆயினும், அவைகளை யீண்டெடுத்து விளக்கின் விரியுமாதலின் விடுத்து, ஒன்றனை மற்றவைகளி னுண்மையும் போதரக் காட்டுவாம்.

விட்டுணு சுதரிசன சக்கரத்தைச் சிவபெருமானிடம்பெற விரும்பிக் காஞ்சித் திருநகரடைந்து நாடோறும் ஆயிரந் தாமரைப் புட்பங்களால் அர்ச்சித்து, ஓர்நாள் ஓர் புஷ்பங் குறைய, அதற்குப் பதிலாகத் தமது கண்ணில் ஒன்றைப் பிடுங்கிச் சாத்தி யர்ச்சித்த அன்பு மேலீட்டை நோக்கிப் பரசிவநாதர் பிரசன்னராய். அவர்க்குச் சுதரிசன சக்கரத்தையும், கமலக்கண்ணன் என்னுந் திருநாமத்தையுங் கொடுத்ததன்றி அத்தலமுந் 'திருமாற்பேறு எனக் காரண நாமத்தோடு வழங்கப்பட்டு விளங்குக'' எனவுந் திருவாய்மலர்ந்தருளி அந்தர்த்தான மாயினர் என்க.

காஞ்சிப்புராணம்.

"ஆங்கவனை யெதிர்நோக்கி மீன்பூசைக் ககமகிழ்ந்தே
முனைக்கிஞ் ஞான்று
தேங்கமல விழியளித்தேம் பதுமாக்க னெனும்பெயரிற்
றிகழ்வா யிவ்வூர்
பாங்குபெறு திருமாற்பே றெனப்பொலிக வென்றருளிப்
பானு கோடி
தாங்குகதிர்ச் சுதரிசனப் பெயராழித் தனிப்படையு
முதவி னானால்."

திருவாசகம்.

'சலமுடைய சலந்தரன்ற னுடறடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடீ
நலமுடைய நாரணன்ற னயனமிடந் தரனடிக்கீ
ழலராக விடவாழி யருளினன்காண் சாழலோ."

என்று கூறுங் கூற்றுகளையும், ஏனைய நூல்களி னுற்றையும் ஒப்பாது மறுத்துரைப்பினும், விஷ்ணு பத்தர்களில் மெய்ஞ்ஞானி யென்று பேர் வகித்த நம்மாழ்வார் என்னுந் தம்மாழ்வார் கூறிய பேற்றையாயினும், மறுத்துக் கறுக்காது ஒப்புவாரோ அறியேம். அவரே, "விஷ்ணு சிவபெருமானைக் கண்மலரால் அர்ச்சித்துச் சக்கரம் பெற்றார்," எனப் பிரகாசப்படுத்தினர். அதையும் விளையாட்டென் முடிப்பார்போலும்.

திருவாய்மொழியில்.

"சேக்கர்வான் சடையோன் சேவடிக்கீ ழங்காளின்
மெய்க்கணிட்டுச் சக்கரநீ பெற்றவிளை யாட்டேபோன்
மைக்கொண் மேனியனே வாளரக்கர் குலத்தரிய
செக்காங் குடியானே தேவதேவனே."

எனக் கூறிக் கிடத்தலால், உண்மை யென்பதை யொப்புவார் அறிவோர். இன்னும் இதனானே, மற்றவைகளுஞ் சைவர்கள் கட்டிய நன்றென்பதை அறிந்து, சிவக்ஷேத்திராலயத்தைத் தூஷியாது, அதன் விசேடம் அறிந்தொழுகல் நன்மையேயாம்.

இது நிற்க, "க்ஷேத்திரங்கடோறுஞ் சென்று, சிவாலயத்தைச் சிவனெனவே கண்டு வழிபட்டு வாழும் இயல்பினோர், சீவன் முத்தராவர்" எனச் சிவஞானபோதஞ் செப்புகின்றது. அவ்வாறு செய்து பெரும்பே றடைந்த மார்க்கண்டேய முனிவரே அதற்குச் சான்றாகும்.

### கந்தபுராணம்.

"அத்த னாலய மனைத்து மெவைகளும்
பத்தி யோடுமுன் பவலி யேமருஞ்
சுத்த னாகியே தொல்லைவி லாருயிர்
முத்தி யெய்துவன் முழுதுணர்ந் துளான்வி."

இன்னுஞ் சிவாலயத்தை, மெய்யன்புடனே கால்களாற் பிரதக்கிணஞ் செய்வோர், தாம் எடுத்துவைக்கும் ஒவ்வோர் அடிக்கும் ஒவ்வோர் அஸ்வமேத யாகஞ் செய்த பலத்தை அடைவார்கள் எனச் சிவபெருமானே வரகுண பாண்டியர்க்குத் திருவாய் மலர்ந்தருளினார்.

### திருவிளையாடற் புராணம்.

"எண்ணும்படியம்முறையால்வலங்கேதத்தவையன்
விண்ணின்றியம்புமாசேபரிமேதவேள்வி
நண்ணும்பயனோடிவைப்பினினண்ணவெம்மைப்
பண்ணும்வலத்தான்மகிழ்ந்தேம்பழியஞ்சன்மன்னே."

சிவாலயத்தை மெய்யன்புடனே ஒரு சாமம் அங்கப் பிரதக்கிணஞ் செய்வோர், தமது தீவினைகளெல்லாம் நீங்கப்பெற்றுச், சிவசாலோக்கிய பதவியை யடைந்தினிதிருந்து பின்னர், உலகம் சுத்தமாயைக்குள் ஒடுங்கும்போது அத்துவித முத்தியையும் அடைவார்கள்.

அருணாகிரி புராணம்.

"ஒருயாமம் வலம்புரியி னுடலினாற் றீவினைக
ளொருவு மெல்லாங்
கருவாதை யிவர்மண்ணிற் சிவலோக மடைந்துகளிப்
புறவே வாழ்வர்
பெருகார்வத் தொடுமேலைச் சிவலோகம் பெற்றிருப்பர்
பேத மற்றே
பரமேசன் பதமடைவ ரண்டமெலா மாயையினுட்
படியும் போதில்."

சிவாலய சந்நிதானங்களிலே யமன் அணுகான் என்றும், அவற்றுள்ளும் காசி - திருக்காளத்தி என்பவைகளிலே சிவசந்நிதியினின்றுந் தனித்தனி ஐந்து குரோசத்துக்கு அப்பாலும், மதுரையிலே சிவசந்நிதியினின்றும் ஒரு குரோசத்துக் கப்பாலும், சிதம்பரத்திலே சிவசந்நிதியினின்றும் இரண்டுகாத வழிக்கப்பாலும், யமனைச் சஞ்சரிக்குமாறு சிவபெருமான் ஆஞ்ஞாபித்தருளினார் என்றும், உண்மை நூல்கள் உரைக்குமாயின் க்ஷேத்திராலய விளக்கத்தை யென்னென் றிடுவாம்.

இவ்வுண்மைகளை நோக்கி யன்றோ, சைவசமய பரமாசாரியர்களுள் ஒருவரான திருநாவுக்கரசு நாயனாரும், தெய்வப்புலமை ஔவையாரும், "சிவாலயங்க ளில்லாத ஊர் எவ்வித வளப்பங்களால் தேங்கப்படினும் நல்ல ஊரன்று பாழூராம்; அதிற் குடியிருத்தலு மாகாவாம்" என்னுங் கருத்துட்பட "திருக்கோயி லில்லாத திருவிலூரும்" எனவும், "கோயிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்" எனவுங் கூறியருளினார்கள்.

இத்துணை விசேடமுற்ற க்ஷேத்திராலயங்களை அவமதிக்காது அவற்றை அடைந்து,

"வாழ்த்த வாயு நினைக்க மடநெஞ்சுந்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித்"

துதிக்கவேண்டும். இவ்வாறு செய்தாற்றான் அருமையினும் பேரருமையான இம்மானுட யாக்கையாற் பயனுண்டு. அன்றேல் இன்றாம்.

பிரமோத்தரகாண்டம்.

"கண்ணுதலா லயநோக்குங் கண்களே கண்கள்
கறைக்கண்டன் கோயில்புகுங் கால்களே கால்கள்
பெண்ணொருபா கனைப்பணியுந் தலைகளே தலைகள்
பிஞ்ஞகனைப் பூசிக்குங் கைகளே கைகள்
பண்ணவன்றன் சீர்பாடு நன்னாவே நன்னாப்
பரன்சரிதை யேகேட்கப் படுஞ்செவியே செவிக
ளண்ணல்பொலங் கழனினைக்கு நெஞ்சமே நெஞ்ச
மவனடிக்கீ ழடி மைபுகுமடிமையே மடிமை."

தேவாரம்.

"ஆக்கையாற் பயனென்-அரன்
கோயில் வலம்வந்து
பூக்கையா லட்டிப் போற்றியென் னாதவிவ்
வாக்கையாற் பயனென்."

இந்த, "மானிடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காயத்
தானிடத் தைந்து மாடு மரன்பணிக் காக வன்றோ."

என்னுந் திருவாக்கை நினைத்து க்ஷேத்திராலய திருத்தானங்களையடைந்து மெய்யன்புடனே பூசித்து முத்திபெற் றுய்வீர்களாக.

இங்ஙனமாகவும், சில மௌட்டிகர்கள், "அங்கிங்கெனாதபடியெங்கும் பிரகாசமாய்க் கடவுளிருக்க, நாம் அத் தலாலயத்திற்றான் இருக்கிறார் என உன்னலுங் கொடும்பாவமன்றோ?" எனவும், "இன்

னும், தலம் ஆலயம் மூர்த்தி தீர்த்தங்களெல்லாம் சோதனையிற் பார்க்குமிடத்து, அவைகள் சாதாரணமான மண், கல், மரம், உலோகம், நீர்போ லிருப்பனவன்றி வேறு விசேட மொன்றனையு முடையவன்றே?" எனவும், "அவைகள் வேடிக்கை விநோதமாய்ப் பொழுது போக்கற்காக ஏற்படுத்தப்பட்டனவன்றி, வேறோர் பிரயோசனத்தையுங் கொடுக்கமாட்டா" எனவும், "அன்றியும், பட்டணத்தடிகள்-தாயுமான சுவாமிகள்-சிவவாக்கியர் முதலாய மெய்ஞ்ஞானிகளே,

"சிற்றம் பலமுஞ் சிவனு மருகிருக்க
வெற்றம் பலந்தேடி விட்டோமே." எனவும்,

"பண்ணேனு னக்கான பூசையொரு வடிவிலே" எனவும்,

"தீர்த்தலிங்க மூர்த்தியொன்று தேடியோடுந் தீதரே
தீர்த்தலிங்க முள்ளினின்ற சீவனைத் தெளியுமோ" எனவும்,

இன்னன செய்யுள்களா லுணர்த்தியிருக்கின்றார்களே," எனவும், ஆங்காங்கு ஒவ்வோர் பாக்களைப் பொறுக்கி யெடுத்துப் படித்துக் காட்டித், தலம் கோயில் குளம் உற்சவம் என்னும் பயனிலாச் செய்கைகள் வேண்டாமென்று தாமொழிவதோடு பிறரையுங் கெடுக்கின்றார்கள். இவர்கள் அறியாமை யிருந்தபடி யென்னே? சிவஞான தீபங்களாய அவர்கட்கு அவைகள் சம்மத மின்றேல்,

"வாவியெல்லாந் தீர்த்த மணலெல்லாம் வெண்ணீறு
காவண மெல்லாங் கணநாதர்—பூவுலகி
லீதுசிவ லோகமென் றென்றேமெய்த் தவத்தோ
ரோதுந் திருவொற்றி யூர்." எனவும்,

"காலையு மாலையுங் கால்பெயர்த் திடுவது
ஆலயம் வலம்வருந் தற்கே சால்பினின்
கைகொடு குயிற்றுவ தேய கின்னது
கோயிற் பல்பணி குறித்தே." எனவும்,

"மூர்த்திதலந் தீர்த்த முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே." எனவும்.

"தீர்த்தலிங்க மும்மூளை தெளிந்துகாண வல்லிரேற்
றீர்த்தலிங்கந் தானதாய்த் தெளிந்ததே சிவாயமே." எனவும்.

இன்னோரன்னவைகளைப் பின்னருங் கூறியதென்னை? இவ்விருத்திறனையும், அவ்வவர்களே மீட்டுங் கூறலால், அவைகட்குச் சமாதானமு மிருத்தல்வேண்டும். என்னை?

நோய்வாய்ப்பட்டா னொருவன், அதை நீக்கற்கு மருந்துண்ணும்போது, வைத்திய சாத்திரத்தில் விதித்தவாறே அநுமானத்தோடு உண்ணுமையையும், அபத்தியங்களைத் தள்ளிப் பத்தியங்களைக் கொள்ளாமையையும், வைத்தியாநுபவிகள் கண்டு இரங்கி, "நீ உண்ணும் மருந்தினாற் பயன் யாது?" என்றக்கால், அவர்களுக்கு அம்மருந் துண்ணற்க என்பது கருத்தாமோ, அன்றே! அதுபோலவே மலபரிபாகம் வரும்படி கிரியைகளைச் செய்வோர், சிவாகம முதலிய உண்மை நூல்களில் விதித்தவாறே அன்போடு செய்யாமையையும்; கொல்லாமை, புலாலுண்ணாமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை, வியபிசாரஞ் செய்யாமை, இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, பெரியோரைப் பேணல் முதலிய நல்லிலக்கணங்களைக் கொள்ளாமையையும்; கிரியை ஞானத்தைப் பயப்பதேயாக, முத்தியையுங் கொடுக்கும் என நினைந்து தருக்குற்று நிற்றலையும்; தத்தந் தேகங்களிலேயே தலம், தீர்த்தம், மூர்த்தி, ஆலயம் ஆதியவற்றைக் கண்டறிந்து செய்யும் முத்தியையே பயக்கின்ற, அந்தரியாக பூசையைச் செய்யாது நிற்றலையும், அவ்வுட் பூசையின் உண்மை விளங்கவும, அது சித்திக்கவும் ஏற்படுத்திய புறத்துள்ளனவற்றையே உண்மை எனக்கொண்டுநிற்றலையும், மேற்கூறிய மகான்களும், அவர்கள்போன்ற மானதபூசை செய்யும் பெரியோர்களும், காருண்ய நிமித்தத்தாற் கூறியவந்து "நீவிர்கள் செய்யும் புறவழி

பாட்டுக் கிரியைகளால் (முத்திப்) பயனின்று" என்னின், அவர்க்கு அக்கிரியைகளைச் செய்யற்க என்பது கருத்தாமோ இல்லையே! அவ்வுண்மை அவர்கள்.

"கட்டிச் சுருட்டித்தங் கக்கத்தில் வைப்பர்
கருத்தில் வையார்." என்பதனானும்,

"நெஞ்சகமே கோயி னினைவே சுகந்தமன்பே
மஞ்சனநீர்ப் பூசைகொள்ள வாராய் பராபரமே." என்பதனானும்,

"தம்மிற் சிவலிங்கங் கண்டதனைத் தாம்வணங்கித்
தம்மன்பான் மஞ்சனநீர் தாமாட்டித்—தம்மையொரு
பூவாகப் பூவழியா மற்கொடுத்துப் பூசிக்கா
லோவாமை யன்றே யுடல்." என்பதனானும்,

"புறம்பு காலன்குவன் புல்லியசனீசனை
யறிந்த ஞானி யகமுறக் காண்பனால்
எறும்பி காணுறி லின்கரும் பேகொளுஞ்
செறிந்த வாடிலை தின்பன வென்பவே."

என்பதனானும், பிறவாற்றானு மறிக. மற்றையோர்கள் கருத்து மிஃதேயாம்.

இன்னும் ஆன்மாவானது தேகமெங்கும் வியாபித்திருப்பினும், சாக்கிரமுதலிய அவத்தைகளிலே விசேடித்து நிற்பதுபோலவும்; பசுவினிடத்திற் பால், தேகம் எங்கணுஞ் செறிந்திருப்பினும், மற்றைய தானங்களினின்றுந் தோற்றாது முலையிற் பரிசித்த மாத்திரத்தே அதினின்றுந் தோற்றுதல்போலவும்; ஆதிமத்தியாந்த சமானாதிகரகித அகண்டாகார பரசிவம் சர்வ வியாபகத்துவரா யிருப்பினும், க்ஷேத்திராலயங்களிலே தயிரில் நெய்போல விளங்கியும், மற்றை யிடங்களிற் பாலினெய்போல விளங்காது நின்றும் அருள் செய்வார்; என்பதையும் அறிந்தடங்கி யுய்வார்களாக.

ஆகவே, பேரானந்தப் பிறவா வீடடைய விரும்பினோர் யாவரும் சிவதலங்களை யடைந்து, ஆங்காங்குள்ள தீர்த்தங்களில் மூழ்கித், திருக்கோயிலுட் சென்று ஆங்குச் செய்யவேண்டியனவற்றை மெய்யன்புடன் செய்து, உண்மை விளங்கப்பெற்று அகத்திலே அவைகளை யெல்லாங் கண்டு ஞான பூசையைச் செய்தல்வேண்டும். புறத்துள்ள க்ஷேத்திராலய முதலாயினவற்றைச் சிவயோக சாமர்த்தியமில்லாதார்க்கு உண்மைவிளங்க உபாயமாக வைக்கப்பட்டதாம்.

சிவஞான சித்தியார்

"திருக்கோயி லுள்ளிருக்குந் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவ னங்கே
யுருக்கோலி மந்திரத்தா லெனிணையு மவர்க்கு
முளனெங்கு மிலனிங்கு முளனென்ன பார்க்கு
மிருப்பாய வடிவாகி யிக்தனத்தி னெரிபோன்
மந்திரத்தின் வந்துதித்தே யிருஞ்சுரபிக் கெங்கு
முருக்கான வொண்ணாத பான்முலைப்பால் விம்மி
யொழுகுவது போல்வெளிப்பட் டருளுவனன் பார்க்கே."

புறப்பூசையிற் சிறிது குறைவிருத்தலாற்றான், மேலோர்கள் அகப்பூசையைச் செய்வார்கள். என்னையெனில்? எவ்வெவர் வயிற்றினுள்ளு மிருந்து புசித்த உணவுகளை யெல்லாஞ் சீரணிக்கச் செய்யும் அக்கினிதேவற்கு அசீரணம் பிறந்ததென் றுபசரிக்குந் தன்மை போலவும், காற்றிற்குக் கால் பிடித்தன் முதலிய உபசாரஞ் செய்ய எண்ணியது போலவும், ஆன்மாக்கட் கெல்லாம் பரமான்மாவாய் நின்று, ஊட்டி யுறக்கி உபசரிக்குஞ் சச்சிதானந்த வஸ்துவாய சிவத்துக்கு ஓர் குறையுள்ளதுபோலக் கருதி, அட்டவிதார்ச்சனை, சோடசோபசாரம், நைவேதனம் முதலியன செய்தலானும், புதைப்பதற்கு அகப்படாத நிழலைப் புதைக்கத் தொடங்கினாற்போல ஒன்றற்கும் அகப்படாது பிருதிவிமுதலிய முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்து

பேரானந்தக் கடலாய் நிறைந்திருக்குஞ் சிவத்தை, தற்போதத்தால் அகப்பட்டதுபோற் பாவனைசெய்து ஓர்வடிவத்து ஆவாகித்தலானும், அழுக்குகளைப் போக்கும் நீரைக் கழுவிச் சுத்தஞ்செய்வார் போன்று, தம்மை யடைந்த ஆன்மாக்களினது மும்மலங்களையுந் துடைத்து நிர்மலமாக்குஞ் சிவத்தை, நீராட்டி நிர்மல மாக்குவோர்போல அபி டேகங்களைச் செய்தலானும், பச்சிலை புட்பங்கள், வித்துக்களைக் கொண்டவாய், ஈசுர சிருட்டிக் கேதுவாய் நிற்றலானும், அவைகளைக் கொய்தலால் கொலைத்தோஷம் சம்பவித்தலானும், இன்னுந் தண் ணீர் மொள்ளல், நெருப்பு மூட்டல், நெற்குத்தல், கந்தபலாதி சமூ லங் கொள்ளல், புனுகுசட்ட மாதியன எடுத்தல் முதலியவற்றானுஞ் சிறிது குற்றமுண்டாக, புறவழிபாட்டினின்றும் அகவழிபாடாகிய மானத பூசையே விசேடமுடைத்து. அதுவே சிவபெருமானுக்குப் பிரீதி கொடுப்பதாய், அருவருப்பு, சரீரவருத்தம் கொலைமுதலிய பாவங்கள் இல்லாததாய் உள்ளதாம். இது, காலையினுஞ் செய்யலாம்; மாலையினுஞ் செய்யலாம்; நினைக்கும் எப்பொழுதிலாயினுஞ் செய்ய லாம்; எவ்விடத்திலாயினும் இருந்து பரமேசற்குப் பிரீதியாக இயற்ற வேண்டுவனவற்றையும் இயற்றலாம். இது இஷ்டசித்தியைக் கொடு ப்பதோடு முடிவில் சிவசாயுச்சிய முத்தியையும் அளிக்கும்.

"உள்ளேவல் செய்வாரைக் காந்தன் மிகவுகப்ப
னுள்ளேசெய் பூசை யுகந்து."

## சிவதருமோத்தரம்.

"அகத்தினுட் பூசை செய்வார்க் கருவருப் பில்லை கொல்லும்
பகைத்தொழி லில்லை யல்லற் படுதலு முடலுக் கில்லை
யுகப்புறு பலமு மேலா முறும்பல முனையி னற்பஞ்
சகத்தினுட் பூசை செய்வார் தமக்கெலாம் வருத்தஞ் சார்ந்தும்."

## உபதேசகாண்டம்.

"மனத்து னேத்திய பூசனை வரன்முறை மாக்க
ணினைத்த போதுமாங் காலைமா லையினுமா நினைத்த

வனைத்து மீசனுக் காக்கவெத் தலத்தினு மாமாற்
புனைத்த வார்சடைப் புனிதர்காண் மானத பூசை."

"உருகு சிந்தையின் மானத பூசனை யுஞற்றிக்
கருதி வேண்டின பெறுகுவர் கடைமுறை கயிலைப்
பெருவ ளம்பெறப் பெறுகுவ ரீங்கிது பேசின்
மருவி நித்தலும் வழுக்குறு தியற்றுதன் மாபே."

புறவழிபாட்டிற்குள்ள தலம், ஆலயம், தீர்த்தம், தூபம், தீபம், அபிடேகம், பூமாலை, நைவேத்தியம்முதலாய காரணங்களையெல்லாம், மேலோர்கள் அகத்தே மனத்தாற் பொருத்திச் செய்வார்கள். அதுவே மானதபூசை யெனப்படும்.

உபதேசகாண்டம்.

"அனைய பூசனைக் கிரியையின் மெய்யயர்ந் திருந்து
நினைய லாவது மானத பூசனை நிமலன்
புனைய வேண்டுநை வேத்திய முதலின பொருத்தி
வினையம் யாவையு மனத்தினு லியற்றுவர் மேலோர்."

தேகதலத்திலே உயிராலயத்தி லிருக்கின்ற சிவத்தைப் பூசிக்காது மறந்து, புறத்தே பூசிப்பவன் பசுவின்பால் தன் உள்ளங்கையில் இருப்பதைக் கண்டும் அதை உண்ணாது புறங்கையை நக்குவோனை யொப்பாவன்.

சிவதருமோத்தரம்.

"சிறந்தகத்து ளான்மாவி லுறைசிவனைப்
பூசையினைச் செய்யா ஞகி
மறந்துபுறத் தினிற்பூசை வருந்தியே
யியற்றுபவன் வயங்கு மாவின்
கறந்தபா லடிசிலகங் கையுளே
யிருப்பதுந்தான் கண்டு ணாது

புறங்கையினை நக்குமவன் போலுமால்
யாமறியப் புகலுங் காலே."

புறத்தே சைவசமயிகளால் அநுசரிக்கப்படும் தலம், ஆலயம், உபசாரம், உற்சவம் ஆதியனவோ கிறிஸ்தவர், மகமதியர் முதலாயி னோர் தத்தமனம்போன போக்கின்படியே கட்டுகின்ற சர்ச் (Church) மசூதி முதலானவைகளையும், ஆங்குச் செய்யப்படும் ஆசாரங்களையும் போலாது, ஒவ்வொன்றும் முதனூல்களின்படியே "இயற்றுவன வாய், மானதபூசையின் உண்மையை விளக்கி ஞானத்தை யுண்டாக்கு தற்கு இன்றியமையாக் கருவிகளாய்ப் பிரகாசிக்கும்.

எவர்களுக்கும் இனிமை பயக்கும் பால், தேன், சர்க்கரை, முதலிய பொருள்களினுள்ளே மருந்தையும் பொதிந் தூட்டி நோய் களை நீக்கும் வைத்தியர்கள்போல, மலப்பிணி மாற்றும் பரமவைத் தியராகிய சிவபெருமானும் பகிர்முகத்திலே க்ஷேத்திராலயங்களை யும், பூசை உற்சவாதிகளையும் விதித்தமை, சிற்றறிவினர்களாகிய ஆன்மாக்கள் யாவரும் வழிபட்டு, அவற்றின் அந்தரியாக பூசையின் உண்மைகளை அறிந்து, அதனை யியற்றிச் சிவஞானமேலீட்டால் அத்துவித முத்தியிற் சேர்ந்து இன்பமுறும்பொருட்டே யாம்.

அவ்வுண்மை, ஈங்குள்ள சிவாலயங்கள், வைஷ்ணவாலயங்கள், மற்றைத் தேவாலயங்கள் எவற்றினும்; கர்ப்பக்கிருகம், அர்த்தமண் டபம், மகாமண்டபம், தூபி, விமானம், பிரகாரம், கோபுரம் முதலி யன ஒரே தன்மையவாகக் காணப்படுதலானும், ஒன்றுபோலவே மற்றவைகளுங் கட்டப்பட்டு விளங்குதலானும், அறியப்படும். ஆகவே புறவழிபாட்டிற் கமைந்தன யாவும், அகவழிபாட்டிற்கும் உள என் பத னுண்மையையச் சிறிது காட்டுவாம்.

## சரீரமும் அண்டமுஞ் சமம்.

அண்டமானது பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என் னும் பஞ்சபூதங்களையும்; இலங்கை, இமயமலை, சிதம்பரம் என்னும்

மூத்தாணத்தையும்; அக்கினி, சூரியன், சந்திரன் என்று மும்மண்டலத்தையும்; பதினான்கு லோகங்களையும்; மலை, தீவு, சமுத்திரம், நவக்கிரகம் ஆதியனவற்றையும்; உயிர்கள் தோன்றி நின்றொடுங்குந் தன்மையினையும்; தலம், தீர்த்தம், மூர்த்தி, ஆலயம் ஆதியனவைகளையும், உடைத்தா யிருத்தல் போலவே பிண்டமாகிய இத்தேகமும் அவைகளைக் கொண்டுளதா நிற்றலாற் சமமாம்.

கோயிற்புராணம்

"வலர்கைமான் மழுவேயான் போற்றும் வானார வரசை நோக்கி
யலைந்திடும் பிண்ட மண்ட மனைசம மாதலாலே."

திருவாதவூரடிகள் புராணம்.

"எண்டரு பூத மைந்து மெய்திய நாடி மூன்று
மண்டல மூன்று மாகி மன்னிய புணர்ப்பி னாலே
பிண்டமு மண்ட மாகும் பிரமனே டைவ ராகக்
கண்டவர் நின்ற வாறு மிரண்டினுங் காண லாகும்."

ஔவைகுறள்.

"அண்டத்தா லாய வுடம்பின் பயனெல்லா
முன்றேனைக் காட்டி விடும்."

"பொய்க்கெல்லாம் பாசனமா யுள்ளதற்கோர் வித்தாகு
மெய்க்குள்ளா மாய வுடம்பு."

அவ்வுண்மையைக் காட்டுவாம்:—

பஞ்சபூதம்.

அண்டமானது: வெளி, காற்று, அக்கினி, சலம், மண் என்னும் ஐந்தையுங் கொண்டு விளங்கிநிற்றல்போலச், சரீரமும் வெளியையும், பிராணன் முதலாய தசவாயுக்களையும், கோபாக்கினி ( லாய அக்கினியையும்; வாய்நீர்-இரத்த முதலாய சலத்தையும்,

தோல் முதலாய பிருதிவி யம்சத்தையும், கொண்டு தோன்றி நிற்ற லாற் (பரிணாமிக்கப்பட்ட) பஞ்சபூதமுடைமை யாவரு மொப்பற் பாலதேயாம்.

### மூத்தானம்.

இச்சரீரத்திலே, வலக்காற் பெருவிரலில் இருந்து இடமூக்கி னிற்கும் இடைகலையே இலங்கை எனவும், இடக்காற் பெருவிரலி லிருந்து வலமூக்கினிற்கும் பிங்கலையே இமயமலை எனவும், மூலா தாரத்தி னின்றும் எல்லா நாடிகளுக்கும் ஆதாரமாய்ச் சிரசளவும் முட்டிநிற்கும் நடுநாடியாகிய சுழுமுனையே சிதம்பரம் எனவும் உண ரற்பாலதாம்.

### கோயிற்புராணம்.

“இலங்கைக்கே ரிடைபோ மற்றை யிலங்குபிங் கலையா நாடி
கலங்கிள ரிமைய நேர்போ நடுவுபோஞ் சுழுனை நாடி.”

### மும்மண்டலம்.

இச்சரீரத்தும், பிருதிவியும் அப்புவுங் கூடின விடத்திலே, நாலிதழுடைய புட்பம்போலிருக்கும் அக்கினிமண்டலமும்; இருதய கமலத்திலே, எட்டிதழுடைய புட்பம்போன்றிருக்குஞ் சூரியமண்டல மும்; மூலாதாரந் தொடங்கிச் சிரநடுவரைக்கும், கோடிசூரியப் பிரகாசம்போனிற்குஞ் சந்திரமண்டலமும் விளங்காநிற்கும் என்ப.

### நெஞ்சுவிடுதூது.

“களபதனை
மாதர் மயக்கமழித்து வளர்மண் டலத்தின்
சோதியொரு மூன்றினையுஞ் சோதித்து.”

### ஔவைகுறள்.

“மண்டலங்கண் மூன்று மருவவுட னிருத்தி
யண்டரனை யர்ச்சிக்கு மாறு.”

## பதினைந்து லோகம்.

சரீரத்திலே உள்ளங்கால் அதலமாகவும், கணைக்கால் விதலமாகவும், முழங்கால் சுதலமாகவும், தொடை தலாதலமாகவும், குகியம் ரசாதலமாகவும், இடை பாதாளமாகவும், நாபி பூலோகமாகவும், வயிறு புவர்லோகமாகவும், இருதயம் சுவர்லோகமாகவும், தோள் மகலோகமாகவும், முகம் சனலோகமாகவும், நெற்றி தபோலோகமாகவும், சிரசு சத்தியலோகமாகவுங் குறிக்கப்படும் எனவும்,

## மலைகள்.

மூலாதாரத்து முக்கோணத்திலே மகாமேருவும், கீழ்க்கோணத்திலே மந்தரமும், தக்கிணகோணத்திலே கைலாசமும், வாமகோணத்திலே இமயமும், ஊர்த்துவபாகத்திலே நிடதமும், தக்கிண பாகத்திலே கந்தமாதனமும், வாமரேகையிலே இரவணமுங் குறிக்கப்படும் எனவும்,

## தீவுகள்.

மாமிசத்திலே குசத்தீவும், சிரசிலே கிரவுஞ்சத்தீவும், எலும்பிலே சம்புத்தீவும், மச்சையிலே சாகத்தீவும், தோலிலே சான்மலித்தீவும், கேசத்திலே பிலக்ஷத்தீவும், நகத்திலே புட்காரத்தீவும் கொள்ளப்படும் எனவும்,

## சமுத்திரங்கள்.

மச்சையிலே நெய்ச்சமுத்திரமும், இரத்தத்திலே தயிர்ச் சமுத்திரமும், மூத்திரத்திலே உப்புச்சமுத்திரமும், சிலேத்துமத்திலே மதுக்கடலும், இரசத்திலே கருப்பஞ்சாற்றுக்கடலும், சுக்கிலத்திலே பாற்சமுத்திரமும், இலம்பிகையிலே சுத்தோதக சமுத்திரமும் அறியப்படும் எனவும்,

## கிரகங்கள்.

நாதசக்கரத்திலே சூரியனும், விந்துசக்கரத்திலே சந்திரனும், கண்ணிலே செவ்வாயும், இருதயத்திலே புதனும், கண்டத்திலே வியா

மூனும், சுக்கிலத்திலே வெள்ளியும், நாபியிலே சனியும், முகத்திலே இராகுவும், காலிலே கேதுவும் கொள்ளப்படும் எனவும் காருடபுராணங் கூறுவதனுனும்,

## உயிர்கள் தோன்றிநின்றேடுங்கல்.

அண்டத்திலே, பற்பல உயிர்கள் தோன்றிநின்று உண்ணல் முதலிய வினைகளைச் செய்து அழிதல்போலவே, நமது சரீரத்தினும் பேன், கிருமி, பாம்புமுதலிய பிராணிகளுந் தோன்றி நின்று, உண்ணல் முதலிய வினைகளைச் செய்து அழிந்துபோதல் பிரத்தியக்ஷப் பிரமாணமாகையானும்; தாவரமாகிய அண்டத்தைப்போலவே சங்கமமாகிய சரீரமுஞ் சமம் எனப்பட்டு முற்கூறிய தலம், தீர்த்தம், ஆலயம், உபசாராதியவற்றை உண்மைநூற் பிரமாணவெமலாயிலாக, அதிலறிந்து உண்மைவிளங்க இயன்றபடி காட்டுவாம்.

## க்ஷேத்திரங்கள்.

பகிர்முகத்திலே, ஐம்பொறிகள் வாயிலாக மனஞ் செல்லுமாயின் புலனுறுது மேம்பட்டு பாவமுண்டாம். அந்தர்முகத்திலே மனமொருங்குபட்டு நின்றுற்றுன் புலனற்று திரிசிய மயமான உலகங் காணப்படாமல், பரானந்தமயமாகிய சிவந் தோற்றப்பெற்றுப் பேரானந்த வீடுண்டாம். ஆதலாற்றுன், சிவயோகிகள் அந்தர்முக தலத்தி னிற்பார்கள். அவையாவன: சிரத்தானத்திலே ஸ்ரீபர்வதமும், நெற்றியிலே திருக்கேதாரமும், புருவத்துக்கும் மூக்குக்கும் மத்தியிலே ஞானரூபியாகிய பரசிவம் எழுந்தருளியிருக்கின்ற காசியும், குயத்தானத்திலே குருக்ஷேத்திரமும், இதயத்திலே பிரயாகையும், இருதயமத்தியிலே சிதம்பரமும், இருக்கும் எனக் கொள்ப.

## சூதசங்கிதை.

"சென்னிசீ சயிலம் பாலங்கே தாரந்
திகழ்தரும் புருவமத் தியமே

மன்னிய காசி வஸ்ருயத் தானம்
வளர்குருக் கேத்திர விதயந்
துன்னிய புன்னணி யப்பிர யாகை
சொல்லுமவ் விதயத்தி னடுவண்
மின்னிடு தெய்வச் சிதம்பர மூலா
தாரத்தா ருரென்பர் மெய்க்கண்."

## ஆதார க்ஷேத்திரங்கள்.

மூலாதாரத்திலே திருவாரூரும், சுவாதிஷ்டானத்திலே திருவானைக்காவும், மணிபூரகத்திலே திருவண்ணாமலையும், அனாகதத்திலே சிதம்பரமும், விசுத்தியிலே திருக்காளத்தியும், ஆக்ஞையிலே காசியும், பிரமாந்திரத்துக்கு மேலே உன்மனி சத்திக்கு அதீதமாய் விளங்கும் நிராமய ஸ்தானமென்னுந் துவாதசாந்தத்திலே மதுரையும் அறியப்படும்.

### திருவிளையாடற்புராணம்.

"திருவள ராரூர் மூலந் திருவானைக் காவே நாபி
மருவளர் பொழில்சூ ழண்ணா மலைமணி பூர நீவி
ரிருவருங் கண்ட மன்ற மிதயமாந் திருக்கா ளத்தி
பொருவருங் கண்ட மாகும் புருவமத் தியமே காசி."

"பத்திதரு துவாதசாந் தத்தலமென்
றேதுவினாற் பகர்வர் நல்லோர்."

### சனன மரண தரிசனத்தால்
## முத்திதருந் தலங்கள்.

அண்டத்திலே திருவாரூர், பிறக்க முத்திதருந் தலம் என்பதும்; காசி, இறக்க முத்திதருந் தலமென்பதும்; சிதம்பரம், தரிசிக்க முத்திதருந் தலம் என்பதும், சரீரத்தினும் அறியப்படும்.

ஆன்மதத்துவம் இருபத்துநாலும், வித்தியாதத்துவம் ஏழும், சிவதத்துவம் ஐந்தும் ஆகிய முப்பத்தாறு தத்துவங்களையுந் தனக்கு அந்நியமாகக் கண்டு அவைகளினின்றும் நீங்கிநின்ற அதீத நிலையே காசிக்ஷேத்திரம் எனவும், ஆன்மாவை அறிவென் றறிந்து யாமே தலைவனெனத் தோன்றும் நிலையே திருவாரூர் எனவும், தத்துவங்கள் சடமாதலின் ஒன்றையும் அறியாவென்றும், ஆன்மாக்களுஞ் சிற்றறிவினவாகலின் தம்மைத்தாமே காணல் கூடாவென்றும், அவ்வாறு காண்பது கண்ணொளியுஞ் சூரியனொளியும்போல் அபேதமாய் நின்று காட்டுகின்ற இறைவன் திருவருளால் எனவும், ஆகவே கண்டு கேட்டு உண்டுயிர்த்துற் றறிவனவெல்லாம் அத்திருவருளே எனவும், சிவமுன்னுகத் தியானித்துச் சர்வவியாபகமாயுள்ள அவ்வருளே இருக்கும் விளங்கும் என்னுஞ் சத்தியுண்மையான ஞானக்கண் கொண்டு, துரியநிலை கடந்த பாசிவத்தின் ஆனந்தாத்துவித திருநடனங் காண்டலே சிதம்பரக்ஷேத்திரம் எனவும், அறியப்படும். இவைகளை யடைந்தோர் முத்தி பெறுவதற்கு ஐயமுமுளதோ?

**சிவஞானதீபம்.**

"கருவிகளை லொன்பதும் வேற தாகக்
கண்டகன்ற வதீதநிலை காசி யாகும்
மருவுமுயிர் தனையறிவென் றறிந்து யாமே
மன்னனென நின்றநிலை யாரூ ராகுங்
கருவிசட மென்றுயிர்க டம்மைக் காணக்
கதிரொளிரவி யெனவுயிர்க்குக் காட்டா நின்ற
வருளையுணர்ந் தியாவுமான் செயலா முண்மை
யத்துவித நடந்தொழ லம்பலம தாமே."

**கைலாசம.**

கைலாசம் என்பதன் பொருள் நிரதிசயானந்தத்துக்கு உறையுள் என்பதாதலின், இருதயகமலம் இரவி விம்பமுதலிய ஏத்தானங்

களிலே சிவபெருமான் உபாசிக்கப்படினும், அவ்விடமனைத்தும் அவர்க்குச் சோதிமய பரமாகாசமாகிய பரசிவலோகம் என நூல்கள் கூறுகிற்கும்.

## முத்திகள்.

முப்பத்தாறு தத்துவங்களையும் சேறி களைந்தறிந்து, அவைகளினின்றும் நீங்கிய தன்னைத் திருவருளால் அறிந்து, அவற்றின் முடிவினிற்பதே சிவசாலோக்கிய முத்தியாம். அங்ஙனம் அறிவித்த திருவருளைக் கண்டு அதனையுந் தன்னையும் பிரித்து நோக்காது தற்போதத்தை யடக்கி யவ்வருளே வடிவாயிருப்பது சிவசாமீப்பிய முத்தியாம். தற்போதஞ் சிறிதுந் தோன்றாது ஒழிந்தவிடத்துப் பரை தானாயிருப்பதே சிவசாரூப்பிய முத்தியாம். அப்பரை நீக்கத்திற் றோன்றும் அகண்டாகார பரமஞானந்த சாட்சாத்காரப் பெரும் பேற்றில் அதீதப்படுவதே சிவசாயுச்சிய முத்தியாம்.

## தீர்த்தங்கள்.

பொற்குடம் ஆயினும் பகாவீ நிறைந்திருக்குமாயின் சேடடையும் பேராசை யுடையாரும் அதனைத் தீண்டவும் அருவருப்பார். ஆகயாம் அமிர்தத்தை யுண்ணினும் அதைப் பவ்வியாகச் செய்கின்ற இவ்வசுத்ததேக குறையத்தை அறிந்தும், பின்னரும் மதிமயக்க முற்று அதைச் சுத்தமாக்குவோமென்று நதிகடோறும் பின்னை போற் றோய்ந் துழன்று வினைச்சரக்கீட்டும் வியாபாரப்பெருமாக்கள் கட்குடமானது புண்ணிய நதிகளிற் றோய்ந்தாலும் சுத்தமாகாவாறு போல, தேகமும் மெய்யுணர்வில்லாவிடத்துப் புறத்தேயுள்ள புண்ணிய தீர்த்தங்கள் பலவற்றினும் முழுகிநின்றாலுஞ் சுத்தமடையாவென்றறிந்து, ஞானிகள் முழுகி வீடடையும் அகத்தீர்த்தங்களை யடைந்து முழுகி உய்வார்களாக. எங்ஙனமெனில்?

சரீரத்திலே அங்குட்டத்தினடி பிரமதீர்த்தம் எனவும், கைந்நுனி தேவதீர்த்தம் எனவும், விரல்களின் இறைச்சந்தி ஆரிடதீர்த்தம்

எனவும், கனிட்டிகைமூலம் மானுடதீர்த்தம் எனவும், மணிக்கட்டு பூததீர்த்தம் எனவும், தர்ச்சனி அங்குட்டங்களினடு பிதிர்தீர்த்தம் எனவுங் கொண்டு அவற்றுள், பிரமதீர்த்தவாயிலாக சாக்ஷாத்கார பரசிவத்தை உவப்பிக்கும்படி ஆன்மதத்துவம், வித்தியாதத்துவம், சிவ தத்துவம் என்னு மூன்று தத்துவங்களையும் உன்னிச் செய்யப்படுங் கன்மவுண்மையை அறிந்து அவ்வழிநின்றும்,

உண்மைபேசல், தானஞ்செய்தல், சமமாய்நிற்றல், தமமுறல், இன்சொற்கூறல், அந்தக்கரண மடக்கல், புறக்கரணமொடுக்கல், ஒருவழிப்படல், பொறுமையுடைமை, திடமுடைமை, ஞானமுடைமை, உயிர்கட்கிதஞ்செய்தல், என்னு மானத தீர்த்தங்களை யடைந்து, கடவுட்டியானம் என்னும் மானத விசேட ஸ்நானஞ் செய்தும், கருப்பையிற் புகுந்துகின்ற மும்மலங்களையுங் கழுவிப் பரிசுத்த முடையராய்ப் பேரானந்தப் பெருவீடடைவாராக.

தணிகைப்புராணம்.

"தமனியக் குடமே யாயினும் பவ்வீத்
தங்குறின் விழைஞரும் பற்று
ரமிழ்தமே யானுந் துய்ப்புழிற் பவ்வீ
யாக்குமிவ் வுடற்புக ரறிந்து
மிமிழ்தரப் பற்று மடவருக் குரைத்து
மென்பயன் றீர்த்தமா டிடினு
முமிழ்முடை யாக்கை சுசியுறு திறைவ
னுண்மைதேர்ந் துயிர்சுத்தி யுறுமே."

சைவசமயநெறி.

"செய்பிரம தீர்த்தத்தா லாசமனஞ் செப்பியே
யுய்யவந்த தத்துவமூன் றும்."

"பஞ்சவித தீர்த்தத்தைப் பாங்காக வேயறிந்
தெஞ்சாதே கன்ம மியற்று."

காசிகாண்டம்.

"சத்தியந் தானஞ் சமந்தமி யின்சொற்
சாற்றுத லொருவழிப் படுதல
புத்தியே முதல கரணமோர் நான்கு
மடக்குதல் புலன்கள்போம் வழியி
னுய்த்திடா தமைத்தல் பொறைதிட ஞான
மூயிர்க்கெலாந் தண்ணளி புரித
லித்திற மனைத்து மானத தீர்த்த
மெனவெடுத் தியம்பினர் மேலோர்."

"உரைப்பரு மானத தீர்த்த மோதிடிற்
சுருக்கமின் ஞானநீர் தோய்தலு மற்றது
விருப்பொடு வெறுப்பென விளம்பப் பட்டதோர்
கருப்புகுத் திடுமலங் கழுவு மென்பவே."

யாக்ஞவல்கியர்.

"ஸ்நானங்களுள் மானசஸ்நானமே மேலானது. அது கடவுளைத் தியானித்தலேயாம்."

சூதசங்கிதை.

"அறிவினிற் பெரியோ ரகத்தினும் புறத்து
மாகிய தீர்த்தங்கண் மூழ்கிச்
செறிதருந் தெய்வத் தலங்களும் போற்றிச்
சிவானந்த முத்தியை யடைவா
ரறிவினவ் வளவு சிறந்திடார் புறத்தே
யாகிய தீர்த்தங்கண் மூழ்கிச்
செறிதருந் தெய்வத் தலங்களும் போற்றிச்
சிவனுவர் போகமே நாளும்."

## ஆலயங்கள்.

புறத்திலே கட்டப்பட்டிருக்கும் ஆலயங்கள் சரீரப் பிரஸ்தாரம், இருதயப் பிரஸ்தாரம் என இருவகைப்படும். அவற்றுள், சரீரப்பிரஸ்தாரமாவது சரீரத்தை விரித்துக் குறிப்பதாம்; மற்றது இருதய கமலத்தை விரித்துக் குறிப்பதாம். சிவயோகிகள் அறிதற்பாலனவாய சத்ததாதுக்களி னிலைமை முதலியனவற்றைச் சரீரப்பிரஸ்தார ஆலயத்தாலும், மனிதர் உள்ளத்தே சொல்லாயும் பொருளாயும் அமைந்துள்ள ஒவ்வோர் வஸ்துக்களையும், இருதயகமலப் பிரஸ்தார ஆலயத்தாலும் விளக்கப்படும். அவைகளி னிலைமையைச் சிவயோகிகளே அறிவார்கள். ஆகலால் அவைகளி னுண்மை சில காட்டுவாம். தேகமே ஆலயமெனப்படும்.

சைவசமயநெறி.

"அறிந்தேயுயி ராலயத்தி னபேத
மறிந்தான் மெய்ஞ்ஞானி மலமற்று."

சிவஞானதீபம்.

"எவ்வுயிரும் பராபரன்றன் சந்நிதிய தாகு
மிலங்குமுயி ருடலனைத்து மீசன் கோயில்."

தேவாரம்.

"தறிகளுமடையாளமுங்கோயிலு
நெறிகளுமவர்நின்றதோர்நேர்மையு
மறியவாயிரமாரணமோதிலும்
பொறியிலீர்மனமென்கொல்புகாததே."

## மூலத்தான மண்டபங்கள்.

புறத்தே காணப்படும் ஆலயத்துள்ள கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், ஸ்நானமண்டபம், அலங்கார மண்டபம், சபாமண்டபம் என்னும் ஆறுமண்டபங்களாலும்; தேகாலயத்துள்ள

மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்கினை என்னும் ஆறுதாரங்களும் அறியப்படும். ஆயிரக்கால் மண்டபத்தால் தலையின் புறத்திருக்கும் ஆயிர மிதழ்களையுடைய கமலமான உன்மனியும், பக்கத்திருக்குந் தீர்த்தத்தால், அம்மூலையின் மேற்புறத்துள்ள சந்திரபுஷ்கரணியும் எண்ணப்படும்.

## பிரகாரங்கள்.

முதலாம் ஆவரணத்தால், கண்ணுக்குப் புலப்படும் தூலதேகமாகிய அன்னமய கோசமும்; இரண்டாம் ஆவரணத்தால், பிராணவாயுவுங் கன்மேந்திரியமுங் கூடி நிற்பதாகிய பிராணமய கோசமும்; மூன்றாம் ஆவரணத்தால், மனமுங் கன்மேந்திரியமுங் கூடி நிற்பதாகிய மனோமயகோசமும்; நாலாம் ஆவரணத்தால், புத்தியும் ஞானேந்திரியமுங் கூடி நிற்பதாகிய விஞ்ஞானமயகோசமும்; ஐந்தாம் ஆவரணத்தால், பிராணவாயுவுஞ் சுழுத்தியுங் கூடி நிற்பதாகிய ஆனந்தமயகோசமும் அறியப்படும். சில ஆலயங்களிலே ஏழு பிரகாரங்கள் இருக்கின்றன; அவைகளால் காயத்தில் அடங்கிய இரசம், இரத்தம், மாமிசம், மேதை, எலும்பு, மச்சை, சுக்கிலம் என்னுஞ் சத்ததாதுக்களும் அறியப்படும். சிலவற்றில் மூன்று பிரகாரம் மாத்திரம் இருக்கின்றன. அவைகளால் தூல சூக்கும காரண தேகங்கள் குறிக்கற்பாற்று. இவைக ளெல்லாவற்றையுங் குறிக்கக் கூடிய ஒரேபிரகார மாத்திரம் இருத்தலுமுண்டு.

## கதவு.

ஆலயங்களிலே சிவலிங்க முதலிய திருமேனிகளைத் தெரியவொட்டாது மறைத்து நின்று, நீக்கியவழி அவைகளைக் காட்டி நிற்குங் கதவுகளால்: கோபம், ஆசை, அவா, அகங்காரம் என்பன தோன்றுதற்குக் காரணமாகி நிற்பதாய்ச், சிவத்தைத் தெரியவொட்டாமல் மறைப்பதாய், அநாதியாய் நிற்கும் அவித்தையும் அது நீக்கியவழி சிவதரிசன வீடுண்டாதலும் உணரப்படும் என்ப.

## சபைகள்.

இராசசபை அன்னமய கோசமாகவும், தேவசபை பிராணமய கோசமாகவும், திருத்தசபை மனோமய கோசமாகவும், கனகசபை விஞ்ஞானமய கோசமாகவும், சிற்சபை ஆனந்தமய கோசமாகவும் எண்ணப்படும்.

## தூபி.

இது இருதய கமலாகாரமாக விளங்கும். இதன் கீழ் இடம் பிருதிவி தத்துவமாகவும், அதற்கு மேல் நாளம் அன்பு முதலிய உகூ-தத்துவங்களாகவும், நாளத்து முட்கள் அமரேசன்முதற் சிகேதன் ஈறுயுள்ள எஉ-புவனங்களாகவும், எட்டிதழ்கள் எட்டுத் தத்துவங்களாகவும், அறுபத்துநான்காகிய கேசரவடிவங்கள் ஈசாம், சதாசிவம் என்னும் இருதத்துவமாகவும், நாளம் பூ என்பவைகளின் நுனி அடிகளிற் பொருந்திய முடிச்சு மாயையாகவும், பொகுட்டு வடிவம் சத்திதத்துவமாகவும், அப்பொகுட்டு வடிவில் தோன்றும்-டுக-பீசவடிவம் சிவதத்துவமாகவும், கலசங்கள் சத்திகளாகவும், கற்பிக்கப்பட்ட இருதய பங்கயாசனத்தில் முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம் பொருளாயுள்ள சிவபெருமான் எழுந்தருளியிருக்கு முண்மை அறியப்படும்.

சரீரத்திலே பிரமரந்திர மத்திய கபாலத் துவாரமே உத்தர கோபுர வாயிலாகவும்; பாதப் பெருவிரல்களின் முடிவுகளும், கர நடுவிரல்களின் அந்தங்களும், குதமலத் துவாரமும், தக்கண கோபுர வாயிலாகவும், ஞானக்கினியாம்ச புருவமத்தியமே அந்தராளகோபுர வாயிலாகவும், உந்தித்தானமே பலிபீடமாகவும், இருதயமே துவசத்தம்பமாகவும்; பஞ்சகோச அந்தக்கரண புருடனுருங் கண்டத் தானமே நந்தியாகவும், சிவயோகிகள் அறிவார்கள் என்ப.

## துவசத்தம்பம்.

இது மூலத்தான தேவவிம்பத்துக்கு நேராக நிறுத்தப்பட்டிருக்கின்றது. தம்பத்தைப்போலச் சரீரம் நேராக விருந்து, பிரகாசிக்கும்

இடை பிங்கலை என்னும் இருநாடியின் வழியேபோய்த் திரும்பும் பிராணவாயுவை நடுநாடியி னிறுத்திச் சிறிதும் அசையாது தியானிக்கிற் பிராணவாயு நிற்கும். அதுநிற்க மனமும், அதுநிற்க ஐம்பொறிகளும், அவை நிற்க விடயங்களும், அவை நிற்றலாலே பிரபஞ்சமுந் தோன்றாதிருக்க, பரமானந்த ஸ்வரூபமாகிய பரசிவம் தரிசனமாகும் என்பதை அறிவிக்கும் என்ப. இங்ஙனம் சுழுமுனை நாடிக்கு ஒப்பென்பதன்றிக் குண்டலசத்தி போல்வதெனவும் ஓர் சாரார் கூறுவர்.

சிவப்பிரகாச சுவாமிகள்.

“தறிபோ லுடல நேரிருந்து தயங்கு மருங்கி னிருநாடி
நெறிபோய் மீளும் வளியதனை நிறுவி நடுநா டியிற்செலுத்தி
யறிவோர் சிறிதுஞ் சலியாம லன்னம் பெயர்மந் திரமாறிக்
குறிபோ யிருந்த வொருகுறியைக் குறித்துக் கொண்டங் கிருந்தனரால்.”

“வாயு நிற்ப மனநின்று மனந்தா னிற்பப் பொறிநின்று
பாய பொறிக ணிற்பவிடர் படுபுன் புலன்க ணின்றனவா
லாய புலன்க ணின்றமையா லகிலந் தோன்று துள்ளத்தே
தூய பரமா னந்தபரஞ் சோதி தோன்றக் கண்டிருந்தார்.”

## சிவலிங்கம்.

சிவாலயங்களிலே உள்ள பலிபீடம் பத்திரலிங்கமாகவும், தூபி தூலலிங்கம் ஆகவும், சிவலிங்கம் சூக்குமலிங்கமாகவும் கொள்ளப்படும். இவற்றுள் சூக்குமலிங்கமே விசேடமுடைத்து. லிங்கம் என்னும் பதத்துக்கு “லிங்=லயம், கம்=தோற்றம்” எனப் பொருள் கொண்டு, உலகமும் விஷ்ணு முதலாய உயிர்த்தொகைகளும் லயித்தற்கு (ஒடுங்குதற்கு) இடமாயுள்ளதெனவும். இன்னும் லிங்கம் என்னும் பதத்துக்கு “பிரகாசம்” எனவும் பொருள் கொண்டு, சிருட்டியாதி பஞ்ச கிருத்தியங்களாலும் உலக மெவற்றையும் பிரகாசப்படுத்துவது எனவுங் கொள்ள நிற்றலால், பரமேசு

ரப் பிரபாவமே இலிங்கம் எனப்படும். சிலர், இலிங்கம் என்பது பரசிவத்துக்கு ஆதாரமாய் விளங்குஞ் சிலை முதலானவென்பர். சிவ பெருமானே நித்திய சைதன்னிய பரப்பிரகாச ராகவும், "மரம் வேருக்கு ஆதாரம்" என்பதுபோல எல்லாவற்றிற்கும் ஆதாரமாயிருக்கும் அவர்க்கு வேறொன்றை ஆதாரம் எனக் காட்டல் பாவதோஷ மாதலின் அதுவும் ஒப்பாகா; இதுவன்றிச் சிலர், வேதாந்த ஞானமே இலிங்கம் என்பார்கள்; சிலர் சத்தியமே இலிங்கம் என்பார்கள்; சிலர் மிருதி புராண முதலிய நூல்களான் வரும் ஞானமே இலிங்கம் என்பார்கள்; சிலர் நிறைவுள்ள மனம், சித்தம், முறைமை கொண்ட புத்தி, அகங்காரம், பிராணன், சரீரம், இந்திரியங்கள் என்பவைகளே அதுவென்பர்; சிலர் சத்தாதிகளே இலிங்கம் என்பர்; சிலர் ஆகாயாதி பஞ்சபூதங்களை இலிங்கம் என்பார்கள்; சிலர் அறிவமே இலிங்கம் என்பர். இவைகள் எல்லாம் சடமாதலின் அவைகளு மின்றாம். சில பாதகர்கள் சிவனுடைய லிங்கம் (குறி) என்பார்கள். அவர் ரூபாகித ராகையாலும், ஆசையைக் கொடுக்கும் வடிவம் ஆக்கல் குற்றமாதலாலும், அதுவுங் கொடுமொழியேயாம். ஆகவே இலிங்கம் என்பது சிவமேயாகும். அது பக்குவநோக்கி ஆன்மாக்களின் தியானபூசா நிமித்தம் அச்சிவம் விளங்குஞ் சிலை முதலிய வடிவங்களுக்குக் கற்பிக்கப்பட்டதாகும். அதன் பெருமையைக் கூறல் நம்மோலியர்க்கியலா. அதன் சொரூபம் பிரணவ வடிவமாகக் காணப்படும். அகாரம் கண்டம், உகாரம் கோமுகம், மகாரம் வட்டம் எனவும்; அகார வாச்சியம் சிவம், உகார வாச்சியம் சத்தி, மகார வாச்சியம் பரம் எனவும்; அகாரம் நாதம், உகாரம் விந்து, மகாரம் கலை எனவும்; அதன் விருத்தம் உருத்திரபாகம், நடுவின் எட்டுமூலை விட்டுணுபாகம், கீழ்ப்பகுதியின் அடி நான்குமூலை பிரமபாகம் எனவும்; உருத்திரபாகம் பும்லிங்கம், விட்டுணுபாகம் ஸ்திரீலிங்கம், பிரமபாகம் நபுஞ்சகலிங்கம் எனவும் அறிய விளங்கும் என்ப. சிவயோகியர் தமது தேகாலயத்தினுள்ளிருக்கும் ஆதாரங்களுள் அநாகதத்திலே, ஆதியந்தமில்லதாய்,

அக்கினிபோல விளங்குஞ் செந்நிறமுள்ளதாய், அதோமுகமாய், சோதிப்பிரகாசமாய் விளங்கும் சயம்புலிங்கத்தையும்; மணிபூரகத்திலே, கோடிசூரியப் பிரகாசமாய், பாசபந்தத்தைச் சிதைப்பதாய், கோமளமாய், ஊர்த்துவமுகமாய் விளங்கும் லிங்கத்தையும்; புருவ மத்தியத்திருக்கும் ஆக்கினையிலே கோடி சந்திரப்பிரகாசம் போல் ஒளிர்வதாய், அருவங் கொண்டதாய், பராசத்தியோடு இனிது விளங்கும் மகாலிங்கத்தையும், ஞானசாரியர் திருவருளினாலே அறிவார்கள்.

சைவசமயநெறி.

"தூலலிங்க மாந் தூபி சூக்குமமா முள்ளிலிங்க
மேலும் பலிபத் திரம்."

உபதேசகாண்டம்.

"அருச்ச னைக்குரித் தாயிலிங் கத்திடை
யுறைந்தன மொருகண மகலேந்
தெரிக்கி லென்றுமெண் ணையுமெனச் சிறந்தனங்
காண்பன யாவையுஞ் சிதைந்து
பரிக்கு மாங்கதன் றன்னிடை லயிக்கையா
லிங்கமென் றுரைத்திடப் படுமா
லரிப்பெ ரும்பெயர் முதலினோ ருயிர்த்தொகை
யாவையு மதனுழை யடங்கும்."

சூதசங்கிதை.

"போலிதரு மிலிங்க மெனுமொழிக் குரைக்கும்
பொருள்பிர காசக மென்பர்
மலிதரு மறிஞ ராதலாற் சிவமே
மன்னிய விலிங்கமாம்."

"ஆதலிற் சிவமே யெவற்றையும் பிரகா
சஞ்செய்வ தறிமினிவ் வாறே

வேதமு முரைக்குஞ் சிலர்சிவ னுடைய
விலிங்கமா லெனவிளம் பிடுவர்
காதல்செ யுடைமை யாக்கல்கூ டாது."

திருமந்திரம்.

"அகார வுகார மிரண்டு மறியில்
அகார வுகார மிலிங்கம தாமே."

"மலர்ந்த வயன்மா லுருத்திரன் மகேசன்
பலந்தரு மைம்முகன் பரவிந்து நாதம்
நலந்தரு சத்தி சிவன்வடி வாகிப்
பலந்தரு லிங்கம் பராநந்தி யாமே."

## தேவ மூர்த்தங்கள்.

ஆலயத்திலே, தேவ மூர்த்திகள் இருத்தல்போலச் சரீரத்திலும் இருத்தலைக் காட்டுவாம். சரீரத்தின் புறத்திலே விராட்டும், உள்ளிடத்திலே சுராட்டும், மத்தியிலே சம்ராட்டும், சுரோத்திரத்திலே திக்கும், தொக்குவிலே வாயுவும், சட்சுவிலே கதிரும், சிங்குவையிலே வருணதேவனும், ஆக்கிராணத்திலே பூமிதேவியும், பாதத்திலே திருவிக்கிரமனும், பாணியிலே இந்திரனும், வாக்கிலே அக்கினிதேவனும், உபத்தத்திலே பிரசாபதியும், குதத்திலே மித்திரனும், பிராணனிலே ருத்திரான்மாவும், அந்தக்கரணத்திலே இரணியகருப்பனும், மனத்திலே சந்திரனும், புத்தியிலே தேவகுருவும், அகங்காரத்திலே காலாக்கினி ருத்திரரும், சித்தத்திலே தேவதேவராகிய சிவபெருமானும், உரோமங்களிலே பல தெய்வங்களும், எலும்புகளிலே பூத பிரேதாதிகளும், தசையிலே பைசாசரும் இராக்கதரும், நரம்புகளிலே காந்தருவர் முதலிய தேவகணங்களும், வலக்கண்ணிலே சூரியனும், இடக்கண்ணிலே சந்திரனும், கழுத்தின் புறத்திலே மாயனது கோரவடிவமும் உள்ளே அவரின் சாந்தவடிவமும், இருதயத்தினுள்ளே உருத்திரரின் சாந்தவடிவமும் வெளியிலே அவரது கோரவடிவமும், நாசிநுனியிலே சரஸ்வதியும், அனுகதத்திலே

இலக்குமியும், மணிபூரகத்திலே பார்ப்பதிதேவியாரும், விந்து மத்தியிலே சீவான்மா பொருந்துஞ் சூக்குமரூபமும், இருதய நடுவிலே தூலரூபமும், இவ்விரண்டற்கும் நடுவே அருவவடிவமும், நெற்றி நுனியிலே மாயாசத்தியும், நெற்றி நடுவிலே நாதரூப பராசத்தியும், புருவமத்தியத்திலே விந்து சத்தியும், மூலாதாரத்திலே சிவசிற்சத்தியும், பிரமரந்திரத்திலே சச்சிதானந்த பரப்பிரமமும் இருக்கும். சிவயோகிகள் முழங்கால் வரைக்குமுள்ள பிருதிவிபாகத்திலே பிரமனையும், குதம்வரைக்குமுள்ள ஜலபாகத்திலே விட்டுணுவையும், இருதயாந்தமாயுள்ள அக்கினிபாகத்திலே உருத்திரனையும், கண்டம் வரைக்குமுள்ள வாயுபாகத்திலே மகேசுரனையும், சிரம்வரைக்குமுள்ள ஆகாயபாகத்திலே சதாசிவத்தையும், அரிய ஆன்மாவிலே பரசிவநாதனையும் தாரணை செய்வார்கள்.

சூதசங்கிதை எக்கியவைபவ காண்டம்.

"எல்லார்த முடம்பிடத்து மெல்லாத்தெய் வங்களுஞ்சேர்
மல்லாருந் திரோபூத மாயிருக்கு மாண்பினு
லொல்லாவோர் பிராணிக்கு முழலவமா னம்புரிதல்
பொல்லாத கடியவச னம்புகறல் கூடாதே."

## சிவலிங்கம் நந்தி பலிபீடம்.

ஆலயங்களிலே சிவலிங்கமும், அதற்கு நேரே பலிபீடமும நந்தியும் இருக்கின்றன. அவைகளுள் சிவலிங்கம் பதி எனவும், நந்தி பசு எனவும், பலிபீடம் பாசம் எனவுங் கொள்ளப்படு முண்மையால், வேதாகமங்களிற் பிரதிபாதிக்கப்படுவன பதி பசு பாசம் என்னுந் திரிபதார்த்தங்களே என்பதும், அவை மூன்றும் நேராக விளங்கலால், பதி எப்போதுண்டோ அப்போதே பசு பாசங்களும் உளவாய், மூன்றும் அநாதி நித்திய மென்பதும், அவைகள் வியாத்தி வியாப்பிய வியாபக பேதமுடையன வென்பதும் பிறவும் விளங்கப்படும்.

திருமந்திரம்.

"ஆய பதிதா னருட்சிவ லிங்கமா
மாய பசுவு மடலே றெனநிற்கு
மாய பலிபீட மாகுநற் பாசமா
மாய வரனிலை யாய்ந்துகொள் வார்க்கே."

சங்கற்ப நிராகரணம்.

"மறைதக ளாகமத் துறைகளின் மற் றவையு
நாசமில் பதிபசு பாசமென் றுரைத்த
லயர்த்தோர் குளிகைச் சயத்தாற் றும்பிரக்
காளித நாசம் பாசத் தேய்த்தல்
கூடாது....... ".

நந்திவிளக்கம்.

"பதிபசு பாச மெனப்பக ரிம்மூன்றிற்
பதியினைப் போற்பசு பாச மநாதி."

## திருவாசி.

ஆலயங்களிலே, சிவமூர்த்த முதலிய வடிவங்களைச் சூழ்ந்து விளங்கும் வட்ட வடிவமாகிய திருவாசியை நோக்குமிடத்து அத னுண்மை பிரணவரூபமாகக் காணப்படும். அதனால் எல்லா வுலகங்க ளும், எல்லாச் சுருதிகளும், பிரணவத்தினின்றுந் தோன்றி ஒடு ங்குமென்பதுவ், பிரணவம் பிரமன் முதலிய தேவர்களுக்குப் பிறப் பிடமாய்-சிவபெருமா னொருவருக்கே இருப்பிடமாய் உள்ளதென்ப தும், ஓம் என்பது ஆம் எனத் திரிந்து பிற சமயிகளுடைய செப நிவேதனங்களினும் காணப்படலால்,

"சமயகோ டிகளெலாந் தந்தெய்வ மெந்தெய்வ
மென்றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிட"

நிற்பவரும், அதன் பொருளாயிருப்பவருஞ் சிவபெருமானே என்பதும், அப் பிரணவத்திற்கு மேலாகிய பேரறிவு ஒருவர்க்கு விளங்குமாயின் அவர் அப்பொழுதே பரமுத்தியை யடைவார் என்பதும், அறியப்படும்.

உண்மை விளக்கம்.

"ஓங்கார மேநற் றிருவாசி யுற்றதனி
னீங்கா வெழுத்தே நிறைசுடரா—மாங்கார
மற்றா ரறிவாணி யம்பலத்தா னாடலிது
பெற்றார் பிறப்பற்றார் பின்."

சிவதநமோத்தாம்.

"ஓமென்னும் பதமதனில் வேத மாதி
யுற்பவிக்கு மாலவித்தி னுதிக்கு மாபோல்
ஓமென்னும் பதப்பொருளை யுணர்ந்தார் தாமே
யுணர்ந்தாரும் வேதாதி யொருமை கூற."

கந்தபுராணம்.

"ஈசன் மேவரு பீடமா யேனையோர் தோற்றும்
வாச மாயெலா வெழுத்திற்கு மறைகட்கு முதலாய்க்
காசி தன்னிடை முடிபவர்க் கெம்பிரான் கழறு
மாசி றாரகப் பிரமமா மதன்பய னுய்ந்தான்."

சிவாலயங்களிலே திருவலகிடல்-திருமெழுக்கிடல் - திருவிளக்கிடல்-விதானங்கட்டல் - மாலைசாத்தல் முதலாயின சிவ புண்ணியங்களாமெனவும், செய்தவர்கள் சிவஞானவாயிலாக வீடடைவார்கள் எனவும், சிவாகமாதி நூல்கள் செப்புகின்றன. அவ்வுண்மை சரீரத்திலும் அறியப்படும்.

## திருவலகிடல்.

தேகாலயத்தினிடமாகப் பொருந்தி அழிவில்லாமற் கிடக்கும் காமம்-வெகுளி - பொய் என்னும் குப்பைகளையும், தொண்ணூற்றாறு

தத்துவங்கள் என்னுங் குப்பைகளையும், களைந்து நீக்கிப் பரிசுத்தமாய் விளங்கலே திருவலகிடல் எனக் குறிக்கற்பாற்று. இது செய்தோர் உடனே சாயுச்சியமடையத் தடையுமுண்டோ?

திருக்கழுமலமும்மணிக்கோவை.

"கருமுதற் றொடங்கிப் பெருநா ளெல்லாங்
காமம் வெகுளி கழிபெரும் பொய்யெனுந்
தூய்மையில் குப்பை தொலைவின்றிக் கிடந்ததை
யரிதி னகழ்ந்து போக்கி."

பிரபுலிங்கலீலை.

"தத்துவ முற்று மயக்குவ தன்னி
மெய்த்த தனைப்பெற வேறுகொ டுத்தான்
பொய்த்துறு குப்பை திஜீரத்தொளி பொங்கு
முத்தை யளித்தென முத்தை தனக்கு."

## திருமெழுக்கிடல்.

இதனுண்மையும் ஊகிக்கற்பாற்று. கோபமுதலிய செத்தைகளை ஒருங்கே நீக்கி விளைகடந்த தத்துவஞான மென்னும் சுறுஞ் சாணத்தைக் கொண்டு, அன்பென்னுஞ் சலத்தோடு கலந்து மெழுகி னுற்றான் மனலயத்திற் சிவலிங்கம் தோற்றப்பெற்று முத்தியடை வார்கள்; அன்றேல் இல்லையாம்.

சிவப்பிரகாச சுவாமிகள்.

"சினமுத லியமய நீர மாற்றுபு
வினைதபு வாய்மையா மெழுக்கை யன்பெனும்
புனலொடு விரவியே பூசி னல்லது
மனமெனு மனையிடை வாரதி லிங்கமே."

பட்டணத்துப்பிள்ளையார்.

"பொருதிற னமையிரு ணிறத்து
மதமுடை யடுசினத் தைவகைக் கடாவும்
யாப்பவிழ்த் தகற்றி யன்புகொடு மெழுகி."

## திருவிளக்கிடல்—விதானங்கட்டல்.

இவை, தேசாலயத்திலே மனம் என்னுந் தகழியில் அறிவாகிய நெய்யை நிறைத்து, உயிர் என்னுந் திரியிலே பிராணன் என்னுங் காற்றை நிறுத்தி ஆணவத்துன்பம் என்னும் இருணீங்கச் சிவஞானம் என்னுந் தூண்டாவிளக்கை யேற்றினோர்களும், சத்தியம் என்னும் மேற்கட்டி கட்டினவர்களுமே மோக்ஷம் அடைவார்கள் எனத் தெளியுந் தன்மையவாம்.

### தேவாரம்.

"உடம்பெனு மனைய கத்து ளுள்ளமே தகழி யாக
மடம்படு முணர்நெய் யட்டி யுயிரெனுந் திரிம யக்கி
யிடம்படு ஞானத் தீயா லெரிகொள விருந்து நோக்கிற்
கடம்பமர் காளை தாதை கழலடி காணலாமே."

"ஊனி லுயிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞான விளக்கினை யேற்றி நன்புலத்
தேனை வழிதிறந் தேத்து வார்க்கிட
ரான கெடுப்பன வஞ்செ ழுத்துமே."

### திருக்கழுமல மும்மணிக்கோவை.

"அருள்விளக் கேற்றித்
துன்ப விருளைத் துரந்து முன்புற
மெய்யெனும் விதானம் விரித்து."

## திரைச்சீலை.

சிவசந்நிதானத்திலே மறைவாக இடப்படுந் திரைச்சீலையினாலே மாயமாகிய திரையே சிவத்தை யறியவொட்டாமல் மறைத்திருக்கிறதென் றுணர்ந்து, அதனை அவரது திருவருள் என்னுங் கத்தியினாலே கீறி ஞானக்கண்கொண்டு உள்ளபடி தரிசித்தவர்களே சிவகதி யடைவார் என்பது அறியப்படும்.

பதினோராந் திருமுறை.

"தெய்வத் திருவருள் கைவந்து கிடைத்தலின்
மாயப் படலங் கிழித்துத் தூய
ஞான நடனம் பெற்றனன் பெற்றபின்
நின்பெருந் தன்மையுங் கண்டேன்."

தாயுமான சுவாமிகள் பாடல்.

"குன்றாத மூவுருவா யருவாய் ஞானக்
கொழுந்தாகி யறுசமயக் கூத்தாடி
நின்றாயே மாயையெனுந் திரையை நீக்கி
நின்னையா ரறியவல் லார்."

ஆகவே சிவாலயங்களைச் சிவபெருமானாகவே நினைத்து வழிபட வேண்டும். அவ்வாறின்றிச் சிவலிங்கம், பூசையாதியவற்றை யிகழ்ந்து வரினாய் நரகிற் கிரையாகும் அதிபாதகப் புலையர்கள் இருக்கும் இடத்திலாயினும் போகலாகாது, என்று நூல்கள் கூறுமாயின், ஆலயங்களின் விசேடம் இத்தகைத் தென்பதை அறிந்துய்வார்களாக.

சிவஞானபோதம்

"செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
வம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமு
மாலயந் தானு மரனெனத் தொழுமே."

நெஞ்சுவிடுதூது.

"உற்ற திருநீறுஞ் சிவாலயமு முள்ளத்துச்
செற்ற புலையர்பாற் செல்லாதே—நற்றவஞ்சேர்
வேட்டமும் பூசையருண் மெய்ஞ்ஞான மில்லாத
மூடருடன் கூடிமுயங் காதே."

முற்றிற்று.

## மூன்றாவது

# மகோற்சவ விளக்கம்.

ஆலயங்கள் நித்தியம் நித்தியாங்கம், நைமித்திகம் நைமித்திகாங்கம், காமிகம் காமிகாங்கம் என்னும் ஒன்பது உறுப்புகளாலும் நடத்தப்படும். அவைகளுள், நைமித்திகத்துள் ஒன்றாய் விளங்கும் மகோற்சவங்களையும், அவைகளின் உண்மைகளையும், முற்றுமுணர்த்தாது விரிவஞ்சி விடுத்து, அவைகளுட் சிலவற்றினுண்மைகளை மாத்திரம் பிரமாணவுரை வாயிலாகத் தெளிய ஒருசிறிதுரைப்பான் புகுந்து முதலில் அவற்றின் காரண வுண்மையைக் காட்டுவோம்.

மகோற்சவ தரிசனஞ் செய்வோர் ஆலயங்களை யடைந்தவுடனே பிரதக்ஷிணம் நமஸ்காரம் என்பன செய்தல்வேண்டும் என்பது நூற்றுணிபாம். அவைகளின் உண்மையாவன:

பிரதக்ஷிணம் என்பதன் உண்மையாவது, சிவவியாபகம் ஆன்மாவில் விளங்குதல் காரணமாகச் செய்யப்படுவதாம்.

நமஸ்காரம் என்பதன் உண்மையாவது, தற்போதம் என்னும் அதிகாரத்தை நடாத்தும் பிரம விட்டுணுக்களாலே சூக்குமஞானக்கிரியைகளை நீக்கி, பரமபதியாகிய சிவபெருமானது அடிமையாய் நின்று அவருடன் அத்துவிதமுற்று நிற்றலைக் குறிப்பதாம்.

சட்டநாதவள்ளலார்.

"அயன்மா லிவர்கீ ழாகையின் பொருட்டுச்
சயமான் புறவெதிர் தண்டம் பண்ணி."

## சிவதரிசனம்.

சரியை கிரியையாளர், சிவத்தைப் பகிர்முக வடிவத்திற் கண்டு வணங்குவர்; யோகிகள், இதயகமலத்திற் காண்பார்கள்; மெய்ப்பொரு ளுணர்ந்த ஞானியர்கள், எங்குஞ் சிவமர்கக்கண் டானந்த முறுவர். இதனுண்மையாவது தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி- ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி யென்பவைகளைச் செய்து சிவரூப வுண்மையைத் தெளிந்து அதனைச் சத்தியமெனக்கொண்டு, கேவல சகலாவத்தைகளிலும் அவை நீங்க விளங்கும் அகம்பிரம ஞானத்திலும் பொருந்தாமல், பரமஞானாசாரிய மூர்த்திகளது அநுக் கிரக ஞானத்திலே தற்பூரணமெலாம் அடங்கப்பெற்று, தற்செய்தி யெல்லாம் அவாது அநுக்கிரக ஞானசத்தியின் செய்தியாய், அறி தற்கரிய பரமானந்தத்தை யெவ்விடத்துங் கண்டநுபவிப்பதேயாம்.

### மெய்கண்ட சாத்திரம்.

"மண்முதற் சிவமதீறாய் வடிவுகாண் பதுவே ரூபம்... ஆகு மென் றிவ்வுண்மையினை மிகத்தெளிந்து பொருள்வே றுன்றித், தரைமுதலிற் போகாது நிலையினில்லாது தற்பரையி னின்றழுந்தா தற்புதமேயாகித், தெரிவரிய பரமானந்தத்திற் சேர்தல் சிவனுண் மைத் தரிசனமாய்ச் செப்புநாலே."

## அபிடேகம்.

சிவமூர்த்தங்கட்கு அபிடேகத்தை, மாக்காப்பினாற் செய்தோர் நானாவித தானியாதிகளுக்கு அதிபதியாதலையும், மஞ்சட் காப்பினாற் செய்தோர் அநேக சம்பத்தையும், பசுப்பாலினாற் செய்தோர் பசுக்க ளோடு சாந்தகுணத்தையும், தயிராற்செய்தோர் திடகாத்திர தேகத் தையும், நெய்யினாற் செய்தவர்கள் பத்மினி போகத்தையும், தேனாற் செய்தவர்கள் சங்கீத வன்மையினையும், சருக்கரைகொண்டு செய்த வர்கள் சாத்திர நிபுணத்துவத்தையும், இளநீரா லியற்றினோர் சற்புத்

திரப் பேற்றையும், பழவகைகள் கொண்டு செய்தவர் சர்வசன வசீகர வசன சாதுரியத்தையும், பஞ்சாமிர்தங்கொண் டியற்றுவோர் தீர்க்காயுளையும், சந்தனுதி வாசனைத் திரவியங் கொண்டு செய்வோர் அரம்பாஸ்திரீகள் தேவகன்னியைச் சந்தோஷித்துப் பூச கற்பகவிருட்ச நிழலில் வீற்றிருக்கு மேன்மையையும், சுத்தநீராற் செய்தவர்கள் ஒருகோடி அசுவமேத யாகஞ்செய்த பலத்தையும், மறுமையில்அநுபவித்துப், புண்ணிய மேலீட்டால் ஞானம் வாய்க்கப்பெற்று முத்தி யடைவார் என நூல்கள் கூறுகின்றன. முத்தி காமிகளோ இவை பேரின்பத்தைக் கொடுக்காவென்று நீக்கி அந்தர்முகத்திலே நின்று அருட்போதமே மல மாகையால் அம்மல வசுத்தத்தை அன்பு அருணீர்கொண்டு சுத்திசெய்து முத்தி யடைவார்கள். இஃதன்றி சக சிவபரங்களைக் கானற்சலம்போல மித்தையென்று அறியும் அறிவே திருமஞ்சனம் என்பர் ஓர் சாரார்.

காசிகாண்டம்.

"இன்ன கடவு ளிலிங்கத்தின் மேனி குளிர்ப்ப வெழுந்தோங்கு
தென்னம் பொதியி னறுஞ்சாந்தக் தேய்வை கொட்டி னுங்கவர்மே
லன்னம் பொருவு மரமகளிர் தெய்வ சாந்த மளிழ்ந்தணியப்
பொன்னங் துணர்க்கற் பகநீழ லரியா சனத்திற் பொலிந்திருப்பார்."

"விரிநீ ராட்டிற் புரவிமகங் கோடி யாற்றும் பலன் மேவும்."

வேறு.

"தம்மிற் சிவலிங்கங் கண்டதனைத் தாம்வணங்கித
தம்மன்பான் மஞ்சனநீர் தாமாட்டி."

"அருளெனும் புனலினை யாட்டி."

"ஒதும்பே தம்பேய்த்தே ரொன்
றுணர்தலது வொண்புன லாகும்."

என்பனவற்றானும் பிறவாற்றானும் அறியப்படும்.

திருப்பள்ளித்தாமம்.

இது மேலோர்கள் அந்தரியாக பூசையிலே ஆன்ம சொரூபத்தையே ஒப்பில்லா மாலையாக மயங்காமற் சாத்தித் திருவடி முத்தி கூடும் உண்மையை உணர்த்துந் தன்மைத்து.

மெய்கண்ட சாத்திரம்.

"தம்மையொரு பூவாகப் பூவழியாமற் கொடுத்து"

## முரசுமுதலிய வாத்தியங்கள் இசைத்தல்.

ஆலயங்களிலே முரசம் முதலிய வாத்தியங்களை முழக்கவைத்தமை, கடவுளில் மற்றையோர்க்கு அன்புண்டாக்கும் பெற்றியேயன்றி, வேறோருண்மையினையும் அமைத்துக் காட்டிய நற்குறியாம். என்னெனில், பல வாத்தியங்களை முழக்குவோர், முழக்குவிப்போர், தேவரம்பையர் ஆனந்தித்து நடிக்கக் கற்பக நீழலில் இந்திரனென இருப்பாரன்றி முத்திகூடாராக, சிவயோகிகள் சரீரத்திலே உள்ள அசுத்த வாயுவைக் கழித்துப் புறத்தேயுள்ள சுத்தவாயுவைப் பூரித்து, பெருவிரல்களாற் காதுகளை அடைத்து, தர்ச்சனி விரல்களாற் கண்களை மூடி, நடுவிரல்களால் மூக்கை நெருக்கி, வாயைப் பொத்திப், பிராணவாயுவைக் கும்பித்து, வன்னிபீசத்தால் மூலாக்கினியை மூட்டிக், குண்டலிசத்தியை யெழுப்பி, ஆறு தாரங்களையும் ஆங்காங்குள்ள தேவதைகளையும் பிரணவ தியானத்துடன் சென்று தரிசித்து, அவ்வாதாரங்களுக்கு மேலாய் விளங்கும் பிரமரந்திரத்துள்ள சந்திர மண்டலத்தை இளகச்செய்து, உருகிப் பாயும் அமிர்தப் பிரவாகத்தை நாடிகளில் நிரப்ப, அவைகளுள் தசநாடிகளினின்றும் சதங்கையோசைபோலவும், சிலம்பரவம்போலவும், கண்டாமணிச் சத்தம்போலவும், சங்கத்தொனிபோலவும், வீணையினிசைபோலவும், தாளத்தொலிபோலவும், வேய்ங்குழலிசைபோலவும், பேரிகைச் சத்தம்போலவும், மத்தளத்தொனிபோலவும், மேகமுழக்கம்போலவும், தசநாதங்களுஞ் சிரமத்தியிலே அதோமுகமாய்த்தோன்றும்.

என்பதும், அவர்க்கு அந்நாதங்களைக் கேட்டலே காட்சி யென்பதும், அந்தனன் மெய்ஞ்ஞான முதிக்கப்பெற்றுப் பிறவாமுத்தி யடைவார் என்பதும், நாம் ஒவ்வொருவரும் அவ்வாறே அந் நாதங்களையே கேட்டுய்யவேண்டும் என்பதும், போதாவைத்த சீர்விளக்காம்.

## காசிகாண்டம்.

"நித்தமாடல் பலவியமுன் செய்வித் திடுமவர்தாம்."
"ஊர்பொற் றிதலை பூத்தமுலை யரம்பை மாத ருவந்தாடு
வேர்முற் றியபூந் தருநீழற் குலிசப் படையோ
னெனவிருப் பார்."

## மெய்கண்ட சாத்திரம்.

"தம்மை மறந்து தழலொளியுள் ளேயிருத்தி
யிம்மை மறுமை யிரண்டகற்றிச்—செம்மையே
வாயுவை யோடா வகைநிறுத்தி வானத்து
வாயுவையு மாங்கே யுறவமைத்துத்—தேயுவா
லென்றுமொரு தகைமையா யிருக்குமின் னருளே
நின்று முழங்கு நெடுமுரசோன்."

## நிஷ்டானுபூதி.

"இத்திற மான யோகசா தனையி
லிருந்துசா திப்பவர் தமக்குச்
சுத்தமா நாதத் தொனிகளும் பலவாத்
தோன்றிடு மணிகுழன் மேகம்
மத்தளம் பேரி யாழொலி சிலம்பு
வளைகிணி தாளமென் றமையாட்
கத்தனு மொழிந்தா னன்றியு முரவோ
ராய்ந்தெடுத் துரைத்தன ரன்னே."

## கீதம் பாடல்.

'முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளான சிவ பெருமானது திருமேனி நாதவடிவமாம்' என்று அவர் திருவாய் மலர்ந்தருளிய சுருதி அறிவிப்பதால், அவ்வுண்மை விளக்கவே மகோற் சவகாலங்களில் அவரது திருமுன்னிலையிலே கீதநாதம் பாடப்படு மென்பதும், அது செய்தோர் திருவருளால் உண்மை விளங்கப் பெற்று முத்தியடைவார் என்பதும் பெறப்படும்.

### காசிகாண்டம்.

"ஆதிநம்பனுருநாதவுருவாகுமெனமுன்
னோதுகின்றமறையாவையுமுணர்த்திடுதலாற்
கீதமீசன்முனநாளுநவில்கேண்மையுடையோர்
நீதிவிவ்வுலகுசேர்குவரெனவுரைசெய்தார்."

### உபசாரம்.

உற்சவாதிகளிலே செய்யப்படும் உபசாரம் மூன்று வகைப்படும். அவையாவன:—சோடசோபசாரம், தபோபசாரம், பஞ்சோபசாரம் என்பனவாம். அவற்றுள்,

## சோடசோபசாரமாவன:

ஆவாகனம், தாபனம், சந்நிதானம், சந்நிரோதனம், அவகுண்டனம், தேனுமுத்திரை, பாத்தியம், ஆசமனீயம், அருக்கியம், புட்பதானம், தூபம், தீபம், நைவேத்தியம், பானீயம், செபசமர்ப்பணை, ஆராத்திரிகை, என்பனவாம். அவைகளுட் சிலவற்றி னுண்மையைக் காட்டுவாம்.

### ஆவாகனம்.

இதனுண்மையாவது, ஆன்மாவானது சிவபெருமானுடைய மேலான பரிபூரண ஞானப்பிரகாசத்தைச் சிவப்பிரசாதமாகிய திருவருளால் அறிந்து அதில் அழுந்துவதாம்.

### சதாசிவரூபம்.

"இப்படித் தனைமுதற் சமனை யீறாய்ச்
செப்பி வியாபிக்கும் பரம சிவனது
பொருவி லுயர்பரி பூரணந் தன்னை
யறிவி லழுந்துத் லாவா கனமே."

### தாபனம்.

இது மேற்கூறிய அழுத்தத்தில் நிலைபெறுகப் பொருந்துவதாம்.

"அந்நிலையா தழுந்த நிலைபெறல் தாபனம்."

### சந்நிதானம்.

இதன் உண்மையைக் கூறுமிடத்து, ஆன்மாவினது அறிவு சிவபூரணத்திலும், சிவபூரணத்துவம் ஆன்ம அறிவிலும் இடைவிடாமல் ஒன்றி அந்நியோந்நியமா யிருத்தல் என்ப.

"இவன்றன தறிவு சிவன்பூ ரணத்திலுஞ்
சிவன்பூ ரணத்துவ மிவன்றன தறிவிலு
மொன்றையொன் றகலா துறவுசெய் திருப்ப
தொன்றிய சந்நி தானமென் றுரைப்பர்."

### சந்நிரோதனம்.

ஆன்மாவினிடத்துப் பொருந்திய அறிவானது, எக்காலத்தும் ஒழிவின்றிச் சிவத்திலே சமைந்துபோதலாம்.

"இவனிடத் துறுமறி வென்று மொழியாச்
சமையது தானே சந்நிரோ தனமே."

### பாத்தியம்.

இதனுண்மையாவது, மேற்சொன்ன நிலையிலே சிவபெருமானுடைய பிரகாசமாகிய இச்சாஞானக் கிரியைகள் பொருந்தின தானமாகிய திருவடிகளிற் சேர்தலாம்.

### ஆசமனீயம்.

என்பது, சத்திகளுடைய விளக்கத்திலே திருவருள் என்னுந் தன்மையையுடைய திருமுகத்திற் பொருந்துவதாம்.

### அருக்கியம்.

திருமுகம் என்னும் அருளைக், கழலுந் தன்மையாகிய திருமுடியிற் பொருத்துவதாம்.

### புட்பதானம்.

பகிர்முகத்திலே அநேகவித புட்பங்களைச் சாத்துவார்கள்; அவைகளினும் புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலோற்பலம், பாதிரி, அலரி, செந்தாமரை என்னும் அட்டபுஷ்பங்களே விசேடமென்று கொண்டு, அவைகளாலும் அருச்சிப்பார்கள். அவைகள், கொய்வதால் தோஷம் வரலாலும், புழுக்கடி-காச்சம்-வாடல்-வண்டுவீழல் முதலிய குற்ற முறலாலும், அர்ச்சிக்கிலுஞ் சிவசாயுச்சிய முத்தி கொடுக்காவாதலாலும், சிவஞானிகளாவர் இக்குற்றங்க ளொன்று மில்லாதனவாய், விசேடமாய் விளங்கும் சமபாவனை, சந்தோஷ முதலிய மலர்களையும்; கொல்லாமை வாய்மை, ஐம்பொறியடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்னும் அட்டபுட்பங்களையுங் கொண்டு, அவை நிட்களத்தியான பரமசிவனிடத்தில் அத்துவித முத்திக் கேதுவாகக் கொடுப்பதென் றுணர்ந்து, சாத்தி வீடடைவார்கள் என்ப.

### ஞானவாசிட்டம்.

"அறுவுசம் பாவனைசந் தோடமெனு மலர்களா
லந்த்த் தேவாம்
பிறிவரிட் வாத்துமதத் துவத்தையருச் சிப்பதே
பெரிய பூசை
குறிவடிவித் பூசனை பூசனையல் லவக்கண்ட
மெனக்கூறுந் தெய்வ

நெறிகொள்புறத் தொழில்களா நோராதிங் கதனாலே
நிறையு மின்பம்."

தேவாரம்.

"சித்தந் தெளிவீர்கா
ளத்த னாரூரைப்
பத்தி மலர் தூவ
முத்தி யாகுமே."

சதாசிவரூபம்.

"பாத்திய வாச மருக்கியம் பழுத்த
லான்ம சுத்தி நிமித்த மாகவும்
நறுமல ரதனை நல்வீட் டின்பங்
குறுகுத லேது வாகவுங் கொடுத்து.

தூப தீபம்.

மலவாதனையைக் கழற்றுவது கிரியாசத்தி யாதலால், அதையே தூபம் எனவும், சிற்சத்தியின் வாசமாய் ஞானவிளக்கமா யிருத்தலே தீபம் எனவுங் கூறுப. இவை அறியாமையை யொழித்து அறிவைப் பெறும்பொருட்டாகப் பகிர்முகத்தே கொடுக்கப்படும், என்னும் உண்மையை அறிந்து, அந்தர்முகத்திட் டெய்வார் பெரியோர்.

சதாசிவரூபம்.

"ஞான விளக்க நண்ணுதற் பொருட்டுத்
தூப தீபந் துதைந்தினி தளித்து."

நைவேத்தியம்—முகவாசம்.

அநாதி கர்த்தத்துவ பாசிவத்துக்குப் பராபரபோதக் கழற்றியே திருத்தியாதலால், பராபரபோதமாகிய அகங்காரம், சங்கற்பம்,

குரோதம், மோகம், கொலை, விதனம், மதம், நகை என்பவைகளை அமுது, முகவாசம் எனவும், அவைகளைக் கொடுத்தலே நைவேதித்தல் எனவும், அந்தரியாக பூசையிற் செய்து நிற்கும் சிவஞானச் செல்வர்கள் கொள்கையை உணர்த்தும் என்க.

திருவிளையாடற் புராணம்.

"பாட்டிற் கின்புறு குருபரன் பாதமேற் கண்ணீ
ராட்டிச் சொன்மல ரணிந்துதற் போதவின் னமுதை
யூட்டித் தற்பர ஞானமா மோமவெங் கனலை
மூட்டிச் சம்புவின் பூசைமேன் முயற்சிய ரானார்."

"தறுகட்பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக் களித்துண்டு."

சதாசிவரூபம்.

"பின்மன மமைவு பிறத்தற் பொருட்டு
நைவேத் தியமுக வாசமு நல்கி."

ஜெபசமர்ப்பணை.

நிர்மலராகிய சிவபெருமானது சத்தியபாதிகளையும், அவற்றை கூறும் சிவோபாதிகளையும் பின்னமறத் தரிசித்தலாம்.

சட்டநாத வள்ளலார்.

"அகள சகள மாசையின் பொருட்டு
முகனுறச் செபித்தபின் முன்போல் நிட்கள
தாங்க வஞ்செப தர்ப்பணம் பண்ணி."

ஆராத்திரிகை.

கர்ப்பூர ஆராத்திரிகமே விசேடமாம். வேறு பல திரவியங்களிருக்கவும், கர்ப்பூரத்தையே விசேடமாகக் கொண்டதென்னை யெனிற் கூறுதும். கர்ப்பூர வடிவம்போலவே ஆன்மாக்களும்

வெண்ணிறமான சாத்துவிக குணவடிவ முறல்வேண்டு மென்பதும்; கர்ப்பூரமானது, அக்கினி பற்றியவிடத்தே தன் வடிவமாக விளங்காது, அவ்வக்கினிச் சோதிமயமாய் எவ்வாறு விளங்கிநிற்குமோ அவ்வாறே ஆன்மாக்களும், சிவஞானாக்கினி பற்றியவிடத்தே பசுத்துவ நீங்கிச் சிவத்துவ விளக்கமுற்று நிற்கும் என்பதும்; பின்னர் அக் கர்ப்பூரம் யாதோர் பற்றுமில்லாமல் தன் வடிவ முழுதுங் கரையப்பெற்று, வெளியா மாகாயத்திற் கலந்து, அவ் வாகாயத்தோடு எவ்வாறு அத்துவிதமாய் விளங்குமோ அவ்வாறே, இவ்வான்ம கூட்டங்களும், தம் தூல சூக்கும காரண சரீரங்கள் கரையப்பெற்று, எப்பற்றுங் கழன்று, சிதாகாசத்தோடு அத்துவிதமாய்ப் பேரின்பப் பெருவாழ்வடைவார்கள் என்பதும், குறித்துணரவைத்த உப்திக்கேதுவான நற்குறியேயாம். இங்ஙனம், கர்ப்பூர ஆராத்திரிகத்தால் அத்துவிதமுத்தி யுணரப்படுமாயின், இதுபோலவே நம் சைவ சமயக் கிரியைகளெல்லாம், பக்குவநோக்கி உண்மையறியவைத்த உபாயக் குறிகளென்பது வெள்ளிடைமலைபோற் றெள்ளிதிலுணரக் கிடப்பன காண்க. இவ்வுண்மைகள் போதரவே,

பட்டணத்துப்பிள்ளையார்.

"அக்கினிகர்ப் பூரத்தை யறவிழுங்கிக் கொண்டாற்போன்
மக்கினம்பட் டின்னே மருவியிருந் தாண்டி." எனவும்,

தாயுமானசுவாமிகள்.

"ஒருவனவன் யானைகெடக் குடத்துட் செங்கை
யோட்டுதல்போ லன்பேதை யப்போ டப்பை
மருவவிட்டுங் கர்ப்பூர மதனிற் றீபம்
வயங்கவிட்டு மைக்கியமுன்னி வருந்தி நிற்பே
னருளுடைய புரமென்றே வன்று தானே
யானுள னென்றுமெனக் கேயாண வாதி
பெருகுதவிலைக் கட்டென்று மென்றாற் கட்டிப்
பேசியதன் றேயருளால் பேசிற் றன்றே."

> "தீதணையாக் கர்ப்பூர தீபமென ஞானகண்ட
> சோதியுட னொன்றித் தரிசிப்ப தெந்நாளோ."

எனவுங் கூறியருளினார்கள்.

## தசோபசாரங்களாவன:

மேற்கூறிய ஆவாகனமுதற் புட்பதானாந்தம் வரையு முள்ள பத்துமாம்.

## பஞ்சோபசாரங்களாவன:

மண்சம்பந்தமான கந்தமூல பலங்கள், சுகந்த புட்பாதிகள், பணிகாரம், அன்னம, அடை, காயாதிகள் கொடுப்பது பார்த்திவோசார மாகும். சலசம்பந்தமான நீர், பால், தயிர், வஸ்திராதிகள் ஆப்பியோபசார மாகும். அக்கினி சம்பந்தமான உலோகாதி யாபரணங்கள், தீபங்கள், கண்ணாடி தைசசோபசாரம் எனப்படும். வாயுசம்பந்தமான தூபம், சாமரம், மயில்விசிறி முதலாயின வாய்வியோபசார மாகும். ஆகாயசம்பந்தமான மணியோசை, மந்திரமுதலாயின வைஹாயசோபசாரம் ஆகும்.

## யாகம்.

யாகம், தூலயாகம் சூக்குமயாகம் என இருவகைப்படும். அவற்றுள் தூலயாகமாவது கருமயாகமாம். சூக்கும யாகமாவது ஞானயாகமாம். கருமயாகம், காயிகம் வாசிகம் மானதம் என மூன்றாகும். காயிகமாவது, நித்தியம் நைமித்திகம் காமிகம் என்பனவாம். வாசிகமாவது, மந்திரசெபங்களாம். மானதமாவது தெய்வத்தியானமேயாம். ஞானயாகம் அகத்தில் அறிவுமாத்திரையானே செய்வதாம். மகோற்சவாதிகளிலே புறத்தே செய்யப்படும் யாகத்தால் ஞானயாகங் குறிக்கப்படும். எங்ஙனமெனில், சரீரம் வேதியாகவும், மூக்கு அந்தர்வேதியாகவும், தலை துரோணகலசமாகவும், பாதம் இரதமாகவும், வலக்கை சுருவமாகவும், இடக்கை நெய்ப்பாத்திரமாகவும், சபையி

ளர் புலன்களாகவும், மகாபூதங்கள் பிரயாசையாகவும், பல்லும் உதடும் சூக்தவாகமாகவும், நாக்கு யுவாகமாகவும், மிருதி தயையாகவும், ஓங்காரம் யூபமாகவும், ஆசை ரசனையாகவும், மனசு ரசம் ஆகவும், காமம் பசுவாகவும், மயிர் தர்ப்பை [illegible]வும், இந்திரியங்கள் யாக பாத்திரங்களாகவும், கன்மேந்திரியங்கள் அவிசாகவும், கொலை செய்யாமையே யாகமாகவும், எவற்றையும் விடுதலே தக்ஷிணை ஆகவும், ஏனையவைகளையும் இவ்வாறமைத்துக் கொள்ளப்படும்.

## கும்பம்.

மகோற்சவாதிகளிலே நிறுத்தப்படுங் கும்பங்கள், சத்ததாதுக்களாலும் ஆகிய சரீரம் எனக் குறிக்கற்பாற்று. எங்ஙனமெனில், கும்பங்களிலே போர்த்த புடைவை தோலாகவும், செந்நிறமேறப் பூசிய மண் இரத்தமாகவும், அக் கும்பங்களின் மண் மாமிசமாகவும், அவைகளி னிறைக்கப்பட்ட சலம் மேதசாகவும், கூர்ச்சம் எலும்பாகவும், நாற்புறமுஞ் சுற்றப்பட்ட நூல்கள் நரம்புகளாகவும், அவைகளுக்குள்ளே போட்ட நவரத்தினம் பொன்புட்ப முதலாயின வீரியமாகவும், நியசிக்கப்பட்ட மந்திரமே உயிராகவும், கீழிட்ட நெல்லு-அரிசி - எள்ளு - பயறு - உழுந்து - துவரை - கோதுமை என்னும் எழ்வகைத் தானியங்கள் ஆசனமாகவும், குறிக்கப்படும் எனச் சித்தாந்தசாராவளி கூறுகின்றது.

பெரும்பாலும் சில ஆலயங்களிலே அமாவாசையினும், சில ஆலயங்களிலே பௌர்ணிமையினும், மகோற்சவங்கள் ஆரம்பமாகவுஞ் சமாப்தியாதலும் வழக்கமேயாம். அங்ஙனஞ் செய்தற்கும், ஆதியிலே கொடியேற்றுதற்கும், அவ்வுற்சவங்கள் பத்து-பதினொன்று-இருபத்தொன்று என இன்னன தினங்களை வரையறைசெய்து நடத்தற்குங் காரண மிருத்தல்வேண்டும், அவைகளை யொருவாறு எடுத்துக் காட்டுவாம்.

## கால விசேடம்.

சரீரத்திலே பிராணவாயுவானது, பிங்கலை நாடியினின்றும் இடைநாடியில் மாறுவதையே உத்தராயணம் எனவும், இடைநாடியினின்றும் பிங்கலைநாடியிற் போவதையே தக்ஷணாயனம் எனவும், இடை பிங்கலை யென்னும் இருநாடிக்கும் நடுவில் உள்ள சுழுமுனை நாடியிலே பிராணவாயு சேருங்காலத்தையே அமாவாசை எனவும், "ஞானப்பிரகாசத் தெளிவு நினைவாகார மயப்படுங் காலத்தையே பூரணை" எனவும், பிராணவாசி மூலாதாரத்திற் சேர்வதையே பிரதமவிடுவகாலம் எனவும், அது சிரத்திற் சார்வதையே இரண்டாம் விடுவகாலம் எனவும், நிசுவாசத்தோடு சுவாச நாடியானது ஒன்றிலிருந்து மற்றொன்றிற் பொருந்துங்காலத்தையே சங்கிராந்தி (மாசப் பிறப்பு) எனவும், பிராணவாயுவானது, சந்திரநாடியாகிய இடைகலையினின்றும் உந்திக்கு இரண்டங்குலக் கீழிற் சர்ப்பவுருவுடனிருக்குங் குண்டலிசத்தியிற் பொருந்தும் காலத்தையே சந்திரகிரகணம் எனவும், ஷ்டி வாயு சூரியநாடியாகிய பிங்கலையில் நின்றும் மேற்கூறிய சத்தியிற் பொருந்தும் காலத்தையே சூரியகிரகணம் எனவும், சிவயோகிகள் கொண்டு அவைகளுட் சமஸ்த கர்மங்களுக்கும் இனியதாய், ஞானோதய சாதனமாய் விளங்குஞ் சுழுமுனைநாடி இயங்கும் காலங்களாய அமாவாசை, பூரணை என்னுங் காலங்களையே கைக்கொண்டொழுகித் திருவருள் கூடப்பெற்று முத்தியடைவாராதலின், அக்காலங்களே விசேடமெனக் கொள்ளின் தத்துவஞான முதிக்கப்பெற்றுத் திருவருள் கூடப்பெறுவார் என்பதைக் குறிக்கச் செய்வதாம்.

### சூதசங்கிதை.

"இடையினெப் போது மதியும்பிங் கலையி
லிலங்குமென் றாழுஞ்சஞ் சரிக்கு
நடைகொள்பிங் கலையி னின்றுமொள் ளிடையி
னவிறரும் பிராணவா யுவுதான்

மிடைவரை யுத்த ராயன மென்றும்
விளம்பிடை நின்றும்பிங் கலையிற்
கடையிலவ் வளிசங் கிரமமா வதைத்தக்க
ணாயன மென்றுநன் குறைப்பர்.''

''தழைதரு மிடைபிங் கலையெனு மிரண்டின்
சந்தியைப் பிராணன்சேர் காலம்
விழைதரு மமாவா சியையென வுரைப்பர்
மேவுமப் பிராணன்மூ லத்தைக்
குழைவறச் சேரிற் பிரதம விடுவ
காலமென் றுங்குலாஞ் சென்னி
யுழையுறச் சேரி லிரண்டதாம் விடுவ
காலமென் றுஞ்சொல்வா ருணர்ந்தோர்.''

''நன்னிசு வாசத் தோடு சுவாச
நாடியொன் றிருந்துமற் றொன்றிற்
றுன்னிடல் சங்கிர மணகால மெனச்சொல்
லப்படும் பிராணன்மற் றிடைகின்
றுன்னுபிங் கலைகின் றோங்குகுண் டலியி
னுற்றிடும் காலத்தை முறையே
மன்னிய வுலக மேத்துபுண் ணியத்த
மதிகதிர்க் கிரகண மென்பர்.''

**சைவசமயநெறி.**

''எல்லா வினைக்கு மினிது சுழுனையெனச்
சொல்லாய்வார் கொள்க துணிந்து.''

என்பதனானும், பிறவாற்றானும் அறிதற்பாலனவாம்.

## துவசாரோகணம்.

மகோற்சவாரம்பத்திலே கொடியேற்றல் வழக்கமாம். செங்கோலரசனின் சத்திக்குறியாகிய கொடி யேறியவழி, ஆங் காசு

செய்திருந்த கொடுங்கோன் மன்னன் வலியொழிந்து செயலிழந்து நீங்கலும், குடிகள் க்ஷேமத்தை யடைதலும், அதுபல வுண்மையே யாம். அதுபோல மும்மலபந்தத்தாற் பிறந்திறந்து சுழன்று வருந்தும் ஆன்மாக்கள், உண்மையை நோக்கி அறிவுக்கறிவாய் நிற்குஞ் சிவத்தைப் பிரியாமற் குறித்து, தீக்ஷைவிதிப்படியே "சிவாயநம" என்னும் பஞ்சாட்சரத்தையும், "ஓம் அம்உம்சிவாயநம" என்னும் அஷ்டாக்ஷரத்தையும், "ஓம் சிவாயநம" என்னுஞ் சடாக்ஷரத்தையும், "ஓம் சிவாய" என்னும் சதுராக்ஷரத்தையும், விதிப்படி யச்சரித்துப், பின்னர் மந்திர சொரூபமறிந்து, பிஞ்செழுத்தென்னும் வகாரமாகிய பராசத்தியையும், பெருவெழுத் தென்னும் சிகாரமாகிய சிவத்தையும் இருதயத்திலே வைத்துத் தியானித்து, சங்கற்ப ஞானங்களிலே போகாமல் தன்னிடத்தில் அடங்கியே தோன்றாமற் பொருந்தியிருக்கும் திருவருளிலே அறிவே தாரமாக நிறுத்த, பேசும் எழுத்தான பரைக்கொடி யேறி, பேசா எழுத்தான சிவத்தை இரண்டறக் கலப்பித்தலால், ஆணவமல அரசு வலியிழந்து செயலிழந்து ஒடுங்க, ஆன்மாப் பேரானந்தப் பெருவாழ்வடையும். ஆகவே, மலநீக்கமும் முத்தியும் வருதற்கு இம் முறையே திருவருளாகிய கொடியேற வேண்டும் என்பதும், இல்லையேல் அவை அடைதல் கூடாவென்பதும், அறிவிக்கும் நற்குறியாம். இதனை உமாபதி சிவாசாரியார் தாம் அருளிச்செய்த

கொடிக்கவியிலே,

"வாக்காலு மிக்க மனத்தாலு மெக்காலுந்
தாக்கா வுணர்வரிய தன்மையனை—நோக்கிப்
பிரித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்கு மருணல்கக் கொடி."

"அஞ்செழுத்து மெட்டெழுத்து மாறெழுத்து நாலெழுத்தும்
பிஞ்செழுத்து மேலைப் பெருவெழுத்து—நெஞ்சழுத்திப்

பேசு மெழுத்துடனே பேசா வெழுத்தினையுங்
கூசாமற் காட்டக் கொடி."

"நீபுரவா வையமெலா நீயறியக் கட்டினேன்
கோபுர வாசற் கொடி."

என வற்புறுத்திக் கூறினமையானும் பிறவாற்றானும் உய்த் துணரத்தக்கதேயாம்.

மகோற்சவம், ஆலயங்களிலே பற்பல விதமாக நடத்தப்படும்; அவைகளை எல்லாம் எடுத்துக்காட்டல் முடியாதாக, அவைகளுள், தெரிந்தவைகளை மாத்திரம் இங்ஙன் காட்டுவாம். சில ஆலயங்களிலே மகோற்சவங்கள் பத்துநாட் செய்யப்படுகின்றன; அவைகளின் காரணங்களாவன:—

## முதலாநாள் உற்சவம்.

"மேவிய புன்மயிர்த் தொகையோ வம்மயிர்
பாவிய தோலின் பரப்போ தோலிடைப்
புகவிட்டுப் பொதிந்த புண்ணோ புண்ணிடை
யூறு முதிரப் புனலோ கூறுசெய்
திடையிடை நிற்கு மெலும்போ வெலும்பிடை
முடைகெழு மூளை விழுதோ வழுவழுத்
துள்ளிடை யொழுகும் வழும்போ மெள்ளநின்
றூறும் புழுவி னொழுங்கோ நீரிடை
வைத்த மலத்தின் குவையோ வைத்துக்
கட்டிய நரம்பின் கயிறோ வுடம்பிற்குட்
பிரியா தொடுக்கும் பிணியோ தெரியா
தின்ன தியானென் றறியே னென்னை
யெங்குந் தேடினே னியாதிலுங் காணேன்."

எனத் திருவெண்காட நாயனார் கூறியவாறே, கட்புலனுக்குத் தோற்றும் அன்னமயத்தாற் பரிணமித்த கருவிகளெலாஞ் சடமாத

லின், சித்தாகிய ஆன்மா அவைகட்கு வேறாக உண்டென்று தூ வுடம்பை நீக்குதற்பொருட்டுச் செய்யப்படுவதாம்.

## இரண்டாநாள் உற்சவம்.

சுரோத்திரம்-தொக்கு-சட்சு-சிங்குவை - ஆக்கிராணம் என்னும் ஞானேந்திரியம் ஐந்தும், வாக்கு-பாதம் - பாணி-பாயு-உபத்தம் என்னுங் கன்மேந்திரியம் ஐந்தும், மனம்-புத்தி-சித்தம்-அகங்காரம் என்னும் அந்தக்கரணம் நான்கும், பிராணவாயு ஒன்றும், ஆகிய பதினைந்து தத்துவங்களும், சடப்பொருளாதலின் சேதனனாகிய ஆன்மா இவைகட்கு வேறாக உண்டு என்று அத் தாத்துவிக சூக்கும உடம்பை நீக்குதற்பொருட்டாகச் செய்யப்படுவதாம்.

## மூன்றாநாள் உற்சவம்.

பிராரத்துவம்-சஞ்சிதம்-ஆகாமியம் என்னும் மூவினையும், ஐயம்-விபரீதம்-மயக்கம் என்னும் முப்புத்தியும், சாத்துவிகம்-ராசதம்-தாமதம் என்னும் முக்குணமும், சிந்தித்தல்-நிச்சயித்தல் - கொண்டெழுப்பல் என்னும் மும்மனமும், காமம்-வெகுளி-மயக்கம் என்னும் முக்குற்றமும், உம்மை (கழிபிறப்பு) - இம்மை (இப்பிறப்பு) - அம்மை (வருபிறப்பு) என்னும் முப்பிறப்பும், உலகவீடணை - தனவீடணை-தாரவீடணை என்னும் முப்பற்றும், நீக்குதல் காரணமாகச் செய்யப்படுவதாம்.

## நாலாநாள் உற்சவம்.

மனமுதலிய நாற்கரணமும், அண்டசம்-சுவேதசம்-உற்பிச்சம்-சராயுசம் என்னும் நால்வகைத் தோற்றமும், நீக்குதற்பொருட்டுச் செய்யப்படுவதாம்.

## ஐந்தாநாள் உற்சவம்

மெய்-வாய்-கண் - மூக்கு-செவி என்னும ஐம்பொறிகளும், சாக்கிரம்-சொப்பனம்-சுழுத்தி-துரியம்-துரியாதீதம் என்னும் ஐந்

தவந்தையும், ஆணவம் - கன்மம் - மாயை-வைந்தவம்-திரோதாயி என்னும் ஐந்துமலங்களும், நீக்குதற்பொருட்டுச் செய்யப்படுவதாம்.

## ஆறு நாள் உற்சவம்

காமம்-குரோதம்-உலோபம்-மோகம்-மதம் - மார்ச்சரியம் என்னும் உட்பகையாறும், கலாத்துவா-தத்துவாத்துவா- புவனத்துவா-வன்னத்துவா-பதாத்துவா-மந்திராத்துவா என்னுங் கலையாதியாறும், ஒவ்வோர் தலங்களைப்பற்றியிருத்தல், நோயாய்க் கிடத்தல், புண்ணியபாவங்களைச் செய்தல், ஒவ்வொரு பற்றுக்களாய் நின்ற தொந்தனைகளை விடுத்தல், சர்வரையும் நிந்தித்தல், இகழ்ந்தாருடன் பொருந்தல் என்னுங் கன்மமல குணமாறும், பிரமசாலோகம் பிரமசாமீபம் பிரமசாரூபம்-விஷ்ணு சாலோகம் விஷ்ணுசாமீபம் விஷ்ணு சாரூபம் என்னும் பதமுத்தி ஆறும் நீக்குதல் காரணமாகச் செய்யப்படுவதாம்.

## ஏழா நாள் உற்சவம்.

தேவர்-மனிதர்-விலங்கு-பறவை-ஊர்வன-நீர்வாழ்வன- தாவரம் என்னும் ஏழ்வகைப் பிறப்பும், காலம்-நியதி-கலை-வித்தை-இராகம்-புருடன்-மாயை என்னும் வித்தியா தத்துவங்கள் ஏழும், அஞ்ஞானம் - பொய் - அயர்வு - மோகம் - சூனியம் - மார்ச்சரியம் - பயம் என்னும் மாயேயமலகுணம் ஏழும், நீக்கற்பொருட்டுச் செய்யப்படுவதாம்.

## எட்டா நாள் உற்சவம்.

பவமின்மை - இறவின்மை-பற்றின்மை - பெயரின்மை - உவமையின்மை, ஒருவினையின்மை - குறைவிலறிவுடைமை-கோத்திரமின்மை என்பனவன்றி, சுவதந்திரத்துவம்-விசுத்ததேகம் - நிராமயான்மா-சருவஞ்ஞத்துவம் - அநாதிபோதம் - அலுப்தசத்தி - அநந்தசத்தி - திருப்தி என்வுங் கூறப்படும் எண்குணமும், விளக்குதற்பொருட்டுச் செய்யப்படுவதாம்.

## ஒன்பதாநாள் உற்சவம்.

நிஷ்களம்-சகளநிஷ்கலம் - சகளம் என்னும் மூவடிவங்களும், சிருட்டி-திதி - சங்காரம் என்னும் முக்கிருத்தியங்களும், சுவர்க்க-மத்திய-பாதலம் என்னும் மூன்றிடைத் துறைதலும், இல்லையெனற் பொருட்டாகச் செய்யப்படுவதாம்.

## பத்தாநாள் உற்சவம்.

சிந்தையு மொழியுஞ் செல்லாநிலைமைத்தாய், அந்தமிலின்பத் தழிவில் வீடான பரானந்தமாக்கடலில் அழுந்துதற்பொருட்டாகச் செய்யப்படுவதாம்; இவற்றின் விரிவுகளை யெல்லாம் விம்பாகமம் சிவோற்சவபடலத்திற் காண்க.

இன்னும் சிவபெருமான் அகண்டாகார, அருவ, அருவுருவ, உருவ வடிவங்களைக்கொண்டு நின்று, பஞ்சகிருத்தியத்தைச் செய்யும் இரகசியத்தை, அவர் ஆதிகாலத்திலே அருந்தவர்க்குக் காட்டிய வாறுபோல, இக்காலத்திலும் ஆலயங்களிலே துவசத்தம்பத்திலே முப்பத்திரண்டு பிரதான தத்துவங்களைக் குறித்தற்காக முப்பத்திரண்டு பிரிவு வளையமிட்டும், (அதின் உச்சியிலே) மேற்கூறிய நால் வித வடிவமாகவும் நின்று பஞ்சகிருத்தியங்களையுஞ் செய்கின்றனர் என்பது போதர, பஞ்சகிருத்தியத்திற்கு ஐந்து வீட்டையும்-நால்வகை வடிவத்துக்கு நாலு கலசத்தையும் அமைத்தும், பஞ்சகிருத்திய துவசமுங் கட்டி பஞ்சகிருத்திய பிரமோற்சவத்தைப் பதினொருநாட் செய்தும் தரிசனப் பிராப்தி சாந்தி வசந்தோற்சவத்தை இருபத்தொருநாட் செய்தும் முடிக்கின்றனர்.

மேற்கூறியவைகளுட் பதினொருநாட் செய்யப்படும் உற்சவங்களுள், முதலாநாள் விழா பிரகிருதி நடனம் எனவும், இரண்டாநாள் விழா இருவினை நடனம் எனவும், மூன்றாநாள் விழா முக்குண நடனம் எனவும், நாலாநாள் விழா அந்தக்கரண நடனம் எனவும்,

ஐந்தாநாள் விழா பஞ்சேந்திரிய நடனம் எனவும், ஆறுநாள் விழா காமாதியாறு நடனம் எனவும், ஏழாநாள் விழா சத்தகோடி மகாமந்திர நடனம் எனவும், எட்டாநாள் விழா வித்தியாதத்துவ ஆணவ நடனம் எனவும், திருக்காப்புநாள் திரோதாயி நடனம் நவபத நடனம் எனவும், திருவுலாப்புறத்தில்,சத்திமுத்தி நடனம் எனவும், திருவனந்தலில் வாதனை நடனம் எனவும், பத்தாநாள் விழா பேரின்பாதீத நடனம் எனவும், பதினோராநாள் விழா பதி பசு பாச நடனம் எனவுங் கூறுப.

இன்னும் இவ்வுற்சவம் ஆலயங்கடோறும் வேறுபட்டு நடக்கினும், பெரும்பாலும் ஆலயங்களிலே நடத்தப்பட்டு வரும் ஐதிக சம்பந்த முகத்தாலே அவைகளைக் கூறி, வேறுசில வுண்மைகளையும் ஒப்புவாயிலாக எடுத்துக் காட்டுவாம். அவையாவன:-

## முதலாநாள் விழா.

## விருக்ஷத்தடிச்சேவை.

இதனை, விருத்திக்கிரம சிருட்டிக்கோலம் என்பர். இதனாலே அநாதி முத்த சித்துருவாகிய சிவபெருமான், தோற்றக்கிரம சிருட்டி யாரம்பத்திலே, விருக்ஷத்தின் இலைகள் - நரம்புகள் - கிளைகள் போல விளங்கநிற்கும் தத்துவங்களாகவும், நால்வகையோனி - எழுவகைப் பிறப்பு - எண்பத்துநான்குலக்கம் யோனிபேத சீவராசிகளாகவும், விரிந்து விளங்குவார் என்பதும், மரத்துக்கு வேர் ஆதாரமாயிருத்தல்போல, சேதனாசேதனப் பிரபஞ்சங்கட்கெல்லாம் ஆதாரமாயிருப்பவர் என்பதும் அறியப்படும்.

## இரண்டாநாள் விழா.

## சூரியசந்திர பிரபாகார திருக்காட்சி.

இதனை விருத்துக்கிரம திதிக்கோலம் என்பர். இதனாலே, சிவபெருமான் சூரியசந்திர மத்தியத்தினிலையிலே ஞானாக்கினிப் பிரகாச

மாய் விளங்கி, அண்டமண்டல மெங்கும் பிரகாசிக்க முறையே பகலும், இரவும் உஷ்ணசீதள பிரகாசத்தை வீசியும், அதனால் யாவற்றையுந் தரிசிக்க வெளிச்சஞ்செய்தும், கிரியாகாரமயமாய் விளங்கியும், சரீரத்திலே அந்தர்பாவமாகக் கலாஞான சூக்கும உஷ்ண சீதள சூரிய சந்திர பிரகாசமாய் விளங்கியும், இடைபிங்கலை சுழுமுனையென்னுஞ் சூரியசந்திர கலாவாசியாய் நின்றும், காலாந்தம் அளவும் அவ்வவ் வான்மாக்கட்குரிய சுகபோகங்களையும், தண்ட அவத்தா துன்பங்களையும், அளிதது நிற்பார் என்னும் உண்மை உணரப்படும்.

## மூன்றநாள் விழா.

## நந்தி, பூதவாகனரோகணம்.

காலையிலே: அதிகார நந்தி-திருமால் நந்தி-தரும நந்தி என்னு மூன்றனுள், அதிகாரநந்தி யாரோகண திருக்காட்சியும், மாலையிலே: பூதவாகனரோகண திருக்காட்சியும் உண்டாம். இவைகளை விருத்திக்கிரம சங்கார மூர்த்தங்கள் என்ப. இவைகளினாலே, சூரியகலையான சிவசத்தி மாயையினாற் சீவர்கள் சம்பாதிக்கும் சனனம், தண்டனை, துக்கம், காலம் முதலியவைகளைப் பிராப்த ரூபமாய் விதிப்பவர் என்பதும், சந்திரகலையான சிவசத்தி மாயையினாலே ஆன்மாக்கள் சம்பாதிக்குஞ் சன்மாந்தர பாபவிசேடத்துக் கேற்ப மரணவத்தையை விதிப்பவர், சங்காரகிருத்தியர், விஸ்வநாதர் என்பதும், முறையே யூகித்துணரப்படும் என்ப.

## நாலாநாள் விழா.

## பல்லக்குச் சேவையும், ஐம்முகநாகாரோகணமும்.

காலையிலே பல்லக்குச் சேர்வை கோலமாய் எழுந்தருளுங் காட்சியும், மாலையிலே ஐம்முக நாகாரூட காட்சியும் உண்டு. இவைகளை விருத்திக்கிரம திரோபவ கோலங்கள் என்ப. இவைகளாலே, சிவபெருமான், பல்லக்கின் மேன் முகட்டினைப்போல விளங்குஞ்

தம்முண்மை நிலையான சுய சுபாவ சிவரூபத்தை, மறதி ஆவரணத் திரையினாலே மறைத்தும், இன்னும் அதிற் காணப்படும் நான்கு குஞ்சங்களாலுங் குறித்தற் குரியவாய் நிற்கும், தற்போதம், தற்பேதம், தற்பாவம், தற்சூனியம் என்னும் திரைகளாகிய ஈஸ்வராவரண சத்தியாகாரமாய் விளங்கியும், இருபக்கங்களினு முள்ள முப்பத்திரண்டு குஞ்சங்களாலும் அறியவரும் முப்பத்திரண்டு பிரதான தத்துவாவரணத்தாற் சீவர்கள் தம்மை யறிதற்கு அகோசரியாய் நின்றும் விளங்குவோர் என்பதும், இன்னும் அவர் தமது சிருட்டி தத்துவங்களாகிய சீவ சைதன்னியத்தை, ஈசானம் தற்புருடம் அகோரம் வாமதேவம் சத்தியோசாதம் என்னும் ஐம்முகங்களையுங் கொண்டு, முறையே பரத்துவ தத்மறதி ஆவரணத்தினாலும், போக தத்துவ தற்பாவ ஆவரணத்தினாலும், கிருத்தியத்துவ தற்போத ஆவரணத்தினாலும், கர்த்தத்துவ தற்போத ஆவரணத்தினாலும், அநுபவத்துவ தற்தோற்றாவரணத்தினாலும் மறைப்பவர் என்பதன்றி, குண்டலிசத்தி பாம்பு வடிவெனக் கூறப்படலாலும், அதன் விரிவு ஒடுக்கங்களே பிரபஞ்ச தோற்ற ஒடுக்கமாம் என்பதனாலும், அதுவே ஞானேதய சாதனமாய சுழுமுனை நாடியை மறைத்து நிற்பதென்னலாலும், அதைப் பரிக்கிரக சத்தியாகவுடையவர், திரோபவகிருத்தியர் என்பதும், முறையே குறிக்கப்படும் என்ப.

### ஐந்தாநாள் விழா.

## இலிங்காகார, இடபவாகனரோகணம்.

காலையிலே, அண்டவட்ட சொரூபம்போலுள்ள லிங்காகார வட்ட சொரூப பிரபாமத்தியிலே எழுந்தருளுங் காட்சியும், மாலையிலே இடபவாகனரூட திருக்காட்சியும் உண்டாம். இவைகளை விர்த்திக்கிரம அநுக்கிரக கோலங்கள் என்பர். இவைகளானே, சிவபெருமான் தம்மாற் சிருட்டிக்கப்பட்ட அதலாதி பாதலாந்தமாயுள்ள கீழேழுலகம், பூலோகாதி சத்திய லோகாந்தமாயுள்ள மேலேழுல

கம், சூரியமண்டலம், சந்திரமண்டலம், நவக்கிரக - நக்ஷத்திர மண்டலம் முதலான எல்லா வுலகங்களேயும், சீவகோடிகளேயும் நிலேகிற்கவும் சீவித்து வாழவும் அமைத்து, அவைகளின் உட்புறமெங்கணும் வியாபித்து, சர்வ சாட்சித்துவ பரமானந்த சுத்த பரப்பிரம சொரூபராய் விளங்குவார் என்பதும், இடபத்தின் நான்கு கால்கள் போன்று நான்குவித அந்தக் கரணங்கள் விளங்கும்; இதுவே லய சொரூபமாகிய பாசம் எனப்படும். இவ் வந்தக்கரணங்களானவை, இடப முண்டாகாரத்தை யொத்தசர்வ வியாபக சத்திஞானத்தின் விரிவாகையால், அந்நாற்கரணங்களேயும் சர்வ வியாபகத்தி லொடுக்கிற் சத்தி ஞானமாம். இச் சத்தி ஞானத்தையே போதசொரூபம் எனவும், பசுரூபம் எனவுங் கூறுப. ஆகவே, சத்திஞானமாகிய பசுபோத சொரூபத்துக்கு மேலும், சிவபெருமான் அதீதவடிவாய் விளங்குவார் என்பதும், அதிலே மேற்கூறப்பட்ட பசுபோதத்தை யொடுக்கின், அதுவே சிவஞான சிவரூபமாம் என்பதும், சிவமூர்த்தத்துக்கு மேலே குடை கவிந்து விளங்கல், அச் சிவரூபத்தின் அதீதாத்துவித நிலேக்காம் என்பதும், இன்னும் அடியாரைச் சிவபுண்ணியங் கருதி ஆட்கொள்ளப் புகுங்கால், அப் புண்ணிய வடிவாகிய ஏறூர்ந்து செல்லு முறைமை யுடையவர் என்பதும், முறையே கொள்ளப்படும் என்பார் பெரியோர்.

காரைக்காலம்மையார் திருவிரட்டைமணிமாலே.

“ஏறலா லேறமற் றில்லேயே யெம்பெருமா
னூறெலாம் பாயு மவிர்சடையார்—வேறோர்
படங்குலவு நாகமுமிழ் பண்டமரர் சூழ்ந்த
திடங்கடனஞ் சுண்டார் தமக்கு.”

பிறவாற்று னு முணர்க.

## ஆறநாள் விழா.

## யானேவாகனுரோகணம்.

ஆறுநாள் யானேவாகனரூட கோலமாகச் சிவபெருமான் எழுந்தருளித் தரிசனங் கொடுத்தருள்வர். இது லயக்கிரம சிருட்டிகோ

லம் எனப்படும். இதனாலே சிவபெருமான் அதோமுக வுலகங்க ளௌ லுஞ் சென்று, மத்தியகதமான சத்த லோகங்களுக்கும், அதோமுக சத்த லோகங்களுக்கும் ஆதாரமாகி, சுத்த மாயாலோக மெங்கணும் நிறைந்து, சுட்டிச் சொல்லக் காட்சியிற் படாததாய், சிவஞானிகள் திருவருளால் அறிய எளிதானதாய், வேத வேதாங்க ரூபமுடைய தாய், ஆன்மகோடிகளாய், அவற்றில் விளங்கும் அறிவாய், கொடுந் துன்பத்தைச் செய்யும் பாசம் அறும்படி வீசியெறிந்து பிறவிக்கடல் வற்றித் தூளெழும்படி செய்வதாய், காமக் குரோத மாச்சரியாதிக ளைக் கோபித்து அடர்ப்பதாய், பிறவிக்குக் காரணமான புவனத் தொழிலின் தலைமை மிதித்து நசுக்குவதாய், பேய்போற் பிதற்றுஞ் சமயங்களின் வலியவாதப் பொய்க்கட்டுகளை அறுப்பதாய், அச்சம் கொலை முதலியவற்றை யொழிப்பதாய், பாசக்குழாத்தைத் தலை யெடாது ஒதுக்கி மாதர்களின் அவாவெண்ணத்தை நீக்கி அன்பா லான கதி கொண்டதாய், ஆரணி செனனி ரோதயித்திரி என்னும் மூன்று சத்திகளாலு மாய திருவருளென்னும் மும்மத நீரை யுடைய தாய், தத்துவ கூட்டங்களுட் புகுந்து ஆனந்தத் தேனைப் பருகி, நான்கு வேதங்களையும் நான்கு கொம்பர்களாக மருவப்பெற்றதாய், விளங்காநின்ற பராஞானம் என்னும யானையை உடையவர் என்பது விளங்க நிற்கும்.

இது வல்லாமல் யானையினது நான்கு கால்களையும்போல, மொத்தாகாரதோற்ற சடத்துவம், சுவாச சூக்குமத்துவம், வாசிசீவத் துவம், பிராணமாயத்துவம், என்பவை விளங்கும் என்றும், இவை கள் யானை வடிவத்தையொத்த ஆன்மஞானத்தில் உதயமாய், தும் பிக்கைபோன்ற சுழுமுனை நாடியில் அமைந்து நிற்கும் என்றும், அவ்வான்ம ஞானத்திற்கு மேலாக விளங்கும் சிவ ஞான சத்தி யானது: ஞானாதீத சொரூபமாயும், அம்பாரியைப்போலப் பகிர் முகத்தே அண்டாகாரமாயும் விளங்குகின்றமையால், சீவர்கள் யாவ ரும்: தோற்ற, சூக்கும, சீவ, மாயா ஞானங்களை ஆன்மஞானத்தி

லும், அவைகளை ஈஸ்வர சைதன்னியத்திலும், அவ் வீஸ்வர சைதன்னியத்தைப் பிரம சைதன்னியத்திலும் ஒடுக்கவேண்டும் என்றும் குறிக்கப்படும் என்ப.

ஏழாநாள் விழா.

## இரதாரூட திருக்காட்சி.

ஏழாநாளிலே இரதாரோகண திருக்காட்சி யுண்டாம். இது சில ஆலயங்களிலே ஒன்பதாநாளினும் செய்யப்படும்.

இதனுண்மையை விவரணம் பண்ணுங்கால், ஆதிகாலத்திலே, தடங்கருணைப் பெருங்கட லென்றையாகிய சிவபெருமான், மந்தர கேசரிமலைகள் அச்சாகவும், சூரிய சந்திரர்கள் சக்கரமாகவும், ஆறிருதுக்கள் சந்தியாகவும், பதினுன்குலோகமும் பதினுன்கு தட்டுகளாகவும், ஆகாயம் ஆசனமாகவும், உதயாத்தமலைகள் கூவிரமாகவும், நதிகளும் நதங்களும் கொடிகளாகவும், நக்ஷத்திரங்கள் விதானமாகவும், மோக்ஷலோகம் மேல்விரிவாகவும், யாகங்கள் சட்டங்களாகவும், நாள் முதலியன இடுக்குமரமாகவும், அட்டமலைகள் தூண்களாகவும், அட்டயானைகள் தாங்குவனவாகவும், சத்த சமுத்திரங்கள் திரைச்சீலைகளாகவும், கன்ம ஞானேந்திரியங்கள் கலன்களாகவும், கலைகள் மூளைகளாகவும், வேதாங்க உபாங்க மறசாஸ்திரங்கள் மணிகளாகவும், வாயுக்கள் படிகளாகவும், நான்கு வேதங்கள் பூட்டப்படுங் குதிரைகளாகவும், அமைக்கப்பட்ட இரதத்திலே யெழுந்தருளி, கங்கைமுதலிய தேவமாதர்கள் சாமர மிரட்டவும், ஊர்வசிமுதலிய கணிகைமகளிர் நடனஞ் செய்யவும், மகா மேருமலையை வில்லாகவும், சாசுவதியை வில்லிற்கட்டிய மணியாகவும். வாசுகியை நாணாகவும், விஷ்ணுவைப் பாணமாகவும், அக்கினிதேவதையை அவ்வம்பின் கூர்வாயாகவும், வாயுதேவனை அம்பிறகாகவுங் கொண்டருளி, பிரமனுகிய சாரதி பிரணவமாகிய தூண்டுகோல்கொண்டு செலுத்த, திரிபுர அவுணர்களைத் தந் திருப்புன்னகை யக்கினியினல் நீருக்கியருளினர், என்

னும் வரலாற் றுண்மையைக் காட்டுவதே இவ் விரதசேவைக் காட்சி என அநுமிக்கப்பட்டு விஸ்வரூபியாயும், விஸ்வகாரணராயும், விஸ்வ சேவியராயும், விஸ்வாந்தரியாமியாவும், இருப்பவர் சிவபெருமானே யென்பதும், முப்புரமென்பது - ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மல காரியங்கள் எனவும், அத் திரிபுரங்களையும் நீறாக்கி, தாரகாக்ஷன் கமலாக்ஷன் வித்துன்மாலி என்னு மூவர்களையுந் தேவர்களையும் அடிமையாக்கொண்டு அவர்கட்குத் தம்பத மருளி இன்பங் கொடுத்தலை, மும்மலங் காரியங்களையுங் கெடுத்து விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என்னு மூவகை யான்மாக்களையும் அடிமையாக் கொண்டு திருவடிமுத்தி கொடுக்கும் உண்மை எனவும், அறிய நின்றதனுல் எல்லாமாய், அவைகட்குக் காரணமுமாய் நிற்கும் பரமபதியாகிய சிவபெருமானே ஆன்மாக்கட்கு மும்மலபந்த வாதனைகளைக் கெடுத்து, திருவடிப்பேறுகிய பேரானந்தப் பெருவாழ் வளிப்பர் என்பதும் உணரப்படும்.

## உபதேசகாண்டம்.

“மந்த ரத்தோடு கேசரி நெடுவரை வாங்கித்
தந்து திண்டிற லச்செனப் படுத்தினர் தழைக்குஞ
செந்த னிக்கதி ரினைத்தைவெண் டிங்களைத் திருத்தி
யுந்து பேரெழி லாழிகொண் டவைக்கடை யுறுத்தி.”

“ஏழி ரட்டியென் றுரைத்திடு மிருநிலப் பரப்பைச்
சூழ்த ரப்படு நிலங்களீ ரேழெனத் தொகுத்தார்
பாழி வாளரிப் பிடரிடு மாசனப் பரப்பை
யாழி யொத்தவர் தட்டினேர் தட்டகத் தமைத்தார்.”

“எழுது ருமலற யனைத்தையும் பரியென வியற்றி
வழுவ றக்குனற நிரப்பின ரரிமுதல் வானோ
ரொழுகு மாயிரங் கொடுமுடி கூடவரை யோங்க
றழுவு செங்கலிற் பிஞ:மொத் தமைத்தனர் தந்தார்.”

"பொறிப்ப ரூடவி வாசுகி நாணெனப் பொருத்தி
வெறிப்ப சுந்தழா யலங்கலோன் கணையென வியப்பக்
குறித்த வெந்நதி பாவகற் பொருத்தினர் குதைவாய்ச்
செறித்த நூவலே வாயுவிற் செறித்தனர் திருத்தி."

"முன்னை மாதவர் தடைப்பிடி யிருந்தவா முளரி
யன்ன வூர்தியும் வலவனைத் தமர்ந்தன னமையாத்
தொன்ன லந்தரு குடிலைமத் திகையெனத் தொகுத்தார்
பின்னர் வானவர் சேனையொத் தெழுந்தனர் பிரியார்."

திருமந்திரம்.

"அப்பணி செஞ்சடை யாதி புராதனன்
முப்புரஞ் செற்றன னென்பர்கண் மூடர்கண்
முப்புர மாவது மும்மல காரிய
மப்புர மெய்தமை யாரறி வாரே."

இங்ஙனமன்றி, தேரிலே விளங்கும் ஏக உச்சிக்குடை பிரமரந்திரமாகவும், கலசம் சோடசாந்தத் தானமாகவும், மேலுள்ள முதலாம் அடுக்கு துவாதசாந்தத்தானமாகவும், இரண்டாம் அடுக்கு மஸ்தக ஆதித்தானமாகவும், மூன்றும் அடுக்கு மத்தியத்தானமாகவும், நாலாம் அடுக்கு மஸ்தகாந்தத்தானமாகவும், ஐந்தாம் அடுக்கு லலாட மத்தியமாகவும், ஆறும் அடுக்கு புருவமத்தியமாகவும், நடுவுள்ள ஏழாம் அடுக்கான முப்பத்திரண்டு குத்துக்கால்கள் முப்பத்திரண்டு தத்துவங்களாகவும், முற்றுறைகளே கண்களாகவும், பிற்றுறைகள் சிகைகளாகவும், பக்கத்துறைகளே இருசெவிகளாகவும, பீட முதற்பகுதி வாயாகவும், இடப்பக்கத்துள்ள இருகுதிரை வடிவங்கள் இடப்பாக சூரிய சந்திர கலாவாசிகளாகவும், வலப்பக்கத்துள்ள இருகுதிரை வடிவங்கள் வலப்பாக சூரிய சந்திர கலா வாசிகளாகவும், சாரதிவடிவம் மூம்மலரூபம் - நாசி என்பவாகவும், எட்டாம் அடுக்கிடைப்பகுதி அந்தக்கரண சொரூபம் கண்டத்தானம் என்பனவாகவும், அதின்கீழிடப்

பகுதி ஐந்தவத்தை - ஐங்கோசம் - இராகாதி பதின் . முக்குணம் என்பவற்றின் ரூபமாகவும், இருதயத் தானமாகவும்; அதின் கீழ்ப்பகுதி தசேந்திரியம் - நாபித்தானம் ஆகவும், அதின் கீழுள்ள அச்சு பஞ்சபூதம் - குண்டலி சத்தித்தானம் ஆகவும், சக்கரங்கள் தசவாயுக்களாகவும் - இருகால்களாகவும் கண்டு, சரீர சொரூபத்தை விளக்கி, பின்னர் சக்கரங்களான தசவாயுக்களையும் நிறுத்த, அசைதன் முதலிய வினைகள் ஒழியு மெனவும், அவ்வாறுள்ள சீவன் தன் மனத்தத்துவத்தை, முறையே மேலாக விளங்கும் உந்திக் குண்டலியி லிருந்து நாபிக்கும், அங்கிருந்து முறையே இருதய கண்டத்தானங்களுக்கும் ஏற்றி லயப்படுத்தி, அங்கிருந்து மேலாக விளங்கும் வாய்-நாசி என்பவைகளுக்கும் ஏற்றி லயப்படுத்தி, அங்கிருந்து இருகண்கள் வழியாகவும் மேனோக்கி, ஆறும் அடுக்காகிய புருவ மத்தியத்துக்கும், அங்கிருந்து ஏழாம் அடுக்காகிய லலாடமத்தியத்துக்கும், அங்கிருந்து மற்றையடுக்குகளாகிய மஸ்தக அந்தத்தானம்-மத்தியத்தானம்-ஆதித்தானம்-துவாதசாந்தத்தானம் என்பவைகளுக்கும், அங்கிருந்து மேல் உச்சிக்குடையாகிய பிரமரந்திரத்திற்கும் ஏற்றி லயப்படுத்தி, அங்ஙனம் சும்மா இருந்தபடி யிருக்கும் நித்திய நிரதிசயானந்த ரூபியாயிருக்கவேண்டும் என்பவும் உணரப்படும்.

இன்னும் தேர்வடிவம் சரீரமாகவும், அதிற் காணப்படும் நான்கு சிங்கவடிவங்கள்: ஆன்மாவின் சர்வவித சீவகாருணியமில்லா லோப குரூரம், சர்வவித ஆசைப்பெருக்க சங்கற்ப விருத்தி, சர்வவித அபிமான கோலாகல விபரீதம், சர்வவித அகங்கார கோபதாப விகாரம் என்னும் இந்நான்குவித கர்ம விருத்திகளாகவும்; எட்டு யாளி உருவங்கள்: ஆன்மாவினது அஞ்ஞானம், அபிமானம், இராகாதிகுணம், துக்கம், விடயவாசனை, நாலுவித கன்மம், உபாதி, அவஸ்தை என்னும் எட்டுவித அநுபவங்களாகவும்; கொடிகளெல்லாம் தத்துவ கூட்டங்களாகவும், மணிகளெல்லாம் பீசுமந்திர பிராணவாதி சத்தங்களாகவும், குஞ்சங்கள் எல்லாஞ் சீவர்கள் மனோசலனத்தால் எண்பத்து

நான்குலக்க யோனிபேதங்களாக மாறிமாறித் தோன்றி யடையும் மாறுவைத்தையாகவுங் கொண்டு; சிவர்கள்: சிங்கங்களையொத்த கர்ம விருத்திகளையும், யாளிகளைப்போன்ற அநுபவங்களையும், கொடிகளைப் போன்ற தத்துவக் குழாங்களையும், மணிகளைப்போன்ற வாக்கொலிகளையும், குஞ்சங்களைப்போன்ற மனசலன தோற்றங்களையும் இல்லையென்னும்படி செய்து; சித்திரநியம்போல நின்று மோன சாட்சாத்கார கோல நிலையில் நிற்கவேண்டும் என்பதும், இந்த லயக்கிரம திதிக்கோலத்தால் அறிவார் நுண்ணுணர்வோர்.

## எட்டாநாள் விழா.

## அசுவவாகனாரோகண திருக்காட்சி.

(இது லயக்கிரம சங்கார கோலம் எனப்படும்.)

இதனுண்மையாவது, அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு பாதங்களையும், ஞானகாண்டம் கருமகாண்டம் என்னுங் காதுகளையும், விடயங்களைக் கடந்த ஒருப்பாடாகிய பரஞானம் அபரஞானம் என்னுங் கண்களையும், விதியாகிய முகத்தையும், விலக்காகிய வாலையும், ஆகமங்கள் என்னும் புறவணிகளையும், அவ்வாகமங்களிலே விரித்துரைக்கும் மந்திரங்களாகிய சதங்கை - கிண்கிணிமாலை-சிலம்பு என்பவைகளையும், சூரிய சந்திரர்கள் என்னும் குழம்பின் மேலிடத்துள்ள புடைப்புகளையும், பிரணவமாகிய கடிவாளத்தையும், அறுவகைப் புறச்சமயங்களாகிய போர்செய்யுஞ் சேனைகள் மூலத்தோடழியச்செய்யும் வெற்றியையும், பிரமனது முகங்களாகிய இலாயத்தையும், அண்டகோடிகளெல்லாந் திரண்டமைந்த முதுகினையும், அதன்மேற் பிரபல சுருதியென்னுஞ் சேணத்தையுமுடைய குற்றமில்லாத வேதங்களையே சிவபெருமான் குதிரையாகக் கொண்டாரென்பது விரிக்கப்பட்டு; வேதக்குதிரையர்-வேதத்தின் முடிந்த பொருளா யிருப்பவர் - வேதரூபர் வேதாதீதர், வேதநாதர், பாசஞானத்தாற் காணப்படாதவர் என்னு முண்மைகள் கொள்ளற்குரியவாம்.

இங்ஙனமன்றி, பொருளாய்க் காணப்படாத ஆகாயமும் உகூச-புவனங்களும், அட்ட பர்வதங்களும், சத்தசமுத்திரங்களும், சத்தபாதலங்களும், பஞ்சபூதங்களும் ஆகி, ஆன்மகோடிகளிடத்தும் அவ்வவற்றின் அறிவுமாகி, எல்லாமாய், அல்லவுமாய், மனத்திற் பேதமாயிராமல் அபேதமாய்க் கலந்து நிற்கும் வாசியைக் கொண்டவர் எனவும் நூல்கள் கூறுநிற்கும்.

இவையன்றி, சுழுமுனை நாடியிற் பிராணவாசியை நிறுத்தி விடயங்களிலே மனத்தைச் செல்லவொட்டாமல் திருப்பி, ஒரு குறிப்பிலே நிலைக்கச் செய்து ஆறாதாரங்களையுந் தரிசித்து, அசபாசத்தி சிவான்மிகையாய் நிற்குங் கிரமத்தையும் அறிந்து, அவைகளைக் கடந்து, ஆயிரம் இதழ்களையுடைய கமலத்திற் சவாரிசெய்து, அமிர்தபானஞ் செய்து நிற்குஞ் சிவயோகிகளினது ஞானாமிர்தாவத்தையிலே சிவபெருமான் சுகோதயமயவாசி மேலாக விளங்கி நிற்பாரென்னும் உண்மையும் போந்திடுமெனவுங் கூறுவர் புலவர்.

## திருவிளையாடற் புராணம்.

"தரும மாதிநாற் பொருளெனுந் தாளது ஞான
கரும காண்டமாஞ் செவியது காட்சியைக் கடந்த
வொருமை யாம்பர மபரமா முணர்வெனுங் கண்ண
தருமை யாம்விதி முகத்தது நிடேதவா லதுவால்."

"அண்ட கோடிக ளனைத்துமோர் பிண்டமா வடக்கி
யுண்ட நீரதா முதுகின்மே லுபநிடக் கலனை
கொண்ட வாலிய வைதிகப் புரவிமேற் கொண்டன்
றெண்டர் பர்சவன் றொடாவிழ்த் திடவருஞ் சோதி."

## நெஞ்சுவிடு தூது.

"தோலாத்
வானம் புவன மலைகடலேழ் பாதாள
மூனைந்து பூதத் துயிருணர்ச்சி ஞானமன

யெல்லாமா யல்லவா யெண்ணுவா ரெண்ண த்து
ணில்லாம னிற்குநீள் வாசியான்."

என்னுஞ் செய்யுள்களானும் பிறவாற்றானுந் தெளிக.

ஒன்பதாநாள் விழா.

## பிக்ஷாடனமூர்த்த திருக்காட்சி

ஒன்பதா நாளிலே: பலிபாத்திரம் - சூலம்-துடி என்பன திருக்கரத்திலங்க, சடைக்கற்றை தூங்க, நிருவாணகோலம் விளங்க, பிக்ஷாடனமூர்த்தி யெழுந்தருளுங் காட்சி யுடைத்தாம்.

இதனுண்மை யெல்லாம் திருவருண் ஞானம் என்னும் சிவஞானம் பெற்ற பொரியோரே அறிந்து கூறவல்லாராவர். நம்போலியர் கூற நினைத்தலும் நகையேயயாம். ஆயினும் சிறிது கூறுவாம்: ஆன்மாக்களது சந்தாவரண சத்திகளையுங் கெடுத்துச் சர்வசங்க பரித்தியாகஞ்செய்து, பரமசாந்த நிராகார நிராமய சதானந்தமான நிருவாண (மோட்ச)த்தைக் கொடுப்பவர் என்பது, இந்த லயக்கிரம திரோபவ வடிவத்தால் அநுமிக்கப்படும் என்ப.

காரைக்காலம்மையார் அற்புதத் திருவந்தாதி

"இங்கிருந்து சொல்லுவதெ னெம்பெருமா னெண்ணாதே
யெங்கும் பலிதிரியு மெத்திறமும்—பொங்கிரவி
லீமவனத் தாடுவது மென்னுக்கென் றாராய்வோம்
நாமவனைக் காணலுற்ற ஞான்று."

பத்தாநாள் விழா.

## திருநடனக் காட்சி.

பத்தாநாளிலே சிவபெருமானது திருநடனபாவனை நடத்தப்படும். நிலவுலகத்திலேயுள்ள மானுடர்கள் பலரினும் பலவிதமாகக் கூத்துகள் ஆடப்படுகின்றன. தேவர்களும் அநேகர் பலவிதமாக

ஒவ்வோர் காலத்திலே ஒவ்வோர் நிமித்தமாக நடித்திருக்கிறார்கள். அவர்களுள்ளே கண்ணமூர்த்தியானவர், தம்முயிரை மாய்க்கும் பொருட்டு கஞ்சன் அனுப்பிய யானையின் கொம்பை முறித்தற்காக ஆடிய கூத்து அல்லியம் என்வும்; காமகுமாரனை வாணசுரனிட்ட சிறையினின்றும் மீட்க நினைந்து, அங்கன் சென்று குடத்தின் மேல் ஆடியகூத்து குடம் எனவும்; வாணசுரனை வெல்வதற்கு மல்லனாய்ச் சென்று போர்க்கழைத்து, அவனுட னெதிர்த்து, அவனுடலை நெரித்து அழித்தற்பொருட்டு ஆடியகூத்து மல் எனவும்; காமனானவன், தன் குமாரனாகிய அநிருத்தன் என்பவனை, வாணசுரன் சோணித புரத்துச் சிறையிட்டதை யறிந்து மீட்குங் கருத்தால் ஆங்குச் சென்று, பெண் வடிவங்கொண்டு ஆடியகூத்து பேடு எனவும்; இந்திராணியானவள், வாணன் நகரிலே வடதிசை வாயிலில் நின்று ஆடியகூத்து கடையம் எனவும்; இலக்குமி தேவியானவள், அசுரர்கள் யுத்தகோலமொழிந்து தன்மேல் ஆசைப்படும்படி மோகினி வடிவங்கொண்டு ஆடிய கூத்து பாவை எனவும்; துர்க்காதேவியானவள், தன்னுடன் போர் செய்த அசுரர்கள் ஆண்மையில்லாமல் வஞ்சனையால் வெல்ல நினைத்து, சர்ப்பம் - தேள் முதலாய வடிவங்கொண்டுவர, அதை யறிந்து அவையெலாம் ஒழியுங் காரணமாக மரக்கால்கொண்டு ஆடிய கூத்து மரக்கால் எனவும்; அடியரிடர் தீர்க்கும் கலியுகவரத திருவருண் மூர்த்தியாகிய கதிரைவேற் பெருமான், போர்முனையிலே அவுணர்கள் புறங்காட்டியோடத் தமது திருக்குடையைச் சாய்த்து ஆடிய நடனம் குடை எனவும்; சூரபன்மன் வேற்று வடிவங்கொண்டு, சமுத்திரத்திலே மறைந்து நின்றபோது, அப்படியதை குன்றக் கடலலைமேனின்று துடிகொட்டி ஆடிய திருநடம் துடி எனவும் பெயர் பெறும்.

இவர்கள் ஆடிய நடனங்கள் இவ்வாறாக, மகாபீஷ்ட தேவதேவரான சிவபெருமான் ஆடியருளும் திருநடனங்கள் பலவாம். அவைகளுட் பிரதான மானவைகள்: கான்மாறியாடு நடனம், பாண்ட

ரங்கம், கொடுகொட்டி, சந்தியாநிருத்தம், சண்டதாண்டவம், வீராட்டகாசம், கௌரிதாண்டவம், ஆனந்த நடனம், அனவரததாண்டவம், பிரதமமகாசங்கார நிருத்தம் என்பவைகளாம்.

இவைகளுள், கான்மாறியாடு நடனமாவது: மதுராபுரியிலே வெள்ளியம்பலத்திலே, எடுத்தருளிய இடத்திருப்பதத்தை ஊன்றியும், ஊன்றிய வலத்திருப்பதத்தைத் தூக்கியும், விக்கிரமபாண்டிய குமாரனுன இராசசேகர வழுதியினது வருத்தமும் மலமோட மாறியாடிய நடமேயாம்.

திருவிளையாடற் புராணம்.

"நாட்டினன் குறித்துப் பாய நண்ணுமு னிடத்தா ளூன்றி
நீட்டினன் வலத்தாள் வீசி நிருமலன் மாறி யாடிக்
காட்டினன் கன்னி நாடன் கவலையும் பாச மூன்றும்
வீட்டினன் பரமா னந்த வேலையுள் வீட்டி னனே."

பாண்டரங்கநடனமாவது: சிவபெருமான் திரிபுரசங்கார நிமித்தம் எழுந்தருளுங் காலத்திலே, தேர்ச்சாரதியாய் நின்ற பிரமதேவர், தமது தேவியான சரஸ்வதியின் பிரிவாற்றாது வருந்த, அதை யொழிக்கு நிமித்தந் திருவெண்ணீ றணிந்து அப்பிரமற்கு முன்னர் ஆடிய கூத்தாம்.

கொடுகொட்டியாவது: ஆதிமத்தியாந்த சமானரகித ரகிதரான சிவபெருமான், திரிபுர தகனஞ்செய்து அவ்விடத்திலே நின்று திருவருட் சத்தியாரான உமையம்மையார் தாளம்போட தந் திருக்கரங் கொட்டி நடித்ததேயாம்.

சந்தியா நிருத்தமாவது, சிவபிரான் பாற்கடலிற் றோன்றிய ஆலகாலத்தினைத் தேவமாதர்களின் மங்கலநாண் நிலைபெறுமா றுண்டருளி, அதனாற் றம் யாதோர் தீமையும் சிறிதடையப் பெறாராயினும், ஓர் திருவிளையாடலன்னி, கணப்பொழுது ஒன்றுங் கூறாராய்த் தேவியார் உபசாரஞ்செய்ய சயனத் தெழுந்தருளி யிருந்தனர். அது

கண்ட தேவர்கள் அர்ச்சிக்க, மறுநாளான திரயோதசி திதியிலே (பிரதோடகாலத்திலே) பெருமானார் பிராட்டியாரை நிறுத்தி, திருக்கரத்திலே தமருகங்கொண்டு சூலாயுதத்தைச் சுழற்றி, ஓர் சாமகாலம் அளவுங் கைலைவரையிற் செய்த திருக்கூத்தேயாம்.

### ஆகமத்திரட்டு.

"பொங்குங்கங் காதரன் காளமயின் றேயொன்றும்
புகலாம விருந்தனனோர் கணப்பொழுது புலவோ
ரங்கமலை யிடைவிடா தருச்சனை முன்புரிந்தா
ரத்திதியே கர்தசியா மடுத்ததிதி யதனிற்
புங்கவர்பா ரணம்புசித்தே பூர்த்தியுற் றரிதன்மேற்
பொருந்துந்திதி தனிலிமவான் பொற்கொடியை வைத்தே
சங்கரன்சூ லஞ்சுழற்றி நடித்தனனோர் யாமஞ்
சதுர்மறைநூ லதுபிரதோ டமெனவே சாற்றும்."

சண்டதாண்டவமாவது: சிவபெருமான் திருவாலங்காட்டிலே சுநந்தர் கார்க்கோடகர் என்னும் இருடிகள் தரிசிக்க வைரவமூர்த்தங் கொண்டு, அபிநயம் நவரசம் விளங்க, துத்தமுதலாய சத்த சுரங்களோடு பாட்டொலிக்க, கொக்கரை முதலாய பல வாத்தியங்கள் கோஷிக்க, காளியுடனே யாடி அவள் அகங்காரத்தை அடக்கிய கூத்தாம். இதைப் பாண்டரங்கம் எனவுங் கூறுப.

### திருவாலங்காட்டுப் புராணம்.

"இன்சுவை பெர்ழியுஞ் சாய லபிநய மிலங்கச் செவ்வாய்
புன்சிறு முறுவல் பூப்பப் புரணவா னந்தம் பூரித்
தன்புறு மலையோ ருள்ள மயர்தர வியங்கட் கேற்ப
வின்படு நடனங் காளி யோடரன் விளைத்த தே."

### மூத்த திருப்பதிகம்.

"துத்தங்கைக் கிளை விளரிதார முழையிளி யோசைபண் கெழு
மப்பாடிச், சச்சரிகொக்கரை தக்கையோடு தகுணிதந்துந்துபி தாளம்

வீணை, மத்தளங்காடிகை வன்கைமென்றோற்றமருகங் குடமுழா மொந்தைவாசித், தத்தனைவிரைவினோ டாடுமெங்களம்பனிடந் திருவாலங்காடே.''

கௌரிதாண்டவமாவது: சிவபெருமான், மோகினீ ரூபங் கொண்ட விஷ்ணுமூர்த்தியோடுந் தாருகவனத்தை யடைந்து, ஆங்குத் திருநட்டனஞ் செய்தமைகாரணமாக, அம்மையார் ஊடல்கொள்ள, அதை நீக்கற்குக் கைலைமலையிலே அத்தாருகாடத்தை யாடிக் காட்டியதாம்.

வீராட்டகாசமாவது: பிரணவப் பொருடெரியாது மயங்கிய பிரமதேவரது சிறையை நீக்கும்படி நாரணன் முதலிய தேவர்கள் வேண்ட, சிவபெருமான் குமாரக்கடவுள் இருக்குமிடத்துக்கு எழுந்தருளிச்சிறைவிடுவித்து, அவரைப் பிரணவப்பொருள் வினவியருள, அவர் மூலபூதண்டம் என்னுந் திருத்தணிகை க்ஷேத்திரத்திலே அதனுண்மைப் பொருளை யுபதேசிக்க, அதுகாரணமாக விரைந்தெழுந்த வீரமேலீட்டானே அட்டகாசஞ்செய்து அங்ஙன் ஆடிய திருக்கூத்தாம்.

கந்தபுராணம்.

''காமரு குமரன் சென்னி கதுமென வுயிர்த்துச் செக்கர்த்
தாமரை புரையுங் கையாற் றழுவியே யயனுந் தேற்று
வோமென வுரைக்குஞ் சொல்லி னுறுபொரு ளுணக்குப் போமோ
போமெனி லதனை யின்னே புகலென விறைவன் சொற்றான்.''

தணிகைப்புராணம்.

''தனக்குத்தந்தா னேமக னாகிய தத்துவன்
றனக்குத்தந்தா னேயொரு தாவருங் குருவுமாய்த்
தனக்குத்தா னேயருட் டத்துவங் கேட்டலுந்
தனக்குத்தா னிகரினன் றழங்கிநின் றானன்.''

ஆனந்தத் தாண்டவமாவது: சிவபெருமான் பதஞ்சலி, வியாக்கிரமபாதர் முதலாயினோர் தரிசிக்க, சிதம்பரத்திலே, கனக சபையிலே, விருதுபாடுவோர் தாளம் முழக்கவும், வாணன் குடமுழாக் கொட்டவும், பிரமன் தாளம்போடவும், திருமால் மத்தளம் அடிக்கவும், திருக்கரத்துள்ள தமருகம் ஆர்க்க, பாம்புகள் இரைக்க, மான் கதற, கொன்றைமாலையில் வண்டினமுரள, பாலசந்திரன் அசைய, கங்கை கோஷிக்க, வேதச்சிலம்பு பொலிக்க, முயலகன் நெளிய, சிவகாமியம்மையார் அக மிக மகிழ ஆடுந் திருக்கூத்தாம்.

திருப்போரூர்ச் சந்நிதிமுறை.

"குடமுழா வாணனோ ராயிரங் கரங்கொண்டு
குமுகுமென வேமுழக்க
கொண்டலி னிறக்கடவுள் பூவொலி முழக்கவிரி
கோகனக மாளிகையினான்
றடமருவு கைத்தாள நற்றொனி முழக்கவந்
தமருகந் தொனிமுழக்க
தாளி முழக்கமறை நூபுர முழக்கவிரு
தாள்கடா ளம்முழக்க
வடனயி ரைக்கமணி யரவுகளி ரைக்கவுழை
யலறமுய லகனெளிவுற
வாடக மணிச்சபையி னாடக மிழைத்துமைக்
கன்புசெயு மின்பவடிவோன்."

அனவரத திருநடனமாவது: சர்வஞ்ஞத்துவ, சர்வகர்த்தத்துவ பதியாகிய சிவபெருமான், பஞ்சாக்கரமே திருமேனியாகக் கொண்டு ஆன்மாக்களுக்குப் போக முத்தி யளிக்கு நிமித்தம். டமருகந் தாங்குந் திருக்கரத்திலே சிருட்டியும், அபயாத்தத்திலே திதியும், அக்கினியேந்துந் திருக்கரத்திலே சங்காரமும், ஊன்றிய ஸ்ரீபாதத்திலே திரோபவமும், தூக்கிய ஸ்ரீபாதத்திலே அநுக்கிரக

மும் ஆக, மூன்று திருக்கரங்களாலும், இருதிருவடிகளாலும், பஞ்ச கிருத்தியங்களைச் செய்யும் திருநடனமேயாம்.

போற்றிப் பஃறொடை.

"நன்னெறியின் ஞானகலர் நாடுமல மொன்றினையு
ளந்நிலையே யுண்ணின் றறுத்தருளிப்—பின்னன்பு
மேவா விளக்கும் பிரளயா கலருக்குத்
தேவாய் மலகன்மந் தீர்த்தருளி—பூவலயந்
தன்னின்று நீங்காச் சகலர்க் கவர்போல
முன்னின்று மும்மலந்தீர்த் தாட்கொள்கை—யன்னவனுக்
காதிகுண மாதலினு லாடுந் திருத்தொழிலும்."

உண்மைவிளக்கம்.

"எட்டு மிரண்டு முருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக்கேள்-சிட்டன்
சிவாயநம வென்னுந் திருவஞ் செழுத்தாலே
யவாயமற நின்றாடு வான்."

"தோற்றந்துடி" எனக் கூறியவற்றானும் அறிக.

**பிரதம மகாசங்கார நிருத்தமாவது**: பிரமா, விட்டுணு, உருத்திரன், அனந்தேசுரர், சதாசிவன் என்பவர்களால் நடத்தப்படும் பிரமாண்டப் பிரளயம், மாகிருதப்பிரளயம், மத்திமப்பிரளயம், மகாப்பிரளயம், பிரதமமகாப்பிரளயம் என்பவற்றுள் இறுதிக்கண்ணதாம். அஃதாவது முடிவுகாலத்திலே பன்னிரண்டு சூரியர்களும் உதித்து, நூறு வருடம் மழை யில்லாமல் பூமி யெல்லாவற்றையும் எரித்து நீருக்கி, அவைகளைச் சுமந்து நிற்கும் ஆதிசேடனையும் பஸ்மஞ் செய்யும்போது, அதின் பணுமகுடங்களி னின்றும் விஷாக்கினி பிறந்து சூரியாக்கினியோடு சேர்ந்து, அச்சேஷனையும் துவாதசாதித்தர்களை யும் எரித்து நீருக்க, அவ்வக்கினியினின்றும் சத்தமகா மேகங்கள்

பிறந்து, நூறுவருடம் யானைத் துதிக்கைபோல பெருந்தாளி மழையைப் பெய்யும். அதனாலுண்டான சலமே எங்குஞ் செறிந்து மூடிநிற்கும். அச்சலமாவது தன்னிடத்தே பூமியொடுங்கி நிற்க வாயுத்தம்பாகாரமாய் விளங்கும். அங்ஙன மிலகும் பிரளயத்தை யதினின்றுந் தோன்றிய வடவாமுகாக்கினியென்னும் ஊழித்தீ குடித்தெழுந்து ஊழிக்காற்றி லொடுங்கும். அக்காற்று ஆகாயத்தில் ஒடுங்கும். அவ்வாகாயம் அகங்கார தத்துவத்திலும், அது மகானிடத்திலும், அது பிரகிருதி மாயையிலும், அப் பிரகிருதிமாயை அசுத்த மாயையினும், அவ்வசுத்தமாயை சுத்தமாயையினும், அது பராசத்தியிலும், பராசத்தி சிவத்துள்ளும் ஒடுங்க, சிவபெருமா னொருவரே சேடித்து விளங்கித் திருநடனஞ் செய்யாநிற்பர். அத் திருநடனமே மேற்கூறியதாகும்.

கூர்மபுராணம்.

"மாநிலம் புனலி லொளிக்குமப் புனல்போய்
வன்னியிற் காக்குமவ் வன்னி
யூனமில் வளியிற் சேருமவ் வளிபோ
யுயர்விசும் படையுமவ் விசும்பாங்
கேனைய வாங்கா ரத்திடை யொளிக்கு
மாங்கது மகானிடை யெய்து
மானவம் மகான்போ யுயர்பிர கிருதி
தன்னிடை யினிதினி னமரும்."

சிவஞான சித்தியார்.

"தத்துவ மெண்மூன் றுஞ்சென் றரன்மதத் தவத்தொ டுங்கும்
வித்தையி லொடுங்கு மாறுஞ் சிவத்தினி லொடுங்கு மூன்று
நித்தமத் துவமிம் மூன்று மென்பர்க ளிரண்டு நின்ற
சுத்தமாஞ் சிவத்தொ டுங்குந் தோற்றமு மிதுபோ லாகும்."

கந்தபுராணம்.

"கடல்விட நுகர்ந்த தொல்லைக் கடவுள்பின் னழிக்குங் காலை
யுடலுயி ரகலம் யாவு மொடுங்கிய விடம தன்றே
சுடலைய தாகு மந்தச் சுடலைகா ணனைய சோதி
நடநவில் கின்ற வெல்லை நாடருந் தகைமைத் தம்மே."

இவைகளன்றிப் பற்பல இடங்களினும் பற்பல ஏதுவாக நடித் தருளுந்தன்மை நூல்களான் உணர்க. ஆகவே, இவ்வகைத்தாய லயக் கிரக அநுக்கிரககோல நடனக்காட்சியால் உய்த்துணரநிற்கும் உண் மையாவது, புளியைக் கண்டவர்க்கு வாயில் நீரூறுதல்போல, பெரு மானுரது திருநடனக் காட்சியைத் தரிசித்தவர்க்கு ஆனந்தபாஷ்யம் சொரிதலும், மனவிருள் ஓடலும் ஆனந்தவமுதம் ஊறலு முண்மை யாம் என்பதும், அவைகள் பொருந்தப் பெற்றோர் சுத்தாவத்தையை யடைந்து, புறநிலை அகநிலை என்னுங் கருவிகளோடுங்கூடித் தம்மைக் காண்பதாகிய நின்மல சாக்கிரத்தையும், அகநிலைக் கருவிகள் மாத்தி ரத்தானே கூடிநின்று தம்மைக் காண்பதாகிய நின்மல சொப்பனத் தையும், அவ்விரு நிலைக் கருவிகளையு நீக்கி மனமொழிக் கெட்டாத தம்மை யறிதலாய நின்மல துரியத்தையும் நீங்கிச் சிவஞானவான்க ளாவார் என்பதும், சிவபெருமான் அவர்களது இருதயமத்தியே சிதம்பர சிற்சபையாகவும், ஆகாசமே அங்கமாகவும், சூழலுங் காற்றே பெருமூச்சாகவும், பூமியே திருப்பாதங்களாகவும், வடிவுகொண்டு வாதாபயங்கள் விளங்க, வேதமுழக்கஞ் சத்திக்க, தசவித நாதங்களும் வாத்தியங்களாக ஒலிக்க, நடனஞ் செய்வார் என்பதும், அந் நடனத் தை அவர்கள் ஞானக் கண்ணினாலே உள்ளபடி தரிசித்து, அத்து வித முற்றிருப்பார் என்பதும், அன்றியும் அகமாகிய ஆன்மப் பிரகா சமே ஞானசபையெனவும், அப்பிரகாசத் துள்ளிருக்கும் சோதியே கடவுள் எனவும், அவ் வுள்ளொளியின் அசைவே நடனம் எனவுங் கொண்டு, சிவஞானிகள் திருவருளினாலே மும்மலங்களையும் நீக்கி,

ஆன்மபோதம் முடிந்தவிடத்திலே உதயமாகும் ஆனந்தமாக்கடலிலே மூழ்ந்துகொண் டநுபவிக்கிறதே பெருமானார் திருவருள் வடிவோடு நிருத்தஞ் செய்யும் முறையாம் என்பதும் தெரியக் கிடப்பது காண்க.

### தேவாரம்.

"புளிக்கண் டவர்க்குப் புனலூறு மாபோற்
களிக்குந் திருக்கூத்துக் கண்டவர்க் கெல்லாந்
துளிக்குங்கண் ணீருடன் சோருநெஞ் சத்திரு
ளொளிக்கு மானந்த வமுதூறு முள்ளத்தே."

### தாயுமானசுவாமிகள் பாடல்.

"விளங்கவெண் ணீறு பூசி விரிசடைக் கங்கை தாங்கித்
துளங்குநன் னுதற்கட் டோன்றச் சுழல்வளி நெடுஞ்ச் சாகக்
களங்கமி லுருவந் தானே ககனமாய்ப் பொலியப் பூமி
வளர்ந்ததா ளென்ன வுள்ள மன்றென மறையோன் றின்றி.

"மறைமுழக் கொலிப்பத் தானே வாதமோ டயக் கைகண்
முறைமையி னெங்க நாத முரசெனக் கறங்க விலங்குங்
குறைவிலா வணநி றைந்து கோதிலா நடனஞ் செய்வான்."

### உண்மை விளக்கம்.

"மோனந்த மாமுனிவர் மும்மலத்தை மோசித்துத்
தானந்த மானிடத்தே தங்கியிடு—மானந்த
மொண்டருந்தி நின்றாடல் காணுமருண் மூர்த்தியாக்
கொண்டதிரு வம்பலத்தான் கூத்து."

இஃதன்றிச் சிலர், சிவமூர்த்தி கௌரிபீட சத்திரூப கேடயத்தின்மேல் நின்றகோலமாகவும் உட்கார்ந்த வடிவமாகவும் எழுந்தருளி, அசைவுத்தாண்டவத்தால் ஓங்காரவட்டங் குறிக்கப்பட்டு பிரமனார்ன

ணத்தையும், குதிக்கும் நடத்தால் அகாரவட்டங் குறிக்கப்பட்டு ஈஸ்வர ஞானத்தையும், சாயும் ஆடலால் உகாரவட்டங் குறிக்கப்பட்டு சத்திஞானத்தையும், அசைவற்று நிற்பதனால் மகாரவட்டங்குறிக்கப்பட்டு ஆன்ம ஞானத்தையுங் காட்டி, ஆன்ம ஞானுநுக்கிரகம், சத்தி ஞானுநுக்கிரகம், ஈஸ்வர ஞானுநுக்கிரகம், பிரம ஞானுநுக்கிரகம், ஆகிய நால்வகை அநுக்கிரகங்களையும் அறிவில் விளங்க உணர்த்தி; சன்மபந்தம், கன்மபந்தம், விருத்திகுணபந்தம், அபிமானபந்தம், அவிவேகபந்தம், தொந்தார்த்த பந்தம், விடயபந்தம், வாசனு பந்தம் முதலிய பந்தசத்தி யகலும்படி தூரத்தி, அடியார்களிடத்தி விருந்து பந்தம் யாவையும் பறித்துத் தம்மைப்போலாக்கும் உண்மையை லயக்கிரம அநுக்கிரக கோலத்தாற் காட்டுவர் என்பதும், இதனுலேயே இக்காட்சி பந்தப் பறி எனப் பெயரும் பெறும் எனவுங் கூறுப.

## பதினோராநாள் விழா.

## நடராஜ, தியாகராஜ மூர்த்த தரிசன கோலம்.

பதினோராநாளிலே பஞ்சகிருத்திய ஏகவிஸ்வ விராட்டீஸ்வர நடேசமூர்த்தி கோலமாய் எழுந்தருளி, ஈஸ்வரத்துவ சர்வ ரகசியத்தையும், தியாகராஜகோலத்தால் ஆன்மா, பிரம ஐக்கியமாகும் முத்தி கோலத்தையுங் காட்டும் என்ப.

இங்ஙனமுள்ள பதினொருநாட் செய்யப்படும் உற்சவங்களுள்ளே, முதல் ஐந்துநாள் உற்சவம்: தோற்றக்கிரம பஞ்சகிருத்தியம் விளக்கல் காரணமாகவும்; பின் ஐந்துநாள் உற்சவம், லயக்கிரம பஞ்சகிருத்திய விளக்குங் காரணமாகவும்; இறுதியில் உள்ள ஓர் நாள் உற்சவம்: மோக்ஷப்பிராப்தி உணர்த்தல் காரணமாகவுஞ் செய்யப்படும் என்ப.

மற்றைய இருபத்தொருநாட் செய்யப்படும் உற்சவங்களுள்ளே முந்து பதினொருநாள் உற்சவம்: சோடசகலாதரிசன நிமித்தமாகவும், பின் நாலுநாள் உற்சவம்: சதுர்தாரக பிரமக்காட்சி நிமித்தமாகவும், இறுதியான ஓர்நாள் உற்சவம்: சிவ சிவைக்கிய முத்திவிளக்கங் காரணமாகவுஞ் செய்து, முத்தியடைந் தின்புற்று வாழ்வார்கள்.

இதுகாறும் நாம் கூறியவாற்றானே, உலகமானது, சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்தத்துவ முழுமுதற் பொருளாகிய ஓர் பதியை முதலாக உடையது என்பதும், அப்பதியின் உண்மை யிலக்கணங்களைக் குறைவற விளக்குவதாய் - பரமுத்தியளிப்பதாய் - விசேடமாய் ஒளிர்வது "சிவன்" என்னும் திருநாமம் என்பதும், அது கடவுளுக்காந் தன்மையும், அக் கடவுளாகிய சிவத்தினது திருவடித் தெப்பமே சனனசாகரத்தைக் கடப்பித்து முத்தி யென்னும் பேரின்ப நிலைக் கரையில் உய்க்கும் என்பதும், அத் தெப்பத்தை யடையுஞ் சமயம், வைதிக சைவ சுத்தாத்துவித சைவசித்தாந்த சமயமாம் என்பதும், அச்சமயம் சரியை முதலாகிய நான்கு மார்க்கங்களைக் காட்டும் என்பதும், அவற்றுள் முன் வழியாய், முத்திக்குச் சாதனமாய் விளங்குவது சரியாமார்க்கம் என்பதும், அதன் புண்ணிய கர்மங்களுள் க்ஷேத்திராலய உற்சவ சேவாதிகளே விசேட சிவதர்மம் என்பதும், அவைகளின் பிரபாவ உண்மைகள் இவை யென்பதும், ஒருவாறு தொகுத்து விளக்கப்பட்டமையால், சிவன் - க்ஷேத்திரம் - ஆலயம்- மகோற்சவாதிகளின் உண்மைப் பிரபாவங்களை உய்த்துணரல் பேரறிவுடையோர் கடனாம். இங்ஙனமாக யாவரும், இவ்வுண்மைகளை அறிந்து, மெய்யன்புடனே அவ்வழியினின்றொழுகி, சிவஞான மடையப்பெற்று, அந்தமிலின்பத் தழிவில் வீடான பிறவா முத்தியடைந்து இனிது வாழவும், இந்நூல் நன்னூலாய் இனிதோங்கி நிலவி நிலைக்கவும், சீருந்துணைத்திருவாய் இருக்கும், அகண்டாகார நித்த வியாபக சர்வாநுக்கிரக பரப்பிரம பரஞ்சோதிப்

பிழம்பாகிய சிவதுகப்பெருமானது திவ்விய பொருளைச் சிந்திக் கின்றேன்.

உலகமும் பல்லுயிரு மொன்றிநின்றறங் தோங்கி
யிலகுசிவன் றருள்வாழ்க வே.

என்னையா ளுடைய கதிரைவேன் முருக
னின்னடிக் கமலம் வாழியே
மின்னைநே ரிடையவ் வமாகுஞ் சரிந
வின்னலந் திகழுநின் மெயா,
என்னமா ருடைய திருவடித் தளிர்கள்
வாழிவாழி மயில் கோழிவேல்
முன்னையா ரருளி னருமையின் புதவி
முந்திநூன் மிகவும் வாழியே

## சிவக்ஷேத்திராலய மகோற்சவ

## உண்மை விளக்கம் முற்றிற்று.